சிவ. சங்கரபண்டிதர்:

# பிரபந்தத்திரட்டு.

Arul Tyagarajah

1957.

2/50

உ

சிவமயம்.

சிவ. சங்கரபண்டிதர்

# பிரபந்தத்திரட்டு

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்

தருமபரிபாலகர்

ச. பொன்னுஸ்வாமி அவர்கள்

தெரிந்து அச்சிட்டது.

2-ம் பதிப்பு.
ஹேவிளம்பி, சித்திரை.
1957, ஏப்ரல்.

விலை ரூபா 1.50.

வித்தியாநுபாலன அச்சகம்,
300, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

# பதிப்புரை.

யாழ்ப்பாணத்து நீர்வேலி சிவ. சங்கரபண்டிதர் என்பவர் நாவலர் காலத்தில் இருந்த பேரறிஞர். நாவலர் அவர்கள் புரிந்துவந்த சைவப்பணியிலும் தமிழ்ப்பணியிலும் துணையாயிருந்தவர். நாவலரைப்போல் இவரும் தனியாகச் சைவப்பிரசாரத்திலும் கிறிஸ்துமதம் பரவுதலைத் தடுப்பதிலும் பேரூக்கமுடையவராக விளங்கியவர். சம்ஸ்கிருதம், தமிழ் இவை இரண்டையும் நன்கு கற்றறிந்த வித்துவ சிரோமணி. இந்தியாவிற் பெரும்புகழ்படைத்து விளங்கிய முருகேசபண்டிதரும் திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான் சபாபதி நாவலரும் இவர்களுடைய மாணுக்கர்களே.

இவர்கள் எழுதிய **கிறிஸ்துமத கண்டனம், சற்பிரசங்கம், மிலேச்சமத விகற்பம்** என்னும் நூல்களைச் சேர்த்து **சங்கர பண்டிதர் பிரபந்தத்திரட்டு** என்னும் பெயரால் வெளியிடுகின்றனம். அடியேன் இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்கு வந்து நாவலர்பெருமான் நிலைநாட்டிய தொண்டுகளைச் செய்வதற்கு மூலகாரணரா யிருந்தவரும், எனது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவருமாகிய பண்டிதமணி. சி. கணபதிப் பிள்ளையவர்கள் 80 வருஷங்களுக்குமுன் வெளிவந்த இந்த நூல்கள் மறைந்துபோகாவண்ணம் பாதுகாக்கவேண்டுவ தவசியம். ஆதலால், உடனே வெளியிட விரும்பினர். பண்டிதரின் பௌத்திரராகிய பண்டிதர் நட்ராஜன் இந்நூல்களை வெளியிட அனுமதியளித்தனர். அச்சுவேலி. சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் மிலேச்சமதவிகற்பப் பிரதி யுதவினர். இந்நூல்களை வெளிவர யாழ்ப்பாணத்தவர்களில் என்றும் அன்பும் மதிப்புமுள்ள உயர்திரு. சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள் சரி பிழை பார்க்கும் தொண்டினைப் புரிந்தனர். சற்பிரசங்கப் பிரதியும் உதவினர். இவர்களுக்கு எனது மனமார்ந்த வந்த

னத்தைச் செலுத்துகின்றேன். இவைநிற்க, அடியேனின் வேண்டுகோளின்படி, சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பழைய மாணவரும், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானும் அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய உயர்திரு. ச. தண்டபாணிதேசிகரவர்கள், சிவஞான சித்தியாருக்குப் பலருக்கும் விளங்கக்கூடிய முறையில் அறுவர் உரையினையும் பிறவுரைகளையும் தழுவித் தொகுத்து ஓர் உரையினை எழுதி உதவ முன்வந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரியப்படுத்துகிறேன்.

இதனை அச்சிட்டு அடக்க விலைக்குக் கொடுக்கவேண்டுமென்பது எனது பேரவா; தில்லைக்கூத்தன் திருவருள் பாலிக்குமாறு வேண்டுகின்றேன்.

சைவப்பிரகாச வித்தியாசாலை,
சிதம்பரம்.
ஹேவிளம்பிஞு சித்திரைமீ

ச. பொன்னுஸ்வாமி,
தருமபரிபாலகர்.

## உள்ளுறை.

1. கிறிஸ்துமத கண்டனம்.
2. சற்பிரசங்கம்.
3. மிலேச்சமத விகற்பம்.

உ

சிவமயம்.

# கிறிஸ்துமத கண்டனம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்

தருமபரிபாலகர்

ச. பொன்னுஸ்வாமி அவர்களால்

சென்னை

வித்தியாநுபாலன அச்சகத்தில்

அச்சிடப்பட்டது.

(இரண்டாம் பதிப்பு.)

1957.

துன்முகி௵, பங்குனி௴.

# சூசிபத்திரம்.


| | | பக்கம். |
|---|---|---|
| உபோற்காதம் | | 1 |
| கிறிஸ்துமத சாரம்.— | பதிரூபம் | 2 |
| ,, | பதிகிருத்தியம் | 2 |
| ,, | பசுநிரூபணம் | 6 |
| ,, | பாசநிரூபணம் | 6 |
| ,, | பசுகிருத்தியம் | 8 |
| ,, | பசுபோகம் | 8 |
| ,, | முத்திசாதனம் | 8 |
| ,, | பவித்திராத்துமகிருத்தியம் | 13 |
| ,, | நிக்கிரக அநுக்கிரகம் | 14 |
| ,, | முத்தி | 14 |
| கிறிஸ்துமத கண்டனம் | | 15 |
| பதிப்பிரகரணம்.— | கிருத்தியநிமித்தம் | 15 |
| ,, | உபாதானம் | 23 |
| ,, | ஆதிசிருட்டி | 27 |
| ,, | துர்க்குணம் | 33 |
| ,, | கிறிஸ்து சரிதம் | 36 |
| ,, | நிக்கிரக அநுக்கிரகம் | 43 |
| ,, | பவித்திராத்தும சரிதம் | 47 |
| ,, | திரித்துவம் | 49 |
| பசுப்பிரகரணம்.— | உற்பத்தி | 52 |
| ,, | மிருகாதி | 58 |
| பாசப்பிரகரணம்.— | சென்மபாவம் | 64 |
| கதிப்பிரகரணம்.— | முத்திசாதனம் | 66 |
| ,, | நிரயம் | 71 |
| ,, | முத்தி | 76 |
| உபசங்காரம் | | 79 |
| சூசனம் | | 80 |

# சிறப்புக் கவிகள்.

சித்தாந்த சிவசமயத் தெண்டிரைநீ
ருண்டெழுந்து தேசந் தோறும்
வித்தார மாகவதன் றத்துவதா
ரைகள்பொழிந்து வேண்டார் வாதம்
இத்தாலத் திடித்தொத்துத் திரிந்தசிவ
சங்கரபண் டிதவிண்டார்த்துப்
கர்த்தாயே சல்லரெனுங் கிறிஸ்துமத
கண்டனமின் கான்ற தன்றே.

வீட்டு வழியன்று விவில்யமென்று சங்கரவேள்
காட்டுங் கிறிஸ்துமத கண்டனத்தை—நாட்டில்
அமரவச்சி விட்டா னவன்மரபிற் சுன்னை
குமரசாமிப் புலவர் கோன்.

சென்னபட்டணம்,
விஷு௵ தைப்பூசம்.
(1832.)

யாழ்ப்பாணம்
**சி. வை. தாமோதரம்பிள்ளை.**

---

திருமருவு சைவநற் சுருதியொரு காலமுந்
தெரிசனஞ் செய்துமறியாச்
சிறியசில சிதடருறு திரிபறிவி னாலெழுது
தெளிவிறுன் மார்க்கநூலாந்
தீயவிவி லியமதுவை நேயமுட னுட்கொண்டு
சித்தமயல் பூண்டதீயர்
தெருவினொடு சந்திவழி மருவிநெளி யாத்தமது
தேசிலஞ் ஞானமதமே.

கருமருவு பவமழித் துரியபர மண்டலங்
காட்டுமெனல் கேட்டுநம்மூர்க்
கயவரொரு சிலரதனை மெய்யெனா மையலுறு
கலகவிழி யார்களோடு
கைத்துவரு மத்தமிதின் மிக்கவழி தக்கதிக்
காசினியின் வேறுமுளதோ
காணென்ப ரவருண்மை காணக் கிறிஸ்துமத
கண்டனம தொன்றுசெய்தான்.

மருமருவு மலர்வாவி வயல்சோலை செறியீழ
மன்னும்யாழ்ப் பாணநீர்வை
வாழ்ந்தவன் றென்மொழியொ டாழ்ந்தவட கடலுண்டு
வருஷித்த சற்ப்ரசங்கன்

பாறிலாச் சைவப்ர காசசபை நேசருள்
வந்தவக் ராசனத்தன்
வடநூல்க ளிலகுவிற் படியா ருணர்ந்துகொள
வாய்த்தபல நூல்கள்செய்தோன்.
தருமருவு சுரர்பதியொ டரியயனு மணுகரிய
தனிமுத்தி யுதவுசுத்த
சைவசித் தாந்தசாத் திரசார முட்கொண்ட
சைவப்ர காசனமுதற்
றக்கபல நூல்செய்து மிக்கபுகழ் பெற்றவன்
சற்குருத் தலைவனென்றே
சகமெலாந் துதிசெயுந் தகையசங் கரபண்டி
தன்பகைப் புலவரேறே.

ஊரெழு

சு. சரவணமுத்துப்பிள்ளை.

---

எண்டிசையுஞ் சிவசமய நெறிவ்ழாம
லிகல்விளக்குங் கிறிஸ்துமத விருளஞான
மண்டியபே ரொளியதனை லொருங்குமாய்த்து
வருகவென விடுத்திட்டான் வலிசேர்தண்ட
கண்டனத்தை வடதென்னூற் கடலைநீந்திக்
கருதரிய சிவஞானங் கண்டசீர்வைப்
பண்டிதனுஞ் சங்காமெய்ப் பெயரோன்பூவிற்
பாதிரிக டியங்கியுளம் பதைக்கமன்னே.

யாழ்ப்பாணம், கொக்குவில்

குகதாசர் - ச. சபாரத்தினபிள்ளை.

---

முத்துக் குமாரக விராச சேகரன் மொய்யமரிற்
றத்தித் தடக்குண்டு நாவலர் தாவச் சவிமடிந்து
சித்தங் கெடவுட ருமோத ரேந்த்ரன் [illegible]தைத்தபைபின்
செத்துக் கிடக்குது பார்சிவ சங்கரன் றெம்முனைக்கே.

சைவவான் றடித்த மெய்ஞ்ஞானக் கும்மியும்
சைவதூ ஷணபரி காரச் சத்தமும்
சைவமெய்ம் மகத்துவ தாரையுந் தெறச்
சைவமா ருதமெனத் தாவுங் கண்டனம்.

மன்னார்குடி,
விஷு வருஷ தைமீ.
(1882.)

மதுரை - சதாவதானம்

சோ. மு. இராமசாமிச் செட்டியார்.

பாதிரிகள் போதனைகள் பற்றுவலி யற்றழியக்
காதுங்கி றிஸ்துமத கண்டனநூல்—ஓதினான்
சீர்தங் கரனடிதன் சிந்தைமற வானீர்வை
சார்சங் கரபண்டி தன்.

முத்துக் குமார கவிராச னஞ்சின் மொழியினெஞ்சிச்
சத்துக் கொளுநா வலரினற் றமோதரம் பிள்ளையிற்
புத்திக் குகதாசனில் வல்வைப் போதகனிற் புரண்ட
கத்துக் கிறிஸ்து மதங்கெட்ட தாவியிக் கண்டனத்தே.

கோப்பாய்
**வித்வான் - சு. சபாபதிப்பிள்ளை.**

---

நீதியில் பாதிரி மார்மத நீடுல கிற்ப்ரசண்ட
வாதத்தின் மீதிரி பூளைய தென்ன மறிந்துலைய
எதியின் மோதிடு கண்டன மொன்றை யினிதுசெய்தான்
ஓதியின் மேதகு சங்கர பண்டித வொண்குருவே.

ஆவரங்கால்
**சி. குமாரவேற்செட்டியார்.**

---

சீர்ப்பட்ட தெய்வ மறையாக மங்களின் றீம்பொருடன்
சாப்பட் டெழுஞ்சிவ சங்கர பண்டித நாயகன்சொற்
பாற்பட்டு வந்த கிறிஸ்து மதகண்டனப் பகுவாய்
வாய்ப்பட்டும் வாழ்வதுண்டோ பைபிள்காணினி வையகத்தே.

சென்னபட்டணம்
**சி. நா. அமிர்தலிங்கம்பிள்ளை.**

---

# இரண்டாம் பதிப்பு முகவுரை.

இந்நூல் எனது பாட்டனார் ஸ்ரீலஸ்ரீ சங்கரபண்டிதரவர்களாலியற்றப்பெற்றது. கிறிஸ்துமார்க்க நூல்களைக் கொண்டே அம்மார்க்கத்தைக் கண்டிப்பது. 1882-ம் ஆண்டில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அக்காலத்தி லச்சிடப்பெற்ற பிரதிகள் யாவுஞ் செலவாயினமையானும், தற்காலை ஆங்காங்குச் சிற்சிலவிடங்களிலுள்ள சிற்சில கல்விமான்களிடத்தி லருகிக்கிடக்கும் பிரதிகள் தாமுமின்னுஞ் சில்லாண்டுக்கு ளொருவே தெரியா தொழிந்துவிடுமேயெனக் கருதப்பட்டமையானும் அடியேன், இந்நூலை இரண்டாம் பதிப்பாக அச்சிடுதல் வேண்டுமேயென எண்ணி இவ்விண்ணப்பத்தை எனதன் பார்ந்த மூர்த்தியுங் குலதெய்வமுமாகிய தில்லைக் கூத்தப்பிரானிடஞ் சமர்ப்பித்தேன்.

அப்பெருமானருள்ளக் குறிப்பின்படியே போலும் ஸ்ரீலஸ்ரீ நாவலரையா அவர்கள் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகரும், செந்தமிழ்ப் பாஷாபிமானியுமாகிய ஸ்ரீ ச. பொன்னுஸ்வாமி அவர்கள் தாமாகவே முன்வந்து, இதனை அச்சிட்டு வெளியிட்டனர் இன்னோர்க்குச் சைவசமயத்தவர்கள் யாவருமென்றுங் கடமைப்பட்டவர்களே!

பெற்றியகலைத் தமிழ்
வித்தியாசாலை,
பலாங்கொடை.
11-2-57.

இங்ஙனம்,
சிவ. பண்டித - நடராஜ.

# கிறிஸ்துமத கண்டனம்.

## சிறப்புப்பாயிரம்.

நீர்கிளர் செஞ்சடை நின்மலக் கொழுந்தும்
வார்கிளர் பயோதர மாதுமை யாளும்
வதியுங் கோண மாமலை யுடனே
துதிபெறுங் கேதீச் சரமு மமர்ந்து
விளங்கும் பெருமை விரவிய வீழ
வளங்கொளுந் தேய மருவும்யாழ்ப் பாணத்
தோங்குநற் சுன்னையி லுயர்குடிப் பிறப்புந்
தேங்கிய செல்வச் சிறப்பும் வாய்ந்த
சிவகுரு நாதன் செய்தவ வண்மை
புவிமிசை காட்டப் புத்திர னாகி
வந்தவ தரித்தோன் மலர்க்கணை யில்லாச்
சுந்தர மதனெனத் துலங்குபொன் மேனியன்
புத்துரைக் கவிமழை பொழியும் விதுர
முத்துக் குமார முகில்வரு மரபினன்
நீறுமெய்க் கண்டிகை நிலவுற வணிந்து
தேறுமெய்ஞ் ஞானச் செல்வம் பெற்றுச்
சிவனடித் தாமரை சிந்தையு ளிருத்தி
அவமிலா தர்ச்சனை யாற்றிடும் பெரியோன்
ஆரியந் திராவிட மாமிரு மொழியினு
நேரிலா வறிவு நிரம்பப் பெறுதலின்
நையா யிகனே நவில்பௌ ராணிகன்
வையா கரணன் மகாகம விதுரன்
அதிகாம் பீரி யைதி காசிகன்
விதிவிலக் குரைக்கும் மிருதி விசக்ஷணன்
எனவே புலவ ரியம்பிட நின்றோன்
மனையறத் துரிமை மன்னிநீர் வேலிப்
பதியுறை தந்து விதிமுறை யொழுகியோன்
வாதிக ளோடவு நீதிக ணீடவும்
பூரண சிவாகமப் பொருளினை யேபிர

சாரணஞ் செய்யுஞ் சைவ சிகாமணி
ஆரிய பாடையிற் பாலிய பாடஞ்
சீரிய லக்கண சாரசங் கிரகம்
முதலிய நூல்கண் முறைப்படச் செய்தோன்
இதமுறு நல்லோ ரியம்புசித் தாந்த
சாரா வலியிற் றயங்கிடு ஞான
நேரிலாப் பாத நிலவுறும் வண்ணம்
இகழ்தற் கரிய லாகவ வுரையும்
புகழ்சிவ ஞான போதந் தனக்குச்
சிற்றுரை தமிழிலுந் திகழ்பிரா சாத
சட்சுலோ கிக்குத் தமிழ்வியாக் கியையும்
அகநிர் ணயமென வறையு நூற்குப்
புகழ்பெறுந் தமிழிற் புகல்வியாக் கியையும்
போற்றும் பெருஞ்சிவ பூசையந் தாதிக்
கேற்றதோர் விருத்தி யெனப்படு முரையும்
சைவத் துண்மை தனைமுறை விளக்குஞ்
சைவப் பிரகா சனமுந் தந்தோன்
தன்னெப் பில்லான் சங்கர பண்டிதன்
என்னுந் திருப்பெய ரெய்திய பாவலன்
மெய்ந்நூ லென்பது விவிலிய மற்றைய
பொய்ந்நூ லென்று புகலு மநாரியர்
செய்யுந் தூஷணச் செருக்கு நீங்கிப்
பொய்யுரை தமதெனப் புந்தியி லுணரவும்
ஆயவர் சாலத் தமிழ்ந்திய சில்லோர்
தூயநல் லறிவுச் சுடரினைப் பெற்று
விவிலியக் குற்றம் விளங்குறக் கற்றுப்
பற்றங் கதனின் முற்று மற்றே
உண்மை தேறவு முரைத்தனன்
மண்மிசைக் கிறிஸ்து மதகண் டனமே.

டை பண்டிதரது பிதுருபகிநீதௌகித்திரன்.

சுன்னுகம், அ. குமாரசாமிப்பிள்ளை.

# கிறிஸ்துமத கண்டனம்

பரசிவோ விஜயதே

நாமார்க்குங் குடியல்லோ நமனையஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மைத்தான
சங்கரனற் சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

## உபோற்காதம்.

*சைவசமயிகளாகிய நாமெல்லாஞ் சிவபெருமானையே மெய்யன்போடு வணங்குவேம். அவரே எல்லா உயிர்களுக்கும் போகமோக்ஷங்களைக் கொடுத்தருள் செய்பவர்.*

*அசற் சமயிகளாகிய கிறிஸ்தவர்கள் இக்காலத்திலே நமது சைவசமயிகளைத் தம்மதத்திற் புகுவிக்க முயன்று, கோட்டங்கள்தோறும் பள்ளிக்கூடங்களைத் தாபித்துத், தம்முடைய துன்மார்க்க நூலாகிய விவிலிய நூலையே சிறுவர்களுக்குப் பெரும்பாலுங் கற்பித்துச், சிவநிந்தை, சிவசாத்திர நிந்தை, திருநீறணியாமை, எச்சிற்கலப்பு முதலிய துராசாரங்களையே அவர்களுக்குப் பயிற்றலானும், அவர்க்கும் பிறர்க்கும் அடிக்கடி துர்ப்போதனைசெய்து திரிதலானும், அநியாயமாகிய தூஷணங்களைப் பொதிந்த சிறுபுத்தகங்களை வெளிப்படுத்தலானும், பிறவாற்றானும் பெருங்கேடு செய்வார் ஆயினர்கள்.*

*ஆதலால் நமது சைவசமயிகள் அவர்களுடைய துன்மார்க்கத்திற் பிரவேசியாது விலகி உய்யும்பொருட்டு அவர்களுடைய கொள்கையைக் கண்டிக்கிற பிரபல நியாயங்களை ஒரு நூலாகச் செய்துகாட்டுகின்றாம்.*

# கிறிஸ்துமத சாரம்

## பதிரூபம்.

அநாதியநந்த நித்தியராய், வியாபகராய்ச், சுவதந்திரராய், அரூபராய், அவிகாரராய், உண்மை அறிவு ஆற்றல் சுத்தி நியாயம் இரக்கம் பொறுமை நன்மை மெய்ம்மை நிறைவு முதலிய திவ்விய குணங்களை யுடையவராய்ப், பிதா புத்திரன் பவித்துராத்துமா என்னும் மூவராகிய ஒருவராய் இருப்பவரே பதியாம். பிதாவுக்கு யெகோவா என்பதும், புத்திரனுக்குக் கிறிஸ்து என்பதும், யேசு என்பதும் பெயராம். உபா. 33: 27; சங். 90: 2; எரேமி 23: 24; மாற்கு. 10: 27; 1. தீமோ. 6: 15; சங். 102: 27; வெளி. 1: 8; 1. நாளா. 28: 9; ஆதி. 17: 1; யாத்: 15: 12; சங். 145: 17; யாத். 34: 6; உபா. 32: 4; மத். 28: 19.

## பதி கிருத்தியம்.

பதியின் கிருத்தியம் சிருட்டியும், திதியும், சங்காரமும், நிக்கிரகமும், அநுக்கிரகமும், என ஐந்தாம். சிருட்டி—படைத்தல். திதி—நிலைபெறுத்தல், காத்தல். சங்காரம்—அழித்தல். நிக்கிரகம்—ஒறுத்தல். அநுக்கிரகம்—உதவல்.

அநாதியாகிய பதியானவர், ஆதியிலே கிருத்தியஞ் செய்ய விரும்பிப் பரமண்டலத்திலே தேவதூதர்களைப் படைத்தார். அவர்களுள், தமக்கு விரோதிகளாகிய சிலரைப் பிசாசுகளாக்கி, நரகத்தில் இருக்கும்படி நியமித்தார். யூதா: 6: வெளி-12: 9; வெளி-20: 2.

பின்பு வானத்தையும் பூமியையும் படைத்தார். 1-ம் நாளில் ஒளியையும், 2-ம் நாளில் வெளியையும், சலரூபமான மேகங்களையும், 3-ம் நாளில் மண்ணிலிருந்து தாவரசீவன்களை

யும், 4-ம் நாளில் பெருஞ்சுடர்களாகிய சூரிய சந்திரர்களையும், சிறு சுடர்களாகிய நக்ஷத்திரங்களையும், 5-ம் நாளில் சலத்திற் சலசரங்களையும்; 6-ம் நாளில் நானாவித மிருகங்களையும் படைத்தார்.

அதன்மேல், அத்தினத்திலே தமது ரூபமாக மனுஷரைப் படைக்கும்படி சங்கற்பித்து, மண்ணினாலே மனுஷனை உண்டாக்கி, அவனுடைய மூக்குத்துளையிலே சீவ சுவாசத்தை ஊதி, அதனால் அவனைச் சீவாத்துமா உடையவனாக்கினார். மனுஷனுடைய சரீரக்கூற்றிலிருந்து ஒரு மனுஷியை உண்டாக்கினார். அந்த ஆதி மனுஷரை ஆசியாக் கண்டத்திலே துருஷ்கதேசத்தில் உள்ள ஏதேனென்னும் இடத்தில் உண்டாக்கப்பட்ட தோட்டத்தில் இருத்தினார். படைப்புக்காலத்திற்றானே மனுஷரைநோக்கி நீங்கள் சந்ததியுடையராய்ப், பல வமிசத்தராய்ப், பூமியை நிறைத்து, அதை வசப்படுத்தி, அதில் உள்ள சகல வஸ்துக்களையும் ஆளுங்கள் என்று ஆசீர்வதித்தார். மனுஷருக்குத் தாவர சீவன்களைப் போசனமாக நியமித்துக்கொடுத்தார்.

ஏதேனில் உள்ள தோட்டத்திலே செய்கை செய்தற்கும், அதைக்காத்ததற்கும், ஆதிமனுஷனை நியோகித்தார். "தோட்டத்தில் உள்ள சகல வித விருக்ஷங்களின் பழங்களையும் இஷ்டப்படி புசிக்க" என்று விதித்தார்: "தோட்ட நடுவில் உள்ள நன்மை தீமை அறிவிக்கும் விருக்ஷத்தின் கனியைப் புசியா தொழிக" என்று விலக்கினார். "விலக்கியதைப் புசித்தால் அத்தினத்திலே நிச்சயமாக மரணம் அடைவான்" என்று தண்டமுஞ் சொல்லிப்போயினார்.

கடவுளை உபசரித்தலும், சனிவார நியமமும், சிருட்டிகளுக்கு உபகரித்தலும், விதித்தன செய்தலும், விலக்கிய

கனியை விடுதலுமே ஆதிமனுஷருக்கு நியமிக்கப்பட்ட சமயம்.

அவர்கள் அங்கே அப்படி இருக்குங்காலத்திலே, பிசாச பதியாகிய சருப்பம்வந்து, மனுஷியை நோக்கி; "விலக்கிய விருக்ஷத்தின் கனியைப் புசித்தால், மரணம் வாராது; நயனப் பிரகாசமும், நன்மை தீமைகளின் ஞானமும்" வரும் என்று சொல்லிற்று. அவ்விருக்ஷத்தின் கனி புசிப்புக்கு இரசமும் காட்சிக்கு இனியதும் புத்தியைத் தெளிவிக்கும் என்று வேண்டப்படுவதுமாய் இருக்கின்றதை அறிந்து, அக்கனியை மனுஷியும் மனுஷியாலே மனுஷனும் புசித்தார்கள். அதனுல் அவர்களுக்குக் கண்விளக்கம் உண்டாயிற்று. ஆகவே, அவர்கள் தாம் நிருவாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து அரையிற் கட்டிக்கொண்டார்கள்.

பகலின் முடிவிலே தோட்டத்திலே உலாவிவருகின்ற தேவனுடைய சத்தத்தைக்கேட்டு, அவர்கள் தேவசந்நிதானத்துக்கு விலகி, மரங்களின் இடையிலே ஒளித்திருந்தார்கள். தேவன் மனுஷனைக்கூவி "நீ எங்கே?" என்ருர். அவன்: "நான் உமது சத்தத்தைக்கேட்டு, நிருவாணி யாதலாற் பயந்து, ஒளித்துக்கொண்டேன்" என்ருன். தேவன்: "நீ நிருவாணி என்று உனக்கு அறிவித்தவர் யாவர்? விலக்கிய விருக்ஷத்தின் கனியைப் புசித்தாயா?" என்ருர். மனுஷன்: "என்னோடுகூட்டிவைத்த ஸ்திரியே அந்தக்கனியைத் தந்தாள். நான் அதைப் புசித்தேன்" என்ருன். தேவன்: ஸ்திரியை நோக்கி: "ஏன் இப்படிச் செய்தாய்?" என்ருர். ஸ்திரி: "சருப்பத்தின் வஞ்சனையினுலே நான் புசித்தேன்" என்ருள். தேவன் சருப்பத்தை நோக்கி: "நீ இதைச் செய்ததனுல் சகல மிருக சந்துகளிலும் மிகச் சபிக்கப்பட்டுச் சீவ

பரியந்தம் வயிற்றினால் ஊர்ந்து மண்ணைத் தின்பாய்; உனக்கும் இந்த ஸ்திரிக்கும், உன் சந்ததிக்கும் இவள் சந்ததிக்கும் பகை உண்டாக்குவேன்; அதனால் அவள் உனது தலையை நருக்குவாள்; நீ அவளுடைய குதிக்காலைக் கொத்துவாய்" என்றார். ஸ்திரியை நோக்கி? "நீ அதிக வேதனையோடு பிள்ளைகளை ஈனுவாய்; உனது தலைவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பாய்; அவன் உன்னை ஆளுவான்" என்று சொன்னார். மனுஷனை நோக்கி; "உன்னிமித்தம் பூமி சபிக்கப்பட்டது; அது உனக்கு முட்செடிகளையும் முண்மரங்களையும் முளைப்பிக்கும்; நீ சீவபரியந்தங் கிலேசம் அடைந்து, நிலத்தில் உள்ள பயிர் வகைகளை வியர்வை முகத்தோடே, புசிப்பாய், மண்ணாகிய நீ மண்ணிலே ஒடுங்குவாய்" என்று சொன்னார். ஆதி. 1, 2, 3, அதி.

தேவன் பின்னும் ஆதிமனுஷருடைய சந்தானரூபமாகவே ஆத்துமாக்களைப் படைக்கின்றார். அதனால் விலக்கப்பட்டதைச் செய்த ஆதிமனுஷரும், அவர்களுடைய சுக்கில சோணிதங்களிலிருந்து பிறக்கின்ற சகல மனுஷரும் பாவிகளாயினார்கள். பாவத்தாலே துக்கம் உண்டாயிற்று. உரோ. 5: 12, 19; சங். 51: 5.

தேவன் இப்படியே ஆத்துமாக்களைச் சிருட்டித்துத், தாம் விரும்பிய காலவரையுஞ் சரீரத்தோடு சீவித்து நிற்கும்படி திதிசெய்து, திதிமுடிவிலே சங்கரிக்கின்றார். அவர்களுள், தமக்கு விரோதிகளாகிய அசுத்தர்களுக்கு நிக்கிரகஞ் செய்வர்; தம்மை நம்பி வழிபடுகின்ற பத்தராகிய சுத்தர்களுக்கு அநுக்கிரகஞ்செய்வர். சங். 103: 19; 2-ம் பேதுரு 3: 10; மத்தே. 25: 46.

## பசு நிரூபணம்.

உற்பத்தி காலத்திலே கடவுளாற் சுத்தஸ்வரூபமாகப் படைக்கப்பட்டவராய், ஆதியநந்த நித்தியராய், அவ்வியாபக ராய்ச், சுவாவதி சுவதந்திரராய், அரூபராய், மனம் என்னும் ஒற்றுமைக்கருவி உடையராய், சிந்தித்தல் அறிவு விருப்பு வெறுப்பு முயற்சி இன்பம் துன்பம் என்னுங் குணங்களை உடையராய், உள்ள சேதனர்களே பசுக்களாம். அப்பசுக் களுள், சிருட்டி தொடங்கிப் பாவஞ் செய்யாதிருக்கின்றவ ராகிய தேவதூதரும், பாவத்தின் நீங்கினவராகிய முத்தரும், சுத்தபசுக்களாம். தம்மாலுந் தம்முன்னோராலும் பெறப் பட்ட பாவமுடையவர்கள் அசுத்த பசுக்களாம். ஆதி. 2: 7; யோபு. 33: 4; யோபு. 32: 8; மத். 10: 28; லூக். 24: 39; பிர. 12: 7; யோபு. 35: 10.

பசுக்கள், தமது பாவச்செய்கையாலே நிக்கிரகபலன் அடைதலால், சுவதந்திரரே; ஆயினும், தமது புண்ணியச் செய்கையால் அநுக்கிரகபலன் அடையாமையாற் பர தந்திரரே.

## பாச நிரூபணம்.

ஆதியந்தமுடைய அநித்தியமாய்த், தேவ நியமம் உள்ள போது அநந்த நித்தியமாவதாய், அவ்வியாபகமாய் பர தந்திரமாய், இந்திரிய விடயமாய், விகாரியாய், அறிவில்ல தாய்த், தன்னியக்கம் இல்லதாய் உள்ள சடப்பொருளே பாசமாம். அது, காரியபாசமும், துஷ்கருமபாசமும் என இருவிதமாம்.

கடவுளாலே முதற்காரணமின்றிப் படைக்கப்பட்ட சடபதார்த்தமே காரியபாசம் அது, திரவியமும், குண மும், தொழிலும் என மூவிதமாம்.

திரவியங்களாவன, பிருதுவி அப்பு வாயு தேயு என்னும் பூதங்களும், அவற்றின் பேதங்களுமாம்.

குணங்களாவன:—பிறிதகற்றுந்தன்மை, பரப்பு, ஆகிருதி, பிரிபடுந்தன்மை, தன்னியக்கமின்மை, கவர்ச்சி என்னும் பொதுக்குணங்களும், அடர்த்தி, துளையுடைமை, கடினம், இளக்கம், உடையுந்தன்மை, முறியாது அடிபடுந் தன்மை, கம்பியாந்தன்மை, பற்றுந்தன்மை, மணம், சுவை, தண்மை, வெம்மை முதலிய சிறப்புக் குணங்களுமாம்.

தொழில்களாவன :—திரவியங்களின் இயக்கங்களாம். அந்தக் காரியபாசம் சுத்தமும் அசுத்தமும் என இருவிதமாம். படைக்கப்பட்ட தன்மையோடு இருக்கின்ற சுவர்க்க மண்டலம் முதலியன சுத்தபாசமாம் படைப்பின் பின்னர்ச் சீவருடைய பாபவசத்தாற் குற்றம் அடைந்த பூமி முதலியன அசுத்தபாசமாம்.

இனித் துஷ்கருமபாசமாவது:—பசுக்களிடத்திலே விதிக்கப்பட்ட வினையைச் செய்யாமையாலும், விலக்கப்பட்ட வினையைச் செய்தலாலும், தோன்றிய வாசனை வடிவமாய்ச் சுக்கில சோணிதவழியாற் சந்ததியிற் செல்வதாய்ப், பரிசுத்தியைக் கெடுப்பதாய், மயக்கஞ்செய்வதாய்ப், பயங்கிலேசம் வியாதி மூப்பு மரணங்களை விளைவிப்பதாய்த், துக்கசாதனமாய்ப் பலிதானத்தாற் பரிகரிக்கப்படுவதாய்ப், பரிகரிக்கப்படாதபோது நித்திய நரகவேதனைக்குக் காரணமாய்ச் சடகுணமாய் உள்ள பாவகருமமேயாம். அது சென்மபாவமுங் கருமபாவமும் என இருவிதமாம்.

இனிப் பாவமாவது தேவவாக்கியத்தை விசுவசியாமையே என்றும், தேவவிதியை மீறுதலே என்றும், தேவனை விரோதித்தலே என்றும், தேவகோபமே என்றும், தேவ

சாபமே என்றும் தனித் தனி கொள்ளப்படும் பக்ஷங்களும் உள. விவிலிய நூலின் வெளிப்படச் சொல்லப்படாத விஷயங்களிலே ஒரோர் குறிப்பின்படியே வியாக்கியாதாக்கள் தமக்கு இசைந்தபக்ஷங் கொண்டு தம்முண் மலைவர்.

## பசு கிருத்தியம்.

சரீரிகளாகிப் பிறந்த ஆத்துமாக்கள் சென்மபாவ வாசனையினாலே துரிச்சை உடையவர்களாகி, மேன்மேற் பாவங்களைப் பயின்று செய்வர். சிலர் சில புண்ணியமுஞ் செய்வர். ஈசுவரேச்சாப் பிரகாசனமாகிய விவிலிய நூலின் போதனைபெற்றுப் பற்று அற்றோர் மாத்திரமே முத்தி சாதனம் பெறுதலும், புண்ணியஞ்செய்தலும் உடையவராவர்.

## பசு போகம்.

ஆத்துமாக்கள், இம்மையிலே முயற்சிசெய்து, தேவ சித்தப்படி இன்பமும் துன்பமும் அநுபவிப்பர். இம்மையிலே பாவஞ்செய்தவரும், முத்திசாதனோபாயப் பெறுதியின்றிப் புண்ணியஞ் செய்தவரும், மறுமையிலே நித்திய நரகத்திலே முடிவில்லாத துன்பம் அடைவர்.

## முத்திசாதனம்.

இப்படியே தேவன் நியாயத்தின்படி சபித்தலினாலே ஆத்துமாக்களெல்லாருக்கும் பாவகருமம் விளைந்தமை நோக்கி, அவர்கண் மேற்கொண்ட இரக்கத்தினாலே அநுக்கிரகஞ் செய்ய விரும்பி முத்திசாதனோபாயம் உண்டாகும்படி சித்தத்திலே நியமித்தார்.

முத்திசாதனமாவது: பாவநீக்கத்துக்குப் பரிகாரமாகிப் பரிசுத்த நிலையை விளைவிக்குங் கருவியாம். பாவநீக்கத்துக்கு அநுகூலமாகிய பரிகாரமாவது பலிதானமேயாம். பலியெ

பது உபகாரப்பொருள், காணிக்கை. தானம்-இடுதல். பலி யாவது குற்றநீக்கத்தின்பொருட்டுக் கொடுக்கப்படுங் கிரயப் பொருள். சீவர்களுஞ் சீவராற் கொடுக்கப்படக்கூடிய ஆடு மாடு முதலிய உபகாரப்பொருள்களுந் தேவனது உடைமைக ளாம். சீவராற் செய்யப்படும் புண்ணியக் கிரியையெல்லாந் தேவனுக்குச் செல்லுங் கடமையாம். அதனுற் சீவர்கள் பலிதானத்துக்குச் சுவதந்திர கருத்தாக்களல்லர், ஆடு மாடு முதலியன சுவதந்திர பலிகளல்ல; பசு புண்ணியங்கள் சுவதந்திர புண்ணியக்கிரியைகளல்ல; அதனுல், பாதந்திர மாகிய இவையெல்லாந் தேவாநுக்கிரய நியமத்தாலன்றிப் பலிப்பனவல்ல. பலிதானத்துக்குத் தேவனே சுவதந்திர கருத்தா ஆகத்தக்கவர். தேவனுகிய கிறிஸ்துவே அவதார வாயிலாற் சுவதந்திர பலியாதற் கேற்றவர்; கிறிஸ்துவி னுடைய சரீர நிவேதனம் மரணம் முதலிய பதிபுண்ணியக் கிரியையே சுவதந்திர புண்ணியக் கிரியையாதற்கு இயைந் தது. அதனுல், தேவன், தமது புத்திரராகிய கிறிஸ்துவை, அந்த மனுடருடைய சந்ததியிலே மனுடனுய் அவதரித்துப் பிசாசனைச் சயித்து, மெய்யுபதேசஞ் செய்து, தம்மையே பாவப்பலியாகக் கொடுத்துச் சீவர்களுக்கு அநுக்கிரகஞ்செய் யும்படி ஏற்படுத்தினுர். கிறிஸ்துவும் அதற்கு ஏற்பட்டு மத் தியத்தராயினுர். அது விளங்கும் பொருட்டே ஸ்திரியின் சந்ததி சருப்பத்தினது தலையை நருக்கும் என்று தேவன் சாபகாலத்திற் குறிப்பாகக் கூறினுர். அதுவே கிருபா நியமம். அப்படியே கிறிஸ்துவின் பலிதானத்துக்கு ஞாப கக்குறியாக ஆட்டுக்குட்டிப் பலிதானத்தை நியமித்தார். அப்படியே முன்னேர்கள் கிறிஸ்துவின் பலிதானமாகிய ஞாப பியத்தைக்குறித்து விசுவசித்து மேஷபலிதானமாகிய ஞாப கத்தைச் செய்து வந்தார்கள். அந்தக் குறிப்பும் விசுவாச

முஞ் செய்கையுமே ஆதிக்கிறிஸ்து மதமாம். சிருட்டியி லிருந்து - 1657 - ஆண்டின் மேலே சலப்பிரளய முடிவிலே மாமிச போசனம் நியமித்தார். சிருட்டியின்மேல் 2106 - ஆண்டளவிலே ஆபிரகாமிடத்திலே இலிங்காக்கிர சருமச் சேதத்தையும் நியமித்தார்.

சிருட்டியிலிருந்து 2513 - ஆண்டின் மேலே தேவன் மோசே என்பவனுக்குக் காணப்பட்டு முந்திய நியமத்தின் விஸ்தாரமாகிய மூன்றுவித விதிகளை உபதேசித்தார். அவை சன்மார்க்கவிதி, கிரியாவிதி, நீதிவிதி எனப் பெயர் பெறும்.

1. ஒரு தேவனையே வணங்கல், 2. பிறதெய்வரூபம் வணங்காமை, 3. தேவநாமத்தை வீணில் வழங்காமை, 4. சனிபுண்ணியவார நியமம், என்னுந் தேவார்த்த காரியம் நான்கும், 5. பிதா மாதாக்களை உபசரித்தல், 6. கொல் லாமை, 7. வியபிசரியாமை, 8. கள்ளாமை, 9. பொய்ச் சாக்கியஞ் சொல்லாமை, 10. பிறர்பொருள் வெஃகாமை, என் னும் மனுடார்த்தகாரியம் ஆறும் ஆகிய பத்துவிதமான நியம புண்ணியங்களை விதிக்கின்ற பத்துக்கற்பனைகளே சன்மார்க்க விதியாம். அது தேவ நியாயப் பிரமாணம் எனவும் பெயர் பெறும்.

சரீரசுத்தி திரவியசுத்தி ஆசௌசம் உபவாசம் புண்ணி யத்தலம் புண்ணியகாலம் புண்ணியத்திரவியம், குருத்துவம் ஆலயசேவை பூசை பலி நிஸ்தாரோற்சவம் முதலிய நியம புண்ணியங்களை உணர்த்துவதே கிரியாவிதியாம்.

யுத்தஞ் சமாதானம் கணவன் மனைவி பெற்றூர் பிள்ளை கள் உடையவன் அடியவன் அன்னம் வஸ்திரம் வீடு நிலம் தானியம் வேளாண்மை பணம் ஆடு மாடு பட்சி மிருகம் தலை யீற்று இலேவியாசிவனம் மனுடசரீரம் சீவன் என்பவை

களைக் குறித்து ஒழுக்க வழக்கங்களையும் தண்டத்தையும் உணர்த்துவதே நீதிவிதியாம்.

இவற்றுட் கிரியாவிதியானது இட்டசித்திக்கும் பத்திக் திக்குங் காரணமாயும், பத்தரை வேறுபடுத்துகின்ற முத் திரையாயும், கிறிஸ்து கிருத்தியத்துக்கு ஞாபகக்குறியாயும் இருக்கின்றது. உபா. 6: 1, 2, 14, 17; உபா. 29: 1, 9—18; லேவி. 20, 22, 26. இது ஆதிக்கிறிஸ்து மதத்தின் விரி வாகிய யூதக்கிறிஸ்துமதம் எனப்படும்.

சிருட்டி காலத்திலிருந்து 4005 - ஆண்டின் மேலே பிதாப் புத்திரன் பவித்துராத்துமா என்பவர்களுட் புத்திர னாகிய கிறிஸ்து என்பவர் பூமியிலே ஆசியாக்கண்டத்திலே துருஷ்க தேசத்திலே கானான் நாட்டிலே யோசேப்பு என்பவ னுக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியாள் என்பவளு டைய வயிற்றிலே பவித்துராத்துமாவினால் உண்டாக்கப் பட்ட கருப்ப பிண்டத்திலேவந்து புகுந்து, மனுடத்துவமுந் தேவத்துவமும் உடையவராய்ப்பிறந்து, வளர்ந்து; பண்டி தர்களோடு பயின்று திரிந்து, முப்பதாம் வயசிலே யோவா னிடத்திலே ஸ்நானம்பெற்று, பவித்துராத்துமாவேசம் அடைந்து, நாற்பது நாள் வரையுங் காட்டிலே உணவின்றி இருந்து பிசாசனாற் பரீக்ஷிக்கப்பட்டு, மனுஷரை வஞ்சித்த பிசாசனைத்தாம் வென்று, சற்குருவாகித் திவ்விய உபதேசங் களை உபதேசித்து, அற்புதங்களைச்செய்து மனுஷர் கடந்த கற்பனைகளைத் தாம் அநுட்டித்துக் காட்டிச், சமய போதக ராகிய அப்போஸ்தலர்களைப் பயிற்றி ஏற்படுத்தி, ஞான ஞாபக சமஸ்காரங்களை நியமித்துவிட்டு, மனுஷருடைய பாவங்களெல்லாவற்றையுந் தாம் ஏற்றுக்கொண்டு, மனுஷர் அநுபவிக்கவேண்டிய வேதனைகளைத் தாமே அநுபவித்துச்

சிலுவையில் அறைப்பட்டுச் சர்வ பாவ பலியாய் இறந்து, மூன்றுநாள் உயிர்த்தெழுந்து, சுவர்க்க மண்டலத்தில் ஏறிப் பிதாவாகிய யெகோவாவின் வலப்பக்கத்திலே வீற்றிருக்கிறூர்.

கிறிஸ்துவினூற் செய்யப்பட்ட பலிதானமாகிய பதி புண்ணியமே முத்திசாதனமாம். கிறிஸ்துவை முழுமையாக நம்புதலாகிய விசுவாசம் ஒன்றே சீவர்கள் பதிபுண்ணிய பலனைப் பெறுதற்கு உபாயமாம். முத்திசாதனேபாயமாகிய விசுவாசம் உள்ள இடத்திலே சத்தியம் நீதி தயை முதலிய பசு புண்ணியங்கள் நியதகாரியமாய்த் தோன்றி விசுவாச உண்மையை அறிவிக்குங் குறிமாத்திரமாய் இருக்கும். அவை கடமையாதலிற் பலியாவாம்.

பதிபுண்ணியப் பிரசாத பலப்பெறுதிக் குறியாகக் கிறிஸ்துவாலே நியமிக்கப்பட்ட சமஸ்காரங்கள் இரண்டாம். அவை ஸ்நானமும் நற்கருணையுமாம்.

ஸ்நானமாவது மனம் திருப்புதலுக்கும் பாவசுத்திக்கும் ஏதுவாகிய கிறிஸ்துவின் அருளுக்கு ஞாபக்குறியாக முத்தேவர் நாமத்தினூல் அளிக்கப்படுஞ் சலத்தினேனே முழுக லாம். ஸ்நானமாவது மனந்திருப்புதலுக்கும் பாவசுத்திக் கும் ஞாபக்குறியாக முத்தேவர் நாமத்தினூற் கொடுக்கப்படுஞ் சலத்தின் முழுகலாம் என்பாரும் உளர்.

நற்கருணையாவது பாவபலியாகிய கிறிஸ்துவின் மாமி சத்துக்கும் இரத்தத்துக்கும் ஞாபக்குறியாக உட்கொள்ளப் படுகின்ற அப்பமுந் திராக்ஷா ரசமுமேயாம்.

இலிங்காக்கிர சருமச்சேதனத்துக்கு ஸ்நானமும், நிஸ்தாரோற்சவத்துக்கு நற்கருணையும் பதிலாம்.

இப்படிச் சொல்லப்பட்ட சமயமே யூதமதத்தின் ஞாப் பியப் பொருளாகிய சுத்தக்கிறிஸ்துமதம். இது தோன்றவே ஞாபகமாகிய யூதமதக்கிரியைகள் தள்ளப்பட்டனவாம்.

## பவித்திராத்தும கிருத்தியம்.

மூவருள் ஒருவராகிய பவித்திராத்துமாவானவர், சிருட்டி முதலிய கிருத்தியத்தில் ஏற்ற உதவிசெய்கின்றார். சங். 104: 30; பரிசுத்தபத்தரை உணர்த்தி, அவர்களைக் கொண்டு விவிலியநூலைச்செய்வித்தார். 2-தீமோ 3: 16 பேதுரு 1: 21. கிறிஸ்துவைக் குற்றமற்ற மனுஷவடிவத்தராகப் பிறப்பித்து, அவருக்குப் பூரணமான ஞானத்தையும் அருளையுங்கொடுத்து உபகரித்தார். எச்காலத்துங் கிறிஸ்துவை விசுவசிக்கும் பத்தர்கள் விவிலியநூலை உணரும் பொருட்டு அவர்களுடைய மனத்தை விளக்கி, அவர்களைப் பிரார்த்திக்கும்படி ஏவி, அவர்கள் தேவபுத்திரராயினர் என்பதை அவர்களுக்குள்ளே காட்டி, அவர்களைத் துக்கத்தில் ஆற்றி, உள்ளும் புறமும் ஆகிய சகல பாவத்தையும் நீக்கிச் சுத்திகரித்து, அவர்கள் தேவனையுஞ் சகல மனுஷரையும் பூரணமாகச் சிநேகிக்கும்படி அவர்களுடைய இருதயங்களில் அன்புபொழிந்து, மற்றும் வேண்டிய சகல சற்குண பரமபுண்ணியங்களாலும் அவர்களை அலங்கரித்து வருகிறார். பவித்திராத்துமாவைப் பெறுதற்குப் பிரார்த்தனையே முக்கிய சாதனமாம்.

இப்படிச் சொல்லப்பட்ட கிறிஸ்துமதத்தை அறிந்து, சகல மனுஷருந் தமது பாவத்தை உணர்ந்து பச்சாத்தாபம் அடைந்து, விவிலிய நூலின் விதித்தபடியே யேசுக்கிறிஸ்துவின்மேலே விசுவாசங்கொண்டு, கிறிஸ்துபத்தரின் கூட்டமாகிய திருச்சபையிற் சேர்ந்து, ஸ்நானம் நற்கருணை என்னும் சமஸ்காரங்களைப்பெற்று, இரண்டாம் பிறப்படைந்து, தேவப்பிரியமாகிய புண்ணியங்களைச்செய்து, தேவனைப்பிரார்த்தித்துத் திடவிசுவாசம் அடைந்து பதிபுண்ணியப் பிரசாத பலனைப் பெற்றுக்கொண்டு, விவிலியநூலை ஓதியுணர்ந்து,

எல்லாருக்கும் பிரசங்கித்து நிலைபிறழாமல் இருத்தல் வேண்டும்.

## நிக்கிரக அநுக்கிரகம்.

கிறிஸ்துநாதர் உலகமுடிவிலே விசாரணை அல்லது நியாயத்தீர்ப்புச் செய்யும்பொருட்டு மகிமையுடனே வந்து அக்காலத்திலே சீவித்திருக்கிறவர்களை மாத்திரமன்றி மரித்தவர்களையுஞ் சரீரத்தோடு எழுப்பி எல்லாரையுந் தமது சந்நிதியிலே வருவித்துச் சன்மார்க்கரை வலப்பக்கத்திலும், துர்மார்க்கரை இடப்பக்கத்திலும் நிறுத்தி, அவர்களுடைய புண்ணியபாவங்களை விசாரணைசெய்து, அவர்களுள் தம்மை விசுவசியாத துர்மார்க்கரைக் கந்தகமும் அக்கினியும் எரிகிற நித்திய நரகத்திலே தள்ளி நிக்கிரகஞ்செய்வார்; தம்மை விசுவசித்த சன்மார்க்கரை மாத்திரம் பாவமும் துக்கமும் மரணமும் அணுகாத சுத்த ஸ்தலமாகிய சுவர்க்கமண்டலத்திலே இருத்தி அநுக்கிரகஞ்செய்வார்.

## முத்தி.

பாவநீங்கிப் பரிசுத்தநிலையை அடைந்த முத்தர்கள் அந்த முத்திஸ்தானத்திலே சுத்தசரீரிகளாய் இருந்து, தேவனைப் புகழ்ந்து பாடித், தேவமகிமையை வளர்த்து, தேவசந்நிதான சுகத்தை நித்தமும் அநுபவித்துக்கொண்டிருப்பார்கள். தேவமகிமையை வளர்த்தலாவது தேவனுடைய குணபூர்த்தியை அங்கீகரித்தலும், நம்பலானும் பற்றலாலும் அநுசரித்தலாலும் தேவகுணத்துக்கு ஏற்ப ஒழுகலுமாம்

கிறிஸ்துமதசாரம் முற்றிற்று.

# கிறிஸ்துமத கண்டனம்

## பதிப்பிரகரணம்.

### கிருத்திய நிமித்தம்.

கிறிஸ்துமதத்தர்களே!

யெகோவா என்கிற கடவுள் ஆதியிலே சித்தசித்து வடிவாகிய உலகத்தைத், தன்னிமித்தமோ பிறர்நிமித்தமோ யாது நிமித்தமாகப் படைத்தார்? யாவனாயினும் யாதாயினு மோர் காரியத்தை ஒரு நிமித்தமுமின்றிச் செய்தலில்லை யன்றோ! யாது காரியம் அது காரணமுடைத்தென்பது நியாயம். உலகங் காரியமாதலின் அதற்கு நிமித்தகாரண மாகிய பிரயோசனம் வேண்டப்படுகின்றது. எசாயா 43-அதி: 7; என் நாமத்தைத் தரித்த யாவரும் என் மகிமை யைப் பிரகாசிப்பிக்கும்படி என்னாற் சிருட்டிக்கப்பட்டும் உருவாக்கப்பட்டும், செய்யப்பட்டும் இருக்கிறார்கள் என்ற விவிலியச்சுருதி வாக்கியத்தால், அவர் தமது நிமித்தமாகவே படைத்தார் என்பது பெறப்படுகின்றது. இன்னும், சிருட் டிக்கு முன்னர்ச்சீவர்கள் இல்லை என்பது உங்கள் கிறிஸ்து மத பக்ஷமாதலால், பிறர்நிமித்தமாகப் படைத்தார் என்று கூறுதல் நும்மதத்திற்குக் கூடாது. ஆகவே பாரிசேடயுத் தியால், தமது நிமித்தமாகவே படைத்தார் என்பது பெறப்படுகின்றது.

மேலும், அந்த யெகோவா என்பவர் ஆதியிலே சுத்த ஞானமின்றி அஞ்ஞானபந்தம் உடையவர்களாகவே இரண்டு மனுஷரைப் படைத்தார். அவர்களுக்குச் சமீபத்திலே உபயோகமில்லாத ஒரு மரத்தையும் வைத்தார். அவர்

களுக்கு அதன் கனியைப்புசித்தல் வேண்டா என்று நியாய மின்றி ஒரு கட்டளையுங் கொடுத்தார். பிசாசை அழித்த லெனுந் தடுத்தலேனுஞ் செய்யாது பூமியிலே சீவர்களைப் பரீக்ஷை செய்யும்படி ஏற்படுத்திவிட்டார். ஆதி மனுஷர் புத்தியின் மோகத்தாலும், விடயத்தின் இனிமையாலும், பிசாசின் ஏவுதலாலும், கட்டளையைக்கடந்து பாவிகளானார் கள். வேறு வழிவிட்டு அப்பாவிகளின் சந்தான ரூபமாகவே பின்னர்ப் படைக்கப் படுதலின் எல்லாச் சீவர்களும் பாவி களேயாகின்றனர். பாவிகள் உண்டாயினமையால் அநுக்கிர கம் வேண்டப்பட்டது. அப்படிப் பாவிகள் உதித்தற்கு ஏதுவாதலாலே இந்தச் சிருட்டி அநுக்கிரகத்துக்கு நிமித்த மாயிற்று. பாவிகளுக்குப் பரீக்ஷாரூபமாக முத்தி யுபாயங் கள் அறிவிக்கப்பட்டன. அவைகளைப் பற்றிக்கொண்டவர் களைத் தேவனை அநுசரிக்குங் குணமுடைய சுத்தர் என்றும், பற்றிக்கொளாதவர்களைத் தேவ விரோதகுணமுடைய அசுத்தர் என்றும், தெரிந்து கோடற்கும், சுத்தருக்குப் பரலோக காரியங்களை உணர்த்துதற்குமே அழிவுடைய பூமியிலே பாவிகளுக்கு இருக்கை நியமிக்கப்பட்டது. அத ளுல், இங்ஙனமாகிய ஸ்திதியும், ஸ்திதி முடிவாகிய சங்கார மும் அநுக்கிரக நிமித்தமாம். முத்தியில் இருக்கின்ற சுத்தர் கள் தேவனை யுபசரித்தற் றொழிலில் வழுவாதிருக்கும்படி தண்டபயமுறுத்தற் பொருட்டே அசுத்தர்களை அழித்து விடாமல் நித்திய நரகத்திலே வைத்துத் தண்டித்தலாகிய நிக்கிரகம் நியமிக்கப்பட்டது. அதனால் இந்த நிக்கிரகம் அநுக் கிரக நிலைபேற்றுக்கு நிமித்தமாம். இப்படியே சிருட்டி திதி சங்காரம் நிக்கிரகம் என்னும் நான்கு நிமித்தங்களாலும் முடிக்கப்படுகிற அநுக்கிரகமே பிரதான கிருத்தியம். அவ் வனுக்கிரகமும் தேவனை யுபசரித்தற்கு நிமித்தமாம். அதனால்

தேவமகிமை விளக்கமுண்டாம். ஆகவே எல்லாக் கிருத்தியங்களாலும் முடியும் பரமபலனுவது தேவன் ஆனந்தம் அநுபவித்தலேயாம்.

இங்ஙனம் கூறப்பட்ட அநுபவத்தாலும், தேவன் தமது நிமித்தமாகவே படைத்தார் என்பது பெறப்படுகின்றது. அங்ஙனமாதலால் யெகோவா என்பவர் சீவர்கள் தமது மகிமையை யறிந்து தமக்குப் பயந்து தம்மைப் புகழ்ந்து வணங்கச்செய்து அதனுல் தமது மகிமையை விளக்கவேண்டியே படைத்தார். ஆதலால் தமது நிமித்தமாகவே படைத்தார் என்பதே நம்மத சம்மதம். யெகோவாத் தமது மகிமை விளக்கவேண்டிச் சிருட்டித்தார் எனவே, சிருட்டி காலத்துக்கு முன்னே அவருடைய மகிமை விளங்காதிருந்ததென்பதும், அஃது அவருக்கோர் குறையாயிருந்தது என்பதும் அக்குறையை நீக்க விரும்பியே சிருட்டிக்க முயன்ருர் என்பதும் பெறப்படும். அற்றன்று; அவருடைய மகிமை முன்னரே தன்னிற்றுனே குறையின்றி விளங்கியிருந்ததேயாமெனின்; குறையின்றி விளங்கியிருந்த தொன்றினைப் பின்னரும் விளக்குதல் கூடாது. அதனைச் சீவர்களுக்கு விளக்கப் புகுந்தாரெனின்; அதுவுந் தன்னிமித்தமேயாகலின், முற்கூறிய குற்றம் பற்றும். சீவர் நிமித்தமே சீவர்களுக்கு விளக்கப் புகுந்தாரெனினும், படைப்பின் முன்னர்ச் சீவர்கள் இல்லாமையாற் சீவர் நிமித்தம் என்றலே கூடாது. தாம் பின்னர்ப் படைக்கவேண்டிய சீவர்களுக்குத் தம்மகிமையை விளக்கவேண்டினுரெனின்; படைக்கவேண்டல் விளக்கவேண்டற்கும் விளக்கவேண்டல் படைக்கவேண்டற்கும் நிமித்தம் என்பது கொள்ளப்படுதலின் ஒன்றனையொன்று பற்றல் என்னுங் குற்றம் பற்றும். தமது மகிமை முன்னேயுங் குறைவின்றி விளங்கியிருந்ததேயாயினும் அதனை அநுப

விப்பார் இல்லாமையின், அது பயன்படாது வீணேகிடந் தமையால், அதனை அனுபவிக்கவேண்டிச் சீவர்களைப் படைத்தாரெனின்; தமது மகிமையைத் தாமே அநுபவித் தலின், அநுபவிப்பாரின்றி வீணேகிடந்தது என்பதுகூடாது சீவர்கள் இன்மையாற் சீவர்களைத் தமது மகிமை அநுபவிப் பித்தல் வேண்டா; வேண்டின்; அநுபவிக்கவேண்டல் படைக்கவேண்டற்கும், படைக்கவேண்டல் அநுபவிப்பிக்க வேண்டற்கும், நிமித்தம் என்பது போதலின், முன்போல ஒன்றனையொன்று பற்றல் என்னுங் குற்றமேறும்; ஆதலின் எங்ஙனங் கூறினும், மகிமை விளக்காதிருத்தல் எவ்வாற்ரு னும் ஓர் குறையன்ருயின், விளக்கமுயலுதலே இல்லையாத லான், அஃதோர் குறையென்றே துணியப்படும். அக்குறை முன்னிலராகிய சீவர்மேற் சாராது முன்னுளராகிய யெகோ வாலன் மேலதேயாகும். ஆதலின், யெகோவாத் தமது மகிமை விளங்காதிருந்தமைபற்றிக் குறையுடையராய் இருந்த னர் என்பது முடிந்த பக்ஷம். குறையுடையர் எனவே, அதற்கு எதிராகிய நிறைவுடைமை இலர் என்பதும், அக் குறையுடைமையாலும் அதனை நீக்கவேண்டுகையாலும் வியா குலங் கொண்டிருப்பாராதலின், பரமானந்தம் இலரென்பதும், தாம் இன்பம் அடையும்பொருட்டுப் படைக்க விரும்பினு ரெனவே, தமக்கு இன்பஞ்செய்வனவற்றிற் காமமும், தமக் குத் துன்பஞ் செய்வனவற்றிற் குரோதமும், அவ்விரண்டின் மூலமாகிய மோகமும் உடையர் என்பதும் அநாதியே இக்குறை நீக்கும் உபாயம் அறியாராதலின், அநாதியறிவிலர் என்பதும், அநாதியாகவே கிருத்தியஞ் செய்யாமையால் அநாதி கர்த்திருத்துவம் இல்லாதவர் என்பதும், அநாதியே கர்த்திருத்துவம் இல்லாதிருந்து சிலகாலத்துக்கு முன்னே கர்த்திருத்துவம் அடைந்து கிருத்தியத்தின்முயன்ருராதலின்,

அவர் அடைந்த கர்த்திருத்துவமானது முன்னிலதாகிப் பின்னுளதாதலாகிய காரியலக்ஷணம் உடையதாதலாலே அதற்கு வேறொரு கருத்தா வேண்டப்படுதலின், அவர் அதனை வேறொரு கருத்தாவாற் பெறுதலாற் சுவதந்திரத்துவம் இலர் என்பதும் அநாதியேயன்றி இடையிலே குறைவோடு கூடிய கிஞ்சிற் கர்த்திருத்துவம் அடைந்து தன்மை வேறுபடுதலின் அவிகாரித்துவம் இலர் என்பதும், விகாரம் உடைமையாலுங் குறைவுடைமையாலும் அநாதி நித்திய வியாபகத்துவம் இலரென்பதும், தம்மின்பத்தின் பொருட்டுத் தாமே பாவம் விளைதற் கேதுச்செய்து பல சீவர்களை நித்தியகாலந் தண்டிக்க முயன்றமையாலே நியாயமும் இரக்கமும் நன்மையும் இல்லாதவர் என்பதும், சீவர்களுள்ளே தம்மை நித்தம் உபசரிக்கத்தக்கவர் இன்னரென்பதை ஞானத்தால் அறியமாட்டாது அவர்களைப் பாவிகளாக்கிப் பூமியில் இருத்தி விதிகளைக் கொடுத்துப் பரீக்ஷைசெய்து அறிகின்றாராதலின் முற்றறிவிலர் என்பதும், சீவர்க்குப் பாவமுந் துக்கமும் விளைவியாது தம்மை உபசரிப்பித்தலும் தமக்கு இன்பம் விளைவித்தலும் இயற்றமாட்டாமையின் முழுதாற்றல் இலர் என்பதும் பெறப்படும். மேலும், பாவம் விளையும் என்பதை முன்னறியாரென்னில் முழுதறிவிலர் என்பதும், அறிந்தும் அதனைத் தடுக்கமாட்டாதொழிந்தாரெனின் முழுதாற்றல் இலர் என்பதும் பெறப்படும்.

சீவர்களுடைய சுகானுபவத்துக்குத் துக்கானுபவமும் துக்கானுபவத்துக்குப் பாவமும் நியதகாரணம் என உணர்ந்தாராதலிற் சுகம் பிறப்பித்தற்கே பாவம் விளைவித்தாரெனின், பாவம் இல்லாத தேவனுக்குந் தேவதூதருக்குஞ் சுகம் உண்டாயிருத்தலால் அங்கே சுகானுபவத்துக்குப் பாவம் காரணமாகாமையின் அவர் திரிபுணர்ச்சியுடையர் என்பது பெறப்படும்.

இங்ஙனமாகவே, குறைவு, வியாகுலம், காமம், குரோதம், மோகம், ஆதியறிவு, ஆதிச்செயல், பரதந்திரத்துவம், விகாரத்துவம், அநித்தியத்துவம், அவ்வியாபகத்தவம், அந்நியாயம், வன்கண்மை, தீமை, சிற்றறிவு, சிறிதாற்றல் முதலிய குற்றங்கள் அவரிடத்து உள்ளனவாம். ஆகவே, அவர் பதித்துவம் உடையரல்லர் பசுத்துவமே உடையர் என்பது நியாயசித்தமாம்.

இக்குற்றங்களெல்லாம் ஆணவங் கருமம் மாயை என்னும் பாசங்களாலாகின்றன என்று சைவநூல் கூறுதலின், யெகோவா என்பவர் பாசபந்தமுடையவரேயாம். ஆதலால் அநாதியே ஆணவபாசத்தாற் பந்திக்கப்பட்டுத் தமதியற்கைச் சிற்சத்தி வியத்தி இல்லாமையாலே பாதந்திரராய் இருந்த யெகோவா என்பவர், அநாதி நித்திய வியாபக சுவதந்திர சர்வஞ்ஞராயும், அநாதி சித்த பெத்தாத்தும நிமித்தமாக அநாதி கிருத்திய கர்த்தாவாயும் இருக்கின்ற பரமபதியாகிய பரசிவனது திவ்வியப் பிரசாதரூப சத்தியசங்கற்ப காரணத்தினாலே தமது பூருவ காலீன கருமானுசாரமாகவே நிரூபிக்கப்பட்ட மாயாகாரியமாகிய சரீரமுங் காரணமும் எடுத்துச், செயற்கையாகிய பொறியுங் குறியும் உரையும் என்னும் பிரமாணங்களாலும் பிறகருவிகளாலுஞ் சிற்றறிவுஞ் சிறுதொழிலும் விளங்கப்பெற்று, நியதபுவனத்திருந்து நியதபோகம் புசித்துத், தமது அதிகாரமுடிவில் மரணமடையும் பசுவாம் என்பது சைவம் சித்தமாம்.

இனிச் சில கிறிஸ்தவர்கள், இன்னகாலத்திலே இன்ன இடத்திலே இன்ன பிரகாரமாக ஒரு நிமித்தமும் இன்றிச் சிருட்டி கிருத்தியஞ்செய்தல் வேண்டும் என்கிற ஒரு சங்கற்பமானது, யெகோவாவுடைய இருதயத்திலே அநாதியே

அமைந்து கிடந்தது; அந்த அநாதி சித்தசங்கற்பத்தின் படியே, நியதகாலத்திலே வேறொரு நிமித்தமும் இன்றி யெகோவாச் சிருட்டிசெய்தார் என்று கூறுவர். அக்கூற்று விவிலியச்சுருதிப் பிரமாணத்தில் ஏருமையாலும், தமது நிமித்தம் படைத்தார் என உணர்த்துகின்ற மேலைப்பிரமாணங்களாலே தடுக்கப்படுதலாலும் பொருந்தாது.

மேலும், இன்னகாலத்திலே இன்ன இடத்திலே இன்னபடி சிருட்டிசெய்தல் வேண்டும் என்கின்ற சங்கற்பம், யெகோவாவுடைய இருதயத்திலே அநாதியே அமைந்து கிடந்ததெனின், அவ்வாறே இன்ன இன்னகாலத்திலே இன்ன இன்னபடி திதி சங்காரம் நிக்கிரகம் அநுக்கிரகம் என்னுங் கிருத்தியங்கள் செய்தல்வேண்டும் என்கின்ற சங்கற்பமும், முற்றறிவராகிய யெகோவாவுடைய இருதயத்திலே அநாதியே அமைந்துகிடந்ததெனல்வேண்டும். ஆதலால், சிருட்டி கிருத்தியத்துக்கு வேறொரு நிமித்தமும் வேண்டப்படாமை போலவே, மற்றைக் கிருத்தியங்கட்கும் வேறொரு நிமித்தம் வேண்டப்படாதாதலின், யெகோவாவானவர் சீவர்களுடைய பாவபுண்ணியங்களாகிய நிமித்தகாரணம் வேண்டாது, அநாதி சித்தசங்கற்பத்தின்படி அவரவருக்கு நரக முத்திகளைக் கொடுப்பார் என்பது பெறப்படும். ஆகவே, சீவர்கள் முத்திபெறும்பொருட்டு முயலல்வேண்டுவதன்று, என்பதும், அங்ஙனஞ் சீவர்கள் முயலும்படி நியமிக்குஞ் சுருதி வீண் என்பதும், அச்சுருதியைச் செய்த யெகோவா அறிவிலி என்பதும் முடியும். அதனால், அநாதி சங்கற்ப நிமித்தங் கோடல் பொருந்தாதென்பது.

இனித் தேவனது கிருத்தியத்துக்கு நிமித்தம் யாதென்று விசாரித்தல் சீவருக்குத் தகாது என்றும், தேவன் தமதிச்சைப்படி செய்வாரன்றிச் சீவருடைய யுத்திக்கு

இசையச்செய்வாரல்லர் என்றுஞ் சிலர் கூறுகின்றனர். அக்கூற்றால் அநிட்டப்பிரசங்கம் உண்டாம். அங்ஙனமன்றோ? சகல சமயவாதிகளும் தத்தஞ் சமயநூலே தேவவாக்கியம் என்று தனித்தனி கூறுகின்றனர். அவற்றுள் அசற்சமய நூல்கள் தேவவாக்கியமல்ல எனத்தெரிந்து விலக்கல்வேண்டி அந்தந்த நூல்களில் உள்ள தகுதியின்மைகளைக் காட்டும்படி ஆக்ஷேபஞ்செய்யும்போது, தேவன் செய்யுங் கிருத்தியமும் தேவன்செய்த நூலும் சீவருடைய யுத்திக்கு இசைந்திருத்தல் வேண்டப்பட்டதன்று என்றும், தேவன் தமதிச்சைப்படி செய்வார் என்று, அவைகளைக் குறித்துச் சீவர்கள் விசாரித்தல் தகாது என்றும், அவ்வச்சமயிகளாற் சமாதானங் கூறப்படும். அதனாற் சகலசமயங்களுஞ் சற்சமயங்களாம். அதனாற் கிறிஸ்துமதமொன்றே சற்சமயம் என்ற வாதம் அழிந்துபோமன்றோ!

அன்றியும், தமது நிமித்தமே சிருட்டி செய்யப்பட்டது எனத் தேவனாற் சுருதியிற் கூறப்பட்டமையாலும், அறிய வேண்டுதற்கு விடயமாகாதது சுருதியிற் கூறப்படாது ஆதலாலும், சிருட்டி நிமித்தம் அறியவேண்டப்பட்டது என்பது பெறப்படலின்; அதனை அறியவேண்டுதல் சீவர்கட்குத் தகாது என்றல் தேவச்சுருதி விருத்தமாம். அதனால் அவர் கூற்றுப்பொருந்தா தென்பது.

இனித் தேவ கிருத்திய நிமித்தம் அவாச்சியம் என்று சிலர் கூறுகின்றனர். அவாச்சியமாவது பந்தமறைப் பவத்தையுடைய சீவராற் கிரகிக்கப்படாமையாற் சுருதியினுங் கூறப்படாத பரம ரகசியமாம். கிருத்திய நிமித்தந் தேவ மகிமை விளக்கமேயாமெனச் சுருதியிற் கூறப்படுதலால், அதனை அவாச்சியம் என்றல் தாய் மலடி என்றல் போலப் பொருந்தாதென்பது. இங்ஙனமாகவே கிறிஸ்துமத பக்ஷத்

திலே பதிகிருத்திய நிமித்த விசார நிரூபணத்தினுற் பதித்துவக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## உபாதானம்.

கிறிஸ்துமதத்தர்களே!

யெகோவா ஆனவர் முதற்காரணமின்றி இன்மையிலிருந்து உலகத்தைப் பிறப்பித்தார் என்று கூறுகின்றீர்களே: "உள்ள காரணத்திலுண்டாங்காரியமுதிக்கும்." "காரணத்திற் சத்திரூபமாயிருந்ததே பின்பு காரகங்களால் வியத்திரூபமாகிக் காரியமாம்; வித்தின் மரம்போல." "காரணமின்றிக் காரியம் பிறத்தல் யாண்டுமில்லை." இன்மைக் காரணத்தில் இன்மைக் காரியம் பிறக்குமன்றி உண்மைக்காரியம் பிறவாது. மணலினெண்ணெயைப்போல இல்லாததைச் செய்தலின்மையானும், தயிரைவேண்டினேன் பாலை யெடுத்தல் போலக் காரியம்வேண்டினேன் காரணங் கோடலானும், வெள்ளியிற் பொன்னுண்டாகாமைபோல எல்லாவற்றினும் எல்லாம் உண்டாகாமையானும், வலிய குலாலனும் மண்ணல் இயலுங்குடத்தையே செய்தலானும், காரியத்திற் காரணத் தன்மையிருத்தலானும் சற்காரியவாதம் துணியப்படும் என்பன நியாய நூற்றுணிபரமன்றே!

ஆதலால் குடமுதலிய காரியங்களுக்குக் குயவன் முதலிய கர்த்திரு காரணமும், மண்முதலிய முதற்காரணமும் பிறழ்தலின்றி நியதமாயிருத்தலால் காரியமாகிய உலகத்துக்குக் கருத்தாவும், முதற்காரணமும் ஆவசியகமாயுள்ளன என்று அனுமிக்கப்படும்.

உலகமாகிய ஒரு பக்ஷத்திலே காரியத்தன்மையாகிய ஒரு அநுமானத்தால் அநுமிக்கப்படுகின்ற கருத்தாவும் முதற்காரணமுமாகிய இரண்டு சாத்தியங்களுள் ஒன்று

சித்தமாம் எனவும், மற்றையது அசித்தமாம் எனவுங்கொள்ளல் ஒருவாற்றானும் பொருந்ாதன்றே!

அங்ஙனங் கொள்ளின் அநுமானப் பிரமாணமெல்லாம் அழிந்துபோமே! அற்றேல்; காரியத்தன்மை ஏதுவினாலே திருஷ்டாந்த சித்த கடாதி கர்த்தாக்களிடத்திற் போலத் தார்ஷ்டாந்திக சித்தலோக கர்த்தாவிடத்திலும் சிற்றறிவு, சிறிதாற்றல், பரவசம், நிறையாமை, நிலையாமை என்னுங் குணங்கள் உளவாமென்று கருதப்படுமன்றோவெனின்; அற்றன்று திருஷ்டாந்தத்திலே கடகர்த்தாவாகிய சீவாத்துமா ஆனவன் தன்காரியமாகிய கடத்தை முடிக்கும்வழித் தன் காரியத்திலே முற்றறிவனாய்த், தன்காரியத்தின் முழுதியற்றுபவனாய்த் தன் காரியத்திலே நிறையுடையனாய்த், தன் காரியத்திலே தன்வசத்தனாய்த், தன்காரிய முடித்தற்கியன்ற சரீர அவதி நிலையுடையனாய் இருப்பன். அப்படியே கடவுளுந் தன்காரியத்திலே முற்றறிவு முதலியன உடையனாயிருப்பன் என்பது முடியும். அற்றேல்; கடகர்த்தாத் தன் காரியமல்லாத படமுதலியவற்றை இயற்றமாட்டாமை போலவே இறைவனுந் தன் காரியமல்லாத பிறிதொன்றை இயற்றமாட்டானாவன் என்னில் இறைவனது காரியமல்லாத பிறகாரியமின்மையால் இச்சங்கைக்கிடமே இல்லை என்பது. அதனால், காரியத்தன்மை யேதுவால் முதற்காரணவுண்மை சாதிக்கப்படுகின்றது.

இனிக் கடவுள் சர்வசாமர்த்தியத்தினாலே காரணமின்றிக் காரியம் பிறப்பிப்பார் என்னில், அது கூடாது. சர்வசாமர்த்தியமாவது தக்கவையெல்லாவற்றிலுந் தடையின்றி இயலுந்திறமையேயாம். அஃதுள்ள வழியுந் தக்கதையன்றித் தகாததைச் செய்தல் ஒருவாற்றானும் முடியாது. சிறுமையும், பருமையும் மாறாதிருக்கக் கடுகினுள்ளே மலையைப்

புகுத்தல் தக்கதன்று; அது செய்யாமையாற் சர்வ சாமர்த்தியத்திற்குப் பங்கம் உண்டாதலேயில்லை. உண்டாமென்னில், கடவுள் தன்னையொத்த அநாதிக் கடவுளை இயற்றற்குந் தன்னையழித்தற்கும் வன்மை இல்லாதவராதலால் அசமர்த்தர் என்னலும் வேண்டுமே. அஃது உமக்கும் உடன்பாடன்றாதலால் முதற்காரணம் வேண்டியவழியும் சர்வசாமர்த்திய பங்கங் கொள்ளற்கிடமே இல்லை என்பது.

இன்னுங் கடவுள்தாமே முதற்காரணமும் நிமித்தகாரணமுமாய் நின்று உலகத்தைப் பிறப்பித்தார் எனக் கொள்ளலாமே என்றால் அதுவுங் கூடாது. "காரியங்கள் காரணசுபாவமுடையன," என்பது நியாயமாதலால் வெண்ணிறமுடைய ஆடையினது முதற்காரணமாகிய நூலும் வெண்ணிறமேயுடையதாயிருத்தல்போல சேதனமு மசேதமுமாகிய உலகத்துக்கு முதற்காரணமாதலாலே கடவுள் சேதனத்துவமும் அசேதனத்துவமும் உடையர் என்று கொள்ளல்வேண்டும். கொள்ளவே தம்முண் மாறுபட்ட சேதனத்துவமும் அசேதனத்துவமும் ஆகிய இருதருமங்களும் ஒரு தருமியிலிருத்தல் கூடாமையாகிய குற்றமும் பற்றும் ஒரு கூற்றாற் சேதனத்துவமும் ஒரு கூற்றால் அசேதனத்துவமும் உடையரென்னினும் சாவயவத் தன்மையுண்டாய்க் கடபடாதிகட்குப் போலக் காரியத்தன்மைவந்து பரம காரணத்தன்மை கெடுதற் குற்றம்பற்றும். "யாது யாதுசாவயவம் அது அது காரியம்"; எங்ஙனம், கடபடாதி என்பது நியாயமாதலின்.

இன்னும் கடவுள் சுவதந்திரத்துவமுடையராதலாற் பிறிதொன்றை வேண்டாது தம்மிச்சைப்படியே உலகத்தைப் பிறப்பித்தார் என்று கொள்ளலாமெனில்; அதுவுங் கூடாது சுவதந்திரத்துவம் உள்ளவழியும் நியாயம் நோக்காது தொழில் செய்வாரா? நியாயம் நோக்கித் தொழில்

செய்வாரா? நோக்காது செய்வரெனில் சீவர்களுடைய புண்ணியபாவங்கள் என்னுங் காரணங்களை நோக்காது வேண்டியபடியே நியமமின்றிச் சுகதுக்கங்களைக் கொடுப்பார் என்றும், காரியத்திற்கேற்ற காலம் இடம் முதலிய பொதுக் காரணங்களையும் நோக்காது வேண்டியபடியே தொழில் செய்வார் என்றும், தன்மிதன்ம பாவசம்பந்த நியாயம் நோக்காமலே கடினமாகிய பூமி நெகிழ்வும் நெகிழ்ந்த நீர் கடினமாகவும் நீர் நாற்றமுடையதாகவும் அக்கினி இரசங் கொடுப்பதாகவும் வாயு உருவமுடையதாகவும் செய்வார் என்றும் இன்னும் வேண்டிய வேண்டியபடி செய்வார் என்றும் கொள்ளவேண்டுமே. நியாயம் நோக்கி யென்னில் காரண காரிய பாவசம்பந்த நியாயமும் சற்காரியவாத நியாயமும் நோக்கி முதற்காரணத்தை வேண்டியே தொழில் செய்வார் என்றன்றோ கொள்ளல் வேண்டும்.

அற்றேல்; முதற்காரணம் முதலியவற்றை வேண்டித் தொழிலியற்றுதலினாலே கடவுள் சுவதந்திரத்துவம் இல்லாதவராவாரன்றோ என்னில்; அற்றன்று, கடவுளின்சுவதந்திரத்துவமாவது சுவசுந்தரமாகிய பிறிதினாலேவப் படாமலிருந்து கருவி முதலியவற்றை யேவி இயற்றுந்தன்மையேயாம். சிவகருமமுதலியவற்றை வேண்டாதிருத்தலன்று. பாண்டாகாரமுதலியவற்றை வேண்டித் தானம் முதலிய தொழிலியற்றும் அரசனுக்குச் சுவாவதி சுவதந்திரத்துவங் குறையாமைபோலவே, நிமித்தம் முதற்காரணம் சிவகருமம் முதலியவற்றை வேண்டித் தொழிலியற்றுங் கடவுளுக்குச் சுவதந்திரத்துவங் குறைதலே இல்லை என்ப.

இங்ஙனமாகவே உபாதான விசார நிருபணத்தினாற் பதித்துவக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## ஆதிசிருட்டி.

**கிறிஸ்துமதஸ்தர்களே !**

கடவுள் ஆதிமனுஷரை விவேகம் இல்லாதவராகச் சிருட்டித்தது என்னை? அவர் விவேகம் உடையராயின், விலக்கியது செய்தலே தீமை-செய்யாமையே நன்மை என்று பகுத்தறியாமல் விலக்கிய கனியைப் புசித்தது என்னை? அக் கினியைப் புசித்தபின் உண்டாகிய நன்மை தீமைகளின் ஞானம் முன் இல்லாதது என்னை?

அப்படிச் சிருட்டித்த கடவுள் அவர்களை இருத்திய தோட்டத்திலே உபயோகமில்லாத ஒரு விருக்ஷத்தை உண்டாக்கி வைத்தது என்னை?

ஒரு பிதாக் காட்சிக்கினிய நச்சுக்கனியொன்றைக் கொண்டுபோய் விவேகமில்லாத குழந்தைகள் இருக்குந் தன் வீட்டில் வைத்து "இதைப்புசிக்க வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப்போக, அவர்கள் அதைப் புசித்துத் துன்பமுறுவாராயின், அப்பழி அவர்களைச் சாராது பிதாவையே சாரும் அன்றோ! அதுபோல ஆதிமனுஷர் பாவிகளாயின குற்றங் கடவுளையே சாருதலன்றி அவர்களைச் சாருமா?

இனிக் கடவுள் தாஞ்சொல்லியபடியே விலக்கிய கனியைப் புசித்த அப்பொழுதே மரணதண்டஞ் செய்யாது விட்டது நீதியா? இரக்கமாயின், சர்வஞ்ஞராகிய தாம் பின் நிகழ்வன எல்லாம் அறிவாராதலின், முன்னரே அதனை நினையாதுவிட்டது யாது பற்றியோ?

மேலும் அக்கினியைப் புசித்தலினாலே நன்மைதீமைகளின் ஞானம் உண்டாதல் கூடுவதாக, அதை விலக்கினது வஞ்சகமாமே! அற்றேல், அம்மரந் தன்னிற்றானே நன்மை தீமைகளை அறிவிக்கும் வலிமை உடையதன்று கடவுள்

விதித்தபடி செய்தலே நன்மை என்றும், விலக்கியதைச் செய்தலே தீமை என்றும் அறிதற்கு ஓர் அறிகுறியாய் நிற்றலால் நன்மை தீமை அறிவிக்கும் மரமென்றதாம் என்னில்; இப்பொருள் கொள்ளற்குப் பிரமாணம் ஒன்றுமின்மையானும், அக்கனியைப் புசித்ததினுலே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன என்று சொல்லப்பட்டமையானும் அது பொருந்ாதென்க.

இனி எப்பொருளாயினும் ஆகுக; இந்த மரத்தை அங்கேவைத்து, இதின் கனியைப் புசியாதபடி விலக்கினதற்கு நிமித்தம் யாது? தமது விதிக்கு அடங்குதலே நன்மை அடங்காமையே தீமை என்பதனை அந்த மரம் வழியாக அவர்க்கு அறிவிக்க நினைந்தாரா? அப்படி நினைந்தாலுந் தமக்கும் பிறருக்கும் பயன்படத்தக்க வேறு கற்பனைகளைக் கற்பிக்கலாமே! ஒரு பயனுமில்லாத இந்த வீண் கற்பனையைக் கற்பித்தது என்னை? அல்லதூஉம் ஆன்மாக்களுக்குப் பகுத்தறிவு கொடுக்கப்பட்டதாயின், அவர் கடவுளே சர்வகாரணர் என்றும், அவர் விதிக்கு அமைதலே நன்மை, அமையாமையே தீமை என்றும் நன்ருய் அறிவாராதலின், இந்த நச்சுமரம் அதற்கு வேண்டியதில்லையே! வேண்டுமாயின், முத்திபெற்றவர்களுக்கும் இப்படிப்பட்ட கட்டளை இடவேண்டுமே!

தமக்கு அடங்குவாரோ அடங்காரோ என்று பரீக்ஷித்தற்கு நச்சுமரத்தை வைத்து விலக்கினுர் என்னில், முன்னரே அறியாமையினுற் சருவஞ்ஞர் அல்லர் என்றுகொள்ள வேண்டுமே!

கடவுள் மனுஷருக்குச் சுவாதீனத்தன்மையைக் கொடுத்திருந்தார்; ஆதலின் மனுஷர்மேலன்றி அவர்மேலே

குற்றமில்லை என்பீராயின்; அது பொருந்தாது; ஒரு பிதா விவேகமில்லாத பிள்ளைகளுக்குச் சுவாதீனத் தன்மையைக் கொடுத்துவிட, அப்பிள்ளைகள் பெருந்தீமைகளைச் செய்தாராயின், அக்குற்றம் யார்மேலதாகும்? விவேகமில்லாதவருக்குச் சுவாதீனத் தன்மையைக் கொடுத்தது நீதியா? அது நிற்க.

கடவுள் தமது ரூபமாகப் படைத்த மனுஷரை ஒரு பிசாசு வஞ்சித்துக் கெடுக்கவல்லதா?

அப்படியே பிசாசுவந்து கெடுத்தபோது கடவுள் அங்கே இருந்திலரென்னில், சருவ வியாபகர் அல்லர் என்றும்; அதனை அறிந்திலரென்னில், சருவஞ்ஞர் அல்லர் என்றும்; அறிந்தும் அப்பிசாசைக் கண்டிக்க மாட்டாதிருந்தார் என்னில், அநந்தசத்தி உடையவர் அல்லர் என்றும்; அதற்கு உடன்பட்டே யிருந்தாரென்னில், கருணை இல்லாதவர் என்றுங் கொள்ளவேண்டுமே.

ஒரு துட்டமிருகம் வந்து தன் பிள்ளையைக் கொல்லும் போது, அதனை விலக்குதற்கு இயன்றமட்டும் பிரயாசப் படாமற் பார்த்துக்கொண்டிருப்பவன் பிதா எனப்படுவானு! இல்லையே. அப்படியானல், உங்கள் கடவுளைச் சருவலோக பிதா என்று கருதலுந் தகுமா? பிசாசையுந் தண்டித்து மனுஷரையும் முத்தியிற் சேர்ப்பேம் என்னுங் கருத்துடையராய் இருந்தார் என்னில், வியாதியுந் தேடி மருந்துந் தேடுதல் மதிகேடாதலால், அது கருத்தன்றெனக.

மேலும் மனுஷருடைய சுத்தியைக் கெடுத்தது பிசாசெனவே, முன்னரே தேவதூதருடைய சுத்தியைக்கெடுத்து இப்பிசாசாகும்படி செய்துவிட்டது பிறிதோர் பிசாசு என்று

கொள்ளவேண்டும்: அங்ஙனமின்மையாற், கடவுளே எல்லாரையுங் கெடுத்த பிசாசு என்று கொள்ளவேண்டுமே!

இனிப் பிசாசுதானே சருப்பவேஷங்கொண்டு வந்து மனுஷரைக் கெடுத்ததாக, அப்பிசாசுக்கே சாபமிடாது, சருப்பங்களுக்கெல்லாஞ் சாபமிட்டது என்னையோ?

பாவத் தோற்றத்துக்கு ஒருவாற்றானுங் காரணமாகாத சருப்பங்களெல்லாஞ் சாபம் பெறுவனவாக, அப்பாவத் தோற்றத்துக்கு நேரே காரணமாயிருந்த பிசாசும், விருக்ஷமும், அவற்றைச் சிருட்டித்த கடவுளுஞ் சாபம்பெருதொழிதல் நீதியா?

மேலும் ஆதி மனுஷரே தீமை செய்தவராக, அவருக்கு இட்டசாபம் அவர் சந்ததியிற் பிறக்கும் மனுஷரெல்லாரையுஞ் சாரும்படி செய்தது யாது பற்றியோ?

ஆதி. 6: 6, 7. "தாம் பூமியிலே மனுஷரை உண்டாக்கினதற்காகச் சோகித்துப் பரிதாபித்தார்; அது அவருடைய இருதயத்துக்கு நோவாயிருந்தது: நாம் மனுஷரைப் படைத்தது நமக்குப் பரிதாபமாயிருக்கின்றது." என்றார், என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

அவர் இப்படியே முன்னர் இச்சையுடையராய் மனுஷரைச் சிருட்டித்துவிட்டுப் பின்னர்ப் பரிதாபங்கொண்டதென்னை?

அவர் தாஞ் சிருட்டித்த மனுஷர் சுத்தராயிராது பாவிகளானமையினாலே பரிதாபம் அடைந்தார் என்னில், அது நியாயந்தான்: பாவிகளாதன் மாத்திரமுடைய மனுஷரைச் சிருட்டித்தமைபற்றி அப்படிப் பரிதாபங்கொண்ட கடவுள், தாமே சிருட்டித்த தேவதூதன் பாவியாய்ப் பிசாசாதன்

மாத்திரமன்றித் தம்முடைய அடியார்களாகிய மனுஷரையுங் கெடுத்துத், தம்மையும் அபகீர்த்திப்படுத்தித், தமது கட்டளையையும் விலக்கித், தாம் பிறந்து, உலேந்து, பாடுபட்டு இறந்ததற்குக் காரணமானதினாலே "பிறப்பிறப்பற்றவர்" என்னும் பெயரையுங் கெடுத்து, இப்படியே தமக்குப் பெருங்கேடு செய்தானாதலின், அவனைச் சிருட்டித்தமை பற்றி அத்தியந்த பரிதாபம் அடைதலே தக்கதாகவும், அதுபற்றிச் சிறிதும் பரிதாபம் அடையாதது என்னையோ? அவர் சிருட்டியின் முன்னே இப்படித் தீமைகள் சம்பவித்தலை அறியார் என்னில், சருவஞ்ஞர் அல்லர் என்றும்; அறிவார் என்னில், இரக்கமில்லாதவர் என்றும் பின்பு பரிதாபம் அடைந்தார் என்பது பொய்யாமென்றுங் கொள்ளவேண்டுமே!

அன்றியும், உலகத்திலே இன்னது இப்படியாகும் என்று முன்னேயறிந்தால், இன்னது இப்படி நடத்தல் வேண்டும் என்ற நியதி நிச்சயமும் அப்போதுதானே பண்ணிக்கொள்வாரன்றோ! அவர் நிச்சயித்திருந்தபடியே சகலமும் நடக்குமேயன்றி நிச்சயம் இடையிலே தவறி மாறுமா? மாறுபட்டால், சருவஞ்ஞத்துவமுஞ் சருவகர்த்திருத்துவமும் அவரிடத்தில் இல்லையென்று முடியுமே! மாறுபட்டதின்றாகிற், சகலமும் அவருடைய நியமப்படிதானே நடக்குமன்றி நூதனமாக வேறொன்றுஞ் சம்பவியாது: ஆதலாற் சகல பாவமும் பழியும் அந்தக்கடவுளையே சாருதலன்றி, மனுஷரைச் சார நியாயமில்லையே.

சகலத்தையும் முன்னே நிச்சயித்துக்கொண்டவர் என்பதற்கு பிரமாணம். எபேசியர். 1: 4. அவர் உலகத்தைப் படைக்குமுன்னே அன்பினாலே பரிசுத்தராயும் மாசற்றவராயும் இருக்கும்படி எங்களைத் தெரிந்துகொண்டார்;

ஷை 11. அவர் முன்னே நிரூபித்தபடியே முன்னே கிறிஸ்துவிலே நம்பிக்கை வைத்தவர்களாகிய எங்களாலே அவருடைய மகிமை விளங்கும் பொருட்டு; உரோமர் 8-ம் அதி: 28. அன்றியும் இறைவனுடைய நிரூபணத்தின்படியே அழைக்கப்பட்டவர்களாய் அவர் மீதிலன்பு செய்வோர்க்குச் சகலகாரியங்களும் நன்மையைத் தருவன என்றறிகிறோம். ஏனெனில்; இறைவன் எவர்களை முன்னே குறித்தாரோ, அவர்களைக் கிறிஸ்துவின் சாரூப்பியம் பெறும்படி நியமித்தார். எவர்களை நியமித்தாரோ, அவர்களை அழைத்தார். எவர்களை அழைத்தாரோ, அவர்களைப் புண்ணியவான்களாகவுஞ் செய்தார். எவர்களைப் புண்ணியவான்களாக்கினரோ, அவர்களை விபவாதிகாரிகளுமாக்கினர்; அப்போஸ்தலர், 2: 23. இறைவன் நிச்சயித்திருந்த சூழ்ச்சி முன்னுகிய நிரூபணப்படியே யேசு மரணத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டபோது; உரோமர். 9: 22, 23. இறைவன் கோபத்தை வெளிப்படுத்தற்குந் தனது சத்தியை விளக்குதற்குஞ் சித்தமாய் அழிவுக்குத் தகுந்த கோபத்தின் பாத்திரங்களெல்லாவற்றையும் குறித்துத் தைரியமாகத் தாங்கிக்கொண்டிருக்கிறார். அன்றியும் முத்திக்கென்று முன்னே ஆயத்தம் பண்ணின அநுக்கிரகத்தின் பாத்திரங்களின் மேலே தமது மகிமையாகிய தனத்தை விளக்க விரும்புகிறார்; 2. தேசலோனிகர். 2. அதி: 13. "சகோதரரே உங்களை இறைவன் ஆதிமுதலாயாவியினுடைய பவித்திரத்தன்மையாலும், சத்திய கதையின் விசுவாசத்தினாலும் இரட்சிக்கும்பொருட்டுத் தெரிந்துகொண்டார்." என்பனவற்றாலறிக.

இந்த வாக்கியங்களினாலே இன்னது இன்னபடி நடத்தல் வேண்டுமென்று சிருட்டிகாலத்து முன்னேயே யெகோவா நிச்சயித்துக்கொண்டார் என்று தோன்றுகின்றது. அவ

ருடைய நிச்சய நியமப்படி தானே சகல தீமைகளும் உண்டாகுமன்றி, நியமந்தப்பி ஒன்றும் விளையாது; ஆதலால், அந்தக்கடவுள் தாம் விளைவித்த பாவத்துக்காக ஆன்மாக்களைத் தண்டிப்பது பேரநீதியேயாம்.

இங்ஙனமே ஆதிசிருட்டி விசார நிருபணத்தினும் பதித்துவக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## துர்க்குணம்.

கிறிஸ்தவர்களே!

உங்கள் யெகோவாவிடத்தில் இல்லாதனவாகிய சருவஞ்ஞத்துவம் முதலிய குணங்கள் அவரிடத்தில் உள்ளன என்று பெரும்பொய் பேசுகிறீர்கள்.

அவரிடத்தில் உள்ளனவாகிய எரிச்சல், கோபம், அழுக்காறு, சீவத்துரோகம், தற்புகழ்ச்சிப் பிரியம், வியாகுலம், திட்டத்தன்மை பொய் முதலிய கொடிய துர்க்குணங்களைக் கூறாது மறைந்து விட்டீர்களே!

யாம் அவரிடத்தில் அந்தத் துர்க்குணங்களெல்லாம் உள்ளனவே என்பதை நீவிர் மெய்யெனக்கொண்ட விவிலிய நூற்பிரமாணங் கொண்டே சாதிக்கின்றோம்.

யாத். 20, அதி; 5. "நாம் எரிச்சலுள்ளதேவன்" எனவும், ஷை 34: 14. "கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவரென்பது அவர் எரிச்சலுள்ள பராபரன்" எனவும், யோசுவா. 24: 19. "நீங்கள் கர்த்தரைக் சேவிக்க மாட்டீர்கள். ஏனெனில், அவர் பரிசுத்தமும், எரிச்சலுமுள்ள தேவன்" எனவுங் கூறப்பட்டதினாலே எரிச்சலுடையவர் என்றும்,

4. மோசே. 16. அதி: 46. "கர்த்தரின் சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது" எனவும், யாத். 32.

அதி: 10. "நமது கோபம் அவர்களுக்கு விரோதமாயெரிய நம்மை விட்டுவிடு" எனவுங் கூறப்பட்டதினலே கோபமுடையவர் என்றும்,

ஆதி. 3: 22, 23. "பின்பு பராபரனுகிய கர்த்தர் இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனுய் நம்மில் ஒருவனைப்போலானுன். இப்போதும் அவன் தன் கையை நீட்டிச் சீவவிருக்ஷத்தின் கனியையும் அறுத்துப் புசித்துச் சதாகாலமுங் உயிரோடிராதபடி கட்டளை பண்ணவேண்டும் என்று சொல்லி, ஏதன் என்னுந் தோட்டத்தில் இருந்ததுப்பிவிட்டார்" எனவும், ஆதி. 11 அதி. "சனங்கள் ஒரு உன்னதமான பெரிய கோயிலைக் கட்டத் தொடங்கினமை கண்டு அதனுல் அவர்கள் பெருங்கீர்த்தி அடையப்போகிருர்கள் என்று யெகோவா பொருமை கொண்டு, அவர்கள் சிதறுண்டுபோகப் பண்ணினுர்" எனவுங் கூறப்பட்டதினலே அழுக்காறுடையவர் என்றும்,

யாத் : 12. "எகிப்து தேசத்திலுள்ள தலைப்பிள்ளைகள் எல்லாவற்றையும் பாதியிரவிலே பலியெடுத்தார்." எனவும், "பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தித் தன்னுடைய கட்டளையைக் கைக்கொள்ளாமல் விலக்கிக்கொண்டு அவனையும், அவனுடைய சேனைகளையும் தன் மகிமை விளங்கும் பொருட்டுச் சமுத்திரத்திலே அமிழ்த்திக் கொன்ருர்." எனவும், 3. மோசே. 16: 1. தமது சந்நிதியிலே வந்த ஆரோனின் குமாரர்இருவரைக் கொன்ருர்" எனவும், சாமுவேல். 1. புத். 25. அதி: 38. "நாபால் என்றவனை அடித்துக்கொன்ருர்." எனவும், மேலும் இஸ்ரவேற் சனங்களுள்ளும், பிறருள்ளும் பல கலகங்களை மூட்டி வெகு கொலை செய்தார் எனவும், கூறப்பட்டதினலே சீவத்துரோகியென்றும்,

தமது மகிமை விளங்கும் பொருட்டு முயன்று திரிகின்றவர் என்று பலவிடத்துஞ் சொல்லப்படுதலாலே தற்புகழ்ச்சிப்பிரியர் என்றும்,

படைத்தபோது சந்தோஷப்பட்டுப் பின்பு பரிதாபங்கொண்டதினாலே வியாகுலமுடையவர் என்றும்,

யாத். 1. அதி: "மருத்துவிச்சிகள் ஒருபொய்சொன்னதினிமித்தம் அவர்களுக்கு நன்மை செய்தார்" எனவும், 1. இராசா. 22. அதி: ஒரு ஆவியை அனுப்பிப் பொய் சொல்லுவித்து ஆகாப் என்பவனையும், அவனுடைய சேனைகளையும் கொன்றார், எனவுங் கூறப்பட்டதினாலே பொய்யுடையவர் என்றும்,

யாத். 11. அதி. இஸ்ரவேலரை அயலாரிடத்திலே நகைகளை இரவலாகவாங்கிக்கொண்டு விலகியோடும்படி மூட்டிவிட்டார் எனவும், 2. சாமுவேல். 12. அதி. தாவீதென்பவன் ஊரியாவின் மனைவியைப் பிடித்துக் கொண்டதினாலே தாவீதுடைய பெண்களை அவனுடைய தோழனுடனே சயனிக்கும்படி கற்பித்தார் எனவும், ஆதி: 20. ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களைப் பொய் சொன்னமைபற்றித் தண்டியாமல் அநுக்கிரகித்தார் எனவும், ஓசியாவின் தீர்க்கதரிசனம். 1. அதி. ஓசியாவை நோக்கி நீ போய் ஒரு வியபிசாரப்பெண்ணையும் வியபிசாரமார்க்கத்திற் பிறந்த பிள்ளைகளையும் உன்னிடமாகச் சேர்த்துக்கொள் என்றார் எனவுங் கூறப்பட்டதினாலே பெருந்துட்டர் என்றுஞ் சொல்லப்படுவர்.

இன்னும் விவிலிய புத்தகத்திலே கண்ட. யெகோவாவின் துராசாரங்கள் எல்லாவற்றையும் பேசப்புகில் அதிக விஸ்தாரம் ஆகுமென்று கருதி இவ்வளவுங் காட்டினமை அமையும் என்று விடுக்கின்றாம்.

இங்ஙனமே துர்க்குண விசார நிரூபணத்தினூற் பதித்துவக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## கிறிஸ்து சரிதம்.

**கிறிஸ்தவர்களே!**

யேசுக்கிறிஸ்து என்பவருந் தேவத்தன்மை சிறிதும் இல்லாதவர் என்பதை இப்போது சற்றே காட்டுகின்றும்.

கிறிஸ்து என்பவர் தம்மை அநாதியிலே பந்தித்த மூலமல காரணத்தினூலே, பூர்வ காலீந கர்மானுசாரமாகவே மாயா காரியமாகிய தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேத நீர் என்னுஞ் சத்த தாதுக்களாலாகிய சரீரத்தை எடுத்துக், கருப்போற்பத்தியான போது தாயுடைய மூலாக்கினியினூல் வெதும்பிக் கருப்பப்பையிலே நிறைந்த நீரிலே அமிழ்ந்தி, வாயுவினூன் மொத்துண்டு தத்தளித்துத், தாய்க்குண்டாகிய பசி தாகம் முதலிய வேதனைகளினூல் வருந்தி, இருட்சிறைச்சாலை என்னுங் கருப்பத்தில் அநேகநாள் இருந்து, யோனித்துவாரத்திலே நெருக்குண்டு, பிறவி வேதனை முழுதும்பட்டனுபவித்துப் பிறந்து, வளர்ந்து, சமயத்துரோகம் தேவதூஷணம் முதலிய கொடும் பாதகங்களைச் செய்து, உலைந்து திரிந்து, முப்பத்து மூன்ரும் வயசிலே தாஞ் செய்த பெருங்குற்றங்களினூலே சிலுவையில் அறையுண்டு புலம்பிச் சொல்லமுடியாத பெரிய வேதனைப்பட்டு இறந்தாராதலின், அவர் பசுக்களுள்ளுந் திட்டபசு என்பது தெளிவாயிருக்கின்றது.

மேலும் மத். 4: 1, 4 லூக். 4: 1, 13-கிறிஸ்துவைப் பிசாசு பிடித்தது என்றும், குற்றஞ் செய்ய ஏவினது என்றும், அவரைப் பசித்திருக்கப் பண்ணியது என்றும், காடு நாடு முதலிய பலவிடங்களிலுங் கொண்டு திரிந்தது என்றும், உயர்ந்த மலையிலே ஏற்றினது என்றும், தன்னை வணங்கச்

சொல்லியது என்றும், சொல்லப்பட்டமையாலும், லூக். 22: 43. "வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து அவரைப் பெலப்படுத்தினன்" என்று சொல்லப்பட்டதினாலும், யோவா. 11: 54. "யேசு யூதருக்குப் பயந்து ஒளித்துத்திரிந்தார்" என்று சொல்லப்பட்டதினாலும், யேசு சர்வகர்த்திருத்துவமும் சுவதந்திரத்துவமும், உடையவரல்லர்.

மாற்கு. 13 : 32. "பிதாவன்றி வேறெவனேனுந் தேவதூதகணமேனுங் குமாரனேனும் அந்த நாளேயாயினும், நாழிகையாயினும் அறிவதில்லை" என்றதினாலே குமாரராகிய யேசுக்கிறிஸ்து சர்வஞ்ஞருமல்லர்.

மத். 26: 37, 38. "யேசுநாதர் சோகித்து அதிக வியதனப்பட்டார்" என்றதினாலே அவர் நித்தியானந்தரும் அல்லர்.

மத். 12: 17. "இதோ நான் தெரிந்து கொள்ளப் பட்டவனுய் என்னைச் சேவிப்பவனுய் எனக்கன்பானவனுய் இருக்கிறான்" என்று கிறிஸ்துவைக் குறித்து யெகோவாச் சொல்லியதாகச் சொல்லப்பட்டதினாலும், லூக். 13: 35. "பராபரனுடைய நாமத்தினால் வருகிறவர்" என்பதினாலும், ஷை 23: 16. "பிதாவே உம்முடைய கைகளிலே என்னுடைய ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன்" என்றும், மாற்கு. 9: 37. "என்னைப் பெற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்" என்றும், மத் 26: 39. "எந்தையே என்னிச்சைப்படி ஆகாது உமதிச்சைப்படியே ஆகும்" என்றும் யேசு சொல்லினரென்று சொல்லப்பட்டமையாலும், "அவர் தனியே செபத்தியானம் பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறினர்" என்றும் மத். 27: 46." என்தேவனே என்தேவனே என்னைக் கைவிட்டீரோ"

என்று யேசு புலம்பினுரென்றும், மத். 20: 20. 26. "சிவதியின் மனைவி தனது புத்திரர்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும்படி யேசுவை வழிபட்டு யாசித்தபோது அது என் பிதா நியமித்தபடி ஆகுமேயன்றி நான் அதைச் செய்தற்கு அதிகாரமுடையேனல்லேன்" என்று அவர் சொல்லினுர் என்றும் சொல்லப்பட்டிருத்தலாலும், யேசுவானவர் சிறிதுந் தன்வசமின்றி மற்ருேர் கடவுளைச் சேவித்து, அவரில் அன்புகூர்ந்து, அவருடைய நாமத்தினுலே மகிமைபெற்று, அவருக்கே தம்முயிரை ஒப்புக்கொடுத்து, அவராலே பிரேரிக்கப்பட்டு, அவரிச்சைப்படி செய்து, அவரை நோக்கிப் பிரார்த்தித்து, அவருடைய ஆணையின்வழி நிற்கிற அடியவர் என்பது நிச்சயமாகக் காணப்படுதலாற் சுவதந்திரத்துவமும் உடையவரல்லர்.

அற்றேல், யேசு மானுஷியமுந் தேவத்துவமும் உடையவராதலால், மேற்காட்டிய செய்திகளெல்லாம் அவருடைய மானுஷியத்தைக் குறித்துச் சொல்லப்பட்டன என்னில்: அது கூடாது: அவரிடத்தில் மானுஷியமுந் தேவத்துவமும் உண்டாயிருக்குமாயின் அவர் ஸ்நானம் பெற்றபோது பரிசுத்தாவி வானத்திலிருந்து புருப்போல் அவர்மேல் இறங்க வேண்டியதுமில்லை. அவர் வியாகுலிக்க வேண்டியதுமில்லை. அவரைத் தேவதூதன் பெலப்படுத்த வேண்டியதுமில்லை: அவர் மரிக்கும்போது பராபரனே என்னைக் கைவிட்டீரோ என்று புலம்பவேண்டியது மில்லை. பராபரன் அவரைத் தம்முடைய சேவகன் என்று சொல்லவேண்டியதுமில்லை. அன்றியும், அவருடைய தேகமும், மானுஷியமாக வந்து அத்தேகத்தை எடுத்து ஆன்மாவாகிய அவரும் பசுவாயிருக்க, அவரிடத்தே தேவத்துவமும் இருந்ததென்று சொல்வதே பொருந்தாது.

கிறிஸ்து நாதர் பல அற்புதங்களைச் செய்தபடியால், அவரிடத்திலே தேவத்துவம் உண்டென்று கருதப்படுமெனில்; மோசே, யோசுவா, எலிசா, எலியா, முதலானவர்களும் அநேக அற்புதங்களைச் செய்தார்கள் என்று விவிலிய நூல் விரித்தலால், அவர்களிடத்தும் தனித் தனியே தேவத்துவம் உண்டென்று கருதப்படல் வேண்டும்

அல்லாமலும், மத். 17: 20, 22. யோவா. 14: 12. "பராபரன் மீதே விசுவாசமுள்ளவர்கள் சகலரும் அற்புதங்கள் செய்யக்கூடும்" என்றும், "உபவசித்துப் பிரார்த்திக்கிறவர்கள் மிகப்பெரிய அற்புதங்களைச் செய்வார்கள்" என்றும், மத். 24: 23. "பொய்க்கிறிஸ்துக்களும், பொய்த்தீர்க்கதரிசிகளும் எழும்பித் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தாமும் மயங்கத் தக்க மகா பெரிய அற்புதங்களையுஞ் செய்வார்கள்" என்றும், சொல்லப்பட்டதினால் அற்புதஞ் செய்ததினாலே தேவன் என்று சாதித்தல் கூடாது.

கடவுள் யேசுவைத் தமது குமாரரென்றும், தாம் அவருக்குப் பிதா என்றும், சொன்னதினாலே அவர் தேவர் என்று சாதிக்கலாமேயெனின்; யோவா. 10: 33, 36. "யூதர்கள் யேசுவை நோக்கி நீ மனுடனாயிருந்தும் உன்னையே தேவன் என்று சொல்லித் தேவனைத் தூஷிக்கின்றாயே" என்று கடிந்து சொன்னபோது, யேசுவானவர் "தேவனுடைய வசனத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் எல்லாரும் தேவகணங்கள் என்று சொல்லப்படலாம்" என்று விவிலிய புத்தகங் கூறலானும், நான் பிதாவினாற் பரிசுத்தமாக்கப்பட்டும், அவரால் உலகத்தில் அனுப்பப்பட்டும் இருத்தலானும் என்னைப் பராபரனுடைய குமாரன் என்று சொல்லுதல் தேவதூஷணம் ஆகாது" என்று சொன்னார் என்பதினாலும், யோவான். 20:

17. "நீ என்னைப் பிடியாதே இன்னும் பிதாவின்பால்மேற் போந்திலன்; ஆனால் எனக்கும் உங்கட்கும் பிதாவாய் எனக்கும் உங்கட்கும் இறைவனாயிருப்பவர் யாவரோ? அவர்பால் மேற்போகத் தொடங்குகின்றேன் என்று என் சகோதரருக்குப் போய்ச்சொல்லு" என்று யேசு சொன்னார் என்பதினாலும், எரேமியா. 31. அதி: 9. "நான் இஸ்ரவேலுக்குப் பிதா எப்பிராயீம் எனக்கு முதற்பேறானவன்" என்று யெகோவா சொன்னமையாலும், மற்றவர்களையுங் குமாரர் என்று கூறியதுபோல யேசுவையுங் குமாரன் உபசாரமாகச் சொன்னதேயன்றி உண்மையன்று. ஆதலின்; குமாரன் என்றதினாலே தேவன் என்று சாதித்தலுங் கூடாது.

இனிக் கணவனாற் சேரப்படாத மரியாள் என்ற கன்னியிடத்திற் பிறந்ததினாலே, அவர் தேவன் என்று சாதிக்கலாமெனின்; அந்தப் பெண் யோசேப்புவுக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட பின்பே கருப்பந் தரித்தாளாதலின், அவனாலாயினும், பிறராலாயினும், சேரப்பட்டே கருப்பந்தரித்தாள் என்று சொல்லவேண்டுமன்றிச் சேரப்படாதிருந்தாள் என்று சொல்வதெப்படி?

யோசேப்புவும் மரியாளும் லௌகிக ஆசையை முற்றும் வெறுத்துத் தவத்திகளாய் இருந்தார்கள்: ஆதலின் அவர்கள் மனப்பூருவமாச் சாவளவுங் கூடாதிருந்தார்கள் என்னில்; அவர்கள் விவாகநியமனஞ் செய்ய வேண்டியதின்றாம். மேலும் மத். 1: 25. "அவன் தன் மூத்த குமாரனைப் பெறும் வரையும் அவளை அணைந்திலன்" என்பதனாலே மூத்த மகனைப் பெற்றபின்னர் அவளை அணைந்தான் என்பது பெறப்படுதலாலும், யோவான். 2: 12. "அவருடைய சகோதரர்" என்றமையானும், அவர் இருவரும் ஆசையுடையோரன்றி

ஆசையைத் துறந்தவரல்லர் ஆதலின், பின்னே கூடினது போல முன்னேயுங் கூடியிருப்பார்கள். விவாகம் நியமித்த நாள் முதலாக இருவரும் ஓர் இடத்திலேதானே யிருந்தார்கள். அப்படி யிருந்தும் அவர்கள் கூடவில்லை என்று உங்களுக்கு எப்படித்தெரியும்? அவர்களே அப்படிச்சொன்னார்கள் என்னில்; அவர்கள் தங்கள் அபிமானத்தைக் காக்கும் பொருட்டாயேனும், பிறகாரணங்களாலேனும் அப்படிச் சொல்லி யிருத்தல் கூடும். அதைக்கொண்டு நீவிர் இப்படிச் சாதித்தல் கூடாது.

மேலும் யேசுவின் சீஷர் தங் குருவைப் புகழும் பொருட்டு யேசுமரணத்தின் பல வருடங்களின் பின் எழுதிவைத்த பொய்க்கதைகளை எப்படி நம்பலாம்?

ஆதலால், மரியாள் புருஷனின்றிப் பிள்ளைப் பெற்றாள் என்பது பொய்யாதலால், அதனாலே யேசுவுக்குத் தேவத்தன்மை சாதித்தலுங் கூடாது. அது மெய்யாயினும் அதனால் மனுடருள் உயர்ந்த மனுடன் என்பதன்றிப் பிறப்பிக்கப்பட்டவரை மகா தேவன் எனல் கூடாது.

யேசு மரித்த மூன்றாநாள் உயிர்த்தெழுந்தார் என்றதினாலே அவர் தேவனேயாமெனில்; அதுவும் அவருடைய புலைச் சீடர் பொறித்துவைத்த பொருந்தாப் பொய்க்கதை ஆதலானும், அது பொய் என்பதற்கு யூதர்களே சாக்ஷிகளாமாதலாலும், அது மெய்யாயினும், யேசுவாலுஞ் சீடராலும் உயிர்த்தெழுந்த லாசரு முதலியோர் போல மகா தேவரால் உயிர்த்தெழுந்த யேசு தேவத்தன்மை பெறுதல் கூடாமையானும் அதுவும் பொருந்தாது.

இனி யேசுநாதர் சென்ம பாவத் தொடர்பின்றிப் பிறந்தார் என்கிறீர்களே! ஆதி மனுஷர் செய்த பாவம் அவர்

சந்ததியைத் தப்பாமற் சேரும் என்ற தேவ நியமப்படியே யேசு என்பவர் அவ்வாதி மனுஷருடைய சந்ததியிற் பிறந்த மரியாளுடைய சோணிதகாரிய சரீரியாய் அவளுடைய வயிற்றிலே உற்பவித்தவர் ஆதலாலே அவரையுஞ் சென்ம பாவந் தொடரும் என்பதற்குச் சந்தேகமில்லை. அவர் பரிசுத்தராதலாற் பாவந் தொடராதெனின்; பிறக்கு முன்னே பரிசுத்தராயிருக்கின்ற பிற சீவர்கள் எல்லாரையும் பிறக்கும் போதே சென்ம பாவந் தொடரும் என்பதினாலும், பராபரன் பக்ஷபாதமிலி ஆதலாலுமே, அவரைச் சென்ம பாவந் தொடராது என்பது சிறிதும் பொருந்தாது. "பராபரனே என்னைக் கைவிட்டீரோ" என்று புலம்பி என்னுடைய ஆவி உம்முடைய கைகளிலே ஒப்புக்கொடுக்கிறேன் என்று சொல்லி இறந்தமையினாலே, அவர் பராபரனுடைய உதவியை வேண்டிக்கொண்டவர் என்பது பெறப்பட்டது.

இனி அவர் இறந்தவுடனே எங்கே போயிருந்தார்? யோவான். 20: 17. "என் பிதாவண்டைக்கு இன்னும் ஏறினதில்லை" என்றிருத்தலால் மோக்ஷத்திலே போயினரல்லர்; அக்காலத்து மோக்ஷத்தில் வியாபியாமையால் எங்கும் வியாபித்திருந்தார் என்றலுங் கூடாது.

அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்திலே "கிறிஸ்து மரித்த பின்பு பாதாளத்தில் இறங்கினர்" என்று சொல்லப்பட்டமையாலும், அவர் சகல பாவங்களையுந் தம் மேலேற்றிக் கொண்டமையால் நரகக் குழியில் வீழ்தலே கடனாதலாலும், நரகத்தில் இறங்கினவர்களுக்கு மீட்சி இல்லை என்பதினாலும், அவர் மீண்டேறினர் என்பது பொருந்தாது.

அவர் மூன்றுநாள் உயிர்த்தெழுந்தார் என்று அவருடைய மத்தேயு முதலிய சீடர்கள் எழுதி வைத்த வாக்கி

யங்கள் ஒன்றோடொன்று மிக மாறுபடுதலாலும், உலக மலேவாதலாலும் அது வெறும் பொய் என்பது தெளிவு.

இங்ஙனமே கிறிஸ்து சரித விசார நிருபணத்தினுற் பதித்துவக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## நிக்கிரக அநுக்கிரகம்

உலக முடிவிலே விசாரணை செய்யும்படி கிறிஸ்து வருவார், என்கிறீர்கள்! விசாரணைக் காலத்துக்கு முன்னே மரித்தவர்கள் எல்லாரும் நரகமோக்ஷங்களில் இருப்பார்களா? வேறிடத்தில் இருப்பார்களா? வேறிடத்தில் இருப்பார்கள் என்ருல், ஆதாம், ஆபிரகாம், முதலியவர்கள் விசாரணைக் காலத்திற்கு முன்னரே முத்தியில் இருந்தார்கள் என்றும் வேறு பலர் நரகத்தில் இருந்தார்கள் என்றும் நும் விவிலிய நூல் கூறுதல் பொய்யாம்.

மரித்தவர்கள் எல்லாரும் அந்தக் கணத்திலே நரகத்திலும் மோக்ஷத்திலுஞ் சேர்ந்து துக்க சுகங்களை அனுபவிப்பார் என்னில்; உலக முடிவிலே விசாரணை செய்ய வேண்டுவதில்லையே! வேண்டுமென்ருல், அந்த விசாரணையினுல் முத்தியில் இருந்தவர்களை நரகத்திலும், நரகத்தில் இருந்தவர்களை முத்தியிலும் மாறி விடுவாரா? அன்ருகில், விசாரணை செய்தலால் வரும் பயன் யாதும் இல்லையே. முன்னே இருந்தபடி முத்தியில் இருந்தவர்களை முத்தியிலும் நரகத்திலிருந்தவர்களை நரகத்திலும் விடுபவராயின், அவர் புதிதாக விசாரணைசெய்ய வேண்டியது என்னை? ஆதலால் உலக முடிவிலே விசாரணை என்று ஒன்று உண்டென்பது பொய்யாம்.

இனி அவர் விசாரணை செய்யும் போது மத்தியஸ்தராயிருப்பார் என்கிறீர்கள். ஆன்மாக்கள் யாதொரு கன்மமுஞ்

செய்யாதிருக்கவும், தமது சித்தத்தின்படியே சிலரைச் சுக போகிகளாகவுஞ் சிலரைத் துக்கபோகிகளாகவும் படைத்ததி ஞலே பக்ஷபாதியாய் இருக்குமவர் மத்தியஸ்தர் ஆதற்குத் தகுந்தவர் அல்லர்.

கிறிஸ்துவானவர் விசாரணைக் காலத்திலே எந்தப் பிரமாணத்தைக் கொண்டு விசாரிப்பார்? விவிலிய புத்தகத் தைக் கொண்டு விசாரிப்பார் என்ருல், அந்தப் புத்தகம் அநேக கோடி முகமாகப் பிரிந்து தலைதடுமாற்றமாய் முன் ஞெடு பின் மலைந்து விபரீதப்பட்டு ஒரு வெறியாட்டம் போன்றிருத்தலை நீங்களே கண்டிருக்கிறீர்கள்! அதைக் கொண்டு நீதி விசாரிப்பதெப்படி? அதைக்கொண்டு விசாரித் தாலும் அந்த விவிலிய புத்தகத்தைக் கண்டு கேட்டறியாத பற்பல தேசங்களில் இருக்குஞ் சனங்களுக்கு எதைக் கொண்டு நீதி விசாரிப்பார்? அவர்களுக்கு நன்மை இன்னது தீமை இன்னது என்று பகுத்தறிகின்ற விவேசனையுள்ள மனச்சாட்சியைக் கொண்டு விசாரிப்பார் என்னில், நன்மை தீமை இவை என்று அறிதற்குச் சம்பிரதாய சாஸ்திரங்களே இன்றியமையாத கருவியாதலால், அவனவன் கைக்கொண்ட சம்பிரதாய சாத்திரங்களுக்கு இசையவே அவனவனுக்கு அறிவுண்டாயிருக்கும்; அப்படியிருக்க அவனவனுடைய அறிவாகிய மனச்சாட்சியைக்கொண்டு விசாரிக்க வேண்டு மாகில், அவனவனுடைய சமயசாஸ்திரங்களையே பிரமாண மாகக்கொண்டு விசாரித்தல் வேண்டும். அப்படியே விசாரிப் பார் என்ருல், விவிலிய புத்தகமே பிரமாணமாகக் கொண்டு விசாரிப்பார் என்றும், மற்றுள்ள சமய நூல்கள் எல்லாம் பொய்ந்நூல்கள் என்றும், நீவிர் பிதற்றுவது பெரும் பொய் யாம். அவர்களுக்கும் விவிலிய நூலைக்கொண்டு விசாரிப்பார் என்ருல், அவர்கள் சென்மந் தொட்டு மரணம் வரையுங்

கண்டு கேட்டறியாத விவிலியக் கட்டளைகளை அவர்கள் கைக்கொள்ளவில்லை என்று கோபித்து அவர்களைத் தண்டிப்பது பெருங் கொடுமையாம். ஆதலிற் கிறிஸ்து விசாரணை செய்தற்குப் பிரமாணமே இல்லை.

கிறிஸ்து தம்மை விசுவசியாதவரை நித்தியநரகத்திலே தள்ளிவிடுவார் என்றீர்கள். கருப்பத்தில் இருக்கும்போதும், பிறக்கும் போதும், பிறந்த பின்புக் குழவிப் பருவத்திலும், இறந்துபோன ஆன்மாக்களும், குருடுஞ் செவிடுமாயிருந்து இறந்து போனவர்களும், பிறந்த நாட்டொடங்கிச் சித்தப் பிரமை முதலிய வியாதி பிடித்திருந்து இறந்துபோனவர்களும், கிறிஸ்துசமயம் வழங்காத தேசங்களிலேயிருந்து தத்தஞ் சமய நூலால் விளங்கிய அறிவின்படி சன்மார்க்கராய் வாழ்ந்து இறந்துபோனவர்களுங் கிறிஸ்துவை அறிந்ததுமில்லை; விசுவசித்ததுமில்லையே!

விவிலிய நூலையறிந்தும் அது தேவநூலெனத் துணியாமையாலே தாங் கைக்கொண்ட சமயத்திலே நின்று மரித்தவர்கள் கிறிஸ்துவை விசுவசித்ததில்லையே! அந்த ஆன்மாக்களை நரகத்தில் இடுவாரா? முத்தியிலா? நரகத்திலிட்டால், அதுபோன்ற அநியாயம் வேறொன்றில்லையே! ஆதலால், அவர்களை முத்தியிலே விடுவாரென்றால், தம்மை விசுவசியாதவர்களை நரகத்திலே தள்ளிவிடுவார் என்பது சற்றும் பொருந்தாதே!

நுங்கடவுளானவர் ஆன்மாவை இடையிலே உண்டாக்கி அது தோன்றும்போதே அசுத்தத்தையுஞ், சுத்தமில்லாத கருவி முதலியவற்றையுங், காமக் குரோத லோப மோக மத மாற்சரிய குணங்களையும், உடனே உதிக்கச்செய்து, தேவனுலன்றி மனுடருள் ஒருவராலும் அநுட்டித்து முடிக்கக் கூடா

ததும், யாதொரு பிரயோசனம் அற்றதுமாகிய ஒரு நீதி விதியைத் தானாக நியமித்து நடத்திக்கொண்டு, பின்பு விசாரணைக் காலத்திலே அந்த ஆன்மாவைக் குற்றவாளி என்று தீர்ப்பது என்ன நீதியோ?

ஆன்மாக்களை அவர் அசுத்தமாகப் படைக்கவில்லை யென்றால், ஆன்மாவானது அசுத்தமான கருவி முதலிய வற்றைத் தானாகவே உண்டாக்கிக்கொண்டதா? தானாய் உண்டாக்கிக் கொள்ளவில்லை என்பதற்குப் பிரமாணமாகக் கோபம் முதலிய துர்க்குணங்கள் எல்லாம் பிறந்தவுடனே காணப்படுகின்றனவே. அவை சென்மபாவத்தாலெனின், ஆதி ஆன்மாவிடத்தில் அவை எப்படி உண்டாயின? ஆதி ஆன்மாச் செய்த பாவத்தாலெனின், அப்பாவஞ் செய்ததற் குக் காரணமாகிய விபரீதஞானம் உண்டானதெப்படி? ஆகை யால் அவர் ஆன்மாக்களை அசுத்தமாகவே படைத்தார் என்பது தெளிவு.

அவர் இன்னாருக்கு இன்னபடி நடத்தல்வேண்டும் என்று ஆரம்பத்திலே நியமித்துக்கொள்ளவில்லை என்றால், பின்பு நடப்பனவற்றை நியமியாத போதே அவற்றை அறி யவும் இல்லை எனல் வேண்டும். அறிவாராயின், நியமித்து மிருப்பார்; அவர் நியமித்தபடி நடவாமற்போயிற்று என்றால், அவருக்குச் சர்வகர்த்திருத்துவம் இன்றாகுமாதலின், அவ ருடைய நியமப்படியே சகலமும் நடக்குமன்றி ஒன்றும் வேறொருவகையாய் நடக்கவில்லை என்று கொள்ளப்படும்

ஆதலாலே, அவர் தாமே ஆன்மாவையு முண்டாக்கித், தாமே அசுத்தத்தையு முண்டாக்கித், தாமே ந்சு மரத்தை யும் படைத்துத், தாமே ஒருவினை கட்டளையும் விதித்துத், தாமே பிசாசையும் உண்டாக்கி அனுப்பிவிட்டுத், தாம்

செய்த பிழையினுலே பாவம் உண்டானபோது தம்முடைய குற்றத்தைப் பிறர்மேல் ஏற்றிவிட்டுத் தாம் இரக்கம் உள்ள வர் போலக் காண்பித்து மீளவும் அந்தப் பாவத்தைத் தம் மேல் ஏற்றிக்கொண்டு, தாம் வேதனைப் படுகிறவர்போலக் காட்டித், தம்மோடு கூடிய மானுஷியத்தையே வேதனைப் படுத்திவிட்டுத், தாம் இரக்ஷகர் என்று பெயரெடுத்துக் கொண்டு, மறுபடியுந் தாம் ஒன்றும் அறியாதவர் போலவுஞ் செய்யாதவர் போலவும் வந்து, நீதி விசாரணை செய்து, ஆன் மாக்களைக் குற்றவாளிகளாகத் தீர்த்துவிடுவது பேரநீதி என்பது சிறுவர்க்குந் தெளிவாகத் தெரியும். ஆகையால், அவர் யாவர் ஒருவரையுங் குற்றவாளி என்று தீர்க்க நியாய மில்லை.

கிறிஸ்துவை ஒருவன் விசுவசியாதிருத்தல் பாவம் என்று நீங்களே சொல்லுதலாலும், கிறிஸ்து முன்னும் பின் னும் உள்ள சகல பாவங்களுக்குமாகப் பாடுபட்டார் என்பதி னுலும், விசுவசியாதிருத்தலாகிய பாவத்துக்குங் கிறிஸ்து பட்ட வேதனையே பிராயச்சித்தமாக முடியும். ஆதலாற் கிறிஸ்து தாமே நரகவேதனைப்படுதல் நீதியன்றி மற்ருெரு வரையும் நரகத்திலே தள்ளுதல் நீதியாகாது.

இங்ஙனமே நிக்கிரக அநுக்கிரக விசார நிரூபணத்திறை பதித்துவக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## பவித்திராத்தும சரிதம்.

**கிறிஸ்தவர்களே!**

பவித்திராத்துமாவானவர் சிருட்டி முதலிய கிருத்தி யத்தில் ஏற்றவுதவி செய்கின்ருர் என்கின்றீர்களே! யெகோவா அநந்த சத்தியுடையவரேயாயின், தாஞ் செய்யுங்

கிருத்தியத்துக்கு இவருடைய உதவியை அவாவுவாரா? ஆயின் யெகோவாத் தனியே கிருத்தியஞ் செய்தற்கு வன்மையில்லாதவரல்லர், அவர் செய்யுங் கிருத்தியங்களுக் குத் தாமுஞ் சம்மதியுடையராய் இருத்தலே பவித்திராத்து மாச் செய்யும் உதவி என்பீராயின், அது பொருந்தாது; அங்ஙனங் கொள்ளுதற்குப் பிரமாணமின்மையானும், உள்ள வழியும் இவருடைய சம்மதியை அவாவியே யெகோவாக் கிருத்தியஞ் செய்வார் என்பது பெறப்படுதலின் மேற் சொல்லிய அநந்த சத்தியில்லாமை என்னுங் குற்றம் பற்று மாதலானும் என்க.

இனிப் பவித்திராத்துமாவானவர் தாமே விவிலிய நூலைச் செய்யாது பத்தர்களை உணர்த்தி அவர்களால் அது செய்வித்தது என்னை?

இப்பவித்திராத்துமா கிறிஸ்துவைக் குற்றமற்ற மனுட வடிவத்தவராகப் படைத்த அப்பொழுதே அவரிடத்தே சுத்தியும், ஞானமும் கலந்துவிடும். ஆதலாற் பின்பு புறுப் போல வந்து பிரவேசிக்க வேண்டுவதில்லையே! பிரவேசித் துங், கிறிஸ்து தண்டிக்கப்பட்டுப் புலம்பும்போது அவரை இரக்ஷியாது விடுத்தது என்னை? இரக்ஷித்தாராயின், அவர் "என்பிதாவே என்பிதாவே" என்று அழைக்கும்போது அவருடைய தாயாகிய மரியாளைக் கலந்த பிதாவாகிய தாம் பேசாதிருந்தது என்னை? அது நிற்க.

ஆதிமனுஷரை வஞ்சிக்க வந்த பிசாசு வேறு வேஷம் விட்டுச் சருப்பவேடங் கொண்டமையாற் பாவத்துக்கு ஒரு வாற்றுற் காரணமாயின என்று சருபங்களுக்கெல்லாஞ் சாப மிட்ட கடவுள், பவித்திராத்துமாவானவர் வேறு வேடம் விட்டுப் புறுவேடங் கொண்டமையாற் புண்ணியத்துக்கு ஒரு

வாற்றூற் காரணமாயின என்று புருக்களுக்கெல்லாம் ஆசீர்வதியாதது என்னையோ?

இங்ஙனமே பவித்திராத்துமசரித விசார நிரூபணத்தினூற் பதித்துவக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## திரித்துவம்.

கிறிஸ்தவர்களே!

கடவுள் மூவராகிய ஒருவராய் இருப்பார் என்று கூறுகின்றீர்களே! மூவருந் தனித்தனியே வேறு வேறு உருவமுடையவர்களாய் வேறு வேறு இடங்களில் இருந்து வேறு வேறு தொழில்களைச் செய்பவர் என்று நும் விவிலியநூல் பேசுவதாக அவர்களை ஒருவர் என்பது எப்படி?

இனி அவர்கள் உருவமுடையராயினும் ஆக, உருவமிலராயினும் ஆக, மூவர் ஒருவராதல் எங்ஙனம்? மூன்று ஒன்றுதலே கூடாது; கூடுமாயினும் மூன்றென்பது அழிந்துவிடும். அன்றியும் ஒன்றுக்கு மூன்றுங் காரணமாக அவற்றுலாகிய ஒன்று காரியமாய் விகாரியாய்ச் சடப்பொருளாய் அநித்தமாய்விடும்.

இனி ஒருவர் தாமே மூவராய் இருக்கின்றூர் எனில், நன்று கூறினீர்! ஒன்று மூன்றுகுமா? ஆகுமாயின், ஒன்றென்பது அழிந்துவிடுமே. அன்றியும், மூவருங் காரியங்களாகக் காரணமாகிய ஒருவர் அம்மூவரின் வேறாய் உளர் என்றும், மூவரும் பரமகருத்தாக்கள் அல்லர் என்றுங் கொள்ளல் வேண்டுமே! அற்றேல், "மனுடன் ஒருவனே உயிர் உடல் என்னும் இரண்டுமாயிருத்தல் திருட்டாந்தமாக, ஒருவர் மூவராயிருத்தல் அமையுமன்றோ" வெனில்; அற்றன்று: நீர் எடுத்துக்கொண்ட தாட்டாந்திகத்துக்குச் சொல்லிய திருட்டாந்தம் பொருந்தாது: முறையானே சேதனத்துவம்,

அசேதனத்துவம், ரூபம், அரூபம், வியாபகரத்துவம், வியாப்பியத்துவம், பிரேரகத்துவம், பிரேரிபத்துவம், அநந்தம், அந்தம், முதலியன உடைமையின் ஒவ்வாத இயல்பினவாகிய உயிரும் உடலுமாகிய இரண்டும் ஒற்றுமைபற்றி ஒருவன் எனப்படுதல் அமையும்; இப்படியாதலே திருட்டாந்தத்தாற் பெறப்பட்டது. ஒத்த இயல்புடைய இரண்டு முதலியன ஒன்றெனப்படுதல் திருட்டாந்தத்தாற் பெறப்பட்டிலது. ஆதலால் தனித்தனியே சேதனத்துவம், வியாபகத்துவம், பிரேரகத்துவம், நித்தியத்துவம் முதலியன உடைமையின் ஒத்த வியல்பினராகிய பிதாப் புத்திரன் பவித்திராத்துமா என்னும் மூவரும் ஒருவர் எனப்படுதல் இத்திருட்டாந்த தாற் பெறப்பட்டிலதே என்பது.

அன்றியும் வேறுபடுத்தியவழி மூவருந் தனித்தனியே கடவுள் என்று சொல்லப்படுதல் போல உயிரும் உடலுந் தனித்தனியே மனுடன் என்று சொல்லப்படுத லாகாமையும் உணர்க.

இனி மூவரும் வேறு வேறாயிருந்தாலும், ஒத்த கருத்தும் ஒத்தவல்லமையும் உடையராதலால் ஒருவர் என்கிறோம் என்பீராயின், அது பொருந்தாது; சில குணங்களை ஒக்கவுடைமையால் மூவரும் ஒருவர் எனப்படுதல் கூடுமா? கூடுமாயின், சிற்றறிவு சிறுதொழில் பாவம் முதலியவற்றை ஒக்கவுடைமையால் ஆன்மாக்கள் எல்லாரும் ஒருவர் எனப்படுதல் வேண்டுமே!

அற்றேல், ஆன்மாக்கள் சில குணமொத்துச் சில குணம் ஒவ்வாமையால் மேற்கூறியபடி ஒருவர் எனப்படுதல் கூடாது; மூவரும் சிறிதும் வேற்றுமையின்றி எல்லாக் குணங்களும் ஒத்திருத்தலால் ஒருவர் எனப்படலாமே என்

பீராயின், அற்றன்று. மூன்று வெள்ளி ரூபாக்கள் சிறிதும் வேற்றுமையின்றி முழுதும் ஒத்திருந்தனவாயினும் அவை ஒரு ரூபா எனப்படாமை போலவே மூவரும் அப்படி ஒத்திருந்தாராயினும், ஒருபோதும் அவர் ஒருவர் எனப்படார் என்பது.

இன்னும் மூவரும் ஒத்த தன்மை யுடையவர் என்று கூறினதினாலே, குமாரன் மரியாள் வயிற்றிற் பிறந்து உழன்று வருந்திச் சிலுவையில் அறையுண்டு இறந்து மூன்று நாள் உயிர்த்தது போலவே, பிதாப் பவித்திராத்துமா என்னும் இருவரும் பிறந்து உழன்று வருந்தி அறையுண்டு இறந்து மூன்றுநாள் உயிர்த்தார்கள் என்றுங் கூறல் வேண்டும்: கூறவே இறந்துபோன இம்மூவரையும் உயிர்ப்பித்தவர் இம்மூவரினும் வேறாகிய ஒருவர் என்று கருதப்படுதலால், இம்மூவரையும் விட்டு அவரையே சேவித்தல் தகுதியாம் அன்றோ!

மேலுங் குமாரன் பாடுபட்டபோது பிதா அவரைக் கைவிட்டுப்பிரிந்தார் என்றதனால், அவ்விருவரும் ஒத்த தன்மையுடையவர் அல்லர்.

அவர் ஸ்நானம் பெற்றபோது பரமண்டலத்தில் இருந்து பவித்திராத்துமானவர் அவரிடத்தில் வரவேண்டியதாய் இருந்ததினாலும், அவர் தமது சீடரைப் பார்த்து, "நான் வானலோகத்துக்குப் போனாலன்றி உங்களுக்கு பவித்திராத்துமாவை அனுப்பக்கூடாது" என்றதினாலும், இவர்கள் இருவரும் ஒருவரல்லர். ஆதலாலே பிதாக் குமாரன் பவித்திராத்துமா என்னும் மூவரும் ஒருவர் என்றல் சிறிதும் பொருந்தாது என்பது.

---

இங்ஙனமே திரித்துவ விசார நிரூபணத்தினாற் பதித்துவக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

**பதிப்பிரகரணம் முற்றிற்று.**

---

# 2. பசுப்பிரகரணம்.

## உற்பத்தி.

**கிறிஸ்துமதஸ்தர்களே !**

கடவுள் மனுஷனுடைய மூக்குத் துளையிலே சீவச்சுவாசத்தை ஊதினர்; அதனல் அவன் சீவாத்துமாவுடையனுயினுன் என்கிறீர்களே! சீவசுவாசந்தானே ஆத்துமாவாயிற்று எனக்கொள்ளின், அது அணுக் கூட்டமாய்ப் பூதத்துள் ஒன்ருய்ச் சடமாய் அழிபொருளாய் இருக்குமன்றிச் சித்துப் பொருளாகமாட்டாது ஆதலாலும், நித்திரையிலே பிராண வாயு யாதுமறியக் காணுமையாலும், அது பொருந்தாது. அதின் வேருக ஓரான்மாப் படைக்கப்பட்டது எனக் கொள்ளின், அதற்கு வாக்கியப் பிரமாணமே இல்லை என்பது.

இனிச் சீவச்சுவாசமே ஆன்மா என்றுதல் அதின் வேருயதொன்று ஆன்மா என்றுதல் கொள்ளுமிடத்து, அவ்வான்மா அநாதியே உள்ளதாயிருந்து இடையிலே கடவுளால் விசேடப்படுத்திச் சரீரத்தோடு கூட்டிப் படைக்கப்பட்டதெனின், அது ஒருவாறு எமக்குஞ் சம்மதமாம்; இடையிலே புதிதாகப் படைக்கப்பட்டதெனின், அது ஒருவாற்ருனும் பொருந்தாது என்பதற்குச் சில நியாயங் காட்டுவாம்.

முன்னில்லாத ஆன்மாப் புதிதாகப் படைக்கப்படுதற்கு நிமித்தம் யாதொன்றுமில்லை.

நாம் அறியக்கூடாத யாதொரு நிமித்த முண்டாயின், அந் நிமித்தமும் அநாதியெனில், அநாதியே படைத்தல்

வேண்டும் என்னும் பிரசங்கம் வரும்; இடையிலே வந்ததெனில், அந்த நிமித்தமுந் தானுகி வந்ததெனினும் பிறரால் வந்ததெனினுங் கடவுள் சர்வகர்த்தா அல்லராய் விடுவர்; அந் நிமித்தமுங் கடவுளாற் செய்து கொள்ளப்பட்டதெனின், அந்நிமித்தத்தைச் செய்தற்கு வேருேர் நிமித்தம் வேண்டும்; அது செய்தற்கும் வேருேர் நிமித்தம் வேண்டும்; இப்படியே வரம்பின்மையாம்.

ஆன்மா முதற்காரணத்திலிருந்து படைக்கப்பட்டதென்ருல், அது பின்னும் அழிந்து முதற்காரணத்தில் ஒடுங்கிவிடும். சூனியத்திலிருந்து படைக்கப்பட்டதென்ருல் அது பின்னும் அழிந்து சூனியமாய்ப்போம்; சூனியத்திலிருந்து படைத்தல் என்றலும் பொருந்தாது. தாவரங்களேயும் பிராணிகளேயும் மனுட சரீரத்தையும் மீன்களேயும் படைத்தற்கு மண்ணேயுஞ் சலத்தையும் முதற்காரணமாகக் கொண்ட கடவுள் முதற்காரணமின்றிச் சூனியத்திலிருந்து படைக்கவுமாட்டார்.

தேவசமானமாகச் சுத்தியும் ஞானமும் இன்பமுமுடையதாகப் படைக்கப்பட்ட ஆன்மாவுக்குச் சரீரம் கொடுக்கப்பட வேண்டியது இல்லேயே! ஆன்மாவுக்கு இயல்பாக விளங்கியிருந்த அறிவையும் இன்பத்தையுஞ் சரீரம் விளக்கவேண்டுமா? வேண்டுமென்ருல், ஆன்மாச் சுத்த ஞானியாய்ப் படைக்கப்படவில்லே என்றும், ஆன்மாவின் அறிவு தொழில் விளக்கத்துக்குத் தடையிருந்தது என்றும், அத்தடையை உண்டாக்கினமையாலே கடவுள் இரக்கமிலர் என்றுங் கொள்ள வேண்டி வரும்.

ஆன்மாக்களுக்கு முதலிலே கொடுக்கப்பட்ட சரீரம் அதிசுத்த சரீரம் என்ருல், அதற்குப் பசி முதலிய குற்றங்

கள் இல்லாதிருக்கும். ஆதலால், அவர் தாவர போசனம் விதித்தமையும், அவர்கள் பழந்தின்றமையும், பொய்யாகும். சுத்த ஞானிகளுக்குச் சுத்த சரீரமும் வேண்டியதில்லையே. சுத்த ஞானிகளாகிய மோக்ஷ வாசிகள் எக்காலத்திலுஞ் சுத்த சரீரிகளாயிருப்பர் என்று விவிலியநூல் பேசுகின்றதென்றால், 2, கொரிந்தியர் 4: 18. "காணப்பட்டவையெல்லாம் அழியும்" என்றபடி மோட்சவாசிகளுஞ் சரீரமுடையராதலால் அழிவர் என்பது நிச்சயமாம். ஆதிமனுட சரீரம் பசிமுதலியன உடையதாயிருத்தலாலே மோக்ஷவாசிகளுக்கும் பசி முதலியன உண்டாகும்; விவிலியநூலும் பொய்யாகும். ஆதலாலே, சுத்த ஞானிகளுக்குக் கொடுக்கப்பட்ட சரீரஞ்சுத்தமன்று. சுத்தமாயினும் வேண்டியதின்று.

ஆன்மா ஆதியிலே சுத்தியும் ஞானமுமுடையதாகப் படைக்கப்பட்டது என்றால், அது விலக்கை விதி என்றும் விதியை விலக்கு என்றும் மயங்கி விபரீதமாக உணர்தற்குக் காரணமாகிய அஞ்ஞானம் எப்படி யுண்டாயிற்று? அம்மயக்கம் பிசாசால்வந்ததெனில், புறக்காரணமாகிய ஆயிரம் பிசாசு கூடினும் உட்காரணமாகிய அஞ்ஞானமில்லாத போது மயக்கம் உண்டாக்க மாட்டாவே.

முற்றறிவின்மையே மயக்கக்காரணமெனில், மோட்ச வாசிகளும் மயக்கமுடையராவர்; அன்றியும் முற்றறிவின்மை எட்டாக் காரியங்களை அறியாதிருத்தற்குக் காரணமாமன்றி எட்டியறிந்த காரியங்களை விபரீதமாய் அறிதற்குக் காரண மாகாதே!

ஆன்மாவுக்குக் கடவுளாற் கொடுக்கப்பட்ட சுவாதிகாரமே மயங்குதற்கு உட்காரணமென்னில், சுவாதிகாரமானது பிறிதொன்றின் வசப்பட்டு மயங்குதற்குக் காரணமா

காது; தன் வசப்பட்டு மயங்காமை நிற்றற்கே காரணமாம் என்பது யுத்திசித்தமாயிருக்க, அதுவே மயங்கற்குக் காரணம் என்றல் புகைகாண்டலால் அக்கினி இல்லை என்றல் போல விரோதமாம்.

ஒரு காரணமுமின்றி மயங்கினர் என்னில், அப்படியே மோட்ச வாசிகளும் ஒரு காரணமுமின்றி மயங்குவர் போலும்! அப்படியே "ஒருமோட்சவாசி உட்காரணம் ஒன்றும் இன்றிப் புறக்காரணமாகிய பிசாசுமின்றித் தானே மயங்கி வழுவிப் பிசாசாயிற்று" என்று விவிலியநூல் கூறுதலின் முத்தி பெற்றவர்களுள்ளுஞ் சிலர் மயங்கிப் பாவிகளாகி நரக மடைவர் என்றால் அந்த முத்தி அநித்தியமாம். அதனைப் பெற்று பலனில்லையேயாம்.

இனிக் கடவுள் முன்னில்லாத ஆன்மாக்களை இடையிலே உண்டாக்குவார் எனவே அவர் உண்டாக்கு முன்னே ஆன்மாக்கள் ஒருவரும் இல்லாமையினாலே அவர்களாற் செய்யப்பட்ட யாதொரு கருமமும் இல்லையாம். ஆகவே கடவுளானவர் ஆன்மாக்களுட் சிலரை உத்தம சரீரிகளாகவுஞ் சிலரை மத்திம சரீரிகளாகவுஞ் சிலரை அதமசரீரிகளாகவுஞ் சிலரைக்குருடராகவுஞ் சிலரைச் செவிடராகவுஞ் சிலரை முடவராகவுஞ் சிலரைச் சர்வேந்திரிய சாலிகளாகவுஞ் சிலரை நித்திய வியாதிமான்களாகவுஞ் சிலரை நித்திய சுவாஸ்தியராகவுஞ் சிலரைச் செல்வராகவுஞ் சிலரை வறியராகவுஞ் சிலரை மூடராகவுஞ் சிலரை ஆரியராகவுஞ் சிலரை மிலேச்சராகவுஞ் சிலரைத் தாசராகவுஞ் சிலரைச் சிட்டராகவுஞ் சிலரைத் துட்டராகவும் இன்னும் பல வேறுவகைப்படவுஞ் செய்து, சிலரைப்போக புவனங்களிலுஞ் சிலரை வனங்களிலுஞ் சிலரை மலைகளிலுஞ் சிலரைக் கடல்களிலுஞ் சிலரைச்

சீதபூமியிலுஞ் சிலரை உஷ்ண பூமியிலும் வைத்துச், சில ரைக் கருப்பபிண்டத்திலுஞ் சிலரைச் சனனகாலத்துஞ் சில ரைக் குழவிப் பருவத்துஞ் சிலரை யௌவநகாலத்துஞ் சில ரைக் கிழப்பருவத்திலுங் கொன்று சிலரைச் சிவசமயத்துஞ் சிலரை விஷ்ணு மதத்திலுஞ் சிலரைப் பௌத்த மதத்திலுஞ் சிலரை யூதமதத்திலுஞ் சிலரை யேசுமதத்திலுஞ் சிலரை வேறு மதங்களிலுஞ் சேர்த்துச், சென்மிக்கும் போதே இப்படி இன்னும் அநேக பேதங்களை உடையவர்களாகச் செய்து, சிருட்டிப்பதற்குக் காரணம் யாது?

அதற்குக் காரணம் யாதொன்று மின்றித் தமது சித் தத்தின்படியே செய்கிறாரென்னில், அப்படியே மனுஷரிறந்த பின் அனுபவிக்குஞ் சுகதுக்கங்களுக்கும் யாதொரு காரண மும் வேண்டியதில்லை என்றுந் தமது சித்தத்தின்படியே சிலரை மோக்ஷத்திலுஞ் சிலரை நரகத்திலும் வைத்துச் சுக துக்கங்களை அநுபவிப்பர் என்றுங் கூறல் வேண்டும். அங்ங னங் கூறாமல் அவரவர் செய்த நன்மைதீமைகளுக்குத் தகுந்த பலனளிப்பார் என்னில், அப்படியே செனிக்கும்போது சிலர் சுகத்தையுஞ் சிலர் துக்கத்தையும் உடையவர்களாகப் பிறத் தற்குங் காரணம் இருத்தல் வேண்டும்

மேலும் அந்தக் கடவுள் ஒரு காரணமுமின்றி ஒருவருக் குச் சுகமும் ஒருவருக்குத் துக்கமுங் கொடுததால், நீதி இரக்கம் பரிசுத்தம் முற்றறிவு முதலிய குணங்களெல்லாம் இழந்து பக்ஷபாதியாய் விடுவர்.

சிற்றறிவுள்ள ஒரு மனுஷனுந் தன்பாற் றோன்றிய புத் திரர் எல்லார்க்குந் தான் தேடிய திரவியங்களைச் சமமாகப் பகுத்துப் பக்ஷபாதமின்றிக் கொடுப்பதேயன்றி, ஒருவனை வஞ்சித்து மற்றவனுக்குக் கொடுப்பதில்லை. யாண்டாயினும்

ஒருவன் சமமாகப் பகுத்துக் கொடாமல் ஒருவனுக்குக் கொடுத்து மற்றவனை வஞ்சித்தால் அவனை மகாத்துரோகி என்று உலகஞ் சொல்லும்! அப்படியானாற் சர்வசீவ தயையுஞ் சர்வசாமர்த்தியமும் உடையராய், ஒருவன்பால் விருப்பும் ஒருவன்பால் வெறுப்பும் இல்லாதவராய்ச், சர்வலோக வியாபகராய் இருக்குங் கடவுள் சிலர் மேல் விருப்பங் கொண்டு சுகவாழ்வையுஞ் சிலர்மேல் வெறுப்புக்கொண்டு துக்க வாழ்வையுங் கொடுத்தார் என்பது உலகத்துக் கேற்குமா? அன்றியும், கூன், குருடு, செவிடு, முடம் முதலிய யாதேனுமோர் குறையுள்ள குழந்தை கடவுளை நோக்கி: "ஐயையோ! என்னாண்டவரே! எனது தமையனை அதிசுந்தரனாய் வியாதியற்றவனாய்ச் சுகவாழ்வுடையவனாய்ச் சகல சற்குண சம்பன்னனாயிருக்கவும், என்னை உறுப்புக் குறைந்தவனாய் மாறாத வியாதியாளனாய்த் துர்க்குணனாயிருக்கவும் படைத்தீரே! என்னுடைய தமையன் உமக்குச் செய்த உபகாரம் யாதோ? யான் செய்த அபகாரம் யாதோ? கர்த்தாவே!" என்று ஓலமிட்டால்; அந்தக் கர்த்தா "அதை நீ கேட்டல் வேண்டாம்" என்பாரா? அல்லது என் "சித்தப்படி நான் செய்தேன். நீ அதை ஏன் கேட்கின்றாய்?" என்பாரா? அல்லது "பெருமைசிறுமை யில்லாதிருந்தால் உலகம் வழங்கும்படி செய்ய நம்மாலே இயலாது ஆதலால் அப்படிச் செய்தேன்" என்பாரா? அல்லது "ஆதாமுடைய வித்து வழியாகப் பிறந்ததினால் உங்களிருவருக்கும் அப்படிச் சம்பவித்தது" என்பாரா? அல்லது "ஒரு குயவன் மட்கலஞ் செய்யும்போது சில கலங் குற்றப்பட்டுப் போவதில்லையா? அது போல நானும் படைத்தபோது பிரமாதத்தால் சம்பவித்ததை இனி என்ன செய்யலாம்" என்பாரா? அல்லது அந்தக் குழந்தை ஓலமிட்ட சத்தத்தை அவர்கள் கேளாராய்

அல்லது கேட்டுக்கொண்டு மௌனமாய் இருந்து விடுவாரா? யாதுதான் செய்வார்? எப்படியாயினும் இவற்றுள் ஒன்றும் பொருந்ாதன்றோ! ஆதலிற் கடவுளினலே சீவர்கள் இப்படிப்பட்ட வேற்றுமையாகப் படைக்கப்படுதற்குக் காரணம் இருத்தல் வேண்டும். அக்காரணமும் அச்சீவர்களுக்கு அநாதியேயமைந்த விஷம பலகர்மமேயாம். அங்ஙனமாகவே சீவர்களும் அநாதியே உளரன்றி இடையிலே உண்டாக்கப்பட்டார்கள் அல்லர் என்றுஞ் சாதிக்கப்படும். ஆதலால் எப்படிச் சாதித்தாலுஞ் சீவர்கள் இடையிலே உண்டாக்கப்பட்டார்கள் என்று நீங்கள் சொல்லுதல் சற்றும் பொருந்தாது.

இங்ஙனமே உற்பத்தி விசார நிரூபணத்தினுற் பசுலக்ஷணக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## மிருகாதி.

மனுடருக்கு மாத்திரமேயன்றி மிருகாதிகளுக்கும் நித்தியான்மா இல்லை என்றீர்கள்! அங்ஙனங் கூறியது எந்த நியாயத்தால் என்று சொல்லுங்கள். மிருகசாதிகளுடைய ஆன்மா மனுடருடைய ஆன்மாவைப் போலாது சரீரத்தோடேயழியும் என்றால், அப்படியே மனுடருடைய ஆன்மாவுஞ் சரீரத்துடனே அழிந்துபோம் என்று சொல்லலாமே! இன்னும் இப்படிச் சாதனமின்றிச் சாத்திரம் முடிக்கலாமே!

மனுடர்க்கும் மிருகசாதிகளுக்கும் வடிவு வேறுபட்டிருத்தலால் ஆன்மாவும் வேறுபட்டிருக்கும் என்று சொல்லலாமா?

மனுடரைப் போலவே மிருகசாதிகளும் மெய் நாக்கு மூக்குக் கண் செவி என்னும் பஞ்சேந்திரியங்களினலே பரிசம் இரசம் கந்தம் உருவம் சத்தம் என்னும் பஞ்ச விடயங்

களையும் அறிகின்றன; ஆகாரம் நித்திரை மைதுனம் என்னும் மூன்றையுஞ் செய்கின்றன; அன்பு இரக்கம் பயம் கோபம் முதலிய குணங்கள் எல்லாமுடையனவாயிருக்கின்றன; அடிக்கப் புகும்போது அஞ்சுகின்றன; அடித்தாற் பதைக்கின்றன; நல்ல இரையைக் கண்டால் மகிழுகின்றன; தமக்கு வருத்தம் வருவித்தவனைச் சாரா; தம்மை அணைத்துப் போசனங் கொடுத்தவனை மகிழ்ந்து பின்றொடர்கின்றன. மனுடராலே பயிற்றப்பட்ட செயல்கள் எல்லாவற்றையுஞ் செய்கின்றன.

இப்படியே அறிவிலுந் தொழிலிலுமாகிய சைதன்னியத்தையுடைய மிருகங்களுக்கு ஆன்மா இல்லை என்று சொல்லுவது சிறிதும் பொருந்தாது; மிருகாதிகள் பேசாமையால் ஆன்மா இல்லையெனில், ஊமைகளுக்கும் ஆன்மா இல்லை என்று சொல்லவேண்டும். அன்றியும் மிருகாதிகள் பேசுகின்றில என்பதுங் கூடாது. பருந்து வட்டமிடும்போது கோழி கொக்கரிக்க, அக்குறிப்பறிந்து குஞ்சுகளெல்லாம் அதன் சிறகினுள்ளே மறைகின்றன; போர் செய்யும் படை அறைகூவ அந்தச் சத்தத்தைக் கேட்ட மாத்திரத்திலே தம்மைப்பொர அழைக்கின்றன என்று அறிந்து போய்ப் போர் செய்கின்றன; ஆபத்து வந்தபோது தம்மினங்களை அழைக்க அந்தப் பேச்சை அறிந்து அவற்றின் இனங்கள் எல்லாம் வந்து கூடுகின்றன; யாதொரு உணவைக் கண்டபோது தம்மினங்களை அழைக்க, அந்தச் சத்தங் கேட்டமாத்திரத்திலே ஓடி வந்து கூடி உணர்கின்றனவே! இப்படியே விலங்குகட்கும் பட்சிகட்கும் அவ்வவற்றிற்கு இசைந்த பாஷைகள் உள. அந்த அந்தப் பாஷைகள் எல்லாம் அந்த அந்தச் சாதிகளுக்கே தெரியும். அன்றியும் எங்கள் பாஷைகளையும் கிளி நாகணவாய் முதலிய பக்ஷிகள் பேசுகின்றன;

ஆதலால் மிருகாதிகளும் ஓரோர் குறிப்புப் பாஷை பேசும் என்பது நிச்சயம்.

இனி மிருகாதிகட்கு அறிவு குறைவா யிருத்தலால் ஆன்மா இல்லையெனில்; சிறு குழந்தைகளுக்கும் உன்மத் தருக்குஞ் சன்னிபாதம் முதலிய வியாதி யுடையார்க்கும் படியாதவர்களுக்கும் பேதைகளுக்கும் மிலேச்சருக்கும் ஆன்மா இல்லை என்று சொல்லவேண்டும். அதுநிற்க.

மிருகாதிகள் தாங்கள் இருக்கின்ற இடத்தையுந், தாங்கள் மேய்கின்ற காட்டையுந், தாம் உண்ணும் பொருளையுந், தமது இனத்தையுந், தமது பகையையும், நன்முகப் பகுத்தறிந்து கொள்ளுகின்றன. அப்படியே மனுஷருந் தாம் அறிந்த வீடுகளையும், வழிகளையும், காட்டையுந் தேசத்தையும், பொருள்களையுமேயன்றி மற்றொன்றையும் அறியார்கள். இப்படியிருக்க மிருகாதிகளுக்கு அறிவு குறைந்தபடியால் ஆன்மா இல்லை என்பது சற்றும் பொருந்தாது.

மிருகங்களுக்கும் அறிவுண்டு என்பதற்குப் பிரமாணம். ஆதிபுத். 3. அதி: 1. "பிரபுவாகிய பராபரனுற் படைக்கப் பட்ட பூசரசத்துக்குள்ளே பாம்பு மிகக் கொடியதாயிருந் தது" எசாயா. 1: 3. "மாடு தன் யசமானனையும், கழுதை தன்னுண்டவரின் முன்னணையையும் அறியும்; ஆனுல் இஸ்ர வேல் அறிவில்லாமலும், நம்முடைய சனம் உணர்வில்லாம லும் இருக்கிறது" பேதுருவின் இரண்டாம் பத்திரம் 2-ம் அதி: 16. "மிருகமானது மனுஷ பாஷையினுற் பேசி அவ னுடைய உன்மத்தமாகிய கர்மத்தை விலக்கிற்று" சலோமன் நீதி வாக்கியம் "எறும்பிடத்திற்படி" என்று நுஞ் சமய நூலிலுங் கூறப்பட்டது.

இனிச் சகலத்தையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளுகின்ற கடவுள் ஒருவர் உளர் என்னும் அறிவு மிருகாதிகளுக் கின்மையாலே ஆன்மாவும் இல்லையெனில், உலோகாயதன் முதலிய நாஸ்திக சமயிகளுக்கும் ஆன்மா இல்லை எனல் வேண்டும். அதுவுமன்றி, ஆன்மாவானது யாதானுமோர் கருவியைக் கொண்டன்றி ஒன்றையும் அறியாதாதலானுங், கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்னும் அறிவைப் பிறப்பித்தற்கு வேண்டப்படுங் கருவி மிருகாதிகட் கின்மையானும், அம்மிருகாதிகள் கடவுள் ஒருவர் உளர் என்பதை அறியாவாம். அக்கருவி உள்வழி, மனுஷரைப் போலவே மிருகாதிகளும் அறியும். அக்கருவி இல்வழி மனுஷரும் மிருகங்களோடு முற்றும் ஒப்பர் அன்றோ! அக்கருவி இல்லாதனவற்றிற்கு ஆன்மா இல்லை என்றாற் பிறவிக் குருடர் பிறவிச் செவிடர் முதலியோர்களுக்கும் சுருதி குரு இல்லாதவர்களுக்கும் ஆன்மா இல்லை எனல்வேண்டும். ஆதலாலே அந்தக் கருவியின்மையினாலே மிருகாதிகளுக்கு ஆன்மா இல்லை என்றல் கூடாது. மிருகாதிகளுடைய ஆன்மா அழியுமெனின் மனுஷருடைய ஆன்மாவும் அழியும் எனல் கூடும். மனுஷருடைய ஆன்மா அழியாதெனில், மிருகாதிகளுடைய ஆன்மாவும் அழியாதென்று துணியப்படும். ஆதலாலே மனுடர்க்குப் போலவே மிருகாதிகட்கும் நித்தியமாகிய ஆன்மா உண்டு என்பது நிச்சயம்.

மிருகாதிகளை மனுடருக்கு ஆகாரமாகப் படைத்தார் என்றீர்கள்! நாய், நரி, புலி, கரடி, காகம், ஈ, பேன், மூட்டை முதலியன மனுடரால் ஆகாரமாகக் கொள்ளப்படாமையாலும், பரமாணுவினும் நுண்ணிய செந்துக்கள் மனுடரால் ஆகாரமாகக் கொள்ளப்படுதல் கூடாமையாலும் நீவிர் கூறியது பொருந்தாது. அவை ஆகாரமாகாவிடினும், மனுட

ருக்கு உபகாரகமாமெனின், சிங்கம், புலி, யானை, கரடி, பாம்பு, தேள் முதலியவைகள் மனுஷருக்கு உபகாரகமாகாமல் வருத்துதலுங் கொல்லுதலுஞ் செய்து அபகாரகமாதலால் அதுவும் பொருந்தாது.

"பாம்புதேள் கொசுகு சீயம் பயந்தரு கரடி வேங்கை
யாம்பிற மிருக மெல்லா மாய்ந்துமா னிடர்க்கா யின்பந்
தேம்பவான் புவியோ டன்று செய்தனன் கடவு ளென்றால்
நாம்பகர் வதுமற் றென்னோ நன்றுநன் றுனது வாய்மை."

"மனுடர் தவறு செய்ததினாலே அவர்களுக்கு மிருகாதிகள் அடங்காவாகுக" என்று கடவுள் சபித்தலின் அங்ஙனமாயின் என்னின், ஆடு, மாடு, எருமை, பன்றி, நாய், கோழி முதலிய செந்துக்கள் மனுடருக்கு அடங்குதலாற் சபித்தது என்பது பொய்யாம். மனுடருக்குப் புலியாதிகள் அடங்காதொழியவும், மாடு முதலிய அடங்கவுமே சபித்ததெனின், அம்முறை பிறழ ஓரோர் காலங்களிற் பாம்பு முதலியன ஒருவனுக்கு அடங்குதலினாலும், மாடு முதலியன ஒருவனைக் கொல்லுதலினாலும் அதுவுங்கூடாது.

இன்னும் மிருகாதிகளை மனுடர் புசிக்கக் காண்கையால் அவர்கள் பொருட்டே அவைகளைப் படைத்தாரெனின், மனுடரை நாய் நரி புலி முதலியன புசிக்கக்காண்கையால் மிருகாதிகளுக்கு ஆகாரமாகவே மனுடரைப் படைத்தார் என்றுஞ் சொல்லலாமே.

ஆதலான் மிருகாதிகளை மனுடருக்கு ஆகாரமாகும்படி படைத்தார் அல்லர் என்பது நிச்சயம். இந்த நிச்சயத்தை அறிந்துந் தாம் புசிக்கும் பொருட்டாக ஆகாரத்தின் பொருட்டே மிருகாதிகளைப் படைத்தார் என்றும், அவைகளுக்கு நித்தியான்மா இல்லை என்றுந், துரோகிகள் கட்டி

வைத்த விவிலிய நூலை மெய்ந்நூல் என்று சொல்லலாமா? அந்நூலிற்சொல்லியிருந்தாலும், மிருகங்களை அடிக்கும்போது அவைகள் படுகின்ற வேதனைகள் முழுதுங் கண்ணாரக்கண்டு கொண்டும், பேராசையினாலே காணாதார்போன்று, சிறிதும் இரக்கமின்றி, அம்மிருகங்களை அடித்துப்புசிப்பது நியாயமா? ஐயையோ! துரோகிகளே! இப்படிப்பட்ட துரோகத்தால் வந்த பெரும்பாதகம் ஒழியுநாள் எந்நாளோ? அது நிற்க.

மேலே காட்டிய நியாயங்களினாலே மிருகாதிகள் மனுடருக்கு ஆகாரமாகும் பொருட்டுப் படைக்கப்பட்டன அல்ல; முற்பிறவியிற் செய்யப்பட்ட கருமவசத்தினால் அவ்வாறு படைக்கப்பட்ட பசுக்களே என்று துணிக.

இங்ஙனமே மிருகாதி விசார நிரூபணத்தினாற் பசு லக்ஷணக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது,

பசுப்பிரகரணம் முற்றிற்று.

---

# 3. பாசப்பிரகரணம்.

## சென்மபாவம்.

கிறிஸ்துமதஸ்தர்களே!

ஆதிமனுடர் பாவிகளாயினமையால், அவர்களுடைய விந்துவழியாகப் பிறக்கின்ற எல்லா மனுடருக்குஞ் சென்ம பாவங் வந்தது என்கிறீர்களே! ஒகோ! பாவமாவது என்னே? ஓர் திரவியமா? அல்லது குணமா? இரண்டும் அல்லவே! அது விலக்கியதைச் செய்தலாகிய தொழிலாயும், விதித் ததைச் செய்யாமையாயே தொழிலின்மையாயும் இருக்கு மன்றோ! தொழிலுந் தொழிலின்மையும் ஒரு பொருளினி டத்தே தோன்றித் தோன்றியகணத்தே அழியுமாதலின், அது ஒருவரிடத்தே நெடுங்காலம் இருந்து அவர் விந்துவழி யாக மற்றவர்களிடத்தும் போகும் என்றல் கூடாதே!

அன்றியும் பிதாமாதாக்களின் விந்துவினால் உண்டா வது சரீரமேயன்றி ஆன்மா அன்று. சரீரஞ் சடமாயும் ஆன்மாச் சித்தாயும் இருத்தலால், அதனியல்பும் வேறே; இதனியல்பும் வேறே; ஆதலால் அதனோடு இதற்குச் சிறி துஞ் சம்பந்தம் இல்லையே!

இந்த ஆன்மாப் பிதாமாதாக்களுடைய ஆன்மாவில் ஒரு கூறுமல்ல; ஒருகூறாயின் அறிவுத்தொடர்ச்சி உண்டாக வேண்டும்; அவ்வான்மாப் பிரிக்கப்படுவது என்றுங்கொள்ள வேண்டும்; ஆதலால் அதற்கும் இதற்கும் யாதொரு தொடர் பும் இல்லையே! இப்படியாகவும், ஒரு ஆன்மாச் செய்த குற் றம் மற்றொரு ஆன்மாவைச் சேருமென்று சொல்லுவது நியாயமா?

மேலும் விந்து வழியாகப் பாவந் தொடருமாயின், குருடு, செவிடு முதலான ஊனமுள்ளவர்களுக்கு நல்லழகுள்ள பிள்ளைகள் பிறப்பது என்னை? மாறாத நோயாளருக்கு நோயில்லாத பிள்ளைகள் பிறப்பது என்னை? துட்டனாகிய பிதாவுக்குச் சிட்ட புத்திரனுஞ், சிட்டனாகிய பிதாவுக்குத் துட்ட புத்திரனும் பிறப்பது என்னை? இப்படி இருத்தலாலேயும் விந்துவழியாகப் பாவந் தொடரும் என்பது பொருந்தாது.

இனி அப்படியேதொடர்ந்துபோகுமாயினும், அப்பாவந் தானே போகமாட்டுமோ? மாட்டாதே! அது கடவுளாலே தானே போக்கப்படும் என்றன்றோ கொள்ளவேண்டும் ஆகவே, கடவுள் ஒருவர்செய்த பாவத்தை மற்றொருவரிடத்திலே போக்குதலாற் பெரிய அநீதியுடையவர் ஆவர்.

இவ்வுலகத்திலுள்ள அரசர்களும் அவரவர் செய்த குற்றத்துக்காக அவரவரையே தண்டிப்பதன்றி, ஒருவர் செய்த குற்றத்துக்கு மற்றொருவரைத் தண்டியார்கள்: அப்படியானாற் சருவஞ்ஞராய்ச், சருவசீவ தயாபரராய்ப், பரிபூரணராய், விருப்பு வெறுப்பற்றவராய் இருக்குங் கடவுள் ஒரு ஆன்மாச் செய்த குற்றத்தை மற்றொரு ஆன்மாவிலே ஏற்றி அதைத் தண்டிப்பார் என்பது சிறிதும் பொருந்தாது.

இங்ஙனமே சென்மபாவ விசார நிருபணத்தினாற் பாசலக்ஷணக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

பாசப்பிரகரணம் முற்றிற்று.

---

# 4. கதிப்பிரகரணம்.

## முத்திசாதனம்

**கிறிஸ்துமதஸ்தர்களே!**

கடவுள் தாங்கொடுத்த கட்டளையை மீறி மனுடர் பாவஞ்செய்தமையால், அவர்களை நீதிபின்படி சபித்தும், இரக்கத்தினாலே அவர்களுடைய பாவத்துக்குப் பலியாகும்படி தம்முடைய குமாரனை அனுப்பினார் என்கிறீர்களே!

அவர் சபித்ததும் பிறவும் அநீதியே என்பது முன்னரே காட்டினாம்.

தாம் விதித்த கட்டளையை மீறினமையால் விளைந்த பாவத்துக்கு மனுடர் பிராயச்சித்தஞ் செய்யமாட்டார்களே என்று இரங்கித் தமது குமாரனை அனுப்பிய கடவுள் தாம் விதிக்குங் கட்டளையினாலே மனுடர் பாவிகளாவார் என்று இரங்கி விதியாதுவிடலாமே! விதித்துவிட்ட கட்டளையை மீறினபோதுந், தாஞ் சபிக்குஞ் சாபத்தை மனுடர் விலக்கமாட்டார் என்று இரங்கிச் சபியாது விடலாமே! அங்ஙனமும் இயலாதாயின், தாம் படைக்கப்புகுந்தால் இவ்வளவு சங்கடமுந் தீமையும் விளையுமென்று முன்னரே அறிந்து, இரங்கிப் படையாதுவிடலாமே!

பெரும் வேதனையைத் தாமே வருவித்துத் தாமே விலக்கினமை தமது நீதியையும் இரக்கத்தையும் பிறருக்குக் காட்டித் தம்மைப் புகழ்வித்தற்- பொருட்டே என்னில், அது ஒருவாற்றாற் பொருந்தும்; அவருடைய செய்கைகளெல்லாந் தம்மின்பத்தையே குறித்தனவன்றிப் பிறரின்பத்தைக் குறித்தனவல்ல; ஆதலாலே அவர் நித்தியானந்தமும், நீதியும், இரக்கமும் இல்லாதவரே ஆவர்.

இனித் "தமது குமாரனை அனுப்பினார்" எனவே குமாரனைத் தந்த பிதா முந்தினவர் என்பதும், அவராலே தரப்பட்ட குமாரர் பிந்தினவர் என்பதும், பிதாவினாலே அனுப்பப்பட்டமையாற் குமாரர் பரதந்திரர் என்பதும் பெறப்படுதலினாலே, பிதாவுங் குமாரரும் ஒருவர் என்றும் ஒத்தவர் என்றும் நீங்கள் சொல்வது மகாவிரோதமாம்.

குமாரராகிய கிறிஸ்து கணவனின்றிக் கருவுண்டான கன்னி வயிற்றிற் பிறந்தார் என்றுந், தெய்வத்தன்மையுடையவர் என்றுஞ், சென்மபாவமிலர் என்றும், அற்புதங்கள் செய்தார் என்றும், இறந்தபின் உயிர்த்தார் என்றும் நீர் கூறுவது வெறும்பொய் என்பதும், அக்கிறிஸ்து தேவரல்லர் மனுடரே என்பதும் முன்னரே சாதித்து நாட்டினும்.

கிறிஸ்துவானவர் மனுடர் படவேண்டிய தண்டத்தைத் தாமே அனுபவித்தார் என்கிறீர்கள்! அவரவர் செய்த குற்றத்துக்கு அவரவரே தண்டிக்கப்படல்வேண்டுமன்றி, ஒருவர் செய்த குற்றத்துக்கு மற்றொருவர் தண்டிக்கப்படுவது நீதியா? ஒருவருடைய பசி மற்றொருவர் புசித்தால் நீங்கி விடுமா? ஒருவருடைய வியாதி மற்றொருவர் மருந்து புசித்தலால் மாறுமா?

எசேக்கியேல். 18: 20. பாவஞ்செய்கிற ஆத்துமமே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை; தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேலேயே இருக்கும்; தீயவனுடைய தீமையும் அவன்மேலேயே இருக்கும். 5. மோசே 24: 16. பிள்ளைகளுக்காகப் பிதாக்களும் பிதாக்களுக்காகப் பிள்ளைகளுங் கொலை செய்யப்பட வேண்டாம்; அவனவன் தன்தன் பாவத்தின் நிமித்தங் கொலை செய்யப்

படவேண்டும். இப்படி உங்கள் விவிலிய நூலே பேசுமாயின், மனுடர் படவேண்டிய தண்டத்தைக் கிறிஸ்து தாமே அனுபவித்தார் என்று சொல்லுவது சிறிதாயினும் பொருந்துமா?

இனிக் கிறிஸ்து பாடுபட்டார், ஆதலினாலே நித்தியானந்தர் அல்லர். அவருடைய மானுஷியமே அன்றித் தேவத்துவம் பாடுபட்டது அன்று என்பீராயின், மனுஷர் கட்டளையை மீறிச் செய்த பாவத்தை மனுஷர் பாடுபட்டு உத்தரிக்கமாட்டார்கள் என்று நீங்களே சொல்லுதலால், அவருடைய மானுஷியம் பாடுபட்டது என்பது பொருந்தாதே என்பேம்.

அன்றியுங் கிறிஸ்து தாமே தண்டிக்கப்பட்டு இரட்சித்தார் என்று சொல்லிவிட்டுப், பின்பு மானுஷியம் பாடுபடத் தேவத்துவம் இரட்சித்தது என்று சொல்லுவது பெரும் பொய் அன்றோ!

அன்றியும் அநந்தகோடி சீவர்கள் நித்திய காலமும் அனுபவிக்கும் வேதனைகள் எல்லாவற்றையுங், கிறிஸ்துவாகிய ஒருவர் அற்பகாலத்திலே அனுபவித்தல் கூடுமா? சர்வசாமர்த்தியத்தினாலே அப்படிச் செய்தவராயின், அற்பகாலமுந் தாம் வேதனைப்படாமல் அச்சர்வ சாமர்த்தியத்தினாலே பிறருடைய வேதனைகளை விலக்கல் கூடாதா?

கடவுள் மனுஷர்களுக்கு இம்மையிலே சுகதுக்கங்களைக் காரணம் ஒன்றும் இன்றித் தமது திருவுள்ளப்படியே செய்கிறார் என்றும், மனுஷர் இம்மையிலே செய்த பாவங்கள் காரணமாக மறுமையிலே நரகத்தில் விழுந்து நித்திய வேதனைகளை அடைவர் என்றும் நீங்கள் சொல்லுதலினாலே கிறிஸ்து என்பவர் இம்மையிலே அனுபவித்த துக்கமெல்லாம் ஒரு காரணமும் இன்றிக் கடவுளுடைய திருவுள்ளப்படி வந்து

முடிந்தன என்றும், அதினாலே மனுஷருக்குப் பாவவிமோசனம் ஆகாது என்றும், இம்மையிலே கிறிஸ்து சகல மனுஷருடைய பாவங்களையும் ஏற்றுக்கொண்டது உண்மையாயின் மறுமையிலே அவர் நரகத்தில் விழுந்து நித்தியவேதனையை அடைவார் என்றும் நிச்சயித்துக் கொள்ளலாம் அல்லவா?

அன்றியும், இம்மையிலே அற்பபாவஞ் செய்தவர்களும் மறுமையிலே நித்தியவேதனையை அடைவார்கள் என்று நீங்களே சொல்லுகிறீர்கள்! ஆனபின், சகலமான பெரும் பாவங்களையுந் தம்மேலே ஏற்றிக்கொண்ட கிறிஸ்து என்பவர் இம்மையிலும் மறுமையிலும் அத்தியந்த அகோரவேதனைகளை நித்தியமும் அனுபவித்தல் வேண்டும் என்பதற்கு ஐயமில்லையே!

தம்முடைய குமாரன் என்னும் உரிமைபற்றி யெகோவா இவரை நரகத்தில் வீழ்த்தாதுவிடுவார் ஆயின் அவர் பக்ஷபாதமுடையவர் ஆவார் அன்றோ!

மேலும் மனுஷர் முன்னே செய்த பாவங்களின் பொருட்டே அன்றிப், பின்னே செய்யும் பாவங்களின் பொருட்டும் பாடுபட்டார் என்று சொல்லுகிறீர்கள்! ஒருவனுக்கு வரும் வருஷத்திற் பசியையுந் தீர்த்தற்பொருட்டு மற்றொருவன் இப்பொழுது புசித்தான் என்றாற் சிறுவரும் இதை நம்புவாரா?

இங்ஙனமாதலாற், கிறிஸ்து மனுஷருடைய பாவங்களுக்காகத் தண்டிக்கப்பட்டார் என்றல் சிறிதும் பொருந்தாது என்க.

கிறிஸ்து பாவ விமோசனம் பண்ணினார் என்கிறீர்கள்! அப்படிச் செய்தாராயிற் பாவம் உலகத்திலே இருக்குமா?

ஒரு மனுஷன் கட்டளையை மீறினமையால் வந்த பாவம் எல்லாரையும் பிடித்தது என்று சொல்லுகிற உங்களுக்கு, ஒருவன் விமோசனம் பண்ணினமையாற் கழிந்த பாவம் உடனே எல்லாரையும் விட்டு நீங்கியது என்றல் கருத்தாகாதா!

கிறிஸ்து தமக்கு முன்னும் பின்னும் உள்ள சகலருடைய பாவங்களையும் நிவாரணம் பண்ணினாராயின், அந்தக் கணத்திற்றானே சகலரும் பாவம் நீங்கி முத்தி பெற்றவர் ஆகவேண்டும்: அங்ஙனம் ஆகாமையாற், கிறிஸ்து பாவ விமோசனஞ் செய்தார் அல்லர் என்பது துணியப்படும்.

மேலும் ஒரு அரசன் தான் விதித்த கட்டளையைச் சில சனங்கள் மீறினால், அதற்காக அவனைத் தண்டிப்பதேயன்றித் தண்டியாது விமோசனம் பண்ணிவிடுவது நீதியா? அந்தக் குற்றத்துக்குத் தானாகவே பரிகாரம் பண்ணிக்கொள்ளுவது மகிமையா? அதினாலே தனது தலையிலே மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளுவது புத்தியா? அல்லது பிறருக்சாகத் தன்மகனைத் தண்டித்தல் நியாயமா?

ஆதலால் மனுஷர்செய்த பாவத்துக்காக மனுஷர் தண்டம் பெறாதபடி கிறிஸ்து பாவ விமோசனஞ் செய்தார் என்றல் சிறிதும் பொருந்தாது. இனி விசுவாசமே முத்தியைப் பயக்குஞ்சாதனம் என்கிறீர்கள்! ஸ்நானம் பெற்றும் பெறாதும் இறந்த குழந்தைகள் முத்தியடையும் என்கிறீர்களே! அக்குழந்தைகளிடத்தில் விசுவாசம் உண்டா? இல்லையே! அக்குழந்தைகளுக்கு முத்திசாதனம் யாதோ? அக்குழந்தைகளிலே செய்யப்பட்ட இரக்கமே யென்னில், விசுவாசமில்லாத ஆன்மாக்களிலெல்லாம் அது செய்யாததென்னை?

இங்ஙனமே முத்திசாதன விசார நிரூபணத்தினுற் கதி லக்ஷணக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## நிரயம்.

**கிறிஸ்துமதஸ்தர்களே!**

கடவுள் பாவிகளை நரகத்திலே நித்திய காலமுஞ் சமமாகத் தண்டிப்பார் என்கிறீர்கள்! அது சிறிதும் பொருந்தாது.

சர்வலோக ஆதிநாயகராகிய கடவுளை தூஷித்தலும், ஒருவனைக் கொல்லலும், ஒருபொருளைக் களவெடுத்தலுங், கள்ளுக்குடித்தலும், விபசாரஞ் செய்தலும், பொய் கூறலுங், குருவை நிந்தித்தலுமாகிய பல வருக்கங்களாகிய பாதகங்கள் எல்லாவற்றையும் ஒன்றென்றும், இவைகளைச் செய்தவர்களுக்கெல்லாம் ஒரே தண்டமென்றுஞ் சொல்லக்கூடாதே!

இதுவுமன்றி ஒரு வேசையுடனே கூடுதலும், ஒரு கன்னிகையுடனே கூடுதலும், பிறன்மனைவியோடு கூடுதலுஞ், சகோதரியுடனே கூடுதலும், பெற்ற தாயுடனே கூடுதலும் ஆகிய இவையெல்லாம் ஒரே வருக்கமாகிய பாதகங்களாயிருந்தும், ஒன்றிலொன்று அதிபாரமான பாவமாயிருத்தலால் இவை செய்தவர் எல்லாரும் ஒரேவிதமான தண்டத்தை ஒரு சமமாக அடைவார்கள் என்று சொல்லக்கூடாதே.

இன்னும் ஒரேவருக்கத்துள்ள ஒரேவிதமான ஒரு பாவத்தைத் தானும் ஒரு நிமிஷத்திற் செய்தலும், ஒருநாழிகையிற் செய்தலும், ஒரு முகூர்த்தத்திற் செய்தலும், ஒரு யாமத்திற் செய்தலும், ஒரு நாளிற் செய்தலும், ஒருவாரத்திற்செய்தலும், ஒரு பக்ஷத்திற் செய்தலும், ஒரு மாசத்திற் செய்தலும், ஒரு அயனத்திற் செய்தலும், ஒரு வருஷத்திற்

செய்தலும், உள்ளநாளெல்லாஞ் செய்தலும் ஆகிய இவை எல்லாம் ஒரு சமமென்றும், இங்ஙனஞ் செய்தவர் எல்லாருக்கும் ஒரே தண்டம் பெறப்படும் என்றுஞ் சொல்லக்கூடாதே!

யோவான் 19: 11. "என்னை உமக்கு ஒப்புக் கொடுத்தவன் அதிக பாவமுள்ளவன்" என்று சொல்லப்பட்டதினாலும் பாவ தாரதம்மியம் உண்டென்பது சாதிக்கப்படும்.

அங்ஙனமாக; அவரவர் செய்த பாவத்துக்குத் தகுந்த தண்டத்தைத் தகுந்தகாலம்வரையுஞ் செய்வது நீதி யன்றி, அவர்கள் எல்லாரையும் நித்தியமுஞ் சமமாகத் தண்டிப்பது நீதியல்லவே.

இவ்வுலகத்திலே அரசர்களும் ஒருவன் குற்றஞ் செய்தால் அவன் செய்த குற்றத்தினுடைய வருக்கம், அளவு, காலம் என்பவற்றை நன்றாக வரையறுத்துக்கொண்டு, அவைகளுக்கு ஏற்றபடி தண்டஞ் செய்கிறார்கள்: சிற்றறிவுடையோராகிய மனுஷரும் இப்படிச் செய்தால், முற்றறிவுடைய கடவுள் அவரவர் செய்த பாவங்கள் எவ்வருக்கத்தின? எவ்வளவின? எத்துணைக்காலத்தின? என்று ஆராய்ந்து நியமித்துக் கொண்டு ஏற்றபடி தண்டஞ்செய்தலின்றி, எவ்வகைப்பாவிகளையுஞ் சமமாகவே நித்திய தண்டஞ் செய்து வருத்துவாரா?

ஒருவன் தன்னுடைய பிள்ளை குற்றஞ்செய்தால்; அந்தப்பிள்ளையை மேலுஞ் செய்யவிடாமல் நன்னெறியிலே நிறுத்துதற்பொருட்டு மரத்தோடே கட்டிக் கசையினால் அடித்தும், வேறு தண்டங்களைச் செய்துந் திருத்திக்கொள்ளுவன்; அதுவன்றி உள்ளகாலமெல்லாந் தண்டஞ் செய்யமாட்டான். இதுவே இரக்கமான செயல். மனுஷரே இவ்வளவு இரக்கமுடையவராயின், கடவுளானவர் தமது பிள்ளை

களாகிய ஆன்மாக்களை இரக்கஞ் சிறிதுமின்றி நித்திய தண்டஞ் செய்வாரா?

நரகத்திலே இருக்கிறவர்கள் சிலர் இடைவிடாமல் யேசுவைக் கூப்பிட்டு "எங்களை இரட்சியும்" என்று இரங்கியிருந்த விசுவாசம் வைத்தால், அவர்களை இரட்சிப்பாரா? இரட்சியாரா? இரட்சிப்பாராயின், நித்திய நரகம் இல்லையாகும்: இரட்சியாராயின் அவர் சர்வசீவதயாபரர் ஆகார்: விசுவாசம் முத்திபயக்கும் என்பதும் பொய்யாம்.

இன்னும் ஒருவன் தான் செய்த பாவத்தினாலே நித்தியமும் நரகத்திலே வேதனைப்படுவன் என்றால், தான் செய்த புண்ணியங்களின் பயனை இழந்துவிடுவான் என்று சொல்லல் வேண்டும்.

ஒருவன் தான் செய்த பாவத்துக்காகத் தப்பாமலே துக்கத்தை அனுபவிப்பது நீதியாயின், தான் செய்த புண்ணியத்துக்காகவுந் தப்பாமற் சுகத்தை அனுபவிக்க வேண்டுமேயன்றி அதை அனுபவியாதொழிதல் நீதியா? அது நீதியாயின், அவன் செய்த பாவத்துக்காகத் துக்கம் அனுபவித்தலும் வேண்டாமே!

எப்பொழுதும் புண்ணியஞ் செய்தலே மனுஷருக்குக் கடனாதலினாலே புண்ணியஞ் செய்தவர்கள் சுகத்தை அனுபவித்தல் வேண்டாம் என்றும், பாவஞ் செய்தல் கடவுளுக்கு விரோதமாதலினாலே பாவிகள் நித்திய நரகத்தை அடைதல் நீதி என்றுஞ் சொல்லுவீராகில், அது கூடாது: மனுஷர் செய்யும் புண்ணியங்கள் எல்லாவற்றையுங் கடன் என்றதினாலே அப்புண்ணியங்களினால் வரும்பயன் ஒன்றுமில்லை என்பதாயிற்று: ஆகவே, எவ்வகைப்பட்ட புண்ணியஞ்செய்தாலும் ஒருவரும் முத்தியடைதல் கூடாதே!

அங்ஙனமாகில், ஒருவரும் ஒருகாலும் மனம் வாக்குக் காயங்களினாலே யாதொரு நல்வினையையேனுஞ் செய்ய வேண்டியதில்லை; ஆதலாற் செய்த பாவத்துக்காகப் பச்சாத்தாபப்படுதலுங், கிறிஸ்துவை விசுவசித்தலும், ஸ்நானம் பெறுதலும், நற்கருணை கொள்ளலும், முழங்காலின் நின்று கையேந்தி அண்ணாந்து கண்மூடிக் கிறிஸ்துவைப் பிரார்த்தித்தலும், அவருடைய கற்பனையைக் கைக்கொள்ளுதலும், விவிலிய நூலைப் பிரசாரித்தலும் ஆகிய புண்ணியங்களுள் ஒன்றேனும் நீங்கள் செய்யவேண்டியதில்லையே! சகலருஞ் சுகமாயிருந்து முத்திபெறலாமே!

முத்தி பெறுதற்கு இப்புண்ணியங்கள் வேண்டும் என்றால்; மனம் வாக்குக் காயங்களினாலே செய்யப்படுகின்ற இந்தப்புண்ணியங்களினாலே அந்தமுத்தியைப் பெறலாம் என்பது கொள்ளப்படுதலாற், புண்ணியங்களினாலே பயனில்லை என்று சொல்லுதல் கூடாது.

லூக். 14: 13, 14. "நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையுஞ் சப்பாணிகளையுங் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்."

மத். 6: 3, 4. "நீயோ தர்மஞ் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது:—அப்பொழுது அந்தரங்கத்திற் பார்க்கிற உன்பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்."

இப்படியே நும் விவிலிய நூல் புண்ணியங்களினாலே பல னுண்டாதல் நிச்சயம் என்று பேச, நீர் புண்ணியங்க ளெல் லாங் கடன் என்று கூறுவது ஒக்குமா?

மேலும் மனுடர் செய்யும் பாவங்கள் மனுடருக்கே துக்கந்தருமாதலால் அவை மனுடருக்கு விரோதம் என்று சொல்லுவதே தகுதி: அதுவன்றி, அவைகளாற் கடவு ளுக்கு ஒரு கேடும் வருவதில்லை; ஆதலால் அவைகள் கட வுளுக்கு விரோதம் என்று சொல்லுவது சிறிதும் பொருந் தாதே!

ஆதலால் ஒருவன் புண்ணியபாவங்கள் இரண்டையுஞ் சமமாகவேனும் ஒன்றிலொன்று அதிகமாகவேனுஞ் செய் திருந்தால், அவற்றால் வருந் துக்க சுகங்களையும் அவனே அனுபவித்தல் வேண்டும்; அதுவன்றி, ஒன்றைவிட்டு ஒன்றை அநுபவிப்பான் என்பது சிறிதும் நீதியன்றாம்.

ஆதலாலே பல புண்ணியங்களைச் செய்தவனும் ஒரு பாவத்தைச் செய்ததினாலே மீளாத நரகத்திலே புகுந்து நித்தியமுந் துக்கமடைவான் என்றது சிறிதும் பொருந்தாது.

மேலும் நீங்கள் சொல்லுகிற நரகமானது இடையிலே உண்டாக்கப்பட்டது. ஆதலானும், அகண்டிதமாகிய ஒரு இடமென்று சொல்லப்படுதலானும், அக்கினி கெந்தகம் புழு முதலிய அநித்தியமாகிய பொருள்களை யுடையதாதலானும், அதில் இருப்பவர்கள் சரீரிகளாதலாதலானும், "காணப்பட் டவை அழியும்" என்று நும் விவிலிய நூலே கூறலானும் அது எக்காலஞ் செல்லினும் அழியுமேயன்றி நித்தியமாய் இருத்தல் கூடாதே!

ஆதலாற் பாவிகள் நரகத்திலே நித்தியவேதனை அடை வார் என்பது எவ்வாற்றானும் பொருந்தாது.

இங்ஙனமே நிரய விசார நிரூபணத்தினுற் கதிலக்ஷணக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

## முத்தி.

**கிறிஸ்துமதஸ்தர்களே!**

தம்மை விசுவசித்தவர்கள் முத்தியிலே இருந்து நித்திய காலமும் பேரின்பத்தை அனுபவிப்பார்கள் என்கிறீர்கள்!

நரகத்திலிருப்பவர்கள் தாந்தாஞ் செய்த தீவினையின் அளவாகவே துக்கம் அனுபவிப்பது போல, முத்தியிலிருப்பவர்களுந் தாந்தாம் தமது மனம் வாக்குக் காயங்களினுலே செய்த நல்வினைக்குத் தக்க அளவாகச் சுகம் அனுபவிப்பார்கள் என்பதன்றிச் சகலரும் ஒரே சமமாக நித்திய சுகத்தை அனுபவிப்பார்கள் என்பது பொருந்தாது.

அன்றியும் ஆன்மாக்கள் சரீரத்துடனே முத்தியில் இருப்பார்கள் என்கிறீர்கள்!

இவ்வுலகத்திலே ஆன்மாக்கள் தமது இயற்கையாகிய அறிவுந் தொழிலும் என்கின்ற சைதன்னியத்தின் விளக்கத்திற்கு ஓர் தடை இருத்தலாற்முன், அத்தடையைச் சிறிது தீர்த்துச் சைதன்னியத்தைச் சிறிது விளக்கும்பொருட்டு இறைவனுலே கருவியாகக் கொடுக்கப்பட்ட சரீரத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றன.

தாந் தாமாயிருப்பதே சுகம் எனப்படுமன்றித் தம்மின் வேமுகிய சரீரத்தோடிருப்பது சுகம் எனப்படாது. துக்கமெனவே படும்: ஆதலாற் சரீரம் முதலியவற்றை நீங்கி, இயற்கையாகிய சைதன்னியம் உள்ளபடி விளங்கப் பெற்றிருத்தலே நித்திய பரமசுகமாகிய முத்தியாம்.

ஆகவே அங்ஙனம் இயற்கைச் சைதன்னிய விளக்கம் இன்மையாலே, செயற்கையாகிய சரீரத்துடனே கூடி நித்திய துக்கிகளாய் இருப்பவரை, நித்திய பரமசுகமுடையர் என்று நீங்கள் கூறுவது சற்றும் பொருந்தாது.

மேலும் நீங்கள் கூறும் முத்தியானது சரீரிகள் இருக்கும் இடமாதலானும், இடையிலே உண்டாக்கப்பட்டதாதலானுஞ், "சமமாகிய நீளமும் அகலமும் உடைய சதுட்கோணமாய்ச், சூரிய காந்தமணியாற் செய்யப்பட்ட மதிலையுடையதாய்ச், சுத்தப் பொன்னாற் செய்யப்பட்ட பட்டணமாய், மதில்களின் பித்திமூலங்கள் பன்னிரண்டும் சூரியகாந்தம், நீலம், தாமிரமணி, மரகதம், வைடூரியம், சோணரத்தினம், சந்திரகாந்தம், கோமேதகம், பதுமராகம், இலசுநீயம், பேரோசம், மடீஷ்மணி என்னும் பன்னிரண்டு இரத்தினங்களாலுஞ் செய்யப்பெற்றதாய்ப், பன்னிரண்டு முத்துக்களாற் செய்யப்பட்ட பன்னிரண்டு வாயில்களை உடையதாய்ச், சுத்தப் பொன்னாற் புனையப்பட்ட பளிங்கு நிறமான வீதிகளை உடையதாய்ப், பராபரனும் ஆட்டுக்குட்டியாகிய யேசுவும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிற பளிங்குபோலத் தெளிந்த நீருள்ள யாறும், பன்னிரண்டு விதமான கனிகளைச் சுமந்து மாதந்தோறும் ஒவ்வொரு கனியைக் கொடுக்கிற அமிர்த விருக்ஷமும் உடையதாய்த் தேவனுடைய நாமசின்னத்தை நெற்றியிலே அணிந்து அவரை வழிபடுகின்ற சேவகர்கள் இருக்கப் பெற்றதாய்த், தருமபுரம் என்னும் பெயருடையதாய் இருப்பதே முத்தி" என்று விவிலிய நூலிற் சொல்லப்பட்டபடியே அந்த முத்தி ஒரு கண்டித புவனமாய் இருத்தலானும், "வானலோகமும் அழிந்துபோம்" என்று கூறப்பட்டமையாலும் அந்த முத்தி எக்காலஞ் செல்லினும் அழியுமேயன்றி நித்தியமாகாது.

இப்படியிருக்க, அந்த முத்தியில் இருப்பவர்கள் நித்திய சுகம் பெறுவர் என்று நீங்கள் சொல்லுவது பொருந்துமா?

மேலும் அந்தக் கடவுள் ஆதாம் என்பவனைப் பரிசுத்தனாகப் படைக்க இடையிலே அவனை அசுத்தமான பாவம் பிடித்தமையினால், அந்த முத்தியிலே இருக்கிற சுத்தரையும் இடையிலே பாவம் பிடிக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

அந்த மோக்ஷவாசிகளில் அநேகரைப் பாவந் தொடர்ந்ததினாலே பிசாசுகளாய்விட்டார்கள் என்று நம் விவிலிய நூலுங் கூறுகின்றது.

அங்ஙனம் அவர்களைப் பாவம் பிடிக்கவே அவர்களுடைய சுக அனுபவம் எல்லாம் ஒழிந்து துக்கம் உண்டாகும்.

ஆதலால் அவர்கள் நித்தியகாலமும் பேரின்பத்தை அனுபவிப்பார்கள் என்றது எவ்வாற்றானும் பொருந்ாது.

இங்ஙனமே முத்தி விசார நிரூபணத்தினாற் கதிலக்ஷணக் குறைவுண்மை சாதிக்கப்பட்டது.

கதிப்பிரகரணம் முற்றிற்று.

## உபசங்காரம்.

**கிறிஸ்துமதஸ்தர்களே!**

மேலே பதிப்பிரகரணம் முதலிய நான்கு பிரகரணங்களிலும் விவிலியப் பிரமாணங்களோடு காட்டிய பிரபல நியாயங்களினலே, நீங்கள் வணங்குகின்ற யெகோவா, கிறிஸ்து, பவித்திராத்துமா என்னும் மூவரும் பதிலக்ஷணஞ் சிறிதும் இல்லாதவர் என்பதும், பசுக்கள் உற்பத்தியுடையரல்லர் என்பதும், அப்பசுக்கள் சென்மபாவம் உடையவர் என்றல் பொருந்தாதென்பதும், கிறிஸ்து பாவத்துக்குப் பலியாய் வந்தமையும், அவரை விசுவசித்தலே முத்திசாதனமாதலும், முத்திலக்ஷணமும், பாவிகள் நித்திய தண்டம் பெறுதலும், பிறவுஞ் சிறிதும் பொருந்தாதன என்பதும், விவிலிய நூல் அப்பிரமாணமே என்பதும் நன்ருகச் சாதிக்கப்பட்டன.

இனி நம்மவர்களுள்ளே சிலர் பல தூஷணங்களையும் போலி நியாயங்களையும் பொழிந்து, "கண்டனதண்டனம்" விடுவாராயின் யாம் யாது செய்வேம்! கீழே முகங்குப்புற வீழ்ந்தும் மீசையில் மண்படவில்லை யென்பார்க்கும் மனமொன்று வாக்கொன்ருகச் சம்பளத்துக்கு மாரடிப்பார்க்கும் யாது சொல்லியுமென்? அவைகளை ஒழித்து நியாயக்கிரமமாக அநுவதித்துக் கண்டிப்பாராயின் அவர் கொள்கை அங்கீகரித்துக் கொள்ளத்தக்கதே.

---

## சூசனம்.

சைவசமயிகளே!

இப்புத்தகத்தைச் சித்தசமாதானத்தோடு முதல் தொடங்கி முடிவுவரையும் முழுதும்வாசித்து உணர்ந்துகொள்ளக் கடவீர்கள். இதிலே காட்டப்பட்ட நியாயங்களினாலே, கிறிஸ்தவர்கள் கொள்ளுகிற விவிலியமார்க்கங் கண்டிக்கப் பட்டதோ அன்றோ என்று சிந்திக்கக் கடவீர்கள்.

அவர்கள், நும்மைத் தம்மதத்திற் புகுவிக்க முயன்று வருங்காலங்களிலே அவர்களைப் பிரபல நியாயங்களினாலே கண்டித்துவிடக்கடவீர்கள்.

அவர்களுடைய துர்ப்போதனையில் அகப்படாது முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானையே வணங்கி நற்கதி பெற்றுய்ய முயலக்கடவீர்கள்!

திருச்சிற்றம்பலம்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# சிவதூஷண கண்டனம்.

## திருவாசகம்.

வெருவரேன் வேட்கைவந்தால் வினைக்கடல் கொளினுமஞ்சே
ணிருவரான் மாறுகாணா வெம்பிரான் றம்பிரானார்
திருவுரு வன்றிமற்றோர் தேவரெத் தேவரென்ன
வருவரா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே.

வேதத்திலே கூறப்பட்ட சமயாசாரமுஞ் சமயஞானமும் வைதிகம் எனப்படும். வேதத்திற் கூறப்பட்ட முடிந்த பக்ஷமாகிய வைதிக சாரமானது, அபத்தக் கலப்பின்றி யிருத்தலாலே சுத்த வைதிகம் என்றும், சிவனொருவரையே பரமபதியாகக் கொள்ளுதலாலே சைவம் என்றும், சாம்பவம் என்றும் பெயர்பெறும்.

உலகத்தார்க்குப் பொது நூலாகிய வேதங்களிலே அதிசூக்குமமாக உணர்த்தப்பட்ட சுத்த வைதிகமென்கின்ற சைவமானது, பக்குவர்க்கேயுரிய விசேட நூலாகிய சைவாகமங்களிலே, மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது; ஆதலால், வேதங்களினுஞ் சைவாகமங்களே மிக விசேடமாகிய உயர்ந்த நூல்களாம். சைவதீக்ஷையாலன்றிப் பரமுத்திபெறுதலே யில்லை; இக்கருத்தை வேதங்களும் பலவிடங்களில் எடுத்துக் கூறுகின்றன அவற்றுள் ஒரு சுருதிவாக்கியங் காட்டுதும்:—

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸
𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌯𑌤𑌯𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌃. 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑌰𑌾𑌨𑍍𑌤
𑌕𑌾𑌲𑍇 𑌪𑌰𑌾𑌮𑍃𑌤𑌾𑌤𑍍 𑌪𑌰𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 ॥

இதற்குத் திரிலோசன சிவாரியர் செய்த உரை:— வேதமெனப் பெயர்பெற்ற பிரணவத்தினிறுதிக் கலையாகிய நாதரூபமாயிருக்கின்ற சைவாகமஞானத்தாலே துணியப் பட்ட பதார்த்த நிச்சயத்தையுடையவர்களும், இந்திரியங்களை வென்றவர்களும், தீக்ஷையினாலே சத்தாத்துமாக்களானவர் களும் ஆகிய அவர்களெல்லாரும், பிரமரந்திரமெனப் பெயரிய சதாசிவபுவனத்திலேயே இருந்து, பரையென்னும் பெயரிய உன்மனீ ஒடுங்குங்காலத்திலே அகார முதலிய பஞ்சகலைகளை அதிட்டிக்கின்றவர்களாகிய பஞ்சகர்த்தாக்களைத் தத்தங் காரணத்திலே செவ்வே விடுதலாகிய சந்நியாசம் பொருந்துத லாற் சித்தித்த பரசிவ ஞானத்தினாலே தமதாத்துமாவைச் சிவபிரானோடு சமப்படுத்திச் சம்ஸாரத்திலிருந்து நீக்கப் பட்டுச் சிவத்துவம் பெறுவர் என்பதாம்.

இதற்கு உபவிருங்கணம்

யாஞ்ஞவற்கிய ஸ்மிருதியில்:—

[illegible]

அருணாசல மான்மியத்தில்:—

[illegible]

வாயவிய சங்கிதையில்:—

[illegible]

சூதசங்கிதையில்:

[illegible]

முற்காலத்திலுள்ள சில சில ஆசிரியர்கள், யாது காரணத்தாலோ மயங்கி, வேதத்திலே பூருவபக்ஷமாகக் கூறப்பட்டுப் பின்பு கண்டிக்கப்பட்ட சில பக்ஷங்களையே சித்தாந்த பக்ஷங்களெனக் கொண்டு; சித்தாந்த பக்ஷ வாக்கியங்களுக்கு மகாசனங்கள் கூறிய உரிய பொருளைவிட்டுத் தாங்கொண்ட விபரீத பக்ஷங்களுக்கிணங்கப் பொருள் கற்பித்துக்கொண்டு, அங்ஙனந் தாங் கற்பித்த சமயங்களைத் தனித்தனியே வைதிக சமயங்களென முடித்து, அவ்வச் சமயங்களை விரித்துக் காட்டுகிற ஒவ்வொரு நூல்களைச் செய்து, வேறு வேறு விசேடப் பெயரிட்டுப் பிரசித்தஞ் செய்தார்கள். அவர்கள் கற்பித்த வைதிகங்கள், அபத்தங்களாதலினாலே, அசுத்த வைதிகங்களெனப்படும்.

அவ்வாசிரியர்கள் அசகசாந்தர நியாயமாக வேதத்திலிருந்தெடுத்துக் கற்பித்த சமயங்களைப் பின்பு சில அவிவேகிகள் அச பரம்பரை நியாயமாக அங்கிகரித்துக்கொண்டு வருகின்றார்கள். அக்காலத்திற்றொடங்கியே காலந்தோறும் இருந்த ஸ்ரீ நீலகண்டாசாரியர், வித்தியாகண்டாசாரியர், நாராயணகண்டாசாரியர், மெய்கண்டதேவர், அருணந்தி தேவர், உமாபதி சிவாசாரியர் முதலிய பெரியோர்கள், அவ்வசுத்த வைதிக சமயங்களை அநேகவிதமாகக் கண்டிக்கிற நியாயங்களைப் பலபல நூல்களாகச் செய்து, பிரசித்தப் படுத்தியிருக்கிறார்கள்.

அவ்வசுத்த வைதிகங்கள் மீமாஞ்சம், மாயாவாதம், பாஞ்சராத்திரம் முதலிய பல பல பேதங்களாகி இருக்கின்றன. அவற்றை, இக்காலத்திலும் அசபரம்பரை நியாயம் பற்றியும் பிறகாரணம் பற்றியும் அனுட்டித்துக்கொள்ளுகிற அசுத்த வைதிகர்கள், கடவுளில்லையென்றலானும், கடவுளொருவரே தம்முடைய மாயையினாலே சீவர்களுஞ் சடப்

பொருள்களுமாகி இன்ப துன்பங்களை அடைந்து தம்முடைய வித்தையினலே முத்தராவர் என்றலானும், விட்டுணு முதலிய பசுக்களைப் பதிகளெனக் கொள்ளுதலானும், பிற வாற்றாலும், சுத்தவைதிகமாகிய சைவசமயத்துக்கு விரோதிகளாகிச் சிவதூஷணஞ் செய்வாராயினர்.

இவ்வசுத்த வைதிர்களும் பிறருஞ் செய்யுஞ் சிவதூஷணங்களைக் கண்டித்தற்பொருட்டுச் சைவபுராணங்களுளொன்ருகிய காந்தபுராணத்திற் கூறப்பட்ட அசுத்த வைதிக கண்டனத்தைப்பற்றிய ஓர் சரித்திரத்தை எடுத்துக் கூறுவாம்:—

## சரித்திரம்.

தேவதாருவனத்திலிருந்த ஞானவான்களுஞ் சிவபத்தருஞ் சுத்த வைதிர்களுமாகிய முனிவரர் பலர் ஒரு காலத்திலே சுத்த வைதிக சமயத்தைவிட்டு மீமாஞ்சம் என்னும் பெயரிய அசுத்த வைதிக சமயத்தைப்பற்றி வழுவுடையாராயொழுகினர்.

மீமாஞ்சமாவது: "உலகமெல்லாம் அநாதி நித்தியம்; கர்த்தா ஒருவரில்லை; சிவன் முதலிய எல்லாரும் அநித்தர்; வேதம் அநாதி நித்தியம்; வேதத்திற் கூறப்பட்ட சிவன் முதலிய சத்தங்களே பிரமம்; அச் சத்தங்கள் தம்மின் வேருகிய தேவர்களை அறிவிப்பன வல்ல; வேதம் விதித்த கருமங்களே இம்மை மறுமைப் பயன்களைத் தருவன; இங்ஙனங் கூறிய ஞானமும் ஆசைவிட்டுச் செய்யுங் கருமமும் ஆகிய இரண்டுங் கால்களாக முத்தியடையலாம், என்றிவ்வாறு கொள்ளுஞ் சமயமேயாம். இக்கருத்தை அடக்கிய

மீமாஞ்சை யென்னும் நூல், சைமினியால் வேதத்தின் வழி நூலென்றே காட்டிச் செய்யப்பட்டது.

அம்முனிவர்கள், இம்மீமாஞ்ச மதமே மெய்யெனக் கொண்டு, சிவன்மேலன்பு வைத்தலை விட்டு வேதகருமங்களை யநுட்டித்துத் தம் மனைவியருக்கு மிவ்வாறே போதித்துக் கற்புக் காக்கும்படி செய்து, தாம் சுவதந்திரரெனத் துணிந்து ஒழுகுவாராயினர்.

இதனையறிந்த பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் கூடி, இம்முனிவர்கள் சிவனைப் பற்றாது விட்டுச் செய்யுங் கருமங்களும், இவர் பன்னியருடைய கற்புஞ் சுவரூபத்தாலே தருமங்கள் போலத் தோன்றிச் சிவனதாணை வலியால் இம்மைப் பயன்களுட் சிலவற்றைத் தரினும், பரபோகத்தையும் முத்தியையுந் தாராது பிறவித் துன்பமே தருதலிற் பாவங்களேயாமெனத் துணிந்து, இப்பெரும் பாவங்களைக் கல்வியங் கடற்கரைகண்டு உலகத்தார்க்குப் பூருவப்பிரயோகமாக அனுட்டித்துக் காட்டுவாராகிய இம்முனிவர்களே செய்வாராயின் மற்றுள்ளா ரெல்லாரும் இவரை அனுசரித்து அசுத்த வைதிகராகிக் கெடுவரென நினைந்து, பாதக மனத்தராகிய இவர்க்குச் சிவபத்தி உண்டாகாதென்றும், சாப சமர்த்தராகிய இவரைத் தாமிரட்சித்தல் முடியாதென்றும் முடித்து, ஸ்ரீகண்ட பரமேசுவரனிடத்திற் சென்று விண்ணப்பஞ் செய்தனர். அதுகேட்ட சிவபெருமான், இவர்களை அனுப்பின பின்பு, காலாந்தரத்திலே அம்முனிவர்களைச் சுத்தராக்கி அருளத் திருவுளங்கொண்டு, ஆன்மாக்கள் சுவதந்திரரல்லர் என்பதையும், கடவுளுடைய கிருபா சாமர்த்தியத்தாலன்றிப் புண்ணியஞ் செய்தல் முடியாதென்பதையும், "பரனடிக்கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்"

என்பதையும், அவர்களுக்கும் பிறர்க்கும் உணர்த்தி அருள் செய்யும் பொருட்டு, முன்னர்க் காமத்தையும் பின்னர்க் கோபத்தையும் பயப்பதுபோலத் தோன்றி இறுதியில் ஞானத்தைப் பயப்பதாகிய ரூபத்தைக் காட்டுதன் மாத்திரத் தினாலே, அவர்களுடைய சித்த விருத்திகளை அப்பாவச் செயலிற் பற்றுது விலகும்படி வேறுபடுத்தி, அங்ஙனம் வேறுபட்டுக் காமிகளாகிய பின்பு, கோபிகளாகித், தங்கள் வலியையும், தங்கள் கருமத்தின் வலியையும் நினைந்து, கடவுளாகிய தம்மைக் கொல்ல முயன்றுழி, அவர்களுடைய வலிகள் தமக்கு முன் பலியாமையை உணர்த்தித் தம் வலிமையைக் காட்டி, அதுகண்ட அவர்கள் இவ்வாறு தண்டம் பெற்றுத் தாங்கள் கொண்ட கருத்தை விட்டுத் தம் வசப் பட்டு வழிபட்டுழி, அவர்களுக்கு ஞானங் கொடுத்துச் சுத்த வைதிக சைவத்திலே நிறுத்தியருளுதலே தகுதியெனத் திருவுள்ளங்கொண்டார்.

அப்பொழுது அக்கடவுள், அதிபாதகராகிய முனிவரை மயக்கும் பொருட்டுத் தம்முருவங் காட்டலாகாமையின், அவரை மயக்கும்பொருட்டு விட்டுணுவை அழைத்து மோகினி வடிவங்கொள்ள விதித்துவிட்டுத், தங் கணவர் வழியே சேறலன்றித் தம் முயற்சியிலராதலால் அற்ப பாதகிகளாகிய முனி பத்தினிகளை மனம் வேறுபடுத்தி யருளும்பொருட்டுத் தாமே ஒரு திகம்பர பிக்ஷாடன ரூபங் கொண்டு, வேதரூபமாகிய கௌபீனமும் பூணூலுமுடைய ராகி, அடியாருடைய பாசப்பகையை அழிக்கும்பொருட்டு இச்சாஞானக் கிரியாரூபமாகிய சூலப்படையையும், அடியாருடைய பத்திபிக்ஷையை ஏற்கும்பொருட்டுப் பராசத்தி ரூபமாகிய கபாலத்தையும், அடியார்க்கு ஞானங்கொடுத்தற் பொருட்டு நாதரூபமாகிய டமருகத்தையும், பாசங்களை

இபக்கிப் பரிபாகப்படுத்தும் பொருட்டுத் திரோதான சத்தி ரூபமாகிய பாதுகைகளையுந் தரித்துக்கொண்டு, சிவஞானரூப மாகிய விபூதியின் பையைத் தோளுச்சியிலே வைத்துக் கொண்டு அம்மோகினியோடு சென்றார்.

மோகினி, இவ்வடிவங் கண்டபொழுது, "சுவாமீ! தேவரீர் ஒன்றிலும் பற்றில்லாதவராயிருந்தாலும், அடியேன்கொண்ட மயக்கந் தீர்த்தற் பொருட்டு, அடியேன் கொண்ட பெண் வடிவத்தோடு தேவரீர் கொண்ட இத்திவ் விய வடிவங் கூடச் செய்து அடியேற்குப் பாசப்பகை குன்றி ஆனந்தமுதிக்குமாறு செய்தருளுக" என்று பிரார்த் திக்க, அதுகேட்ட சுவாமி: "இந்தச் சோதி வடிவம் அவ் வாறு பரிசிக்கத் தக்கதன்று; வேறோர் காலத்திலே இது போலச் சிறந்த ஓர் வடிவங் கற்பித்து, உன் பெண் வடிவத் திற் கூட்டி, உன்பால் மகாசாத்தனைப் பிறப்பிப்பாம்" என்று கூறி "இப்போது நீ எம்மைவிட்டுப் பிரிந்து, தாருகாரணி யத்திலுள்ள இருடிகளை மனம் வேறுபடுத்திவிட்டு, விரைவில் என்பால் வருதி" என்று விதித்தருளி அனுப்பினார். அது கேட்ட மோகினி, தபோவனத்திற்குச் சென்று தனது அதி ரூப லாவண்ணியத்தைக் காட்ட, அதுகண்ட முனிவர்கள், தம் மனக்கருத்துடைந்து, நியமமிழந்து, கருமானுட்டான மெல்லாம் விட்டு, அதிகாமிகளாகி மோகினியைப் பின்றொ டர்ந்து வந்தார்கள்.

பிக்ஷாடன மூர்த்தியானவர்; முனிபத்தினிகளுடைய வீதிகளிலே சென்று, காட்சியாலுங் கேள்வியாலும் அவர் சுத்தராகும் பொருட்டுத் தமது திவ்விய ரூபங்காட்டி; வேதாக்மங்களை வீணையிசையோடு படித்திப் பாடி உலாவி னார்; அப்போது இருடி பத்தினிகள், அவருக்கு அன்ன

பிக்ஷையிட வந்து, அவருடைய பேரழகைக் கண்டு, காம வசத்தராகி, மனமுருகி, உரோமஞ் சிலிர்த்து, அவர்மேற் பெரும் பற்றுவைத்து, இன்மொழி கூறி, ஆனந்தமேலிட்டு, அவருடைய தரிசனமாத்திரத்தாற் கருப்பிணிகளாயினர். முன்னே புருட சம்யோகத்தாலன்றிச் சிவதரிசன மாத்திரத்தாலுண்டாகிய கருப்பத்திலே பிறத்தல் வேண்டுமென்னும் அவாக்கொண்டு சிவனை நோக்கித் தவஞ் செய்துகொண்டிருந்த நாற்பத்தெண்ணாயிரவரும் அக்கருப்பங்களிற் புகுந்து பிறந்து, சிவனை வணங்கி, அனுமதி பெற்றுத், தவஞ் செய்யப் போயினர். அப்போது இருடி பத்தினிகளாற் சூழப்பட்டுச் சிவன் செல்ல முனிவராற் சூழப்பட்ட மோகினி சிவசந்நிதானத்தில் வந்தார். முனிவர் தம் மனைவியரது செய்கையைக் கண்டுழிக், காமமொடுங்க மானமேலிட்டுக் கோபமதிகரிக்க, "இது செய்தார் யார்" என்று சிந்தித்துச், சிவனேவலால் வந்த விட்டுணுவுஞ் சிவனுமே இங்ஙனஞ் செய்தாரென்றுணர்ந்து, தம் மனைவியரை வீடுகட்குப் போகும்படி வலிந்தனுப்பினர். அப்பெண்கள் சிவஞான சுத்தராகிச் சிவனருளோடு போனபின், விட்டுணுவுந் தம் வடிவங்கொண்டு வணங்கி நிற்கப், பிரமாதி தேவர்களும், அங்கு வந்து வணங்கி நின்றனர்.

அவ்விருடிகள் அத்தியந்தகோபங்கொண்டு, "இச்சிவனை எங்கள் கிரியாசாமர்த்தியத்தாற் கொல்வாம்." எனத் துணிந்து, அபிசார வேள்வியொன்று செய்தார்கள்.

அவ்வேள்வித் தீயினின்றெழுந்த புலி, பருட்டடை பான், பாம்புகள், பூதங்கள், சிரோமுண்டம், முயலகன் என்பவற்றைச் செலுத்தினர். சிவன் புலியின்றோலை யுரித்துடுத்து, மழுவைப் படையாகத் தரித்து, மானை வந்திப் பாம்புகளை

அணிந்து, பூதங்களைத் தஞ்சேனையாக்கிச் சிரோமுண்டத்தைத் தலையிற்றரித்து, அவர்களுடைய ஆணவமலரூபத்தைப்போல வந்த முயலகனைக் காலான் மிதித்து நின்றார். பின்பு முனிவர்கள் அக்கினியை யனுப்ப, அதனை யேந்தி, அதன்மேலனுப்பிய மந்திரங்களை உடுக்காக்கித் தரித்து நின்றார். அப்பால் அவர்கள் கூறிய கொடிய சாபங்களெல்லாம் பலியாதொழிந்தன. இப்படியே முனிவர்களுடைய கிரியா சாமர்த்தியங்களெல்லாஞ் சிவசந்நிதானத்திலே, சுவாலிக்கிற அக்கினிமுகத்திற்பட்ட பஞ்சுப் பாரம்போலாயின. அதுகண்ட முனிவரெல்லாரும், தாமிதுகாறுங் கொண்டிருந்த மீமாஞ்சமதம் அனுபவத்தாலே பொய்ப்பட்டமையைச் சிந்தித்துத் தங்கள் மந்திரக் கிரியைகளெல்லாம் விபரீத பாவனையால் வியர்த்தமாயின என்று அவற்றை விட்டு, வெட்கித் தலைவணங்கி மெலிந்து சோர்ந்தார்கள். அவர்களுடைய சித்தவிருத்தி பரிபாகத் தோற்றத்தை யறிந்த பகவானனவர், அவர்களுடைய ஆணவமல ரூபமாகிய முயலகன்மேலே நின்று, பஞ்சகிருத்திய ரூபமாகிய நடனஞ் செய்து காட்டினார். நடனங்கண்ட முனிவர்கள் மிகப் பயந்து நடுங்கித் தரையிலே முகங்கீழ்பட விழுந்து, மீண்டு சிவனருளாலே எழுந்து, சிவஞானம் பெற்று, உச்சிகட் கூப்பிய கையினராகி, "எம்பெருமானே! எம்பிழைகளெல்லாம் பொறுத்து எங்களைக் காத்தருளுக" என்று கூறித், துதித்து வணங்கிப் பரிதாபத்தோடு நின்றனர். சிவன் அவர்களை நோக்கி "நீங்கள் இதுகாறுங் கடவுளாகிய எம்மை யுணராது மயங்கி, வைதிகமல்லா தவழியெனக் கொண்டு, அந்த அசுத்த வைதிகமாகிய துர்மார்க்கத்தைப்பற்றி அதிமோகராயினீர்: ஆதலின், நீர்செய்த தவமும் உம்பத்தினிகள்கொண்ட கற்பும் பயனிலவாதலை யுணர்த்தி உமது மோகத்தை ஒழித்தாம்;

இனி நீர் எமது கட்டளைப்படி சுத்தவைதிக சைவமார்க்கத்திலே நின்று, விபூதி ருத்திராட்ச தாரிகளாகிச், சிவலிங்கப் பிரதிட்டை செய்து விடாது பூசித்துப் போக மோட்சங்களை அடையுங்கள்" என்று விதித்தருளித், தேவர்களை யனுப்பி விட்டு ஸ்ரீ கைலாசமலையிற் சென்று வீற்றிருந்தார்.

---

## பரபக்ஷம்.

ஈண்டுப் பாதிரிகள், சிவன் மோகினியை யவாவினர் என்றும் இருடி பத்தினிகளைக் காமித்தாரென்றும், அவர்களுக்குப் பாவ காரணமாகிய உருவத்தைக் காட்டினுர் என்றும் சீவத்துரோக ரென்றும், தங்கள் பிராந்தியினுலே தூஷணங்களைக் கற்பித்துப் பேசுகின்றுர்கள்.

## கண்டனம்.

மோகினி தம்மேல் அவாக்கொண்டபோது, சிவன் கூறிய உத்தரத்தாற் சிவன் மோகினியைத் தம்பொருட்டு அவாவுதல் செய்திலர் என்பது விளங்கும்.

இருடிப்பத்தினிகள் தம்மைக் காமித்தபோது, அவர் சிற்றின்பக் காமிகளாகாது பேரின்பக் காமிகளாகச் செய்து சுத்தராக்கினுரன்றித் தாம் அவரைக் காமித்தலுங் கூடலுஞ் செய்யாமையால், அவர் அப்பெண்கள்மேற் காமியல்லரென்பது விளங்கும்.

அவர் தாங் காட்டிய உருவத்தாற் பாவந் தீர்த்தாரன்றிப் பாவமுண்டாக்கினு ரல்லராதலிற் பாவகாரண ரூபங் காட்டினரல்லர், பாவநாசக ரூபமே காட்டினரென்பது விளங்கும்.

இருடிகளைக் காமிகளாக்கினமை ஞானிகளாக்கும் பொருட்டன்றி நரகதுக்கத்தராக்கும் பொருட்டன்றாதலிற் சிவத்துரோகரல்லரென்பது விளங்கும்.

சருவஞ்ஞராகிய கடவுள் செய்யுஞ் செயல்களுட் சில சிற்றறிவராகிய நம்மனோருடைய யுத்திக்கு விரோதம் போலத் தோன்றினும், அச்செயல்களி னிறுதிப் பயன்கள் விரோதமாகத் தோன்றாது, நியாயமாயே யிருக்கும். அது அங்ஙனமாக;

யெகோவாத் தம்போகத்தை விரும்பிப் படைத்தமையாற் காமி என்றும், நச்சுமரக்கனி காட்டலாற் பாவகாரணரூபங் காட்டுபவர் என்றும், தமது சித்தப்படி இஸ்ரவேலரை யனுப்பும்படி மனமிளகிப் பலதரமும் முயன்ற பார்வோனை அங்ஙனஞ் செய்யாமல் மனங் கடினமாகும்படி தாமேசெய்து அக்குற்றத்தை அவன்மேலேற்றி அவனை அநியாயமாகக் கொன்றதினாலே சிவத்துரோகி என்றும் பாதிரிகள் விவேகித்தறியாமை என்னே!

சிவன் பரபுருடரை விரும்பவேண்டா, பரஸ்திரீகளை விரும்பவேண்டா என்றும், யெகோவா, விலக்கிய கனியைப் புசிக்க வேண்டா என்றும், விதிகளைக் கொடுத்து, அவ்விதிகட்கு விலக்காகிய ரூபங்களையுங் காட்டலினாலே, சிவனும் யெகோவாவும் தம்முளொப்பரென்று பாதிரிகள் சமவாதம் பேசுவாராயின் அது பொருந்தாது:—

சிவன் முன்னரே குற்றப்பட்டவர்களுக்கு அவ்வுருவத்தைக் காட்டிப் பின்னர் அவரைக் குணப்படுத்தினார்.

யெகோவா முன்னரே குணப்பட்டிருந்தவர்களுக்கு அவ்வுருவத்தைக் காட்டி அதனாற் குற்றப்படுத்தினார்;

ஆதலின், இருவரும் இடைச் செயல்களால் ஒருவாறு ஒத்தி ருந்தாலும், முன்கொண்ட நிமித்தத்தானும் இறுதிப் பிர யோசனத்தானும் இருவரும் மிக வேறுபடுதலிற் சிறிது மொவ்வாரென்க.

---

## பரபக்ஷம்.

ஈண்டுச் சிலர், சிவனுடைய இலிங்கம் இருடிகள் சாபத்தால் அழுகி விழுந்தது என்றும், அதுவே சிவலிங்கமாகப் பூசிக்கப்படும் என்றுங் கூறுவர்.

## கண்டனம்

சிருட்டியாரம்பகாலத்திலே நியமிக்கப்பட்ட சிவலிங்கத் தைப் பிற்காலத்திலே நியமிக்கப்பட்டதென்றலும், அதனை இலிங்கவடிவென அபத்தமாகக் கூறலும் அதி தூஷண பாவமேயாம்.

சிவலிங்கரூபம் ஆமாறு:—

லஶ என்னுந் தாது சித்திரித்தல் என்னும் பொருளு டையராதலின், உலகத்தைச் சிருட்டி முதலிய பஞ்ச கிருத் தியங்களாற் சித்திரிக்குஞ் சிவப்பிரபாவமே சிவலிங்கம் எனப்படும், அப்பிரபாவம் வெளிப்படுமிடங்களாகிய சிலை முதலியவையும் உபசாரத்தால் இலிங்கம் எனப்படும்.

## உபசங்காரம்.

மேற்கூறிய சரித்திரத்தினாலே அசுத்தவைதிக மார்க் கம் பாவமார்க்கம், அது வைதிகமன்று, அது சிவனுக்கு அப்பிரியம்; அதினின்றோர் பாவிகள், அவர்களைக் குருக் களாகக் கொள்ளுவோரும் பாவிகள் என்பது விளங்கும்.

### சூசனம்.

ஆதலால், அருமையாகிய மானுடயோனிப் பிறவியையும், சாத்திரதேசப் பிறவியையும், வேதாகம வழக்கத் தேசப் பிறவியையும், நாற்குலத்துட்பட்ட பிறவியையும் பெற்றும், வேதாகமங்களை யுணர்ந்து மெய்வழியினின்று கடவுளை வணங்காது, பொய் வழியினின்று தம்மையுந் தம்மை மெய்யரெனக் கொண்ட ஏழைகளையும் நரகிடைப் புகுத்த முயலாநின்ற போலிப் பிராமணரும், குணத்தைக் குற்றமென மாற்றிக் கூறி அங்ஙனம் முயலாநின்ற கிறிஸ்தவர்களும் பிறரும் இனித் தீநெறிவிட்டு நன்னெறி பற்றக் கடவர்.

திருச்சிற்றம்பலம்.

**சிவதூஷண கண்டனம் முற்றிற்று.**

---

## ஸ்ரீ ஹரதத்த சிவாசாரியர் அருளிய சுலோகப்படி ஸ்ரீ சிவஞானமுனிவர் மொழிபெயர்த்த

## நேரிசையாசிரியப்பா.

*உயர் காயத்திரிக் குரியபொரு ளாதலின்*
*தசரதன் மதலை தாபித் தெடுத்தலின்*
*கண்ணன் கைலையி னண்ணி நின்றிரப்பப்*
*புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலின்*
*தனது விழியுட னொராயிரங் கமலப்*
*புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலின்*
*ஆங்கவற் கிரங்கி யாழியீந் தருடலின்*
*ஐங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலின்*
*அமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலின்*
*தென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலின்*
*அவுணர் முப்புர மழியவில் வாங்கலின்*

தக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலின்
தனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மானுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்
ஆழ்கடல் வரைப்பி னுன்றோ ரநேகர்
அன்பு மீதூர வருச்சனை யாற்றலின்
நான்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலின்
ஐயிரு பிறப்பினு மரியருச் சித்தலின்
இருவரு மன்னமு மேனமு மாகி
அடிமுடி தேட வழற்பிறம் பாகலின்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையின்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேண்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின்
அயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலின்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள்
உம்பர்க ளெவர்க்கு முயர்ந்தோன்
என்பது தெளிகவியல் புணர்ந்தோரே.

திருச்சிற்றம்பலம்.

---

## பதிலக்ஷணம்.

பதிலக்ஷணமானது உண்மை, சுவரூபம், கருவி, பிரயோசனம், கிருத்தியம், ஞானம் என்னும் ஆறுவகைகளால் விளக்கப்படும்.

இலக்ஷணப் பிரமாணங்களால் வஸ்து சித்தியாம் என நியாயநூல் கூறும்.

பிரமாணங்கள் ஒருபிரகாரமாக இலக்கணமுடைய வஸ்து மாத்திரத்தை அறிவிக்கும். அப்பிரமாணங்களிலே விரிந்த இலக்கணங்கள் தமக்கிடமாகித் தம்மாற் குறிக்கப்படும் வஸ்துவைத் தம்மாற் குறிக்கப்படாத பிறவஸ்துக்களிலிருந்து வேறுபட்டதாகச் செய்து தம்மை உடையதாக்கி மீட்டும் அந்தப் பிரமாணங்களின் விசேடவிடயமாகும்படி செய்யும்.

பிரமாணமென்பது மெய்யறிவுக்கருவி. இலக்கணமென்பது சிறப்பியல்பு. பிரமாணங்கள் பிரத்தியக்ஷமும் அனுமானமுஞ் சத்தமும் என மூன்றும். பிரத்தியக்ஷமாவது இந்திரியமாம். அனுமானமாவது குறியாராய்ச்சியாம். குறியாவது மறைந்தபொருளை வியாத்திவலியால் உணர்த்துந் தூமமுதலிய பொருளாம். ஆராய்ச்சியாவது அக்குறி வியாத்திவிடயமாகி மலைமுதலிய பக்கத்தின் இருத்தலை நிச்சயித்தறிதலாம். சத்தமாவது ஆபத்தவாக்கியமாம்.

பதி அரூபவஸ்துவாதலாலே பிரத்தியக்ஷப்பிரமாணத்துக்கு விடயமாதல்கூடாது; அனுமானத்தாலுஞ் சத்தத்தாலும் அறியப்படுதல் கூடும்.

பதியுண்மை சாதிக்கும் அனுமானங்கள் கூறப்படுகின்றன:—

1. வழக்கிற்கிடமாகிய உலகம் ஒரு சர்வஞ்ஞ கர்த்தாவை உடையது; காரியமாதலால், யாது யாது காரியம் அது அது தன் விடயத்திலே முற்றறிவனுகிய கருத்தாவை உடையது: எங்ஙனம் கடம்; இவ்வுலகுங் காரியம்; ஆதலின் இவ்வுலகும் முற்றறிவனுகிய ஒரு கருத்தாவை உடையது என்பதாம்.

உலகங் காரியமென்பது எந்த ஏதுவினுலே துணியப்பட்டதெனின், உருவமுடைமையானும், பிரிக்கப்படுத

லானும், பிறர்பொருளினுட்பட்டிருத்தலானும், அவயவச் சேர்வுடைமையானும், காணப்பட்ட பிருதிவி முதலியவற்றின் நிலையானது குடமுதலியவற்றின் நிலைபோல முதலிற் சிருட்டியையும் இறுதியிற் சங்காரத்தையும் உடையதாயிருத்தலினாலும், அசேதனமாகி அநேகமாயிருத்தலினாலும், இவ்வுலகம் முன்னிலதாகிப் பின்னுளதாதலாகிய காரியத்தன்மை உடையதென்பது துணியப்படும்.

அங்ஙனமாயின், கடம் முதலியனவும் உலகமென்பதில் அடங்குமாதலின் இவ்வனுமானத்துக்குத் திருஷ்டாந்தம் இல்லாதொழியுமே! எனின், அங்ஙனமாகாது; வழக்கிற்கிடமாகிய உலகம் என்று விசேடித்தலாலே வழக்கிற்கிடமாகாத குடம் முதலியன அதிலடங்காது வேறுபடுதலின் திருஷ்டாந்தமாதல் கூடுமென்க.

அங்ஙனமாயின், குடம் முதலியவற்றிற்குக் குயவன் முதலியவர்கள் கர்த்தாக்களா யிருத்தலினாலே, அவற்றிற்குக் கடவுள் கர்த்தா அல்லராதலிற், கடவுள் சர்வகர்த்தா அல்லரென்று கருதப்படுவரன்றோ எனின்; அங்ஙனமாகாது; குட முதலியவற்றிற்கு இயற்றுதற் கருத்தாக்களாகிய குயவன் முதலியோரையும் ஏவுதற் கருத்தாவாகி நின்று இயக்குகிறவர் கடவுள் ஒருவரேயாதலின் அவரே சர்வகர்த்தா எனத் துணியப்படுவர் என்க.

அற்றேல், காரியமாகிய குடத்தைச் செய்யுங் குயவனுக்குப் போலவே காரியமாகிய உலகத்தைச் செய்யுங் கடவுளுக்குஞ் சிற்றறிவு முதலிய குணங்கள் உளவென்று கொள்ளப்படாவோ எனின், அங்ஙனமாகாது; குயவனுந் தன் காரியமாகிய குடஞ் செய்தலிலே முற்றறிவு முதலிய குணங்கள் உடையனேயாயிருத்தலின், அதுபோலக் கடவுளுந் தன்

காரியமாகிய உலகஞ் செய்தலிலே முற்றறிவு முதலிய குணங்கள் உடையவரேயா யிருப்பர் என்பது சாதிக்கப்படும் என்க.

அற்றேல், குயவன் தன்காரியமல்லாத புடைவை முதலியவற்றைக் குறித்து முற்றறிவு முதலியன இல்லாதவனுதல் போலக், கடவுளுந் தங்காரியமல்லாதவற்றில் முற்றறிவு முதலியன இல்லாதவராகாரோ எனின், அங்ஙனமாகார்; கடவுளின் காரியமல்லாத பொருள் ஒன்றும் இல்லாமையினாலே கடவுளிடத்தில் முற்றறிவு முதலியன இல்லையென்று கொள்ளற்கு இடமே இல்லையென்க.

அன்றியும், கடவுளின் காரியமாகிய உலகம் எம்மனோர் காரியம் போலாகாது மிகுந்த விசேட முடையதாயிருத்தலினாலே அக்கடவுளின் விசேடங்களெல்லாம் அனுமிக்கப்படும்.

அற்றேல், தேர் முதலாகிய காரியம் பல கர்த்தாக்களை உடையதாயிருத்தலின் உலகமாகிய காரியமும் பல கருத்தாக்களை உடையதெனக் கொள்ளப்படுமன்றோ எனின், அங்ஙனமன்று; தேர் முதலியவற்றின் கர்த்தாக்கள் பலராயிருந்தாலும், அவரெல்லாந் தேர் முதலாகிய காரியங்களிலே சமர்த்தனாகிய ஒரு தச்சனுடைய இச்சையின்படியே செய்து காரியம் முடித்தலைக் கண்டாம். அதுபோலவே உலகமெல்லாம் ஒரே பரமகர்த்தாவை உடையதென்று நன்றாகத் துணியப்படும் என்பது.

அற்றேல், காட்டுப்புன் முதலாகிய காரியங் கர்த்தாவின்றித் தோன்றக் காண்கின்றோமே எனின், அங்ஙனமன்று; காட்டுப்புன் முதலியனவெல்லாம் வழக்கிற்கிடனாகிய உலகம் என்பதில் அடங்கிப் பட்சமாகிப் பரமகர்த்தாவினாற்றோன்றுவன எனத் துணியப்படும் என்க.

ஆதலால் உருவமிலரும் ஆதாரமிலரும் விகாரம் இலரும் ஆகிய சர்வஞ்ஞகர்த்தா ஒருவர் உளரேயாம்.

2. சூரியன் சந்திரன் மேகம் வாயு மலை கடல் யாறு முதலாகிய பலவிதமுடைய உலகமானது ஒரு சர்வஞ்ஞ கர்த்தாவினாலே பிரேரிக்கப்படுகின்றது; அசேதனமாகிப் பிரயோசனத் தொழிலைச் செய்வதாதலால்; யாதுயாது பிரயோசனத் தொழிலைச் செய்யும் அது அது ஓர் அறிவுடைய கர்த்தாவினாற் பிரேரிக்கப்படுகின்றது; எங்ஙனம்?—வெண்ணெயைப் பிறப்பித்தலிலே தயிரானது தேவதத்தனாலே கடைதற்றொழிலினாலே பிரேரிக்கப்படுகின்றது;—இதுவும் அங்ஙனம்; ஆதலின் இங்ஙனம்.

3. சிருட்டியாரம்ப காலத்திலே முதற்காரணத்திலிருந்து காரியப்பொருள்கள் உற்பத்தியாதல் ஒருவருடைய பிரயத்தனத்தால் உண்டாவது; கிரியையாதலின், மண்ணிற் குடம் உற்பத்தியாதல்போல.

4. பூமி முதலிய திண்மைப்பொருள்களுடைய ஸ்திதியானது விலகுதலைத் தடுக்கின்ற கர்த்தாவின் பிரயத்தனத்தாற் செய்யப்பட்டது கிரியையாதலின் யந்திரம் முதலியவற்றின் ஸ்திதிக் கிரியைப்போல.

5. உலகப்பொருள்களின் அழிவானது கர்த்தாவின் பிரயத்தினத்தாற் றோன்றுவது; அழிதற்கிரியையாதலின் கட முதலியவற்றின் அழிவுபோல.

6. குடம் புடவை முதலியவற்றின் வழக்கமானது ஒரு சுவதந்திர கர்த்தாவினாலே பிரயோகிக்கப்பட்டது; வழங்குதற் றொழிலாதலால்; எம்மனோராற் பிரயோகிக்கப் பட்ட எழுத்து முதலியவற்றின் வழக்கம்போல.

7. ஆதிநூலாற் பிறக்கும் மெய்யறிவு அதனைச் சொல்லியோனுடைய மெய்யறிவினாற் றோன்றுவது; சத்தத்

தாற் பிறக்குமறிவாதலின்; இதிகாச முதலியவற்றூற் பிறக்கும் மெய்யறிவுபோல.

8. ஆதிநூல் இயற்கையறிவனூற் செய்யப்பட்டது; வேறொன்றை ஆதரியாமற் செய்யப்பட்ட நூலாதலின்; யாது யாது இயற்கையறிவனூற் செய்யப்பட்டதன்று, அது அது வேறொன்றை ஆதரியாமற் செய்யப்பட்டதுமன்று; எங்ஙனம் வழிநூன் முதலியன.

9. ஆதிநூல் ஒரு புருடனூற் செய்யப்பட்டது; வாக்கியமாதலால், உலகநூல்போல.

10. துவியணுகத்தின் அளவைப் பிறப்பிக்குஞ் சங்கை ஒரு கருத்தாவின் அபேக்ஷாபுத்தியாற் றோன்றுவது; ஒருமையின் வேறாகிய சங்கைத் தன்மையாதலால்; புடைவையிலுள்ள நூல்களின் சங்கைபோல.

இந்த அனுமானங்களாற் பதியுண்மை துணியப்பட்டது.

## சத்தப்பிரமாணங்கள்.

வேத³:. த்³யாவாபூ⁴மீ ஜநயந் தே³வ ஏக ருத்³ரோ
விஶ்வஸ்ய கர்தா பு⁴வநஸ்ய கோ³ப்தா ॥

ஸம்ஹாரகாலே வாஸீத் ப்ரபு⁴: ஸர்வஜ்ஞ: ஸர்வகர்தா ச ஏக
ஏவாத்³விதீயம் ந ஸ நாநாஶக்திஸ்து ப⁴வே தாவாஜோ நிஹ
தா நிஜாய தே³வே நஜா தாஜீவம் ஶிவஶக்த்யா ஹ்யஸம்விஶ
ஞ்சிதஶ் விஜிஜ்ஞாஸ்தஶ்ஶ்ரேஷ்ட²॥

ஸூத: - ஸூதஸம்ஹிதா.

ஸர்வோபகாரஸ்யைக ஹேதுர்விஶ்வஸ்ய காரணம் கார்யஸஹிதம்
கர்தா ஸர்வஸ்ய ஜாநீதோ விஶிஷ்ட ஸந்தோ ந த:॥

வௌஷ்கரே.

விவாதாயுர்ஆவி தம்விஸ்வம்விஸ்வவிக்ருத்ர்ரூப வேபுகம்
காயக்ஸ்வாதாவயோ:ஷிஷம்காயம்கரம்ஹாதிகமயா॥

ஶிவஜ்ஞாநபோயே

ஸ்ரீவாணவாமஸகாதிக்வாஜ்ஞமத: காயக்ஷமந்நாக
ஸ்ஷிக்ருத்ராவஸஷ்யஜெக்வதக்வஸ்யஜத்ரூஷாகஷ்ப்ஹரூர:॥

## 2. பதிஸ்வரூபம்.

பதியானவர் முன்னிலதாகிப் பின்னுளதாதலாகிய காரியத்தன்மை இல்லாதவராதலாலே காலத்தினுல் வரையறுக்கப்படாராதலால் நித்தியராயிருப்பர். அவர் ஓரிடத்திலே மாத்திரம் இருத்தலின்றி மிகப்பெரியராகி இடத்தால் வரையறுக்கப்படாம லிருத்தலானும், அவருடைய காரியங்கள் எங்குங் காணப்படுதலானும் வியாபகராவர். அவர் கிரமமாகவும் ஒழுங்காகவுங் காரியங்களைப் பிறப்பிக்கும் வலிமை உடையவர்.

இக்கடவுளுக்கு உரிய முக்கிய குணங்களாவன:—முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வசம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என்னும் ஆறுமாம்.

எல்லாப்பொருளையும் புலப்படக்காணும் அறிவிருந்தாலன்றி எல்லாத்தொழிலையும் இயற்றுதல் கூடாமையின் முற்றறிவும், தமதனுபவத்தின்பொருட்டுப் பிறிதொன்றினை வேண்டிப் பரிபூரணத்தன்மை எடுபட்டுக் கடவுட்டன்மை கெட்டுப்போதலின் வரம்பிலின்பமும், முற்றறிவு அநாதியன்றி இடையிலே வந்ததெனில், காரணபூர்வமாய் வந்ததேல் வரம்பின்மைக் குற்றமுங் காரணமின்றி வந்ததேல்

நியமின்மைக்குற்றமும் அடுக்குமாதலின் இயற்கையுணர்வும், பிறர்வச முண்டேற் பாசத்தடையும் உளதாகி வேண்டிய செய்தாமையும் வேண்டாத செய்தலுமாகிய குற்றம்பற்ற லின் தன்வசமும், ஆற்றல் குன்றுமாயின் எக்காலத்தும் எத்தேசத்தும் இளைப்பின்றித் தொழிலியற்றல் கூடாமை யின் குறைவிலாற்றலும், அவ்வாற்றல் வரம்புபட்ட அள வுடையதாயின் வரம்புபடாத தொழிலியற்றல் கூடாமை யின் வரம்பிலாற்றலும் ஆகிய இவ்வாறு குணங்களும் பதிக்கு இன்றியமையாதனவாம்

## 3. பதிக்கருவி.

கருவியின்றித் தொழின்முடியாமை காணப்படுதலால் அக்கடவுளுக்குக் கருவி உண்டு. கடவுளின் கிருத்தியம் அநாதியாதலால் அக்கருவியும் அநாதியாதல்வேண்டும். அக் கருவியும் வேறன்று அவரது சத்தியேயாம். அதுவும் அவ ரோடு நித்திய சம்பந்தமுடையதாதலின் சித்துருபமேயாம். சத்திக் கருவியினாலேயே எல்லாத் தொழிலுஞ் செய்வர். அது ஒன்றேயாயினும் விடயபேதத்தினாலே அநந்தமாம்.

## 4. பதிப்பிரயோசனம்.

பதிகிருத்தியத்துக்கு முக்கியப் பிரயோசனமாவது அநாதி மலபெத்தராகிய ஆன்மாக்களுக்கு மலத்தடைதீர்ந்து முத்திசித்தித்தலேயாம். அவாந்தரப்பிரயோசனம் போகம்; அவை பராபர பேதத்தால் நான்காம்.

## 5. பதிகிருத்தியம்.

பதிசெய்யுங் கிருத்தியங்களாவன படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்துமேயாம்.

## 6. பதிஞானம்.

பதியினுடைய ஞானமாவது இயற்கையாயுள்ளது எம்மனோருடைய ஞானம்போல இந்திரிய உணர்வாயேனும் இலிங்க உணர்வாயேனுஞ் சத்த உணர்வாயேனும் உள்ளதன்று. அது இயற்கையாதலாலே தடையில்லாமல் எந்தவிடங்களினும் எந்தக்காலங்களினும் எல்லாவற்றையும் விஷயமாகக் கொள்ளத்தக்கது.

---

## பசுலக்ஷணம்.

பசுக்களாவன பாசங்ககளாற் பந்திக்கப்பட்ட ஆன்மாக்கள். ப”ஶ -பந்தி என்னுந் தாதுவோடு செயப்படு பொருண்மை யுணர்த்தும் உகரவிகுதி புணர்தலிற் பசு என்றதாயிற்று. பாசத்தினீங்கிய முத்தான்மாக்கள் பசு எனப்படுவன அல்ல.

பாசத்தாற் பந்திக்கப்பட்ட அறிவுதொழிற் பெருக்கத்தையுடையது பசு என்பதே சைவசமயிகளின் கொள்கை. ஞானத்துக்குச் சார்பிடமாயுள்ளது ஆன்மா என்பது எம்மதத்தார்க்குஞ் சம்மதமானது.

ஆன்மாவினது உண்மைத் தன்மையினைச் சாதித்தற்கு நான் இருக்கிறேன், நானறிகிறேன், நான் செய்கிறேன் எனத் தனித்தனி வழங்குகிற தன்னுணர்வுப் பிரத்தியட்சந் தானே தக்க பிரமாணமாமாயினும் விபரீத வுணர்வினர் விளங்குதற்பொருட்டு அனுமானங் கூறப்படுகின்றது:—

1. பிருதிவி முதலிய காரியங்கள் வரம்பிலின்பமுடைய பதிக்குக் குறைவேதுமின்மையாலும், அசேதனங்களாகிய தமக்கு ஏதும் வேண்டாமையானும் பிறர்க்கே உபயோகப்படுவன என்பது பாரிசேடசித்தமாம்:- அப்பிறராவார் ஆன்மாக்களே.

2. கண் முதலிய இந்திரியங்கள் வினைமுதலால் ஏவப் படுவன; தம்வயமின்மையின்; பரசுபோல.

3. சிவிக்குஞ் சரீரம் ஆன்மாவையுடையது; பிராணன் முதலியனவுடைமையின்; எது ஆன்மாவையுடையதன்று; அது பிராணன் முதலியவற்றையுடையதுமன்று; எங்ஙனம் தேர்.

4. பிரவர்த்திக்கின்ற தேகஞ் சேதனனால் திட்டிக்கப் பட்டது; சடமாய்த்தானே பிரவர்த்திக்கு மாற்றலிலதாத லின்; படம் முதலியன போல.

இங்ஙனங் காட்டிய அனுமானங்களினாலே புத்தி, சுகம் துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தினம் என்னுங் குணங் களையுடைய குணியாய்ச் சடமல்லாததாய் உள்ளதே ஆன்மா என்பது துணியப்பட்டது.

உலோகாயதர்கள் சரீரமுள்ளவழி ஞானமுளதாதலுஞ் சரீரமில்வழி ஞானமிலாதாதலும் உண்மையானும், தீப்பற்றி யெரியும் வீட்டிலே மக்கள் மனைவி பொருள்களை விட்டுந் தன் சரீரத்தையே கொண்டுபோதல் காணப்படுதலானும், நான் பருத்தேன் நான் சிறுத்தேன் என்றற்றொடக்கத்துக்கு வழக் கில் நானென்றசொற்குச் சரீரமே விஷயமாதலானுஞ்சரீரமே ஆன்மா என்ப. பூதங்களிற் பிறந்த அன்னம் முதலியன அறி விலவாக அப்பூதங்களிற்றானே பிறந்தசரீரம் அறிவுடையாத லால்யாங்ஙனமென்று ஆசங்கித்து, மாவெல்லம் என்பவற்றான் அமைத்த அப்பம் மயக்காததாக, அவற்றிற்றானே அமைத்த மது மயக்குவதாதல் போலப், பூதங்களிற் பிறந்த அன்ன முஞ் சரீரமும் வேறுபட்ட தன்மையினவாதல் அமையு மென்று சமாதானஞ்செய்ப. பூதங்கள் சரீரரூபமாய் பரிண மித்தபோது அறிவுடைமை உளதாம் என்பதே அவர் கருத்து.

அவர் எடுத்த தார்ஷ்டாந்திகத்துக்குக் காட்டிய திருஷ்டாந்தம் பொருத்தமின்று; ஒரு சாதியான காரணத்திற் பிறந்த வெவ்வேறு காரியங்கள் ஆற்றலினுல் வேறுபாடுடையனவாதல் கூடும் என்பதே திருஷ்டாந்தத்தாற் பெறப்பட்டது: காரியத்துக்கு மாறுன காரணத்திலிருந்து அதற்கு மாறுன காரியம் பிறத்தல் கூடும் என்பது பெறப்பட்டிலது. தார்ஷ்டாந்திகத்திலே சித்துக்கு மாறுன சடத்திலிருந்து சடத்துக்கு மாறுன சித்துப் பிறக்கும் என்பதே அவர் மதமாயிற்று:

அம்மதந் திருஷ்டாந்தத்தினுற் சிறிதுந் தாபிக்கப்படாமையால், அவர் சடமாகிய பூதத்திற் பிறந்த தேகம் ஆன்மாவாம் என்றல் பொருத்தமின்றேயாம்.

அன்றியும், சரீரமுள்வழி அறிவுளதாம் என்றுர்; பிரேததேகத்தில் அறிவு இல்லாததால் என்னை? அப்போது காற்றும் அக்கினியும் ஒழிதலால் அறிவில்லையாம் என்பர் போலும்! உயிர் நீங்கிய பின்னுஞ் சில சரீரங்கள் வெப்பமுடையனவாயுஞ், சந்திகள் அசைவனவாயுஞ், சிறிது பொழுது இருத்தல் காண்கின்றேமே! அங்ஙனம் அக்கினியுங் காற்றும் போகாதிருக்கவும் அறிவொழிதல் எங்ஙனம்? நித்திரை செய்யும்போது சரீரத்தின்மேல் ஏறிச்சென்ற பாம்பு முதலியன அறியப்படாதது என்னை?

இனிச் சரீரம் பரிணாமமுடைமையானும் அனுபவிக்கப்படுதலானுங் கடமுதலியன போலச் சடமே அன்றே?

மேலுஞ் சரீரமானது, குழவிப்பருவத்தும் இளமைப் பருவத்தும் முதுமைப் பருவத்தும் பரிணாமத்தால் வேறுபடுதலினுலே குழவிப்பருவத்துத் தாய் தந்தையரை அனுபவித்த நானே முதுமைபபருவத்துப் பௌத்திராதியரை

அனுபவிக்கின்றேன் என்னுந் தொடர்ச்சியறிவு சரீரான்மவாதிகளுக்குப் பொருந்தாதே!

தீப்பற்றியெரியும் வீட்டிலே புத்திராதியரை விட்டுஞ் சரீரத்தைக் கொண்டுபோதலாலே, புத்திராதியரினுஞ் சரீரம் மிக விரும்பப்படுவது என்னுமத்துணையேயன்றிச் சரீரமே அதிப்பிரீதிவிடயம் என்பது பெறப்பட்டதன்று. அத்தியுக்கிர கோபசோகங்கள் வந்துழித் தன்னுடம்பைக் கொல்ல முயல்வானைக் காண்டலின் சரீரம்அதிகப் பிரீதிவிடயமன்று என்பது துணியப்படும்.

நான் பெரியன், நான் சிறியன் என்னும் அனுபவம், இராகுத்தலை என்றல்போல உபசாரவழக்கேயன்றி உண்மைவழக்கன்று. என் சரீரம் என்னும் வழக்கே உண்மையாம்.

ஆதலிற் சரீரம் ஆன்மாவன்று என்பதே முடிந்த பக்ஷம்.

இவ்வாறே சடபதார்த்தங்களைத் தனித்தனி ஆன்மா எனக் கொள்ளுஞ் சமயிகள் பலருளர்.

நான்கு பூதங்களின் பரிணாமமாகிய சரீரமே ஆன்மா என்பது உலோகாயதர் கொள்கை.

உலோகாயதருள் ஒருசாரார் இந்திரியங்களே ஆன்மா என்பர்; மற்றொருசாரார் வித்துவான்கள் மனமே ஆன்மா என்பர்.

கௌளர் பிராணனே ஆன்மா என்பர்.

பௌத்தர் க்ஷணிகஞானசந்தியாகாரமான புத்திவிருத்தியே ஆன்மா என்பர்.

பௌத்தருட் பிரதீப நிர்வாணவாதிகள் இடையறாத் தொடர்பினதாகிய புத்திவிருத்தியே ஆன்மா என்பர்.

ஸ்மார்த்தர் தன்மாத்திரைகளே ஆன்மா என்பர்.

நையாயிகர் மனத்தோடு கூடிய புத்திதத்துவமே ஆன்மா என்பர்.

க்ஷபணகர் உண்டு இல்லையென்னும் அசைவுநிகழ்ச்சியையுடைய சுருங்குதல் விரிதல் என்னுமியல்பினதாய்ச் சரீரபரிமாணமுடையதாய குணதத்துவமே ஆன்மா என்பர்.

பாஞ்சராத்திரர் பிரகிருதித்துவமே ஆன்மா என்பர்.

பரிணதவேதாந்திகளும், சத்தப்பிரமவாதிகளும், கிரீடாப்பிரவாதிகளும், சித்திரப்பிரமவாதிகளும் பிரகிருதியினல் ஆக்கிரமிக்கப்பட்ட புருஷதத்துவமே ஆன்மா என்பர்.

பாதஞ்சலருஞ் சாக்கியருங் கர்த்தாவினது காணப்பட்ட சொரூபமே ஆன்மா என்பர்.

விவர்த்த வேதாந்திகள் சர்வஞ்ஞத்துவம் முதலியன இல்லாத சின்மாத்திரமான பிரமமே ஆன்மா என்பர்,

இவர்களுள்ளே முன்முன்னுள்ளோராது மதத்தைப் பின் பின்னுள்ளார் கண்டித்தனராகலின், இறுதியில் எஞ்சி நின்ற விவர்த்த வேதாந்தியாகிய மாயாவாதியினுடைய மதம் இங்கே கண்டிக்கப்படுகின்றது

மாயாவாதியின் மதமாமாறு:—

அத்தியாரோபம் அபவாதம் என்னும் யுத்தியிரண்டினலுந் தத்துவநிச்சயம் அறிதல் வேண்டும். அத்தியாரோபமாவது பாம்பல்லாத கயிற்றிற் பாம்புத் தன்மையை ஏற்றுதல் போலவும், வெள்ளியல்லாத இப்பியில் வெள்ளித் தன்மையை ஏற்றுதல் போலவும் மெய்ப்பொருளினிடத்தே பொய்ப்பொருண்மையை ஏற்றுதலாம்.

சச்சிதானந்த ரூபமாகிய பரப்பிரமம் ஒன்றுதானே மெய்ப்பொருள். கயிற்றிற் பாம்புபோலப் பிரமத்தினிடத்

திலே பொய்ப்பொருளாகிய பிரபஞ்சமெல்லாம் ஆரோபமாக உண்டாயிற்று. அவ்வாரோபம் அஞ்ஞானத்தால் வந்தது. அந்த அஞ்ஞானமே மாயை எனவும் அவித்தை எனவும் பிரகிருதி எனவும் பெயர்பெற்று முக்குணவடிவினதாய் இருக்கும். அந்த அஞ்ஞானம் என்கிற மூலப்பிரகிருதியின் சத்துவகுணத்திலே பிரதிவிம்பித்த பிரமசைதன்னியமே முற்றறிவு முதலியவற்றை உடைய ஈசுவரனும். மூலப்பிர கிருதியின் இரசோகுணமாகிய காரண சரீரத்திலே தோன் றிய பிரமசைதன்னியப் பிரதிவிம்பரூபங்களே சீவர்கள் எனப்படுவன. மூலப்பிரகிருதியின் தமோகுணமானது ஆவ ரணசத்தி விக்ஷேபசத்தி என இரண்டாம். அவற்றுள் ஆவ ரணசத்தியானது சூரியனை மேகம் மறைத்தல்போலப் பிர மாத்துமாவைத் தோன்றவிடாமல் மறைக்கும். விக்ஷேபசத் தியானது கயிற்றறியாமை கயிற்றிற் பாம்பைத் தோற்று வித்தல்போலத் தன்னால் மறைக்கப்பட்ட பிரமத்திலே ஆகாசம் முதலிய சூக்கும பூதங்களைத் தோற்றுவிக்கும். இச்சூக்கும பூதங்களிலிருந்து சத்துவக்குணக் கூறுகிய ஞானேந்திரியமைந்தும் புத்தியும் மனமும் இரசோகுணக் கூறுகிய கருமேந்திரியமைந்தும் வாயுவைந்தும் ஆகிய பதி னேழு உறுப்புக்களை உடைய சூக்கும சரீரங்கள் தோன்றும். சூக்கும பூதங்களின் தமோகுணக் கூறுகள் பஞ்சீகரிக்கப் பட்டுழித் தூலபூதங்கள் உண்டாம்.

தூலபூதங்களிலிருந்து பிரமாண்டமும், அதனுட் பதி னான்கு புவனங்களுந் தூலசரீரங்களும் யோக்கியப் பொருள் களும் உண்டாம்.

இப்படியே பரப்பிரமமானது அத்தியாரோபமாகத் தோன்றிய மாயையிலும் அவித்தையிலும் பிரதிவிம்பித்து ஈச்சுவரனுஞ் சீவர்களும் ஆயிற்று. பிரகிருதியின் விக்ஷேப

சத்திறாலே ஆரோபமாகத்தோன்றிச் சடப்பிரபஞ்சமாயிற்று. இங்ஙனமாகக் காண்டல் அத்தியாரோபயுத்தியாம்.

அபவாதமாவது கயிற்றின் பொய்வேறுபாடாகிய பாம்பானது கயிறுமாத்திரமாயிருத்தல்போலப் பரப்பிரமத்தின் விவர்த்தமாகிய பிரபஞ்சமெல்லாம் பரப்பிரமமாத்திரமாய் இருக்குமென்று ஒழித்தறிதலாம்.

இங்ஙனமாகவே பரப்பிரமத்தின் வேறாயது ஒன்றுமில்லை. பரப்பிரமம் ஒன்றுதானே தனது அவித்தையினாலே சீவர்களாகி வித்தையினாலே பரப்பிரம மாத்திரமாகும். நானே பிரமமாகின்றேன் என்று விசாரத்தால் அறிந்தால் முத்தி உண்டாம். இதுவே மாயாவாதி மதம்.

மாயாவாதிகள் கூறிய அத்தியாரோப யுத்தியே பொருந்தாது. அத்தியாரோபஞ் செய்யும்போது அத்தியாரோபிப்பான் ஒருவன் வேண்டும்; அத்தியாரோபிக்கப்படும் பொருள் ஒன்று வேண்டும்; அத்தியாரோபித்தற்கு இடமாகிய அதிட்டானம் ஒன்று வேண்டும்; அத்தியாரோபிக்கப்படும் பொருளுக்கும் அதிட்டானப் பொருளுக்கும் ஒப்புமை உண்டாதல்வேண்டும்; அத்தியாரோபத்தின் காரணமாகிய ஒரு தோஷமும் வேண்டும்.

𑌅𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑌯𑌿𑌤𑌾, 𑌅𑌧𑍍𑌯𑌾𑌰𑍋𑌪𑍍𑌯𑌂, 𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌂. 𑌆𑌰𑍋𑌪𑍍𑌯𑌾𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌸𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌂, 𑌆𑌰𑍋𑌪𑌜𑌨𑌕𑌦𑍋𑌷𑌃॥

இங்ஙனமன்றே! கயிற்றிற் பாம்பை ஏற்றும்போது, 1. ஏற்றுவான் ஒருவன் வேண்டும். 2. ஏற்றப்படும் பொருளாகிய பாம்பு அவனால் முன்னே அறியப்பட்ட மெய்ப்பொருளேயாய் இருக்க வேண்டும். 3. ஏற்றப்படும் இடமாகிய கயிறும் மெய்ப்பொருளாயிருக்கவேண்டும். 4. ஏற்றப்படும் பொருளாகிய பாம்புக்கும் இடமாகிய கயிற்றுக்கும்,

நீளமுடைமை பருமை வளைவுடைமை முதலிய ஒப்புத் தன்மைகள் இருக்கவேண்டும். 5. ஏற்றுவோனுடைய பிரயத்தினமின்மையாயினும், அவனுடைய மனங் கண் முதலிய கருவிகளின் குறையாயினும், ஒளியின் குறையாயினுந் தூரம் முதலிய முறையினும், ஆரோபகாரணமாகியதோஷமாயிருத்தல் வேண்டும்.

இங்ஙனங் கூறிய ஐந்து காரணங்களின் சாமக்கிரி உண்டானால் அத்தியாரோபம் என்னும் பிராந்தி உண்டாம். இவற்றுள் ஒன்றும் குறையினும் பிராந்தியே இல்லை.

வேதாந்திகள் பிரமத்தின் வேறாகிய பொருள் ஒன்றுமில்லை என்று அத்துவைதவாதம் பேசுதலால் இவ்வைந்தும் உள்ளனவென்றல் அவர்க்குக் கூடாதே.

பிரமத்திலே பிரபஞ்சத்தை அத்தியாரோபிக்குமிடத்து,

1. அத்தியாரோபிப்பவனாகிய ஒருவன் வேண்டும். அவர்கள் அங்ஙனமாகிய ஒருவன் சீவனே என்றால், அத்தியாரோபத்தின் பின்னே வந்த சீவன் அதன் முன்னே அத்தியாரோபிக்கமாட்டானே! அத்தியாரோபஞ் செய்வது பிரமமே என்றால், பிரமம் அஞ்ஞான முடையதாமே! அன்றியும் ஆரோபஸ்தானம் இல்லையாகுமே என்க.

2. அத்தியாரோபிக்கப்படும் பிரபஞ்சம், ஆரோபிப்பவனால் முன்னே அறியப்பட்ட மெய்ப்பொருளாயிருத்தல் வேண்டும். அவர்கள் மதத்திலே ஆரோபத்தின் பின் வந்த பிரபஞ்சம் முன்னே அறியப்படுதல் கூடாதே!

3 அத்தியாரோபிக்கப்படும் இடமாகிய பிரமம் மெய்ப்பொருளாயிருத்தல் வேண்டும். இதுமாத்திரமே அவர்களுக்கு உடன்பாடாக உள்ளதாயிருக்கின்றது.

4. ஆரோப்பியப்பொருளும் ஆரோபத்தின் இடமும் ஒப்புமையுடையனவாதல்வேண்டும். அவர்மதத்திலே ஆரோப்பியப்பொருளாகிய பிரபஞ்சமே முன்னர் இல்பொருளாயின், அது பிரமத்தோடு ஒத்தல் கூடாதே! அது உள்பொருளாயினும் பிரமத்தோடு ஒப்புடைமையுடையதாகாதே! அகண்டமாய் அரூபமாய் அறிவாய் இருக்கிற பிரமத்துக்குக் கண்டமாய் உருவமாய் அசேதனமாயிருக்கிறபிரபஞ்சம் ஒருவகையாலும் ஒவ்வாதே.

5. ஆரோபகாரணமாகிய தோஷம் ஒன்று வேண்டும். அது அஞ்ஞானமே என்றால், அஞ்ஞானமென்பது ஒரு பொருளா குணமா? ஒரு பொருளேயெனில், ஏகாத்துமவாதம் அழிந்துபோம்! குணமேயெனில், அது எந்தப் பொருளின் குணம்? சீவகுணமென்றால், அத்தியாரோபத்துக்கு முன்னே சீவரின்மையால் அஞ்ஞானமும் இல்லையாம். பிரமத்தின் குணமென்றால், அந்தப் பிரமமே பந்தமுடையதாம்; அப்பந்தந் தீர்த்தற்கு வேறொரு கருத்தா வேண்டுமே என்க.

ஒளியினது அபாவமே இருளாதல் போல ஞானத்தின் அபாவமே அஞ்ஞானமென்றும், ஞானம் பிரமகுணமென்றுங் கூறும் பக்ஷத்திலே, பிரமம் அகண்டமாதலின் அதன் குணமாகிய ஞானமும்அகண்டமாதலின், அதன் அபாவம்பிரமத்திடத்தே இல்லை என்க. வேறு பொருளில் உண்டெனின், வேறுபொருளொன்றுமில்லை என்பது பொய்யாய்விடும் என்க.

அது இன்னதென்று கூறப்படாததெனின், அது இலக்கணப் பிரமாணங்களால் அறியப்படாததாதலின் இல்லாத பொருளாம் என்பது.

இப்படியே அத்தியோரோபித்தற்கு வேண்டிய ஐந்து காரணங்களுள் இடமாகிய பிரமம் ஒன்றேயன்றி மற்றை நான்கும் இல்லாதிருக்க வேதாந்திகள் அத்தியாரோபித்தல் கூடாதே! அது கூடாததாகவே அபவாதம் வேண்டியதின்று. ஆகவே ஆன்மா ஒன்றே உள்ளது பல இல்லை என்று மாயா வாதிகள் கூறுதல் அதிப்பிராந்தி மூலமேயாம்.

இன்னும் ஒரு சூரியன் அநேக கோடி கடசலங்களிலே அநேக கோடிப் பிரதிவிம்பங்களைக் காட்டுதல் போலப் பரப் பிரம மொன்றே சரீரந்தோறும் பிரதிவிம்பங்களைக் காட்டும் என்றூர். அருவமாயும் அகண்டமாயும் இருக்கிற பிரமம் உரு வப்பொருள் போலப் பிரதிவிம்பங்காட்டுமென்கை யுத்திக் குப் பொருந்தாத மகாவிரோதம்:

இன்னும் உலகத்திலே ஒருவன் இறக்கும்போது மற் ருெருவன் பிறக்கின்ருன். ஒருவன் உண்ண விரும்பும்போது மற்ருெருவன் போக விரும்புகிருன். ஆன்மா ஒன்றே எல் லாச் சரீரத்தும் இருப்பதென்ருல் ஒருவன் ஒன்றைச் செய் யக் கருதும்போது எல்லாரும் அக்கருத்துடையராதல் வேண்டும்.

இச்செய்கை வேறுபாடுகள் பிரதிவிம்பத்தின் குண மெனின், விம்பத்தின் இல்லாத குணம் பிரதிவிம்பத்தில் உண்டாகுமா? பிரதிவிம்பத்துக்கு அறிவுண்டா என்க. இவை அஞ்ஞாேனுபாதியின் குணமெனின் அஞ்ஞானம் அறிவுடைய பதார்த்தமா என்க.

சுருதிவாக்கியம் "ஒன்றேயுள்ளது" என்று கூறுகின் றதே எனின், ஆயிரஞ் சுருதிகள் கூடினும் ஒரு குடத்தைப் புடைவையாக்கமாட்டாவே! என்க. அங்ஙனமாயின், சுருதி கூறினது விபரீதமோ எனின், அது விபரீதமன்று. பதி

பதார்த்தத்தைக் குறித்து ஒன்றேயுள்ளது என்று சுருதி கூறும் பொருள் உண்மையே. மாயாவாதிகள் அச்சுருதிக்குக் கொண்ட வியாக்கியானமே விபரீதம் என்க. ஆதலால் ஏகாத்துமவாதம் ஒருவாற்றானும் பொருந்தாது

பௌஷ்கரத்திலே பரமோக்ஷத்திலே ஸூ நம் நா 8

என்ற சூத்திரத்தின் உரையிலே உமாபதிசிவாசாரியர் "இன்னதென்று கூறப்படாத அவித்தை நீங்குதலே முத்தியென்று கூறுகின்ற மாயாவாதிமதம் பொருந்தாது" என்று கண்டித்தார்.

சர்வாத்மசம்புசிவாசாரியார் செய்த சித்தாந்தப் பிரகாசிகையிலே வேதாந்திகள் பாஸ்கரீயரும் மாயாவாதியும் சுத்தப்பிரமவாதியுங் கிரீடாப்பிரமவாதியும் என நால்வகைப் படுவர் என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஜ்ஞாநரத்நாவளியில்.

வேதாந்திநோ த்விவிதா: ஸாம்ஸாரிகாஸ்ஸம்யோகா யதாஸ்தா:, க்ஷணிகாஸ்ச ஸம்ஸாரிகா: தத்ஸம்ஸ்ரிதா: பாஹ்யகா:॥

சிவஞான சித்தியின் பூர்வபக்ஷத்திலே, பாஸ்கரீயர் மாயாவாதிகள் முதலிய வேதாந்திகள் புறச்சமயிகளென்று காட்டி அவர்களுடைய மதங்களெல்லாம் விவரித்து கண்டிக்கப்பட்டன.

இவற்றால் மாயாவாதமும் வேதாந்தமே என்பதும் வேதாந்தங்களெல்லாம் புறச்சமயங்களே என்பதும் அறியப்படும்.

## பாசலக்ஷணம்.

ஆன்மாக்களினுடைய அறிவுந் தொழிலுஞ் சைதன்னியம் எனப்படும். "𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌂 𑌦𑍃𑌕𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍂𑌪𑌂" என்றார் மிருகேந்திரகாரர். ஆன்மாக்களினுடைய சைதன்னியம் எதனால் பந்திக்கப்பட்டுள்ளதோ அது பாசம் எனப்படும். பஶ்-பந்தித்தல். ஆன்மாவினது சுவரூபலக்ஷணத்தை விரோதித்து நிற்கின்ற சடபதார்த்தமே பாசம் என்பதாம்.

உலகத்திலே யாதாயினுமொரு கட்டுப்பாட்டுள் அடக்கப்படாதவனாகி இருப்பவன் சுவதந்திரமுடையவனாயும், கட்டுப்பாடுற்றவன் பரதந்திரனாயும் இருத்தல் காணப்படுகின்றதன்றோ! ஆன்மாக்கள் வேண்டாதது பெறுதலும் வேண்டிபெறுமையும் உடையராதலாலே பரதந்திரர் என்பதும், பரதந்திரர் எனவே கட்டப்பட்டவர் என்பதும் இனிது துணியப்படும். அங்ஙனங் கட்டிநிற்பது யாது அதுவே பாசம் என்க.

சீவான்மா பாசத்தாற் கட்டுண்டவன் என்பதனைச் சாதிக்கும் அனுமானங்கள் வருமாறு:—

1. சீவான்மா பாசத்தாற் கட்டுண்டவன்; பிறர்வயமுடைமையின்; விலங்கினாற் கட்டுண்டவன் போல; யாவன் கட்டுண்டவனல்லன் அவன் பிறர்வயமுடையவனல்லன். எங்ஙனந் தன்வயமுடைய புருடன்; அல்லது எங்ஙனம் அரசன், அல்லது எங்ஙனம் இறைவன்.

2. சீவான்மா பாசத்தாற் கட்டுண்டவன்; தன் காரியசித்தியின் பொருட்டுப் பிறரை அவாவுதலின்; விலங்கிற் கட்டுண்டவன்போல; யாவன் கட்டுண்டவனல்லன் அவன்

தன் காரியசித்தியின் பொருட்டுப் பிறரை அவாவுபவனல்லன், எங்ஙனம் இறைவன் எனக் காண்க.

ஆன்மாவுக்குப் பரதந்திரத்துவம் பாசபந்தத்தானன்றி இயல்பானமைந்ததாமென்னில் அது நித்தியமாமென்றும், நித்தியமேயென்னில் எக்காலத்தும் முத்தியில்லையே என்றுங் கொள்ளல் வேண்டும். அங்ஙனங்கொள்ளல் எவர்க்குஞ் சம்மதமாகாதன்றோ! ஆதலாற் பரதந்திரத்துவம் இயல்பானமைந்ததன்று, பிறிதின் சம்பந்தத்தாலாயதே!

"ஆன்மாவானது பாசத்தாற் பந்திக்கப்பட்ட சிற்சத்தியை யுடையதன்றாமாயின், இயல்பானமைந்த சைதன்னியத்தினையுடையதாகிய தான் போகசித்தியின் பொருட்டுச் சடமாகிய தத்துவக் கூட்டத்தையும், மோக்க சித்தியின் பொருட்டுச் சிவசத்தியையும் அபேட்சிப்பதென்னை? அங்ஙனம் அபேட்சித்தலாற் பாசவுண்மை துணியப்படுமன்றோ" என்றார் மிருகேந்திரகாரர்.

அப்பாசம் ஆணவங் கன்மம் மாயை என மூவகைத்து. அவற்றுள் ஆணவமலமானது நித்தியமாய், வியாபகமாய், அமூர்த்தமாய்க் கழிவனவாகப் பரிணமித்தற்கேற்ற சத்திகளையுடையதாய், ஆன்மாவினது சிற்சத்தியின் பிரகாசத்தை மறைத்து நிற்பதாகிய திரவியமாம். ஆணவம் ஒன்றே; அதன் சத்திகள் ஆன்மாக்கடோறுந் தனித்தனி கலந்து நின்று தத்தங் காலவெல்லையில் நீங்குமியல்புடையன. பசுத்துவம், பசு, நீகாரம், மிருத்தியு, மூர்ச்சை, மலம், அஞ்ஞனம், அவித்தை முதலியன ஆணவத்தின் பரியாயங்களாம்.

இனிக் கருமமாவது ஆன்மாக்கள் சரீர இந்திரிய விடயங்களோடு கூடுதற்கு நிமித்தமாகிய தொழில் வடிவினதாய், உற்பத்தியும் நாசமுமுடையதாயினும் பிரவாகம்போலும்

அநாதியாய் மாயையிலிருப்பதாய், ஆன்மாக்களுடைய நாநாவித போக பதார்த்த சம்பந்தத்துக்கு நிமித்தகாரணமாய் உள்ள பாசமாம்.

ஆன்மாக்கள் சரீரமுதலியவற்றோடு கூடுங் கூட்டமானது தேவப்பிறவி மனிதப்பிறவி விலங்குப்பிறவி முதலிய நியதஸ்தானங்களிலிருத்தலானும், சாதி திக்குத் தேசங் காலஞ் சரீரம் இந்திரியம் விடயம் என்பவற்றின் பலவேறு வகைப் பாடுடைமையானும், ஆன்மாக்கடோறும் நியதமாதலானும், பிறவிதோறுந் தொடர்புடைமையானும் அக்கூட்டத்தின் நிமித்தமாகிய கருமமும் அவ்வியல்பினதேயாதல் அனுமிதித்துணரப்படும்.

இந்திரியங்கள் பலவேறுவகைப்படுமாறு:—யானைகட்குத் திரும்பிய நாக்குடைமை, பாம்புகள் கட்செவிகளாதல் கூகைகட்கு இரவில் விழியொளியின்மை, பூனைகட்கு இரவில் விழியொளி விசேஷித்தல் முதலியன.

விடயங்கள் பலவேறுவகைப்படுமாறு:—

சாதகங்கள் மழைத்துளியையே உட்கொள்ளல்; மயில்கள் ஆலங்கட்டியையே உட்கொள்ளல்; புறுக்கள் பரற்கற்களையுண்ணல், வண்டுகள் பூந்தேனை உட்கொள்ளல் முதலியன.

இங்ஙனமே ஆன்மாக்கள் சரீர இந்திரியவிடயங்களோடு கூடுதற்கு நிமித்தமாகிய கன்மமும் பலவேறு வகைப்பட்டதேயாம்.

இனி மாயையாவது, குடமுதலியவற்றிற்கு மண் முதலியன போலத் தனுகரண புவனங்கட்கெல்லாம் முதற்காரணமாய், நித்தியமாய், அரூபியாய், ஏகமாய், பலசத்திகளை

யுடையதாய் ஆணவமலத்தின் அதிகார முடியும்வரை ஆன்மாக்களிற் கலந்திருப்பதாய்ச் சடமாய்ப் பரதந்திரமாய் உள்ள பாசம்.

இனிக் கிறிஸ்தவர்கள், பதியானவர் முதற்காரணம் வேண்டாது தம்முடைய ஆற்றலினலே காரியங்களைப் பிறப்பிப்பர், ஆதலால் மாயை என்னும் முதற்காரணம் உள்ளதென்று கொள்ளல் குற்றமாம் என்கிறர்கள். அவர்கள் "மண்ணிலிருந்து சரீரத்தைப்படைத்தார்", "நீரிலிருந்து சலசரங்களைப்படைத்தார்", "மனுஷசரீரத்திலிருந்து மனுஷியைப்படைத்தார்" என்னுந் தம்முடைய விவிலிய வாக்கியந் தங்கொள்கைக்கு மாருதலை அறிகின்றிலர்.

இன்னுங் கடவுள் காரணமின்றிக் காரியத்தைச் செய்வரென்னில், அப்படியே ஆன்மாக்களுக்குச் சுவர்க்க நரகங்களையுங் கொடுப்பார் என்பதும் படும்; படவே புண்ணியஞ் செய்தல் வீணய் முடியும்.

இனி எல்லாஞ்செய்யும் வன்மையாவது பிறிதினைப் பிரேரிக்கும் வன்மையும் பிறிதொன்ருற் பிரேரிக்கப்படாமையும் என்னும் அத்துணையே என்க.

இனி அஞ்ஞானிகளாகிய சில கிறிஸ்தவர்கள் "பசுவும் பாசமும் அநாதிநித்தியமல்ல" எனத் தாங்கொண்ட மேற்கோளைத் தாபிக்கவேண்டி நிறுத்திய சாதனங்களைக் கிரமமாக யாம் ஈண்டு அனுவதித்துக் கண்டித்துச் சுவபக்ஷந் தாபிப்பாம்.

## பரபக்ஷம்.

1. யாது ஆதியந்தமில்லாதது அது நித்தியம்.
2. யாது நித்தியம் அது ஆரம்பமிலி.
3. யாது ஆரம்பமிலி அதுசிருட்டிகர்த்தா இலது

4. யாது சிருட்டிகர்த்தா இலது அது சுயம்பு.
5. யாது சுயம்பு அது சர்வசுவாதீனம்
6. யாது சர்வசுவாதீனம் அது அப்பிரேமயம்
7. யாது அப்பிரமேயம் அது பரிபூரணம்
8. யாது பரிபூரணம் அது ஏகம்

ஈண்டு ஆதியந்தமில்லாதது என்னும் முதற் சாதனத்தால், ஏகம் என்னும் இறுதிச் சாத்தியம் சாதிக்கப்பட்டமையானும், பசுபாசங்கள் ஏகமாகாமையானும், பசுபாசங்கள் ஆதியந்தமில்லாதனவல்ல என்பது பெறப்படும். ஏகமாவது பதியேயாதலின், பதியே ஆதியந்தமில்லாதது என்பதும் உணரப்படும் என்பது கருத்து.

## பரபக்ஷ கண்டனம்.

1. "ஆதியந்தமில்லாதது" என்னும் முதற்சாதனம், தன் சாத்தியமாகிய நித்தியமென்னுஞ் சொல்லின் விவரணார்த்தமாதலாலே சாத்திபாவிசிட்டம் என்னும் போலிச்சாதனமாம். சுடுந்தன்மையுடையதோர் பொருள் என்பது அக்கினியைக் குறித்து விவரணமாவதன்றிச் சாதனமாவதின்று. இனி இப்பொருட்கு இப்பெயரெனச் சாதித்ததெனில் அஃது ஒருவாறு நம்மதமாம்.

2. "யாது நித்தியம் அது ஆரம்பிலி" என்புழி, ஆரம்பமும் ஆதியும் ஒரு பொருளனவாயின், ஈண்டு நித்தியமென்னுஞ் சாதனம் ஆரம்பமிலி என முன் அமைந்த தன் விவரண பாகத்தைச் சாதித்தலிற் சித்தசாதனப் பெயர்ப் போலியாம். "ஆரம்பமும் ஆதியும் விடமப்பொருளன" எனின் வேறு விரோதம் விளையும். இன்னும் ஆன்மா நித்தியம் எனத் தாமுங் கூறலின் ஆன்மா ஆரம்பமிலி எனத் தம்மத விரோதம் வந்தவாறும் அறிக.

3. "யாது ஆரம்பமிலி அது சிருட்டிகர்த்தா இலது" என்றதனால், யாது அந்தமிலி அது சங்காரகர்த்தா இலது என்பதும், ஆன்மா அந்தமிலியாதலின் அது சங்காரகர்த்தா இலி என்பதும் முடியும். முடியில், திருஷ்டவிரோதமுஞ் சுவசாஸ்திர விரோதமுமாம். அவர் அவ்விரோதம் பரிகரிக்க வேண்டும். அங்ஙனமாயின், ஆன்மாத் தன் சுவரூபம் அழியாமையால் இயற்கையால் அந்தமிலியாயினுந் தன் குணந் தொழில் வேறுபட்டுத் தான் எடுத்த உடம்பை விடுதலாற் செயற்கையால் அந்தமுடையதாமென்றும், அங்ஙனஞ் செயற்கையால் அந்தமுடையதாகச் செய்யுஞ் சங்கார கர்த்தாவை உடையதென்றும் அவர் பரிகாரங் கூறில், அப்படியே ஆன்மாச் சுவரூபத்தினாலே அநாதியாதலின், இயற்கையால் உற்பத்தி உடையதன்றாயினும், தன்குணந் தொழில் வேறுபட்டு உடம்பெடுத்தலாலே செயற்கையால் உற்பத்தியுடையதென்றும், அங்ஙனம் உற்பத்தியுடைய தாகச் செய்யுஞ் சிருட்டி கர்த்தாவை உடையதென்றும் யாம் சமான பரிகாரங் கூறுவேம்.

இங்ஙனமே பாசப்பொருளுந் தான் அநாதியாதலின், தன்னைப் புதிதாகப் படைக்குஞ் சிருட்டிகர்த்தாவை வேண்டாதாயினுந் தன்னை வேறுபடுத்திப் பிரேரிக்குங் கருத்தாவை வேண்டுமென்பதுங் கொள்ளலாம். உற்பத்தி யில்லாத ஒரு பொருள் வேறொரு பொருளால் ஆளப்படுதல் கூடாது என்பாரை, நாசமில்லாத ஒரு பொருள் வேறொரு பொருளால் ஆளப்படுதல் கூடாதோ எனக்கூறி மறுக்க. இங்ஙனமாதலின் "யாது ஆரம்பமிலி அது சிருட்டிகர்த்தா இலது" என்புழி அநைகாந்தம் என்னுஞ் சாதனப்போலி யாகும்.

4. "யாது சிருட்டி கர்த்தா இலது அது சுயம்பு" என்புழிச் சுயம்புச் சொற்பொருள் தன்னிற் பிறப்பது என்பதோ? தன்னில் இருப்பது என்பதோ? தன்னிற் பிறப்பது எனில், தான் முன்னுளதாயிற் பிறத்தல்கூடாது; தான் முன்னிலதாயின் தன்னில் என்றல் கூடாது. ஆதலின் இருவாற்றானும் பொருந்தாது! இனித் தன்னில் இருப்பது எனின், ஒருபொருள் மற்றொன்றை அவாவாது தன்னி லிருத்தற்குச் சிருட்டிகர்த்தா இன்மை பிரயோசனம் அன்று; தடையற்ற அறிவு தொழிலுடைமையே பிரயோசனமாதலின் இது சோபாதிகாசித்தப்பெயர்ப்போலியாம். இனிச் சிருட்டி கர்த்தா இலது என்பதற்குத் தடையற்ற அறிவு தொழி லுடைமையாற் சிருட்டிகர்த்தாவை அவாவாது நிற்பது எனப் பொருள்கூறி, அதுவே சுயம்புவாம் எனச் சாதிப்பா ராயின், அஃது அவர்க்கு முன்பின்னறுத்து முட்டுவிளக்கு மாயினும் நமக்கு இட்டசாதனமாம்.

5. "யாது சுயம்பு அது சர்வசுவாதீனம்" என்புழிச் சர்வசுவாதீனம் என்பதற்கு எல்லாவற்றானுந் தன்வய முடையதாயிருப்பது என்பது பொருளாயின், சுயம்புச் சொற்பொருளும் அதுவேயாதலின் சாத்தியாவிசிட்டமாம். பிரயோசனம்பற்றிப் பிறபொருளெல்லாவற்றையுந் தன்வச மாக உடையது எனப்பொருள்கூறின், அதற்கு ஆதிசித்த சுயம்புத்தன்மை பிரயோசனமாகாது அனுதிசித்த சுயம்புத் தன்மையே பிரயோசனமாகாது பிரயோசனமாதலின் அசித் தப்பெயர்ப்போலியாம்.

6. "யாது சர்வ சுவாதீனம் அது அப்பிரமேயம்" என்புழி அப்பிரமேயம் என்பது அறியப்படாதது என்னும் பொருட்டாயின், எப்பிரமாணத்தாலும் அறியப்படாத

முயற்கோடொத்த சூனியப்பொருளைச் சாதிக்குஞ் சாதனம் அப்பிரமாணமாம். அப்பிரமேயம் என்னுஞ்சொல் வரையறுக்கப்படாதது என்னும் பொருட்டாயின் அது நம்மதமேயாம்.

7. "யாது அப்பிரமேயம் அது பரிபூரணம்" என்பதனால் ஆன்மா அப்பிரமேயம் ஆதலின், ஆன்மாப் பரிபூரணமென நம்மதானுகூலமாகித் தம்மதப் பிரதிகூலமாகிய நியாயந் தோன்றியது. ஆதலின் இதுவும் அவர்மதத்தில் அநைகாந்தமாம்.

8. "யாது பரிபூரணம்" அது ஏகம் என்புழிப், பரிபூரணமாகிய பொருள்கள் பல உளவெனின்; அவற்றுள் ஒன்றே எவ்விடத்தும் நிறைந்து நிற்க மற்றையவை நிற்றற்குச் சிறிதேனும் இடம் இல்லையாமாதலின், பரிபூரணப் பொருள் ஒன்றுதலன்றிப் பலவாதல் பொருந்தாதென்று ஆலோசித்தார்போலும்! அங்ஙனமாயின், கடவுள் ஒருவரே எங்கும் பரிபூரணராய்ச் சிறிதிடமும் விடாது வியாபித்திருக்க, மற்றுள்ள உடல்களும் உயிர்களும் பொருள்களும் இருத்தற்கு இடமே இல்லையாமாதலிற் பரிபூரண வஸ்துவாய் இருப்பது ஒன்றுமில்லை என முடிப்பாராக. இனித்தன் நிலைக்களத்துப் பிறிதொன்று இருக்க இடங்கொடாது தடுப்பது உருவப்பொருளே என்று ஆலோசித்துத் தெளிவாராயின், பிறிதகற்றுந்தன்மையைப் பயப்பிக்கும் உருவத்தன்மையென்னும் உபாதியில்லாத அருவப்பொருள்கள் பற்பலவாயினும், அவை ஒன்றையொன்று தட்டாது ஒன்றனிடத்தொன்று இருப்புவிடாது பரிபூரணங்களாய் இருக்கும் என்றுணர்வர் ஆதலின் இச்சாதனஞ் சோபாதிகாசித்தமாம்.

இப்படியே அவர் இட்டசாதனங்கள் எட்டனுட் சில நமக்கு இட்டசாதனங்களாகி அவருக்கு அநிட்டசாதனங்

களாக, மற்றையன அவருக்கு இட்டவிரோதஞ் செய்து போலிச் சாதனங்களாகி ஊசிமுனையில் வீழ்ந்த கடுகுகள் போல நிலையாது குலைந்து துச்சமாயின. ஆகவே "பசுவும் பாசமும் அனாதிநித்தியமல்ல" என்னும் மேற்கோள் ஏனை நியாயாங்கமின்றிப் பங்கமடைந்தது.

### சுவபக்ஷம்.

ஈண்டும் பிறந்த குழவிகட்கு முகமலர்தலும் முகங்கூம்புதலும் முதலியன ஒரோவழி உண்மையான், அவற்றின் உள்ளத்தின்கண் இன்பதுன்பபயங்கள் ஒரோவழி நிகழ்தல் அறியப்படும்; அவ்வின்பதுன்ப பயங்கட்கு ஈண்டுப் பயின்றறியப்பட்ட எதுக்களின்மையின் முற்பிறவியில் அனுபவிக்கப்பட்ட எதுக்களின் நினைவுத்தொடர்ச்சியே காரணமென உய்த்துணரப்படும். படவே, ஈண்டுள்ள ஆன்மாவுக்கு முன்னைப்பிறவி பெறப்பட்டுழி அதுவும் அவ்வாறாதலின் ஆன்மா அநாதியாம். அநாதிக்கு நாசமின்மையின் ஆன்மா நித்தியமென்பது துணியப்படும்.

அன்றியும் ஈண்டுப் பிறந்த குழந்தை பசிநீக்கமாகிய இட்டஞ் சாதித்தற்கு ஆகாரமே சாதனமெனக்கொண்டு முலைப்பால் குடிக்க முயலுதலின், இன்ன இட்டஞ்சாதித்தற்கு இன்னது சாதனமாம் என்று அறியும் அறிவாகிய இட்டசாதனத் தன்மையறிவை உடையதென்பது பெறப்படும். இவ்விட்டசாதனத்தன்மை யுணர்வுக்குக் காரணமாகிய சாத்தியசாதன சம்பந்த ஞானாப்பியாசம் இம்மையிற் பயிலப்படாமையின் அது பெறப்படுதற்பொருட்டும் முற்பிறவி கொள்ளப்படும்.

பிறந்த ஆன்மாக்கள் சிலபொருளிலே இச்சித்தல் இட்டசாதனத்தன்மையுணர்வால் எனவும், சிலவற்றை வெறுத்தல்

திவிட்டசாதனத்தன்மை யுணர்வால் எனவும், அவ்வுணர்வு கள் பூருவசன்மத்தில் அப்பியாசத்தாற் பிறந்த வாசனையாற் றேன்றுமெனவும் இதனாலறிக.

ஆன்மா "குழவிப்பருவத்துப் பிதாமகனை உணர்ந்த யானே முதுமைப்பருவத்துப் பௌத்திரனை உணர்கின் றேன்" என்றற்றொடக்கத்துத் தொடர்ச்சி யறிவுடையதாத லின் அவிகாரி எனவும், அவிகாரியாதலால் அந்தமிலி எனவும், அந்தமிலியாதலால் ஆதிமிலி எனவுஞ் சாதிக்கப்படும்.

ஆன்மா மறுமைப்பயனுறுவதென்பது உபயவாதி சம்மதமாகலின், அந்தமிலி என்பதும் உபயவாதி சம்மதமே யாம்; ஆகவே "ஆன்மா ஆதியிலி, அந்தமிலியாதலால், யாது ஆதியிலியன்று அது அந்தமிலியுமன்று, கடாதிபோல" என்னும் அனுமானமும் பெறப்படும்.

இன்னும் "ஆன்மாநித்தியம்; அவயவமிலியாதலால், அந்நுவயத்தில் இறைவன்போல; வியதிரேகத்திற் கடாதி போல" என்க.

இன்னும் "ஆன்மா தேச பரிச்சின்னமன்று, பிரமாண மின்மையால்" ஆன்மா காலபரிச்சின்னமன்று, தேச பரிச் சின்னமன்மையால்" என்க

அவிகாரியாதலானும், அந்தமிலியாதலானும், அவயவ மிலியாதலானும், தேசகாலபரிச்சின்ன மன்மையானும், ஆக்கப்படற்கு நிமித்தமின்மையானும், ஆன்மா அநாதி யநந்தமாகிய நித்தியமென்பது நன்றுநச்சாதிக்கப்படும்.

பாசம் அநாதியான்மாவுக்கு விரோதியாதலானும், இடையிலே தோன்றலும் விரோதித்தலும் ஒருவாற்றாலும் பொருந்தாமையானும் அநாதியநந்தமாகிய நித்தியமென்பது துணியப்படும்.

இன்னும் இதனை விரிப்பிற் பெருகுமென்று விடுத்தனம்.

இங்ஙனங் காட்டிய நியாயங்களாற் பசுவும் பாசமும் அநாதி நித்தியமென்பது துணியப்பட்டமையின், பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்தங்களும் அநாதியென்னுஞ் சைவசித்தாந்தக் கருத்தே யுத்திசித்தமென்றறிக.

---

## முத்திசாதனம்.

அநாதி முத்தபதியாகிய பரமசிவனால் அருளிச்செய்யப் பட்ட நான்கு வேதங்களும் இருபத்தெட்டாகமங்களும் முதனூல்களாம். வேதாகமங்களிற் கூறிய ஆன்மார்த்தோ பாயங்கள் தீக்ஷையுஞ் சரியை கிரியை யோக ஞானங்களுமாம்.

ஆன்மாக்களுக்கு ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கெடுப்பதாகிய சிவசத்தியே முக்கிய விருத்தியினாலே தீக்ஷை என்னும் பெயர்பெறும். கூறப்பட்ட இலக்கணமமைந்த குரு சிடர்களாற் செய்யப்படுஞ் சரீரக்கிரியையும் வாக்குக் கிரியை யும் மனக்கிரியையுஞ் சிற்சத்திக்கிரியையுமாகிய கிரியைக ளெல்லாந் தீக்ஷை வெளிப்படுதற்கு இடங்களாயிருத்தலி னாலே கௌணவிருத்தியினாலே தீக்ஷை என்று பெயர்பெறும்.

இத்தீக்ஷையானது கிரியாதி பேதத்தினாலே அநேகப் பிரகாரமாயிருக்கும். தீக்ஷையொன்றே ஆத்துமார்த்த முக்கியோபாயம். சரியை முதலியன தீக்ஷையின்பின்னே செயற்பாலனவாகிய அங்கோபாயங்களாம்.

சரியையாவது ஆன்மாக்கள் தம்மைப் புறத்திலும் உள்ளிலுஞ் சிறிதே சுத்தியுடையராகச் செய்து அதிசுத்த ராகிய சிவனைச் சூரியன் முதலிய தூராதாரங்களினுள்ளே பாவித்து மந்திரக்கிரியா பாவனைகளால் வணங்கலாம்.

கிரியையாவது ஆன்மாக்கள் தம்மைப் புறத்திலும் உள்ளிலும் மிகச் சுத்தியுடையராகச் செய்து அதிசுத்தராகிய சிவனை இலிங்கம் அக்கினி முதலிய சமீபபாவங்களிலே பாவித்துமந்திரக் கிரியாபாவனைகளால் வணங்கலாம்.

யோகமாவது மனத்தை விடயங்களின்வழியே செல்ல விடாது நிறுத்திச் சிவனையே தியானித்துத் தாரணைசெய்து ஒருமைப்பட்டு நின்று வணங்குதலாம்.

வணங்குதலாவது இயல்பினுலே அதிசுத்தராதலிற் சிவன் பேருயர்ச்சி உடையவரென்றும், பாசங்களினல் அத்தியசுத்தராதலினுலே ஆன்மாக்கள் பெருந்தாழ்வுடையவ ரென்றும் உணர்ந்து, ஆன்மாக்கள் தம்முடைய பாசங்களைக் கிரமங்கிரமமாகக் கழித்துச் சுத்தராகிச் சிவனருளாலே சிவனைச் சமீபித்துக் கலக்கின்றவராகப் பாவித்து, இப்பாவ னையை உணர்த்துங்குறிகளாகிய மந்திரங்களை உச்சரித்துக் கிரியைகளைச் செய்தலும், இப்பாவனையோடு தியானம் முதலிய மனக் கிரியைகளைச் செய்தலுமாம். சரியை முதலிய மூன்றுங் கருமமென்னும் பொதுச்சொல்லால் வழங்கப்படும்.

ஞானமாவது பதி பசு பாசங்களின் சுவரூப லக்ஷணப் பிரமாணங்களை அறிதலாம்.

இந்தத் தீக்ஷை முதலிய உபாயங்கள் வைதிகம், தாந்தி ரிகம், சைவம், பாசுபதம், சாம்பவம் என்னும் பரியாயங் களால் வழங்கப்படும். வைதிகம் முதலிய பரியாய நாமங்கள் ஒரு பொருளுணர்த்துவனவாயும் வேறு வேறு பொருளு ணர்த்துவனவாயும் வரும்.

வேதத்திற் கூறப்பட்டது வைதிகமெனவும், ஆகமத் திற் கூறப்பட்டது தாந்திரிகமெனவும், சிவனொருவரையோ

தெய்வமாக உடையது சைவமெனவும், பாசுபதமெனவும், சாம்பவமெனவும் பெயர்பெறும்.

சிவனொருவரே பரமபதி என்றலும், சிவனையே பிரதானப் பொருளாகக் கொண்டு வணங்கலும், தீக்ஷை முதலியனவே ஆத்துமாத்தோபயம் என்றலும்; விபூதி ருத்திராக்ஷங்களே சிவசின்னங்கள் என்றலும், சூரியனுள்ளும் இலிங்கத்துள்ளும் அக்கினியுள்ளுஞ் சிவனையே பாவிக்க என்றலும், பதி ஒன்றே என்றலும், பசுக்களும் பாசங்களும் பல என்றலும், இவை அநாதி என்றலும், பாசந் தீர்ந்துதானே தானாயிருத்தலே முத்தி என்றலும் பிறவும் வேதத்திலும் ஆகமத்திலுஞ் சமமாகக் கூறப்பட்ட பொதுப்பொருள்களாம்.

உலகத்தாரெல்லாருக்கும் பொதுவாகக் கூறப்பட்ட பொதுச் சுருதியாகிய வேதத்திலே கூறப்பட்ட தூலகருமங்களாகிய உபநயனம், சிரௌததீக்ஷை என்னுந் தீக்ஷைகளும் அவற்றின்பின் செய்யப்படுவனவாகிய தூலரூபமான சரியை முதலியனவும் மந்திரக்குறை, கிரியைக்குறை, பாவனைக் குறை உடையனவாதலானும், வேதத்திற்கூறப்பட்ட வருணாச்சிர தருமங்களும், கருப்பாதானாதி சமஸ்காரங்களும், சரீரசுத்திபயப்பனவன்றி ஆன்மசுத்தி பயப்பன அல்லவாதலானும், அவற்றைச்செய்யுங் குருசீடர்களுக்குக் கூறப்பட்ட இலக்கணங்களுங் குறைவுடையனவேயாதலானும், அச்சரியை முதலிய மூன்றும்; சித்த சுத்தியும் மன ஒருமைப்பாடுஞ்சிறிதே உண்டாக்குதலாகிய முக்கியப் பிரயோசனமுங் கீழுள்ள பசுலோகங்களாகிய சுவர்க்கம் முதலியவற்றை அடைதலாகிய அவாந்தரப்பிரயோசனமும் உடையனவாதலானும், அவையெல்லாம் ஆகமகருமங்கள் போலச் சுத்தியுடையன அல்லாமையினாலே கேவல வைதிககருமங்கள் எனவும், கேவலசைவமெனவும்படும்

இவற்றை அனுட்டிக்குங் கேவலவைதிகர்களுள் உபநயனமாத்திரம் பெற்றுக் கேவலத்துவிசராகிச் சரியைவழி நிற்போர் வசு, ருத்திர, ஆதித்தர்களையும், உபநயனத்தோடு சிரௌத தீக்ஷைகளும் பெற்றுக் கிரியைவழி நிற்போர் பிரம விட்டுணு, ருத்திரர்களையுந் தத்தம் பிரதிகளுக்கு உபகரிக்கும் பிதிர்தேவர்களாக வரித்துப் பூசிக்க என்று கூறும் வேத விதியே அவரவர் அடைதற்குரிய பதங்கள் இவையென்பதை விளக்கும்

இனி வேதத்திற் கூறப்பட்ட ஞானபாகமாகிய வேதாந்தமானது பதிலக்ஷணத்தை ஓரோவிடத்துக் குறி வேறுபடவுங் கூறுமாயினும் உள்ளபடி கூறுதாதலானும், பசுக்களுள் விஞ்ஞானகலர், பிரளயாகலர் என்னும் பசுக்களின் இயல்பை விவரியாதுவிட்டுச் சகலராகிய பசுக்களின் இலக்கணத்தை மாத்திரமே ஒருவாறு கூறுதலானும், பாசங்களுள்ளும் ஆணவ மலத்தையும் மகரமாயையையும் அதன் காரியமாகிய சுத்த தத்துவமைந்தையும் மாயையையும் அதன் காரியமாகிய கலை முதலியவற்றையும் விவரியாது விட்டு மாயாகாரியமாகிய பிரகிருதிமுதற் பிரிதிவியந்தமான இருபத்தைந்து தத்துவங்களை மாத்திரமே ஒருவாறு விளக்குதலானும், முத்தியிலக்கணத்தை விளங்கக்கூறுது பலபொருள்படச் சுருக்கிக்கூறுதலானும், பிறவாற்றுனும், அசுத்தமாயா காரியமாகிய புருடதத்துவத்தை அடைதலையே ஆத்துமப் பிரமசாயுச்சியம் என்கிற ஆத்தும சாயுச்சியமாகிய பரமுத்தியாகக் கூறுதலானும், இவ்வேதாந்தம் ஆகமாந்தம் போலச் சுத்தியுடைய தல்லாமையால் கேவல வேதாந்தம், எனவும், அபரஞானமெனவும்படும்.

இவ்வேதாந்தம் மாயாவாதம் எனவும், பாஸ்கரியம் எனவும், சத்தப்பிரமவாதம் எனவும், கிரீடாப்பிரமவாதம் எனவும் நான்குவிதமாகக் கொள்ளப்படுகின்றது.

பக்குவராகிச் சத்திநிபாதமுற்றவர்களுக்கே சிறப்பாகக் கூறப்பட்ட விசேடச்சுருதியாகிய ஆகமத்திலே கூறப்பட்ட கருமங்களாகிய சமய விசேஷ நிர்வாணரூப தீக்ஷையுஞ் சரியை முதலியனவும், மந்திரவிசேடங் கிரியாவிசேடம் பாவனு விசேடம் என்பவைகளைப் பூரணமாக உடையன வாகலானும்; ஆகமத்திற் கூறப்பட்ட கருப்பாதானுதிகள் ஆத்துமசுத்தி பயப்பனவாதலானும், அவற்றைச் செய்யுங் குரு சீடர்களுக்குக் கூறப்பட்ட இலக்கணமெல்லாம் நிறை வுடையன வாதலானும், சரியை கிரியைகள் சித்தசுத்தியை யும், யோகஞ் சித்த ஒருமைப்பாட்டையும் உண்டாக்குவன வாகிச் சிவஞானமாகிய முக்கியப் பிரயோசனத்தையும், முறையானே சிவசாலோக்கியம் சிவசாமீப்பியம் சிவசாரூப் பியம் என்னும் அவாந்தரப்பிரயோசனங்களையுந் தப்பாது தருவனவாதலானும், ஆகமகருமங்களெல்லாம் சுத்தசைவம் எனவும், சுத்தசாம்பவம் எனவும் பெயர் பெறும்

சிவபெருமான் தாம் ஆகமத்திலே விரித்துக் கூறிய சுத்த சைவமாகிய சமயத்தைப்பிராமாணியத்தின் பொருட்டு வேதத்திலே அதர்வசிரசு, காலாக்கினி ருத்திரோப நிஷதம் முதலிய இடங்களிலே பாசுபதம், சாம்பவம் முதலிய பெயரி னுலுஞ் சில இலக்கணங்களாலும் வெளிப்படுத்திச் சுருக்கிக் கூறினர்: ஆதலால் அது சுத்தவைதிகம் என்றும் பரம வைதிகம் என்றும் வைதிக சைவம் என்றும் வேதசாரம் என்றும் பெயர் பெறும்.

இச்சுத்தவைதிகமாகிய சுத்த சைவத்தினுட்பட்ட சிவ தீக்ஷை செய்தலும், பெறுதலுஞ், சரியை முதலியவற்றை அனுட்டித்தலும், ஆகமமுணர்ந்தார்க்கன்றி வேதமாத்திரம் உணர்ந்தார்க்கு முடிதலில்லை. ஆகமதீக்ஷைபெற்றுச் சுத்த வைதிகப்பொருளை விரிவாய் அறிந்தவர்களுக்கு முன்னர்க்

கூறிய கேவலவைதிகப் பொருளை உணர்த்தும் வேத வாக்கி யங்களுங் குறிப்பாகச் சுத்தவைதிகப் பொருள் உணர்த்து வனவாகித் தோன்றும்.

சுத்த வைதிகராகிய சுத்தசைவருட் சமய தீக்ஷையும், விசேஷதீக்ஷையும் பெற்றுச் சுத்தத்துவிசராகிய சமயிகள் தத்தம் பிதிர்களுக்கு உபகரிக்கும் பிதிர் தேவர்களாகச் சில புத்திரர்களாகிய கந்த சண்ட கணேசர்களை வரித்தலானும், நிருவாண தீக்ஷைபெற்ற புத்திரர் தத்தம் பிதிர் தேவர்களா கப் பரசிவனொருவரையே ஈச, சதாசிவ, சாந்தரென முத் தன்மை பற்றி மூவராகப்பாவித்து வரித்தலானும், அச் சைவர் அதிகரித்தற்குரிய பதங்களின் மகிமை விளங்கும்.

இனி ஆகமத்திற் கூறப்பட்ட ஞானபாகமாகிய ஆக மாந்தமானது பதியிலக்கணமும், பசுவிலக்கணமும், பசுக் களின் பகுப்பாகிய மூவகையான்மாக்களின் இலக்கணமும், ஆணவம், மாமாயை, மாயை, கருமங் திரோதானம் என்னும் பஞ்ச பாசங்களின் இலக்கணமும், மாமாயா மாயாகாரிய மாகிய முப்பத்தாறு தத்துவங்களின் இலக்கணமும், முத்தி யிலக்கணமும், பிறவும் விளங்க விரித்துப் பூரணமாகக் கூறுத லானும், மற்றைச் சமய நூல்கள் எல்லாவற்றானும் அறிவிக் கப்படாத இரகசிய பதார்த்தங்களை யெல்லாம் யுத்திக் கிணங்கவிரித்துக் காட்டுதலானும், சுத்தசித்தாந்தம் என்றும், பரஞானம் என்றும் பெயர்பெறும்.

இந்த ஆகமாந்த ஞானத்தை உணர்ந்தவர்களுக்கு முற் கூறிய கேவலவேதாந்தப் பொருளுணர்த்தும் வாக்கியங் களும் ஆகமாந்தப் பொருளை வெளிப்படையாயுங் குறிப் பாயும் உணர்த்துவனவாகும். அவ்வேத வாக்கியங்களால்

உணர்த்தப்படுதலினால், அப்பொருள் சுத்த வேதாந்தம் எனப் பெயர் பெறும்.

கேவலவைதிகம், கேவல வேதாந்தம் என்னுமிரண்டும் வேதத்திலே விரித்துக் கூறப்பட்டன. சுத்தவைதிகம் சுத்த வேதாந்தம் என்னுமிரண்டும் வேதத்திலே சுருக்கிக் கூறப்பட்டனவாயினுங் குறிப்பினாலே ஒருவாறு விரித்துக் கூறப்பட்டன. அவ்விரண்டுமே ஆகமத்திலே வெளிப்படையாக மிக விரித்துக் கூறப்பட்டன.

பொருள்களின் இயல்புகளைப்பற்றி அறியும் அறிவு பூர்வபக்ஷமுஞ் சித்தாந்த பக்ஷமும் என இரண்டாம்.

ஒரு பொருளின் பிரகாரத்தைக் குறித்துப் பல விதமாகத் தோன்றும் அறிவுகளுள் முன்னர்ச் சம்பாவிக்கப்பட்டுப் பின்பு பொருந்தாமையாற் கழிக்கப்படும் அறிவுகளே பூர்வபக்ஷங்களாம். பலவிதமாக ஆராய்ந்து பொருந்துமென்று துணியப்பட்ட உண்மையறிவே சித்தாந்தபக்ஷமாம்.

பதார்த்தங்களின் இயல்புகளைக் குறித்து ஆன்மாக்களின் சிற்றறிவுக்கு விபரீதப் பிரகாரமாகத் தோன்றத் தக்க பக்ஷங்களையே பூர்வபக்ஷங்களாக வேதத்தில் எடுத்துக்காட்டி அவை பொருந்தாவெனத் தெரிவித்துக் கண்டித்தல் செய்யப்பட்டது.

சிலர் பூர்வபக்ஷங்களுள் ஒவ்வொன்றைச் சித்தாந்த பக்ஷமெனக் கொண்டு மயங்கி வேதவாக்கியங்களுக்குத் தமக்கிணங்க விபரீதப் பொருள்கொண்டு வேறுவேறு சமயங்களை உண்டுபண்ணி அவற்றையெல்லாந் தனித்தனி வைதிகமெனவும், வேதாந்தமெனவும் பெயரிட்டு வழங்கச்செய்தார். அவைகளெல்லாம் அசுத்த வைதிகம் எனப்படும்.

தற்காலத்திலே பசுவாகிய விட்டுணுவைப் பதியாகிய சிவபெருமானோடு சமமாகப் பாவித்துத் சந்தியாவந்தனம் முதலிய கிரியைகளிலே விட்டுணு நாம மந்திரங்களினாலே ஆசமனந் தருப்பணம் முதலியன செய்தலும், சூரியனுள்ளே நாராயணனைப் பாவித்தலும், விஷ்ணுலிங்க பூசை செய்தலும், விஷ்ணுவை அக்கினியுட் பாவித்தலும், வைஷ்ணவச் சிராத்தங்கலந்த வைதிகச் சிராத்தஞ் செய்தலும், வேதாகாம வாக்கியங்களை உச்சரிக்கும்போது முதலிலே உச்சரிக்கப்படவேண்டிய சிவமந்திரமாகிய பிரணவத்தை மாத்திரமே உச்சரியாமல் அதற்கு முன்னே விஷ்ணுநாமத்தைச் சேர்த்து அரிஓம் என்று உச்சரித்தலும், இன்னோரன்னபிறவும் உடையவர் அசுத்தவைதிகர் என்னும் பெயர் பெறும்.

வேதாந்தப் பொருளைக் கோவைப்படுத்தற் பொருட்டு வியாசமுனிவராற் செய்யப்பட்ட பிரமசூத்திரத்திற்கு ஓர் சங்கராசாரியராற் செய்யப்பட்ட விபரீத பாஷியமும், அப் பாஷியத்துக்கு விவரணாசாரியர் செய்த விவரணமும், அவற்றை அனுசரித்துச் செய்யப்பட்ட நூல்களும், கேவல வேதாந்த பேதமாகிய மாயாவாதம் முதலிய மதங்களை உணர்த்தும்.

முன்னொருகாலத்திலே நந்திகேசுரருடைய மாணாக்கராகிய மந்திர நாயகாசாரியர் கைலாசகிரியிலிருந்து சுவர்க்கலோகத்திலே வந்து தேவர்களுக்கு உபதேசித்துப் பூலோகத்திலே தக்ஷிணதேசத்திலே வந்து அங்குள்ள சில யோகிகளுக்கு உபதேசித்தார் அவருடைய பிரதான சீடர்களாகிய (உக்ரஜ்யோதிः) உக்கிரச்சோதி (ஸத்யோஜ்யோதிः) சத்தி யாச்சோதி (நீலகண்ட:) நீலகண்டர் என்னும் மூவருள் நீலகண்டராற்பிரம சூத்திரத்திற்குச் செய்யப்பட்ட யதார்த்தமான

பாஷியமும் அப்பாஷியத்தின் விவரணமாக ஸ்ரீ தீக்ஷிதரா ற் செய்யப்பட்ட சிவார்க்க மணிதீபிகையும், அவற்றை அனுசரிக்கும் நூல்களுமே கேவலவேதாந்த சூசகமுஞ் சுத்த வேதாந்த சூசகமுமாயிருக்கும். இங்ஙனமே முத்திசாதனம் உணர்த்தப்பட்டது.

---

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

तच्च शिवरूपं श्रुतयः :— "उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं प्रशान्तं, ज्ञात्वा तं मृत्युमत्येति नान्यः पन्था विमुक्तये" इति कैवल्योपनिषदि सर्वनामत्वेन निरूपितम्॥ तथैव सूतसंहितायाम्,- "उमार्धविग्रहाः शुद्धास्त्रिनेत्राश्चन्द्रशेखराः नीलग्रीवाः परानन्दप्रदा [illegible] ताण्डवप्रियाः ब्रह्मविष्णुमहादेवैर्वन्द्या [illegible] श्रुतिभिः' इति निरूपितम्॥

तापनीयोपनिषदि,— "अकारं ब्रह्माणं नाभौ उकारं विष्णुं हृदये मकारं रुद्रं भ्रूमध्ये, ओंकारं सर्वेश्वरं द्वादशान्ते" इति अकारादिमात्रात्रयवाच्यत्रिमूर्तीन् [illegible] नाभिहृदयभ्रूमध्येषु विभाव्य समष्टिप्रणववाच्यं शिवं द्वादशान्ते उपासीतेति विहितम्॥

योगयाज्ञवल्क्ये,— "अक्षरात्संजायते कारणत्रयमिष्यते, त्रयाणां कारणं ब्रह्मरूपं सर्वकारणं [illegible] परंज्योतिः [illegible] प्रणवं [illegible]" इति॥ सूते;— "ब्रह्मविष्णुरुद्रास्तत्र [illegible] तयः, तेषां त्रयाणामपि [illegible] कारणमीश्वरः" इति॥

एवं [illegible] प्रणववाच्य [illegible] शिव [illegible] सर्वोपनिषत्सु प्रतिपादनात् [illegible]॥

𑌨 𑌤𑌾𑌵𑌤𑌾 𑌶𑌿𑌵𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤 𑌅𑌶𑍁𑌦𑍍𑌧𑌃, 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌭𑌾𑌵𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿, 𑌤𑌦𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍀𑌤𑌂 𑌇𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍॥

𑌅𑌥 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌤𑌃 𑌪𑌰𑌶𑌿𑌵𑍇𑌨 𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌃, 𑌤𑌦𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌃, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌇𑌤𑌿 𑌤𑍍𑌰𑌯𑌃 𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑌿 𑌕𑍃𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌯𑌂 𑌅𑌪𑌿 𑌕𑍃𑌤𑌵𑌨𑍍𑌤 𑌏𑌵, 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌕𑌸𑍍𑌯 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑍇𑌵 𑌪𑌰𑌂; 𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌂 𑌅𑌪𑌿 𑌪𑌰𑌸𑍍𑌯𑍈𑌵॥

𑌤𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌵𑌿𑌰𑌾𑌟𑍍 [illegible] 𑌯𑌃, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌸𑌂𑌕𑌰𑍍𑌷𑌣𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌾𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌃, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌰𑍁𑌦𑍍𑌰𑌭𑌵𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌕𑌾𑌃 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌅𑌪𑌿 [illegible] 𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌦𑌿 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿, [illegible] 𑌅𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌯𑌃॥ 𑌏𑌵𑌂 [illegible] 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌃 𑌪𑌶𑌵𑌃 𑌏𑌵॥

𑌯𑌥𑌾 𑌶𑌿𑌵𑌪𑍁𑌰𑌾𑌣𑍇:— 𑌸𑍃𑌜𑌤𑍍𑌯𑍇𑌷 𑌈𑌶𑌸𑍍𑌯 𑌶𑌾𑌸𑌨𑌾𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 [illegible], 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌪𑌾𑌲𑌯𑌤𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌃 [illegible], 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌸𑌂𑌹𑌰𑌤𑍇 [illegible], 𑌸𑍃𑌜𑌤𑍍𑌯 [illegible] 𑌇𑌤𑌿॥

வனவംஸதி விஷ்ணுவாதீனாஷ்டி கேஷவிஸ்ஸா ஷ்ரு ஷ "த்ரி ஊ௫ த்ரய்யிவொ நாராயணஃ" உத்யுக்த ஸம் கஷணாதி த்ரி வ்யூ௫ ஹா யிவொ நாராயணஃ உத்யெயூ ஶ்ரா ஹ்யாஃ: ஸவம் ஸப்ர ஹ்ம ணஸ்ஹ: கய ஊயூஃ ஸவயூஸா ஷ்ரு விரோய வரிஹாய காரணம்॥

ஸ தாவதாஸீவஸவ த்ரி ஊ௫ த்ரய்யிக உதி ஸித்தம்॥

## பதிவிசேஷ நிரூபணம்.

இச் சம்ஸ்கிருத வசனங்கள் பலர்க்கு உபயோகப் படாமையால், இவ்வளவும் எஞ்சிய பாகமும் தமிழில் மொழிபெயர்த்துக் காட்டப்படுகின்றன.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபமாகிய பதிக்கு இயல்பானே குறியும் உருவும் இல்லை; மாயாகாரிய மாகிய குணங்களுமில்லை; இதனாற்றான் அப்பதியை நிர்க் குணர் என்று வழங்குதல் உளதாயிற்று; இங்ஙனமாகிய பதியை அடியவர்கள் துதித்தல் தியானித்தல் பூசித்தல் முத லிய பயனின் பொருட்டு அப்பதிக்குக் குறி உரு முதலியன உபசாரத்தாற் கற்பிக்கப்படுகின்றன. அங்ஙனங் கற்பித் தலும் அவரது இச்சைப்படியேயாம்.

வேதாகமங்களிலே பதிக்கு வழங்கப்பட்ட விசேஷ நாமங்கள் சிவன், சம்பு, மகேச்சுரன் முதலிய பலவாம். சிவ நாமங்களின் நிருத்தி அதர்வசிரசின் சிகை முதலியவற்றால் விளங்கப்பட்டது. சிவபெருமானுடைய ரூபங்களென்று வேதாகமங்களிலே விளக்கப்பட்ட சதாசிவரூபம், மகேச்சுர ரூபம் பஞ்சவிம்சதிரூபம் என்பனவும் பிறவும் ஆகிய ரூபங் களியல்புகள் எல்லாங் குருவுபதேசக் கிரமத்தால் அறியற் பாலன.

சிவபெருமானுடைய ஆஞ்ஞையினலே தொழிலியற்று கிற பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் மூவருங் குண மூர்த்திகளெனப்படுவர். சிவரூபமோ குணமூர்த்திகளைக் கடந்ததாம்.

அச்சிவரூபமுஞ் சுருதியினலே "உமாஸஹாய0" என் றற் றொடக்கத்தனவற்றிலுங் கைவல்லியோப நிடதத் திலும் விளக்கப்பட்டது. இவ்வாறு சூதசங்கிதையிலும் "உமாஸ்" என்பதனல் விளக்கப்பட்டது தாபநீயோபநிட தத்திலே சுகார ம் வ்ஹாணம்' என்பதனல் அகார முத லிய மூன்று மாத்திரைகட்கும் வாச்சியமாகிய திரிமூர்த்தி களையும் உந்தி இதயம் புருவநடு என்பவற்றிலுபாசிக்குமாறு விதித்து முழுப் பிரணவத்தின் வாச்சியமாகிய சிவனை துவாதசாந்தத்தில் உபாசிக்குமாறு விதித்தல் செய்யப் பட்டது. அது யோகயாஞ்ஞ வல்கதியத்தில் "சுக்ஷ" எனவும் ஸ்காந்தத்தில் "வ்ஹா எனவும் இனிது விளக்கப் பட்டது. இவ்வாறே கூர்மம் முதலிய புராணங்களிலும் வச னங்களுள. இங்ஙனமே சிவபெருமான் இயல்பான உருவ மிலர் பயனின் பொருட்டு உருவமுடையராவர். அந்த உருவ முந் திரிமூர்த்திகளைக் கடந்தது என்பது சாதிக்கப்பட்டது பரசிவனல் ஆதியிலே படைக்கப்பட்டவராகிச் சிவனுடைய ஆணையின்படி அதிகாரம் பெற்றுத் தொழில் செய்கின்ற குணமூர்த்திகள் மூவரும் ஆதிபிரமா ஆதி விஷ்ணு ஆதி ருத்திரன் என்னும் பெயர் பெறுவர். அவருள் ஒவ்வொரு வரும் படைப்பு முதலிய முத்தொழில்களையுஞ் செய்வர் அத்தொழில்களுள் ஒவ்வொன்று ஒவ்வொருவருக்குப் பிர தானமாம். ஏனையன அப்பிரதானங்களாம்.

ஆதிப்பிரமாவுக்கு விராட்காலன் புருஷன் என்னும் மூவரும் ஆதிவிட்டுணுவுக்குச் சங்கர்ஷணன் பிரத்தியுமினன்

அநிருத்தன் என்னும் மூவரும் ஆதி ருத்திரனுக்கு அரன் மிருடன் பவன் என்னும் மூவரும் ஏவலாளராய்த் தொழி லியற்றுபவராவர்.

இவர்கள் தக்கன் மனு யமன் என்பவர்களோடு படைத்தல் காத்தல் அழித்தல்களில் முறையே மூவர் மூவர் அவாந்தர அதிகாரிகளாய் அவாந்தரப் பிரமா அவாந்தர விட்டுணு அவாந்தாருத்திரன் எனப் பெயர் பெறுவர். இங்ஙனங்கூறிய ஒன்பதுவியூகர்களுக்குந் தலைவர் சிவ பெருமானே.

இவ்வாறு சிவபுராணத்தில் [illegible], என விளக்கப்பட்டது.

இங்ஙனமாகவே விட்டுணுபுராணம் முதலிய சில நூல்களிலே திரிமூர்த்திகளுக்குந் தலைவன் நாராயணன் என்று சொல்லிய இடங்களிலே சங்கர்ஷணன் முதலிய மூன்று யூதர்களுக்குந் தலைவன் நாராயணன் என்பது கருத்தாகக் கொள்க. இவ்வாறு கொள்ளுதல் சகல சாஸ்திர விரோதத்தின் பரிகாரத்துக்குக் காரணமாம்.

இதனாற் சிவபெருமானே திரிமூர்த்தியதிபர் என்பது சாதிக்கப்பட்டது.

இனி வேதத்திலே ஒவ்வொரு வாக்கியங்கள் பிரமன் விட்டுணு இந்திரன் அக்கினி வருணன் முதலிய பல தேவருக்குந் தலைமை கூறி அவரவருக்கு வணக்கமுங் கூறுகின்றனவே, ஆனபின் சிவபெருமான் ஒருவரே கடவுளெனத் தாபிப்பது எப்படியெனில் அது கூறப்படுகின்றது.

வேதமானது விச்சுவாதிகரான அநாதிக் கடவுள் ஒருவரே என்பதையும், அவர் பரசிவனே என்பதையும், மற்றை

யோர் பதிகளல்லர் என்பதையும், அப்பரசிவனை உபசானை செய்யுங் கிரமத்தையும், பிறவற்றையும் பற்பல சாகைகளாலும் பற்பல நியாயங்காட்டி நிச்சயித்துணர்த்தும் அவ்வாக்கியங்களின் அருத்தம்; தாற்பரிய நிர்ணய லிங்கங்களாறினும் உபவிருங் கணங்களாலும் நிச்சயிக்கப்படும்.

வேதத்தின் ஒவ்வோர் வாக்கியம் மற்றைத் தேவர்களுக்கு ஒவ்வொரு விஷயத்திலே அளவுபட்ட தலைமை உண்டென்று கூறி, அவ்வத் தலைமைக்குத் தக்க வணக்கமுங் கூறும். அத்தேவரெல்லாருஞ் சிவனாற் கொடுக்கப்பட்ட அதிகாரமாகிய தலைமையையே உடையவர்களாதலால், அவ்வதிகாரம்பற்றி அவர்களுக்குக்கூறிய துதிகளெல்லாஞ் சிவஸ்துதிகளேயாகும். ஆதலாற் சிவனொருவரே அநாதிக் கடவுளென்பது சதுர்வேதங்களிலே மிக விளக்கமாகத் தாபிக்கப்பட்டிருக்கின்றது என்பதே முடிபு.

அன்றியும் பலரும் கடவுளரெனக் கொள்ளின், அவர்கள் ஒருவரையொருவர் ஆளுவரென்னுந் தோஷவசனம் வருமாதலானும், ஒரு காரியத்தை வெவ்வேறாகிய பலர் செய்து முடித்தல் கூடாமையானும், அவருள் ஒருவராயினுஞ் சர்வேச்சுவரர் எனப்படுதல் கூடாமையானும், ஒருவரே கடவுள் என்ற வாக்கியத்தால் விரோதிக்கப்படலானும், அது சிறிதும் பொருந்தாது. விரோதித்த பல வாக்கியங்களுட் சொல்லாற்றற் சிறப்பாலும் உபவிருங் கணங்களாலும் வலியுடைய வாக்கியமே செம்பொருளுடை.யதெனவும், ஏனையன வேறு பொருளுடை.யன எனவுங் கோடல் தகுதியாதலின், சிவபர வாக்கியங்களே வலியுடையன என்பது சாதிக்கப்படும்; படின், மற்றைத்தேவர்மேற் செல்லும் வாக்கியங்கள் சுருங்கி வேறு பொருளுடையனவா

மென்பது முடியுமாதலிற் பரமசிவனே பரமபதி என்பது வியவஸ்தாபிக்கப்படும்.

சில வேதவாக்கியங்கள் வருமாறு:—

அதர்வ சிகையிலே 𑌕𑌿𑌂 𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌕𑍋 𑌵𑌾 𑌧𑍍𑌯𑌾𑌤𑌾 𑌕𑌶𑍍𑌚 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 என்னும் மூவினுக்களுள் முன்னிரண்டிற்கும் உத்தரங்கூறிய பின் மூன்றுவதற்குக் கூறிய உத்தரம்:—

𑌧𑍍𑌯𑌾𑌯𑍀𑌤𑍇𑌶𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂, 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁 𑌰𑍁𑌦𑍍𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌸𑌹 𑌭𑍂𑌤𑍈𑌃, 𑌨 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌾𑌂 𑌧𑌾𑌤𑌾 𑌧𑍍𑌯𑌾𑌤𑌾, 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌤𑍁 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 𑌶𑌂𑌭𑍁𑌰𑌾𑌕𑌾𑌶𑌮𑌧𑍍𑌯𑍇" 𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑌭𑍍𑌯 𑌶𑌿𑌵 𑌏𑌕𑍋 𑌧𑍍𑌯𑍇𑌯𑌃 𑌶𑌿𑌵𑌂𑌕𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌾𑌥𑌰𑍍𑌵𑌶𑌿𑌖𑌾 என்பதாம்.

இந்தச்சுருதி சிவனொருவரே தியானிக்கப்படுதற்கு உரிய பரமபதியெனக் கூறி, மற்றைத்தேவர் தியானிக்கப் படுவரல்லர் என்னுங் கருத்தைத் துணிவிக்கும்பொருட்டு, மற்றைச் சகலப் பிரபஞ்சத்தினும் பிரமன் விட்டுணு உருத்திரன் இந்திரன் என்னும் நால்வருக்குந் தலைமைகூறி, அவர்களுடைய தலைமைகள் அளவுபட்டவைகள் என்பது விளங்க, அவர்கள் பூதேந்திரியங்கள் போல உற்பத்தியுடையவரென்று கூறியது. இவ்வுற்பத்தியுடைமையாகிய குற்றம் ஈசானரிடத்தில் இல்லையென்று காட்டுதற்பொருட்டு, இந்த இடைக் காரணங்களைத் தமது சங்கற்பத்தாற் படைத்த ஆதிகாரணமாகிய ஈசானர் உற்பத்தியில்லாதவர் என்று கூறி, ஈசானர் சர்வேச்சுவரர் சம்பு சிவன் என்னும் நான்கு சொற்களாலும் குறித்த விசேடியப்பொருளை வேறுபடக்

கொள்ளாதபடி செய்து, மற்றைத் தேவர்களைத் தியானிக்க வேண்டா என விலக்கி, அச்சிவனைத் தியானிக்கப்படுவோர் எனத் தொடக்கத்திற் கூறிய கருத்தையே வலியுறுத்தும் பொருட்டு மீட்டுங்கூறி, அப்பால் வேறொன்றுங் கூறாது முடிந்தது. ஈசானர் முதலிய சொற்கள் யோகரூடியாற் சிவனை உணர்த்தும்.

இச்சுருதியிலே ஆகாச மத்தியத்திலே என உபாசனு ஸ்தானங் கூறப்பட்டது. இங்கே ஆகாசம் என்பது பரமாகாசமாகிய கைலாசமென்னும் பெயர்பெற்ற பரசிவலோகமாம் அதனால் இருதயகமலம் சூரியவிம்பம் முதலிய எவ்வெவ்விடங்களிலே சிவனைத் தியானிக்க வேண்டினும் அவ்வவ் விடங்களனைத்தினும் ஒளிவடிவாகிய கைலாசத்தைப் பாவித்து அதன் மத்தியத்தில் இருப்பவராகச் சிவனைத் தியானிக்க என்பது பெறப்பட்டது.

இச்சுருதி சிவனது தலைமையைப் பிற தேவர்களிலிருந்து பிரித்துக் கூறுதலானும், சிவனது தலைமை அளவுபடாததென்பதை யுத்திகாட்டி விளக்கலானும், இது மோக்ஷ சாஸ்திரமாகிய ஞான காண்டத்திலுள்ள சுருதியாதலானும், இப்பொருள் கூறிவிட்டுத் தான் முடிந்தமையை உணர்த்தலானும் இச்சுருதி மிக வலியுடையது.

பிறதேவரை உணர்த்துஞ் சுருதி அவரவருடைய தலைமைகளை மற்றையோரினின்று பிரித்துக் கூறுமையானும், யுத்தி கூறுமையானும், கிரியாகாண்டத்திலே மாத்திரம் இருத்தலானும், ஆண்டுத் தம்முடிவு கூறுமையானும் அச்சுருதிகள் வலியில்லாதனவாம். ஆதலின் "வலியசுருதியே பிரசித்தப் பொருள்படும்; வலியில்லாத சுருதிகள் வலியதினாலே சுருக்கப்பட்டு வேறுபொருள்படும்" என்ற நியாயப்

படி மிக வலியதாகிய இந்த அதர்வசிகையே சுருங்காது நின்று பிரசித்துப் பொருளுணர்த்தும்.

க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:, ஸம்யுக்தமேதத் க்ஷரமக்ஷரஞ்ச வ்யக்தாவ்யக்தம் பரதே விஶ்வமீஶ:"||

இ - ள். சடப்பொருளெல்லாம் அழிவுள்ளது. சீவன் அழிவில்லாதது. அழிவுள்ள சடப்பொருளையும் அழியாத ஆன்மாவையும் ஹரன் என்னும் பெயருடைய கடவுள் ஒருவரே ஆளுகின்றார்- வெளிப்பட்ட சடப்பொருள்களும் வெளிப்படாத ஆன்மாவுங்கூடிய சகல உலகத்தையும் கடவுள் தாங்குகிறார்.

"யதா தமஸ்தந்ந திவா ந ராத்ரி: ந ஸந்ந சாஸச்சிவ ஏவ கேவல: ததக்ஷரம் தத்ஸவிதுர்வரேண்யம், ப்ரஜ்ஞா ச தஸ்மாத் பிரதானப்பொருள். ப்ரஸ்ருதா பிறந்தது.]

இங்கே இருளென்பது மாயை. அது காரணத்தை ஒடுக்கிக் காரணரூபமாத்திரமாய் இருந்தகாலம் மகாப்பிரளய காலமாம். அப்போது மற்றைவஸ்துக்களெல்லாம் மாயையில் ஒடுங்கினமையானும், ஆன்மாக்களெல்லாரும் சரீரம்விட்டு அறிவுதொழில் ஒழிந்திருத்தலானும், முத்தான்மாக்கள் சுவானுபூதியிற்றூங்குவதன்றி மற்றொன்று செய்யாராதலானும், மற்றைச் சிருட்டி செய்தற்குப் பரமகாரணமாய்த் தம் முற்றறிவு முற்றுத்தொழில் குன்றுதவராய்ச் சர்வகர்த்தாவாய் இருக்குஞ் சிவனொருவரே அக்காலத்தும் இருந்தார் எனக் கூறி, இச்சுருதி சிவனைச் சர்வகாரணமானவர் எனக் காட்டுகின்றது. இங்கே பிரசித்தமான சிவநாமங் கூறப்பட்டது.

இந்தச் சுவேதாச்சுவதரசாகையிலே பாசுபதம் எனப் பெயரிய சைவஞானம் விரித்துரைக்கப்பட்டது.

இனிப் புருஷசூத்தம் விட்டுணுவைத் துதிப்பதாம் எனச் சிலர் கூறுபவாலோ எனின், ஆண்டு விட்டுணுவின் விசேடநாமம் ஒன்றுமின்மையானும், புருஷன் என்னும் பெயர் பொதுவே யாதலாலும் அவர் கூற்றுப் பொருந்தாததேஎன்க. மற்று முடிபென்னையெனின், புருஷசூத்தத்திலே "உமாஸ்ரு தஸ்ய ஹ்ரஸ்யாந:" எனச் சிவநாமம் இருத்தலானும், உருத்திர சூத்தத்தின் மந்திரங்கள் பல இப்புருஷசூத்தத்தும் இருத்தலானும், "நமகத்தையுஞ் சமகத்தையும் புருஷசூத்தத்தையுஞ் செபிப்பவர் மகாதேவனாகிய சிவனை அடைவார்" என்பது போதாயந சூத்திரத்திலும் புராணங்களினுங் கூறப்பட்ட உண்மையாகலானும், சிவனுக்கு அபிஷேகஞ் செய்யும் மந்திரங்களுள் இப்புருஷ சூத்தமும் ஒன்றுக் கொள்ளப்படலானும், இதுவுஞ் சிவனையே துதிப்பதாம் என்பதே முடிபென்க.

இனி அதர்வசிரசின் முதற் கண்டத்திலே "தெவாஹ வைஸ்வகும் லொகமாயந் தெதெவாரு த்ரமப்ருச்சந்" என்று தொடங்கி, "கொ ஹவாநிதி ஷ்ரவுஷவதொ தெவாந் ஷுஷிலொ ஷுவீஷ ஸஹலெகஃ ஷுயச ாஸம் வதஜா ீவ ஹவிஷ்ாீவ நாந்ஃ கஸ்விந் ஃதொதாவ்யதி ஸித்தஃ" என்பதுமுதல், வணவம்ரோம் யொவெஷ ஸவஜாநுவெஷ" என்பது வரையாய சிவவசனத்தால் விச்சுவாதிகத்துவம் விளக்கப்பட்டது. பின்பு "ததொ தெவா ரு த்ரம் நாபஸ்யந் தெ தெவா ரு த்ரம் த்யாயந்தி ததொதெவா ஊர்த்வபாஹவஃ ஸ்துவந்தி" எனத் தேவரால் உபாசிக்கப்படுபவராந் தன்மை உணர்த்தப்பட்டது.

பின்பு இரண்டாங்கண்டத்திலே யோ வை ருத்ர: ஸ பகவான் யச்ச ப்ரஹ்மா தஸ்மை வை நமோ நம:” என்பது முதலியவற்ருற் பிரமா விட்டுணு முதலியோரும் அவரால் அடைந்த விபூதியுடையராதல் உணர்த்தப்பட்டது.

மூன்ரும் நான்காங் கண்டங்களில் அவருடைய நாமங்களுக்கெல்லாம் நிருத்திகூறுமுகத்தாலும் அவரே பரமபதியென்பது இனிது விளக்கப்பட்டது.

ஐந்தாங்கண்டத்தில் அவரை உபாசித்தலாற்ருன் முத்தியாம் என்று பாசுபதயோகம் என்னும் உபாசனுப் பிரகாரம் உணர்த்தப்பட்டது. இப்படியே அதர்வசிரசின் முதைெட்டு முடிவுவரை சிவமகிமையே காட்டப்பட்டது.

இருக்குவேதம் க-ம் அட்டகம், 3-ம் அத்தியாயம் 26-ம் வருக்கம் “கத்ருத்ராய ப்ரசேதஸே மீடுஷ்டமாய தவ்யஸே வோசேம ஶந்தமம் ஹ்ருதே”

இ-ள். உயர்ந்தஞானமுடையவரும் வேண்டியவற்றைப் பொழிகிறவரும் மிகமுதியோரும் எங்கள் இருதயத்தில் உள்ளவருமாகிய உருத்திரருக்கு மிகச் சுகஞ்செய்கின்ற தோத்திரத்தை எப்போது சொல்லுவேம் எ-ம்.

இங்ஙனமே நால் வேதத்து ஞானகாண்டத்துங் கிரியாகாண்டத்தும் அதர்வசிரசு அதாவசிகை சுவேதாச்சுவதரம் கைவல்லியோபநிடதம் சதருத்திரீயம் புருஷசூத்தம் மாண்டூக்கியம் முதலிய அளவிறந்த சாகைகளெல்லாவற்றிலும், சிவபெருமானெருவரே விச்சுவாதிகரும் விச்சுவசேவியருமாகிய பரமபதி யென்பது இனிது விளக்கப்பட்டது. அங்ஙனமே சைவாகமங்கள் இருபத்தெட்டும் உபாகமங்கள் இருநூற்றேழும் புராணங்களும் இனிது விளக்குதல் யாருமறிந்த உண்மை.

## சைவசம்பிரதாயக் கிரமம்.

சர்வஞ்ஞத்துவ சர்வகர்த்திருத்துவ யுத்த பரமசிவன் சத்திமானுகியபோது நிட்களசாந்தரேயாகிப், பிரபஞ்சோற்பத்தி நிமித்தம் உத்தியோகவானுகியபோது சிற்சீரமுடைய சதாசிவனுகிப், பிரவிருத்திமானுகியபோது ஈசுவரனுகி, இப்படி முத்திறமுடைய ஒருவரேயாயிருப்பர்; அந்தச் சதாசிவனுற் கலங்குவிக்கப்பட்ட உபாதானமாகிய விந்துவிலிருந்து சைவகாயத்திரி சத்திதோன்றிற்று. அச்சத்தியால் அதிட்டிக்கப்பட்ட சைவசந்தானமானது வித்தியேசர் முதலிய தேவமுறையால் வழிபடுத்தி நாட்டப்பட்டது; எங்ஙனமெனில், விந்து கலங்கியபோது அதிசுத்த வைந்தவ சீர விஞ்ஞானகல மத்திய அபர முத்தர்களாயுள்ள அநந்தர் முதலிய வித்தியேசர் எண்மர் தோன்றினர்; அவருட் டலைவராகிய அநந்தேசரால் மாயை கலங்கியபோது, மாயாமய சீரப் பிரளயாகல மத்திய அபர முத்தராய பிரமாண்ட மத்திய கைலாசாதிபதியாயுள்ள சிறீகண்ட உருத்திரர் தோன்றினர். அந்தச்சிறீகண்டராற் பிரகிருதிமய சுத்த சீரராய சகல மத்திய பெத்தராயுள்ள விட்டுணு தோன்றினர். விட்டுணுவாற் பிரமாவும், பிரமாவால் இந்திரன் முதலிய சகல தேவரும் பிறருந் தோன்றினர். மீளவும் பரசிவனனவர் சிறீகண்டப் பிரேரகராகு மனந்தேசருடைய மூர்த்தியாத்துமாவில் அந்தராத்துமாவாகி, அந்த அநந்தேச மூர்த்தியாத்துமாவைப் பிரமாண்டாந்தராதிபதியாகிய சிறீகண்ட மூர்த்தியாத்துமாவில் அந்தராத்துமாவாக்கி, அந்தச்சிறீகண்ட சீர சரீரியாயிருந்து பிரமாதி சகலருக்கும் நிக்கிரகானுக்கிரகஞ் செய்வர். திரும்ப அந்தச் சிறீகண்ட சீரசரீரியாகிய சிவனுல் அதிசுத்தராகிய துருவாசமுனிவர் தோன்றினர். மீட்டு

மந்தச்சிறீகண்டசிவனுடைய சங்கற்பரூபசிருட்டியாற் பிரமாவின் முகங்களிற் கௌசிகர் முதலிய சிவப்பிராமணர் தோன்றினர். இப்படி முறையானே குருவாசராற் சைவசந்தானந் தோன்றிற்று. சிவசத்தி சங்கற்பமாகிய சிவாஞ்ஞை யென்னும் இலக்கணமுடையதாய் அருத்தவடிவாய் வாச்சியமாயுள்ள போதரூபமாகிய சிதாகமசாத்திரத்தைச், சதாசிவனுனவர் தம்மாலே சிருட்டியாரம்ப காலத்திலே விந்துவினின்று பிறப்பிக்கப்பட்ட நாததத்துவ பரிணாமரூபமாகி அநாகத பரத்துவனி என்னுமிலக்ஷணமுடையதாய்ச் சுத்த வடிவாய் வாசகமாயுள்ள போதவியஞ்சக ரூபமாகிய சடாகமசாத்திரத்திலேற்றி, ஆன்மாக்களிடத்திற் செலுத்தி வழங்குவிப்பர். இங்ஙனமே சகலசாத்திரங்களுஞ் சதாசிவனுல் நாதரூபமாக ஆதியிற் சிருட்டிக்கப்பட்டன.

அந்தச் சதாசிவனுனவர் தற்புருட முதலிய நான்கு முகங்களில் இருக்கு முதலிய நான்கு வேதங்களைப் பிறப்பித்து முறையே தற்புருடாகோர வாமசத்தியோசாத சமுற்பன்னராகிய ஈசருத்திர விட்டுணு பிரமர்களால் அவ்வேதங்களைப் பரிணமிப்பித்துச் சந்தோலக்ஷண சாத்திரமாக்கினர். நான்கு வேதங்களிலுள்ள இலௌகிகம் வைதிகம் அத்தியான்மகம் என்னும் முப்பாகங்களையும் பிரமா முதலிய மூவரும் பிரணயித்தனர். சதாசிவனுலேவப்பட்ட தற்புருடசமுற்பன்னராகிய ஈசராலேவப்பட்டு மாயை வித்தை காலமென்பவற்றில் வசிக்கு மூன்றுருத்திரர் பாசுபதம் மகாவிரதம் காபாலம் என்னு மூன்று நூலாகிய அதிமார்க்கநூலைப் பிரணயித்தனர். சதாசிவனுனவர் மேன்முகமாகிய ஈசான முகத்தினின்று சுத்தநாதரூபமாகிய ஆகமத்தைப் பிறப்பித்து, வேறு கருத்தாக்களைப் பரம்பரை முறையாலேவாது சாக்ஷாத்தாகத் தாமே நேரே நின்று அபரவிந்து பிரணவம்

மாதிருகை பதம் வாக்கியம் சந்தம் என்னும் பரிணாம பங்தியையடைவித்து, அவ்வாகமத்தைச் சங்கோலக்ஷண சாத்திரமாக்கிக் குருபரம்பரையிலுபதேசித்துச் செலுத்தினர். இதுவே சாத்திர தாரதம்மியகாரணம் அவ்வாகமம் சதாசிவனால் அநந்தேசருக்கும் அநந்தேசராற் சிறீகண்டருக்கும் சிறீகண்டரால் தேவருக்கும், தேவரால் முனிவருக்கும், முனிவரால் மனுடருக்கும், மனுடரால் மனுடருக்கும் உபதேசிக்கப்படும். இப்படியே உபதேசிக்கப்படுங்கால் உளவாகிய சம்பந்தம் ஆறும், முறையே பரசம்பந்தம் மகாசம்பந்தம் அந்தரால சம்பந்தம் எனப் பெயர் பெறும். நாத பரிணாமசத்தமானது ஆகாசம் வாயு முதலியவற்றாலாகிய பௌதிக சத்தத்தால் விளக்கப்பட்டதாகியே நம்மனோர் சகலருக்குஞ் செவிப்புலனும். அது நிற்க.

சிறீகண்டரிடத்திலே தீக்ஷையடைந்து ஆகமோபதேசம் பெற்றவராகிய ஸ்ரீ துருவாச முனிவர், பூலோகத்திலே நாவலந்தீவிலே, நடுவிலுள்ள மேருவுக்குத் தெற்குப் பாகத்துத் தேசத்திலேயுள்ள இமயகிரிக்குத் தென்பாகத்திலே, பாரதவருடத்திலே, பரதகண்டத்திலே, கோதாவரியாற்றங் கரையிலே, சைவவாசபூமியாகியமந்தரகாளிபுரத்திலே, மந்தர காளீசராகிய சிவனுடைய சந்நிதியிலே, கதம்பவிருக்ஷ சமீபத்திலே ஆமாத்தகமடமென்னும் பெயருடைய ஒரு தபச் சாலையைத் தாபித்து வசித்தார்.

அத்துருவாசரால் தீக்ஷிக்கப்பட்டவராகி அந்த ஆமர்த்தக மடத்திலே வசித்த கௌசிபர், காசிபர், அகத்தியர், பாரத்துவாசர், கௌதமர் என்னுஞ் சிவசிருட்டப் பிராமண முனிவரைவரும், கைலாசசிகரவடமூலவாசியராகிய தக்ஷிணாமூர்த்திரூப ஸ்ரீகண்டரை உபாசித்து அவரால் ஆகமோப

தேசம் பெற்றுக்கொண்டனர். அவர்களுடைய சீடர்களாகிய சனற்குமாரர், சனகர், சனாதனர், சனந்தனர் என்பவர்களும் அவ்வாறே சிறீகண்டரை உபாசித்து ஆகமோபதேசம் பெற்றனர். இவர்கள் பொருட்டு ஆமாத்தக மடத்தினின்று இரண்பத்திரம், கோளகி, புஷ்பகிரி என்னும் மூன்று மடங்கள் செய்யப்பட்டன. இந்நான்கு மடங்களும் மந்தரகாளீசருடைய சந்நிதியில் உள்ளன.

இவற்றுள் ஆமர்த்தகமடத்திற்கு அதிபதி சனற்குமாரர்; விருக்ஷங் கதம்பம்; இவரது சந்தானத்துள்ளார்க்கும் இங்ஙனமே. புஷ்பகிரிமடத்திற்கு அதிபதி சனகர்; விருக்ஷம் மருது; இவர் சந்தானத்தார்க்கும் இங்ஙனமே. கோளகி மடத்திற்கு அதிபதி சனாதனர்; விருக்ஷம் நாவல்; இவர் சந்தானத்தார்க்கும் இங்ஙனமே. இரணபத்திரமடத்திற்கு அதிபதி சனந்தனர்; விருக்ஷம் ஆல்; இவர் சந்தானத்தார்க்கும் இங்ஙனமே.

இனிச் சிவ சிருட்டியாலே தோன்றிய கௌசிகர் காசியபர் முதலியோரும், கேவலப் பிரமசிருட்டியாலே தோன்றிய கௌசிகர் காசியபர் முதலிய சாமானியப் பிராமணரும் பெயரால் ஒப்பராயினும் பொருண்மையால் வேறுவேறுவார். இங்கே கூறப்பட்ட கௌசிகர் காசியபர் முதலியோர் சிவ சிருட்டியினாலே தோன்றினவராய்ச் சிவபஞ்சவத்திரங்களிலே தீக்ஷிதராயினவரே என்க.

எழுபத்தொரு சதுர்யுகங்கள் கூடியகாலம் ஒருமனுவந்தரமாம்; பதினான்கு மனுவந்தரங்கள் பிரமாவுக்கு ஒரு பகலாம்; இரவும் அவ்வளவே. பிரமதினம் முந்நூற்றறுபது ஒரு பிரம வருஷமாகிய கற்பமாம். நூறு கற்பங்களே ஒரு பிரமகாலமாம்.

இப்போதுள்ள பிரமாவுக்கு ஐம்பது கற்பங்கள் கழிந்தன; ஐம்பத்தொராங்கற்பம் நிகழாநின்றது. இதிலே ஒருவர் பின் ஒருவராய் ஆளுமியல்பினராய் சுவாயம்புவர், சுவாரோசிடர், உத்தமர், தாசமர், இரைவதர், சாக்ஷுஷர், வைவச்சவதர், சூரியசாவாணி, தக்ஷசாவர்ணி, பிரமசாவர்ணி, தருமசாவர்ணி, உருத்திரசாவர்ணி, ரோச்சியர், பாவ்வியர் என்னும் பதினன்கு மனுக்களுள் ஆறுமனுக்களின் காலங் கழிந்தன; ஏழாமவராகிய வைவச்சுவதமனுவின் காலம் நிகழுகின்றது. இம்மனுவுக்குரிய எழுபத்தொரு சதுர்யுகங்களுள் இருபத்தேழு சதுர்யுகங்கள் முடிந்தன; இருபத்தெட்டாஞ் சதுர்யுகத்திலும் முன்மூன்று யுகங்கள் முடிந்தன; நான்காவதாகிய கலியுகம் நிகழுகின்றது. கலியுகத்தின் நான்கு பாதங்களுள் ஒவ்வொரு பாதத்துக்கு வருஷம் ஒரிலக்கத்தெண்ணுயிரம். இப்போது நிகழ்வது கலியுகத்தின் முதலாம் பாதமேயாம்.

ஆமர்த்தகமட சம்பிரதாயத்துத் தோன்றிய கௌசிகர் முதலிய முனிவர் முதலாம் மனுவாகிய சுவாயம்வபுமனுவின் எல்லேவரையும் இருந்தனர். சுவாரோசிடமனுவின் சமயத்திலே பிராசாபத்தியமுனி முதலியோர் அம்மடங்களிற் சைவசம்பிரதாய நாயகர்களாய் இருந்தார்கள். அவர்களுள் நான்காச்சிரமங்களும் நான்குசிவாச்சிரமங்களும் உள்ளன. அப்படியே மற்றை மனுவந்தரங்களிலும் அச்சந்ததியார் இருந்தனர். நிகழாநின்ற கலியுகத்தின் ஆரம்பத்திலே அச்சைவப்பிராமண பாரம்பரியத்திலே ஸ்ரீவியாபகசம்புகுரு முதலியோர் சம்பிரதாய பதிகளாயிருந்தனர்.

ஒருகாலத்திலே இராசேந்தர சோழன் என்னும் அரசன் வடக்கே சென்று கங்கையாடி மீளுகின்றுழி அங்குள்ள

சைவவரர்களைத் தரிசித்து, உபசரித்து அழைத்து வந்து, தன்னாட்டினுங் காஞ்சிமத்தியத்திலும் பிறவிடங்களிலும் இருத்தினான். பிரமசிருட்டராகிய நால்வருணத்தவரும் பிறரும் அச்சிவப்பிராமணரிடத்திலே தீக்ஷைபெற்று ஆகமோபதேசம்பெற்றுச் சைவராயினர்.

திருச்சிற்றம்பலம்.

சங்கரபண்டிதர் சற்பிரசங்கம்.

முற்றிற்று.

உ

கணபதி துணை.

# மிலேச்சமத விகற்பம்

## உபோற்காதம்.

அநாதியே முற்றறிவுமுதலிய ஆறுகுணங்களும் நிறைந்த பதியாகிய பரசிவனால் ஆதிகாலத்தில் அருளிச்செய்யப்பட்ட வேதம் ஆகமம் என்னும் முதனூல்கள், அவரருள் பெற்ற குருபரம்பரை வழியாக வந்து, எக்காலத்தும் எத்தேசத்தும், ஓரியல்பினவாய், ஒரு பொருளனவாய், ஒரு நிலையனவாய் வழங்கிவருகின்றன. அவைகளால் அறிவிக்கப்படுஞ் சற்சமயமாகிய சைவசமயமும், அப்படியே, தீயின் முகத்தழியாத தங்கம் போலவும், வாதமுகத்தசையாத வச்சிரமலை போலவும், மேகமுகத்தழுக்கடையாத சூரியன் போலவும், எக்காலத்தும் ஒரு முகமாய் நின்று, வந்து நேர்ந்த பகையின் முகத்தொளிபெற்று, வளர்ந்து விளங்கிவருகின்றது.

இதற்கு விரோதமாகப், பதியாற் பரம்பரை முறையாற் செலுத்தப்பட்ட சிற்றறிவினர்களாகிய பசுக்களினாலே, மிக அபக்குவர்களாகிய அதிகாரிகளுக்கு மாத்திரஞ் சிறிதே உபயோகமாகும்பொருட்டுச் செய்யப்பட்ட கற்பிதமாகிய நூல்களும், அவைகளால் அறிவிக்கப்படும் புன்சமயங்களும் காலந்தோறுந் தேசந்தோறும் வேறுபட்டுப், பலவியல்பின வாய்ப் பல பொருளனவாய், ஒருநிலையின்றிப் பல முகமாகப் பிரிந்து, தளர்ந்து வருகின்றன.

அப்படியே, முற்காலத்திலே, உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சகம் முதலிய அசற்சமயங்கள், சைவசமயத்தோடு பகைத்து, மிக ஓங்கி வளர்ந்து பெருகினவாயினும், சிலநாட்குள்ளே அவையெல்லாம் நிலைகெட்டுச் சுருங்கி மறையச், சைவசமயமே விளங்கி வழங்கிவந்தது.

இக்காலத்திலே, அந்த அசற்சமயங்களெல்லாந் திரண்டு ஒரு வடிவெடுத்தாற்போன்ற மிலேச்ச மதமென்னும் அசற்சமயமானது, முளைத்துவந்து, மிக ஓங்கி வளர்ந்து, சைவசமய ஞானத்தை மூடிப் பேரிருள்போல் எங்குஞ் சூழ்ந்து, எல்லாருக்குங் கேடுசெய்து வருகின்றது. ஆதலால் இவ்விருளிலே யாவரும் அமிழ்ந்தி நரகத்தில் வீழாது விலகிக்கொள்ளும் பொருட்டு, இந்த மிலேச்ச மதம் முளைத்து விகற்பித்த வகையை ஒரு நூலாகச் செய்து காட்டுகின்றோம்.

மிலேச்ச மதமானது, யூதமதம், கிறிஸ்துமதம், இசிலாமதம் என மூன்று பேதமாம். அம்மூன்றும் முறையே சொல்லப்படும்.

---

# 1. யூதமதம்.

சகல லோகத்துக்கும் ஆதி நாயகராகிய பரசிவனது ஆணையினாலே நிகழாநின்ற ஆதிப்பிரமாவின் இரண்டாம் பரார்த்தத்திலே, முதல் வருஷத்து முதனாளாகிய சுவேத வராக கற்பத்திலே, ஏழாமனுவாகிய வைவச்சுவதமனுவின் காலத்திலே, இருபத்தெட்டாஞ் சதுர்யுகத்திலே, கிருதகந் திரேதாயுகந் துவாபரயுகம் என்னும் யுகங்கள் மூன்றுங் கழிந்ததன்மேலே, கலியுகம் உதித்து நடக்குங்காலத்திலே, ஆசியாகண்டத்திலே, மேற்றிசையிலே, கிழக்கிற் பாரசீக தேசமும், தெற்கில் அரபிதேசமும், மேற்கில் மத்திய சமுத்திரமும், வடக்கிற் கருங்கடலும் எல்லையாகவுடைய துருக்க தேசத்திலே, * சிரிய நாட்டின் மேற்கே இலிபனோன் மலையின் தெற்கே உள்ள கானான் என்னு நாட்டில் வசிக்கின்ற மிலேச்சர்கள், அந்த நிலத்துக்கு உரிய யெகோவா என்னும் அற்பதேவதைக்கு, மலைகளிலும் பிறவிடங்களிலும், அநேக ஆடு மாடு முதலியவைகளைப் பலியிட்டு, இறைச்சி முதலிய பதார்த்தங்களை நிவேதித்துத், தூப தீபங் கொடுத்துப், பூசை செய்து, வெறியாடி வழிபடுவார்களாயினார்கள்.

இப்படி அந்தத் தேவதையை வழிபட்டு வந்தவர்களுள்ளே, ஆபிராம் என்பவன், கலியுக வருஷம் ஆயிரத்து நூற்றுத் தொண்ணூற்றொன்றின் மேலே, அந்தத் துட்ட தேவதை உவக்கும்படி விருத்த சேதனம் பண்ணி, விசேஷ சேவை செய்தான். அவனுடைய சந்ததியார்கள் இந்நாள் வரையும் அப்படியே செய்துகொண்டு வருகிறார்கள். அது நிற்க.

---

* துருக்க தேசம் - இந்தியா என்று வழங்குகின்ற பரத கண்டத்துக்கு வடமேற்கு.

ஆபிரகாமுடைய புத்திரன் ஈசாக்கு; ஈசாக்குடைய புத்திரன் யாக்கோபு; அவனுக்கு இஸ்ரவேல் என்றும் பெயர். அவனுக்குப் பன்னிரண்டு புத்திரர்கள் இருந்தார்கள் அவன், தன்னுடைய புத்திரர்களுடனே. ஒரு பஞ்சத்தினிமித்தம் ஆபிரிக்காகண்டத்தில் உள்ள எகிப்து * என்னுந் தேசத்திற் போய், அங்கே சில காலம் இருந்து, இறந்துவிட்டான். அவனுடைய சந்ததியார்கள் மிகப்பெருகி, முந்நூறு நானூறு வருஷகாலம் அங்கே இருந்து, சீவனஞ்செய்தார்கள்.

அவர்களுடைய புத்திரர்களுள், மோசே என்பவனை, அந் நாட்டில் இராசாவின் மகள், தனக்குப் புத்திரனாக எடுத்து, வளர்த்துக்கொண்டாள். அந்தப் பட்டணத்திலே, சோதிட சாத்திரம் மந்திரசாத்திரம் மாயாசாத்திரஞ் சலத்தம்பனம் அக்கினித்தம்பனம் இந்திரசாலந் தொட்டியஞ் சல்லியங் கண் கட்டு குறளி முதலிய வித்தைகளிலே மகா சமர்த்தர்களாகிய சாத்திரிகள் பலர் இருந்தார்கள். மோசே என்பவன், நாற்பது வயசுவரையும் இராசாவின் புத்திரியிடத்தில் இருந்ததனால், அந்த ராசாவைச் சேவிக்கின்ற சாத்திரிகளிடத்திலே, அந் நாட்டில் வழங்குஞ் சாத்திர மந்திர தந்திரங்களெல்லாம் பயின்று, அதிசமர்த்தனாயினான்.

மோசே, ஒரு நாள், அந்நாட்டில் ஒருவனைத் தனி யிடத்திலே கொலைசெய்து, மணலிற் புதைத்துவிட்டுப் போனான். மற்ற நாள் வெளியேவந்து, எபிரேயர் இருவர் யாதோ ஒரு காரணம்பற்றித் தம்முட் பிணக்கிடுதலைக்கண்டு, அவ்விருவருட் குற்றமுடையானை நோக்கி: "நீ உன்றோழனை ஏன் அடிக்கின்றாய்!" என்று வினவினான். அதற்கு அவன்

† எகிப்து தேசம் ஆபிரிக்காவின் வடகிழக்கெல்லையில் உள்ளது; அதன் வடபாகம் கானான் தேசத்துக்கு மேற்கு.

"உன்னை எங்களுக்கு இராசாவாகவேனும் விசாரகனுகவேனும் நியமித்தவன் யாவன்? நீ எகிப்தியனைக் கொன்றதுபோல என்னையுங் கொல்ல விரும்புகிருயா?" என்றுன். உடனே மோசேயானவன், தான் செய்த அநீதியாகிய கொலை வெளிப் பட்டது என்று அறிந்து, இராசாவுக்குப் பயந்து, ஒளித் தோடிப்போய், மீதியான் என்னுந் தேசத்திலே சீனுய் மலை யின் சமீபத்தில் இருந்த ஒரு பூசாரியினுடைய புத்திரியை விவாகஞ் செய்துகொண்டு, அங்கே வாசஞ்செய்து, அவனிடத் திலும் அநேக சாலவித்தைகளைப் படித்துத் தேறி, யெகோ வாத் தேவதையை வழிபட்டுக் கொண்டிருந்தான்.

பின்பு எகிப்து தேசத்துக்கு வேருெருவன் இராசாவாகி, அந்த இஸ்ரவேற் சனங்களை அதிக குரூரமாக வருத்துதலை மோசே அறிந்து, அதனை விலக்க ஒரு உபாயத்தைக் குறித் துக்கொண்டு, தான் எகிப்து தேசத்தில் இருக்குஞ் சாத்திரிக ளெல்லாரிலும் பார்க்கப் படித்துத் தேறி யெகோவாத் தேவதையை வழிபட்டு அதன் உதவிபெற்று மகா மாயாவி யானதினுலே துணிவுகொண்டு, திரும்பவும் அந்தப்பட்ட ணத்திற்குப் போய் "யெகோவா என்னுந் தேவதையை நான் கண்டேன்; அது உங்களை மீட்டு வரும்படி கற்பித்தது" என்று சொல்லிச் சாலம்பண்ணி, இஸ்ரவேற் சனங்களைத் தன் வசத்தர்களாக்கி, முன்னே ஒருவன் நீ எங்களுக்கு இராசாவா என்று தன்னை நிந்தித்தமையால் எழுந்த வெட்கம் பற்றித் தான் அவர்களுக்கு இராசாவாகி, அந்த நாட்டில் இராசாவுடன் வாதுபண்ணி, மாயாவித்தைகளிற் சிலவற்றைக் காட்டி, அபிசாரகன்மத்தால் ஒரு பூதத்தை எழுப்பி யேவி, எகிப்தியருடைய தலைப்பிள்ளைகளுள்ளே சிலவற்றைக் கொள்வித்து, இராசாவை அச்சுறுத்திவிட்டு, அவர்களை மீட்டுக்கொண்டு வந்து தென்னரபியிலே சீனுய் மலையடியிலே

நிறுத்திவிட்டுத், தான் அந்த மலையிலே ஏறி, நாற்பது நாள் அங்கிருந்துவிட்டு, இரண்டு கற்பலகைகளைக் கையிற்கொண்டு மலையினின்றும் இறங்கிவந்து, சனங்களை அடைந்து ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களாற் சேவிக்கப்பட்ட தேவதையைத் தான் பிரத்தியக்ஷமாகக் கண்டான் என்றும், அந்தத் தேவதை சனங்கள் அநுட்டிக்கவேண்டிய சன்மார்க்க விதியாகிய பத்துக் கட்டளைகளையும், இரண்டு கற்பலகைகளிலே தனது கைவிரலினால் எழுதித்தந்தது என்றும், தன்னைச் சனங்கள் வழிபடவேண்டிய பூசை விதியையும் நீதி விதியையும் வேறநேக விஷயங்களையுந் தனது வாக்கினால் உபதேசித்தது என்றும், அவர்களுக்குச் சொல்லி, அவர்களெல்லாரையும் அதனை அங்கீகரிப்பித்தான்.

கலியத்தம் ஆயிரத்தறுநூற்றுப் பத்திலே, மோசேயானவன் இந்த யூதமதத்தை இப்படியே உண்டாக்கினான். மோசேயும் அவனோடு புறப்பட்டு வந்தவர்களும், கானான் தேசத்தைச் சேரு முன்னரே, இறந்தொழிய, அவர்களுடைய சந்ததியார் அனைவருங் கானான் தேசத்திலே வந்து வாசஞ் செய்து, அந்தச் சமயத்தை அநுட்டித்து வந்தார்கள்.

கல்வியில் வல்ல சலோமோன் என்னும் இராசாவானவன், சகல சனங்களும்வந்து கூடி யெகோவாத் தேவதைக்குப் பலியிட்டுத் திருவிழாக் கொண்டாடிச் சேவிக்கும் பொருட்டு, அநேக திரவியங்களைச் செலவிட்டு யெருசலேம் பட்டணத்திலே ஒரு கோயில் கட்டுவித்துவிட்டுத் தான் அந்தச் சமயத்தைவிட்டுத், தன்மனசுக்கு இயைந்த வேறொரு சமயத்திற் பிரவேசித்து விட்டான்.

மோசே இறந்து ஏறக்குறையத் தொளாயிரத்துத் தொண்ணூறு வருஷஞ் சென்றபின், எஸ்றா என்பவன், மோசேயும் அவனுக்குப் பின் இருந்த பலரும் எழுதினவை

களாகப் பல புத்தகங்கள் எழுதிவைத்தான். அந்தப் புத்தகங்களினது தொகுதி பழைய ஏற்பாடு என்று சொல்லப்படும்.

யூத சமயமானது, பரிசேய மதம், சதுசேய மதம் முதலிய பல மதங்களாகப் பிரிந்தது.

அவற்றுள், பரிசேய மதமானது, தேவதையுடைய விதியினாலே பூமி ஆளப்படுகின்றது என்றும், ஆன்மாக்கள் நித்தர் என்றும், நரக சுவர்க்கங்கள் உண்டு என்றும், இறந்தவர்கள் உயிர்த்தெழும்புவார்கள் என்றும், தேவதை யூதர்களுக்கு விசேஷமாகிய தயை செய்யும்படி நியமஞ்செய்வது என்றும், ஆபிரகாமுடைய புண்ணியங்களினாலே யூதர்கள் சகலரும் புண்ணியாத்துமாக்களாய் இருக்கிறார்கள் என்றும், எழுதப்பட்ட புத்தகங்களையும் எழுதப்படாது வழங்கிவந்த பாரம்பரியோபதேசங்களையும் அங்கீகரித்தல் வேண்டும் என்றும், சௌசம் ஸ்நானம் முதலிய சரீரசுத்திகளைச் செய்வது அத்தியாவசியகம் என்றும் சொல்லப்படும்.

சதுசேய மதமானது, தேவதை உண்டென்றாலும் நரக சுவர்க்கங்கள் இல்லை என்றும், இறந்தவர்கள் உயிர்த்தெழும்புவதில்லை என்றும், விதி இல்லை என்றும், எழுதப்பட்ட புத்தகங்களல்லாமற் பாரம்பரியோபதேசம் இல்லை என்றுஞ் சொல்லப்படும்.

அதன் பின்னும், அந்த யூதசமயிகள்: எசேனர், எரோபியர், கலிலேயர், தொராபியுதேயர் முதலிய பல பின்ன சமயிகளாய்ப் பிரிந்திருக்கிறார்கள்.

யூத சமயத்தின் உள்ளுறை:—யெகோவா என்னுந் தேவதையானது வானமண்டலத்திலே, நீலரத்தினாசனத்திலே, ஆண் வடிவமும் அக்கினி ரூபமும் உடையதாய்ப்,

பஞ்சைப்போன்ற நரைமயிர் நிறைந்த சிரசையுடையதாய்க், கிழ வடிவமாய், வெள்ளை வஸ்திரம் அணிந்ததாய், எரிச்சல் கோபம் பொறாமை தற்புகழ்ச்சிப் பிரீதி என்னுங் குணங் களை உடையதாய் அநேக கணங்களுக்கு அதிபதியாய்க், கெருபிகளென்னுங் கணங்கள் தன்னுடைய கீர்த்தனங்களைச் சுர மண்டலத்திலே வாசித்துத் துதித்து வழிபட்டுத் தன்னைச் சூழ்ந்துகொள்ளப் பெற்றதாய், வீற்றிருக்கும்; தனக்கு அநேக ஆடு மாடுகளைப் பலி கொடுத்து நித்தியமுந் தன்னைச் சேவிக்கிறவர்களில் மிகப் பிரீதி கொண்டிருக்கும்; வேறு தேவதைகளை வழிபட்டவர்களை அலைத்துக், கொள்ளை நோய் பஞ்சம் முதலியவைகளால் வருத்தி, அழித்துவிடும். இதுவே அந்தத் தேவதையின் இயல்பு என்று சொல்லப் படும்.

யெகோவா என்னுந் துட்டதேவதையை யூதர்கள் பூசிக்கும் முறைமை:—மரத்தினாலே ஒரு பேழை செய்து, பொற்றகட்டால் மருவி இருபக்கத்திலும் இரண்டு கெருபி களினுடைய ரூபங்களை நிறுத்திக் கோயிலில்வைத்து, அந்தப் பிரதிமையிலே அந்தத் துட்ட தேவதை இருக்கிறதாகப் பாவித்து, இறைச்சி பழவருக்கம் அதிரசம் முதலிய பதார்த் தங்களை நிவேதித்துத், தூப தீபங்காட்டி, அநேகம் ஆடு மாடுகளை வெட்டிப் பலி கொடுத்துத், துதித்து வணங்கியும், முதற்பேறு முதலியவற்றைக் காணிக்கையாகக் கொடுத்தும், பூசாரியர்களுஞ் சனங்களும் பவித்திவான்களாய், எப்போ தும் இரண்டுகாலத்திலும், விசேடமாகச் சனிவாரத்திலும் பூரணையிலும் அமாவாசியிலும் உற்சவநாளிலும், வழிபட்டு வருவார்கள். இதற்குப், பூசாரியரும், பரிசாரகரும், மெய் காப்பாளர், வாத்தியக்காரர் முதலியவர்களும், பரம்பரை முறையாக நியமிக்கப்பட்டு, அந்தக்கோயிலுக்கு வரும்

பொருள்களைப் பங்கிட்டுச் சீவனம்பண்ணி வருவார்கள். செனன மரண முதலியவைகளால்வரும் ஆசௌசங்களுக்குக், குறிக்கப்பட்ட காலம்வரையும், விலகியிருப்பார்கள்; இரத்தத்தை அள்ளிப் புரோக்ஷித்துச் சுத்தி செய்துகொள்ளுவார்கள். அவர்களுடைய உடை நடை முதலிய முழுதுந் துருக்கருடைய உடை நடை முதலியனபோலவே இருக்கும். அன்றியும், அவர்கள் துருக்கரில் ஒரு பேதத்தார்கள். அவர்களுடைய உணவு இறைச்சி மது முதலியனவாம். அவர்கள் மகா துஷ்டர்களாயிருப்பார்கள்; அவர்களெல்லாரும் இரண சேவகர்கள். அவர்களுக்கு அதிபதி அந்தத் துட்ட தேவதையே. அவர்களுடைய சமயாசாரங் குலச்சாரமெல்லாம் பழைய உடன்படிக்கை என்னும் புத்தகத்திலும், பாரம்பரை விவகாரங்களை அடக்கிய தல்மூத் என்னும் புத்தகத்திலுங் காண்க.

இதுவே யூத மதம் தோன்றி விகற்பித்தவாறு.

---

## 2. கிறிஸ்து மதம்.

கலியுகத்தம் மூவாயிரத்து நூற்றொன்றின் மேலே, [மோசேயினாலே யூத மதந்தோன்றி 1491-ம் ஆண்டின் மேலே,] கானான்தேசத்தினது தென்பாகத்தில் உள்ள யூதேயா தேசத்திலே, பெத்லகேம் பட்டணத்திலே, யோசேப்பு என்னுந் தச்சனுக்கு வாக்குத்தானஞ் செய்யப்பட்ட மரியாள் என்னும் ஒரு கன்னிகை ஒரு புத்திரரைப் பெற்றாள். அந்தப்புத்திரருக்கு யேசு என்று பெயரிட்டு; யூத சமய விதிப்படி விருத்த சேதனம் முதலிய சகல கருமங்களையுஞ் செய்து; அவரை வளர்த்தார்கள்.

இப்படியே அவர் வளர்ந்து, மோசே போலவே சால வித்தைகளிலும் மிகப்பயின்று, முப்பதாம் வயசிலே, பூசாசாரியனாகிய சகரியாவின்மகன் யோவான்என்பவனிடத்திலே ஸ்நானம் பெற்றுப், பிசாசாதிபதியுடனே கூடித்திரிந்து, யோவான் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட பின்பு, அவனுடைய அதிகாரத்தைத் தாம் எடுத்துக்கொண்டு, தாம் யெகோவாத் தேவதையுடைய குமாரர் என்று பிதற்றி, எளிய சனங்களுக்குப் புத்திசொல்லி, மீன் பிடிக்கும் வலையர் முதலிய சில கீழ் மக்களைத் தமக்குச் சீடர்களாகச் சேர்த்துக் கொண்டு, மூன்று வருஷகாலந் திரிந்தார்.

அப்போது, யூதர்கள், தங்கள் சமயத்துக்கு அடாத உபதேசங்களை அவர் சொன்னார் என்றும், அப்படிப்பட்டவரைத் தங்கள் சமய சாத்திரப்படி கொலைசெய்வதே நீதி என்றும், நிச்சயித்து, அவரைப் பிடித்துச் சிலுவையில் அறைந்து கொன்றுவிட்டார்கள்.

கிறிஸ்துவினுடைய சால வித்தையினாலே மருண்டு அவருக்குச் சீடர்களாகித் திரிந்த கீழ்மக்களாகிய பேதுரு, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் முதலியவர்கள், தங்கள் குரு வசைப்பட்டு வருந்தி இறந்தபின்பு, அபிமானத்தினாலும் மயக்கத்தினாலுந் தாங்கள் எல்லாரும் ஒருங்குகூடி, யோசனை பண்ணித், தைரியங்கொண்டு, யூதருடைய சமயாசாரங்களுட் சிலவற்றை மாற்றிச், சிலவற்றை முழுதும் விளக்கிச், சிலவற்றைக் குறைத்து, இல்லாதவைகள் சிலவற்றைத் தங்கள் புத்தியினாலே கூட்டிச், சிலவற்றைமாத்திரந் தழுவி, ஒரு புது மதத்தை உண்டாக்கி, அதற்குக் கிறிஸ்துமதம் என்று பெயரிட்டுக்கொண்டு, அதை யாவரும் அங்கீகரிக்கும்பொருட்டு ஒரு உபாயதந்திரஞ் செய்யக்கருதி, கிறிஸ்துவை யாவனொருவன் விசுவசித்தால், அவன் எவ்வளவு கொடிய பாவியா

பிருந்தாலும், அவனுடைய கொடிய பாவங்களெல்லாம், அவன் கிறிஸ்துவை விசுவசிக்கவே, நீங்கிவிடும் என்றும், அவன் சகல புண்ணியங்களையுஞ் செய்த புண்ணியாத்துமாவைப் போலப் பரிசுத்தனவான் என்றும், வேறெவ்வகைப் பட்ட நல்வினைகளைச் செய்தாலுங் கதி சேர்தல் கூடாது என்றும், கிறிஸ்துவை விசுவசிக்கும் விசுவாசமொன்றே கதி சேர்க்கவல்லது என்றும், இந்த சமயத்தை உலகமெங்கும் பிரசாரஞ் செய்து சகலரையும் இதற்கு உடன்படுத்துவதே விசுவாசிகள் செய்யுங் கடமை என்றுங் கற்பித்தார்கள்.

தேவசத்துருக்கள் எழுந்து மோசேயுடைய புத்தகங்களில் நித்தியகாலமுஞ் செய்துகொண்டு வரும்படி விதிக்கப் பட்ட கோயிற்சேவை தேவதா பூசை, பலி தூப தீபங் காட்டல் முதலிய கிரியைகளெல்லாவற்றையும் அழித்துத் தங்களைத் தேவர்கள் என்று உயர்த்திப் பலருக்குங் கேடு விளைவிப்பார்கள் என்றும், பிசாசானது அவர்களுக்குத் துணை செய்யும் என்றும், ஏசாயா, எரேமியா, தானியேல் முதலானவர்கள் தங்களுக்கு சொல்லியிருந்தார்கள் என்று யூதர்கள் சொல்லி, இந்தக் கிறிஸ்துமதத்தைப் பொய்மதம் என்று, இந்நாள்வரையும் மறுத்துக்கொண்டு வருகிறார்கள்.

அந்தப் பேதுரு முதலியவர்கள் கிறிஸ்துமதத்தை உண்டாக்கியவிதம்:—மரியாள், தான் யோசேப்புக்கு மனைவியாக வாக்குத்தானஞ் செய்யப்பட்ட பின்பு, அவனோடு புணர்தற்கு முன்பே, பரிசுத்த ஆவியினாலே கருப்பிணியாய், யேசுவைப் பெற்றாள் என்றும், தேவதூதர்கள்வந்து அந்தச் செய்தியை இடையர்களுக்கு அறிவித்தார்கள் என்றும், யேசு முப்பதாம் வயசிலே ஸ்நானம் பெற்றவுடனே பரிசுத்த ஆவி புறாப்போல அவர்மேல் இறங்கிற்று என்றும்,

யேசு பிசாசோடு திரிந்தது பரீக்ஷையடையும்பொருட்டு என்றும், ஸ்திரீயின் வித்துப் பாம்பினது தலையை நருக்கும் என்னும் வசனத்துக்குத் தாவீது முதலியவர்கள் செய்த வியாக்கியானத்தை வழு என்று தள்ளி, ஒரு கன்னி ஒரு புத்திரரைப் பெறுவாள் அவர் பிசாசை வெல்வார் என்பதே அதற்குப் பொருள் என்றும், மோசே என்பவன் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசி உங்களுள்ளே எழும்புவான் என்று யோகாவவைக் குறித்து எழுதிய வசனம் யேசுவைக் குறித்துச் சொல்லப்பட்டது என்றும், தாவீதுடனே உன் வித்து உன் ஆசனத்தில் இருக்கும் என்று அவனுடைய புத்திரனாகிய சலோமோனைக் குறித்துச் சொல்லப்பட்டவாக்கியம் யேசுவைக் குறித்துச் சொல்லப்பட்டது என்றும், [சங்கீதம் 118, 22, 23.] தபதிகள் ஆகாது என்று கழித்து வைத்த சிலையே கோணத்தில் பிரதான சிலையாகும் என்று தாவீதைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்கியம் யேசுவைக் குறித்தது என்றும், [மல்கியா. 4: 5.] இலிசாத் தீர்க்கதரிசி யேசுவுக்கு முதல் வருவான் என்பதில் இலீசா என்றது [மத். 17: 12, 13.] யோவானைக் குறித்தது என்றும், இன்னும் இப்படியே அநேக வாக்கியங்களுக்கு உரிய பொருள்களைத் தள்ளித் தாங்கள் உண்டாக்கிப் புதுமதத்தின் கோளுக்கு இணங்கும் பொருட்டு நானாவித விபரீதார்த்தங்களைச் செய்தும், யேசுவையுந் தேவன் என்று சாதிக்கும்பொருட்டு யெகோவா பிதாக் குமாரன் பரிசுத்த ஆவி என்னும் மூவராய் இருப்பர் இந்த யேசுவே அந்தக் குமாரன் என்றும், அவர் தண்ணீரை மதுவாக்கிப் பேய்களை கூட்டிக் கடலிலே நடந்து குருடர் செவிடர் ஊமைகள் திமிர்வாதக்காரர் முதலியவர்களைச் சுஸ்தர்களாக்கிப் பல பல அற்புதங்களைச் செய்தார் என்றும், சகல மனிதர்களுக்கும் வருஞ் சுக துக்கங்களைப் போலவே

யேசுவுக்கும் வந்த உபத்திரவமாகிய மரணத்துக்குப் பரிகாரஞ்சொல்லும்பொருட்டு அவர் சகலருஞ் செய்யும் பாவங்களையெல்லாந் தம்மேல் ஏற்றிக்கொண்டு சகலர்பொருட்டும் பலியானூர் என்றும், இறந்த மூன்றுநாள் உயிர்த்தெழும்பினூர் என்றும், பிதா அவருக்குச் சகல அதிகாரத்தையுங் கொடுத்தார் என்றும், அவரே மனுஷரையுந் தேவனையும் பொருத்துகிற மத்தியஸ்தர் என்றும், உலக ரக்ஷகர் என்றும், அவரை விசுவசித்து ஸ்நானம்பெற்று அந்த நவமதத்தில் உட்பட்டு நடக்கிறவர்கள் மாத்திரமே மேற்கதி அடைவார்கள் என்றும், இன்னும் இவைபோல்வன பல பல விபரீத விஷயங்களையுங் கற்பித்துக்கொண்டார்கள்.

பின்னும், யேசுவானவர் பிறவித் துன்ப முதல் மரணத் துன்பம் ஈருக அநுபவித்த உபத்திரவங்களுக்குப் பரிகாரஞ் சொல்லும் பொருட்டு, அவருக்குத் தேவத்துவமும் மானுஷியமும் உண்டு என்றூர்கள். தாங்கள் யூதசமய பூசாசாரியர் முதலிய சகலராலுஞ் சகல கிரியைகளுக்கும் புறமாக விலக்கப்பட்டுப் பிரட்டர்களானதினூலே தங்களுக்கு வந்த நிந்தையை மறைத்துக்கொள்ளும் பொருட்டு, ஒரு உபாயம் பண்ணிக்கொண்டு, யேசு சகலருக்குமாகப் பலியானதினூலே இனி ஒருவரும் பலி செலுத்த வேண்டாம் என்றும், சனனுசௌசம் மரணுசௌசம் இல்லை என்றும், விருத்த சேதன முதலிய கிரியை ஒன்றுஞ் செய்ய வேண்டாம் என்றும், விலக்கினூர்கள்.

யேசு, சிலுவையில் அறையுண்டு இறந்து புதைக்கப்பட்ட பின், மூன்று நாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலே உயிர்த்தெழும்பினூர் என்று தாங்கள் சொல்லும் பெரும் பொய்யை மெய்யாக்கும் பொருட்டு, மோசேயின் விதிப்படி

யூதர்கள் ஆதரித்து வந்த சனிக்கிழமை யோய்வு நாளை விலக்கி, ஞாயிற்றுக்கிழமையே ஓய்வு நாள் என்று கற்பித்துக் கொண்டார்கள். இன்னும், தாங்கள் உண்டாக்கின கிறிஸ்து சமயக் கொள்கைக்கு இயையும்படி, யூத சமய சாத்திரங்கள் எல்லாவற்றிற்கும் முகவுரையும் வசனங்களும் புதிதாக எழுதிச் சேர்த்தார்கள். அந்த யூதர்களுடைய சமயாசாரங்களிற் சிலவற்றை மாத்திரந் தழுவிக்கொண்டார்கள்.

இப்படியே அப்போஸ்தலர்கள், கிறிஸ்து மதத்தை உண்டாக்கிப், பல பல இடங்களிலும் போய்ப், பரப்பிச், சமயலக்ஷணம் இன்னது என்று அறியாத அநேக மூடர்களை அதற்கு உடன்படுத்தினார்கள். ஐரோப்பா கண்டத்திலே, முன்பு கிரேக்க தேசத்திலும், பின்பு இத்தாலி தேசத்துப் பிரதானபட்டணமாகிய உரோம புரியிலும், கிறிஸ்து மதம், பவுல் அப்போஸ்தலனாலே பரப்பப்பட்டது.

அப்போஸ்தலர்கள் இறந்து நெடுங்காலஞ் சென்றபின் இருந்த கிறிஸ்தவர்கள் சிலர், அந்த அப்போஸ்தலர்கள் எழுதினவைகளாகப் பல புத்தகங்கள் கற்பித்து எழுதி வைத்தார்கள். அந்தப் புத்தகங்களினது தொகுதி புதிய ஏற்பாடு என்று சொல்லப்படும்.

கிறிஸ்து சமயிகளுக்குத் தெய்வம் யேசுகிறிஸ்து. அவருடைய குலம் தச்சக் குலம்; அவருடைய தொழில் முப்பது வயசு வரையுந் தச்சுத் தொழில், அதன்மேற் சமயப் புரட்டு; அவருடைய குணம் எரிச்சல் பொறுமை வஞ்சகம் இடம்பம்; அவருடைய கூட்டங் கீழ்மக்கள்; அவர் துதிப் பிரியர் அன்றியும் போசனப் பிரியர்; அவருடைய போசனம் மது மாமிசம்; வாகனங் கழுதை; முடி முண் முடி; ஆசனஞ் சிலுவை; அத்தாணி மாட்டுக்கொட்டில்; சயனம் புல்லணை; பாகதிதாளம் என்றறிக.

அந்த யேசுவையே இரக்ஷகர் என்று நம்பி ஸ்நானம் பெற்று, அப்பத்தையும் மதுவையும், யேசுவினுடைய சரீரத்தில் இறைச்சியும் இரத்தமுமாகப் பாவித்து, அவைகளை உட்கொண்டு, முழந்தாளை ஊன்றி நின்று கையேந்தி, அண்ணாந்து, கண்மூடி, யேசுவை நோக்கிப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறவர்களே, அவரைப் போல இறந்தபின் உயிர்த்தெழுந்து, பரமண்டலத்திலே போய், அவரோடு சுகித்திருப்பார்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் அவர்களுடைய சமயாசாரமெல்லாம் புதிய ஏற்பாடு என்னும் புத்தகத்திற் காண்க.

இப்படியே ஐரோப்பாகண்ட வாசிகள் பலர் அந்த மதத்தைச் சில காலம் அநுட்டித்து வந்தார்கள். அதன்மேற் கலியுகத்தம் மூவாயிரத் தெழுநூற்றொன்றின் மேலே (கி. பி. 600) உரோமபுரியில் இருந்த கிறிஸ்து மத குருமார்களுள் ஒருவன், யேசு தன்னுடைய சபைக்குப் பேதுரு என்பவனை அதிபதியாக வைத்தார் என்று பல பிரமாணங்கள் காட்டிச், சகலரும் ஒரேயதிபதியின் கீழ் இருத்தல் வேண்டும் என்று யோசனை முடித்தும் இராஜாக்களுடைய உதவியினாற் பாப்பு என்று பட்டந் தரித்துக்கொண்டான். அவனும், அவனிடத்துக்கு வந்த பாப்புமாரும், முன் இருந்த கிறிஸ்தவர்கள் யேசுவைக் குறித்து எழுதிவைத்தது போலவே எழுதத் தொடங்கி, யேசுவினது தாயாகிய மரியை என்பவளும் இறந்து உயிர்த்தும் சந்திர சூரிய நக்ஷத்திரங்களைப் பாதமுதலிய அவயவங்களிலே ஆபரணங்களாக அணிந்துகொண்டு வான மண்டலத்துக்கு ஏறினாள் என்றும், அவள் இறக்கும் போது கிறிஸ்தவர்கள் அனைவர்களும், அநேக காத தூரத்துக்கும் அப்பால் இருந்தும், தேவ தூதர்களுடைய உதவியினாலே அந்தக் கணத்திலே அவள் இருக்கும் இடத்தில் வந்து

கூடினார்கள் என்றும், அவள் இறந்தபின் சவத்தை அடக்கம் பண்ணும்படி கொண்டு போகும்போது ஒரு பாம்சேயன் வந்து போகாமற் றடுக்க, அவன் பாடையிலே தொட்ட கை மீண்டும் முடங்காது நின்றதினாலே அந்தச் சவத்தைப் பார்த் துப் பிரார்த்தித்துச் சுகமடைந்தான் என்றும், அவளுடைய கணவனாகிய யோசேப்பு வான மண்டலத்துக்கு இராசாவாக முடி சூட்டப்பட்டான் என்றும், அவர்கள் இருவருங் கூடி இருந்த வீடு அவர்கள் இறந்த பின்பு நெடுங்காலங் கோயிலாகி இருந்தது என்றும், பின்பு சத்துருக்கள் வந்து அந்தத் தேசத்தை அழித்தபோது அவர்கள் இருந்த வீடு ஆகாச மார்க்கமாகப் பறந்து போய் இத்தாலி தேசத்திலே தங்கி அங்கே இன்று வரையுங் கோயிலாய் இருக்கின்றது என்றும், அவர்களை வழிபட்டு வந்த சம் டன்றில் என்பவன் தனது தலை வெட்டுண்ட போது அந்தத் தலையைத் தன் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு இரண்டு காதமட்டும் நடந்தான் என்றும், சம் சயிஸ் றீனியன் என்பவனும் தனது தலை வெட்டுண்ட போது அதைத் தன் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு கடலைக் கடந்து போனான் என்றும், சம் பேதிறியாற்கு என்பவன் வெட்டாங் தரையிலே மீன் பிடித்தான் என்றும், ஏழு சுத் தான்மாக்கள் ஐந்நூறு வருஷம் வரையும் நித்திரை செய்தார் கள், என்றும்சம் பிறஞ்சீவுக்கு சாவேரியார் என்பவனுடைய பிரேதம்இன்று வரையும் அழியாதிருக்கின்றது என்றும், அந் தப்பிரேதத்திலே நகமும் உரோமமும் நாடோறும் வளருகின் றன என்றும், இப்படியே சம் தீயோகுமையோர் முதலான வர்கள் இன்ன இன்ன அற்புதஞ் செய்தார்கள் என்றும், நம் பத் தகாத அநேக கதைகளைக் கற்பித்துப் பற்பல புத்தகங்க ளாக எழுதிக்கொண்டார்கள். அவர்களனைவரையும் வழி பட்டாற் பலனுண்டு என்று சொல்லுகிறார்கள். பேதுரு

இருந்த ஆசனம் என்று ஒரு நாற்காலியை நெடுங்காலம் பூசை செய்துகொண்டு வருகிறார்கள். யேசு, மரியாள், பேதுரு, சம் நீயோகுமையோர் முதலியவர்களுக்குப் பிரதிமைகளைச் செய்து வைத்துத், தூப தீபங் காட்டித், துதித்து வணங் கித், திருநாள் கொண்டாடி, நிபந்தத் திரவியங் கொடுத்து, விரதம் அநுட்டித்து வழிபட்டு வருகிறார்கள். இன்னும், சகல பாவங்களையும் பொறுத்துவிடத் தங்களுக்கு அதிகாரம் உண்டு என்றும், இன்ன இன்ன பாவத்துக்கு இத்தனை இத்தனை பணங் கொடுத்தாற் பொறுத்து விடலாம் என்றும், மோக்ஷ வாயிலிற்றிறவுகோல் தங்கள் கையில் இருக்கின்றது என்றும், தாங்கள் சகல லோக பிதாக்கள் என்றும், ஆண்டவர் என்றும், கர்த்தர் என்றும், தங்கள் வாயினாற் பிறப்பன யாவுந் தேவ வாக்கு என்றுஞ் சொல்லுகிறார்கள்

இப்படியே அந்தக் கிறிஸ்து சமயாசாரங்களிற் சிலவற்றைக் குறைத்தும், சிலவற்றை மாற்றியும், இல்லாதன சில வற்றைச் சேர்த்தும், தங்கள் யுத்தியினால் ஒரு மதத்தை உண்டாக்கி, அதற்குப் பாப்பு மதம் என்றும், கத்தோலிக்கு மதம் என்றும் பெயரிட்டு, அநேகரை அதற்கு உடன்படுத்தினார்கள்.

கிரேக்க தேசத்தில் உள்ள கிறிஸ்தவர்கள், உரோமான் கத்தோலிக்கு மதத்துக்கு உடன்படாது பிரிந்து, தாங்களும் ஒரு கூட்டமாகக் கூடி, அப்படியே ஒரு மதத்தை உண் டாக்கி, அதற்குக் கிரேக்க மதம் என்று பெயரிட்டு, அதை ஆசரித்து வருகிறார்கள்.

பாப்பு மதத்தாரைக் கிரேக்க மதத்தார் பொய்ச் சமயத் தார் எனப் பகைத்துச் சபிப்பார்கள்; பாப்பு மதத்தாருங் கிரேக்க மதத்தாரை அப்படியே சபிப்பார்கள். அது நிற்க.

மது மாமிச பக்ஷணமுந் துராசாரமும் முறைகேடுந் தானே பாப்பு மதசாரம். பாப்புக்களுள் அநேகர், இராசாக்கள் போலப் படைகளைச் சேர்த்து யுத்தம் பண்ணி அநேகரைக் கொன்று, வாளினலே தங்கள் சமயத்தை நிலை நிறுத்திப், பற்பல தேசங்களிலும் பரப்பித், தங்கள் சமயாசாரங்களுக்குப் பின்னம் வந்தாலும், அந்தந்தத் தேசாசாரங்களுக்கு இசைந்தும், தேசைகளுடைய சொற்படி நடந்தும், நடப்பித்தும் வருவார்கள். அவர்களுடைய சரித்திரமெல்லாம், பாப்புக்களின் சரித்திர புஸ்தகங்களிலே காண்க.

கலியத்தம் நாலாயிரத்தைஞ்ஞூற்றெண்பத்து மூன்றின் மேலே, (கி. பி. 1,483) ஜார்மனி தேசத்திலே இஸலீபன் என்னும் பட்டணத்திலே பிறந்த லூத்தேர் என்பவன் உரோமான் கத்தோலிக்குச் சமய சாத்திரங்களெல்லாங் கற்று மிக வல்லவனுகி, வால சந்நியாசம் பண்ணி, அகுஸ்தீனுடைய சபையிற் பிரவேசித்து, மனம் பொருந்தி மண்ணாசை பொன்னாசை பெண்ணாசைகளை வெறுத்து மரணபரியந்தம் விரத்தனுகவுந் தரித்திரனுகவுந் துணிந்து சத்தியஞ் செய்து குருப்பட்டம் பெற்றுக்கொண்டு, கத்தோலிக்கு சமயமே மெய் என்று போதித்துத் திரிந்தான். சில நாளாய பின்பு, காம வெறியினலே தவச் சாலையில் இருந்த ஒரு பெண்ணைத் திருடிக்கொண்டு போய், இங்கிலாந்தில் இராசாவாயிருந்த ஹென்றி என்பவனைச் சார்ந்து அவனுடைய உதவி பெற்றுக்கொண்டு, கத்தோலிக்குச் சமயத்தைப் புரட்டிக், கிறிஸ்து மதத்தை விட்டுக் கத்தோலிக்கர் விலகிப்போனர்கள் என்று கிறிஸ்து அல்லாமற் சபைக்குக் குருவும் இல்லை அதிபதியும் இல்லை என்றும் பரம்பரையாக வந்த உபதேசம் இல்லை என்றும், விவிலிய புத்தகத்தை ஆராய்ந்து அதின்படி சகலரும் நடத்தல் வேண்டும் என்றும், அஃதுவே சகலருக்கும் வழி

காட்டியாயும்போதகமாயும் இருக்கின்றது என்றும், கிறிஸ்து பாடு பட்டு அடைந்த புண்ணியத்தினாலன்றி மனிதர்கள் தாங்கள் மனம் வாக்குக் காயங்களினாலே செய்யும் புண்ணியங்களினாலே மேற்கதி அமைதல் கூடாது என்றும், மனிதர்களுடைய புண்ணியங்கள் பெண்களுடைய ஆசௌசம் பட்ட வஸ்திரம் போல் இருக்கின்றது என்றும், கர்த்தாவிடத்திலேயன்றிக் குருமாரிடத்திலே பாவ சுவீகாரம் பண்ணவேண்டியதில்லை. என்றும், மனிதர்கள் செய்யும் பாவங்கள் யாவற்றிற்குங் கிறிஸ்து பட்ட வேதனையேயன்றி வேறொரு பிராயச்சித்தமும் வேண்டாம் என்றும், அந்தஸ்தை பூசுதல் முதலிய சடங்குகள் செய்ய வேண்டுவதில்லை என்றும் குருமார் விவாகம் பண்ணலாம் என்றும், சபைக்குத் தலைவராயிருக்கும் குருமார் விதிக்குங் கட்டளைகளை அவர்கள் தேவ வாக்கியம் என்று செய்வது தப்பு என்றும், அவைகளின் வழியே நடத்தல் வேண்டாம் என்றும் பட்டினியிருந்து நோன்பு அநுட்டித்தல் தேவ ஊழியஞ் செய்தல் அதற்குச் செலவு கொடுத்தல் முதலியன வெல்லாஞ் சபையாருக்குச் சம்மதியாற் செய்வதேயன்றிக் குருமார் தண்டித்துச் செய்வித்தல் கூடாது என்றும், பாவிகள்சகலருக்கும் நித்தியநரகமேயன்றி உத்தரிக்குந் தலம் இல்லை என்றும், உரோமான் சமயத்தோர் பொருள் பறிக்கும் பொருட்டு உத்தரிக்குந் தலம் உண்டு என்கிறார்கள் என்றும், கபிரியேல் முதலிய தேவ தூதர்களையும் யோசேப்பு மரியை பேதுரு பவுல் முதலிய சுத்தாத்துமாக்களையும் ஆராதிக்க வேண்டுவதில்லை என்றும், பிரதிமாராதனையும் அதற்கு உரியவைகளுந் தவறு என்றும், திருநாள் கொண்டாட வேண்டுவதில்லை என்றும், பாப்பு என்பவனே கள்ளக் கிறிஸ்து என்றுஞ் சொல்லி, இப்படியே அங்கத்தோலிக்குச்சமயாசாரங்களிற்சிற்சிலவற்றைத் தள்ளிச்,

சிற்சிலவற்றைத் தழுவி, ஒரு புது மதத்தை உண்டாக்கி, அதற்குப் புரோடெஸ்டாண்டு மதம் என்று பெயரிட்டு, அதைப் பல பல விடங்களிலும் பரப்பி, அநேகரை அதற்கு உடன்படுத்தினன். அந்நாட்களிலே அந்த லுத்தேருடைய தாயானவள்: "நானும் உன் சமயத்திலே வர விரும்புகிறேன்; வரட்டுமா?" என்று வினவ; அவன்: "தாயே! நீ இந்த மதத்திலே பிரவேசித்தல் வேண்டாம்" என்று தடுத்துவிட்டான்.

பின்பு, காலியவிராச்சியத்திற் பிறந்த கல்வீன் என்னுங் குருவுங், கத்தோலிக்கு மதத்தை விட்டு விலகிக் கத்தோலிக்குச் சமயாசாரங்களிலே சில ஒழிய மற்றவைக ளெல்லாவற்றையும் புரட்டி, லுத்தேர் உண்டாக்கின வித்யாசாரங்களுக்கு இசையாத புத்தகங்களைத் திருவாக்குப் புத்தகங்களல்ல என்று தள்ளிப், புரோடெஸ்டாண்டு சமயத்தை மிகப் பெலீப்படுத்தி, இலாந்தாவில் இராசாவுடைய உதவியினலே அநேகரை அதற்கு உடன்படுத்தினன்.

அந்த லுத்தேரையும் கல்வீனையும், அவர்களுடைய மதத்தில் உட்பட்டவர்களையும் பதிதர்கள் என்றும், அந்தப் புரோடெஸ்டாண்டு மார்க்கம் மதத்திற் செலுத்தும் வழி என்றும்; பாப்பு மதத்தார்கள் அநேக நியாயங்கள் காட்டி, இந்நாள் வரையுங் கண்டித்து வருகிறுர்கள். இன்னும், திருவாக்குப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு வாக்கியத்துக்கும், எபிரேய, கிரேகு, லத்தீன் என்னும் பாஷைகளையும் அவைகளில் உள்ள சாத்திரங்களையும் கற்றறிந்த பண்டிதர்கள் செய்த வியாக்கியானங்களையும், பண்டு தொட்டுக் கன்ன பரம்பரையாக வழங்கி வந்த உரிய பொருள்களையும், பிழை என்று தள்ளிவிட்டு, லுத்தேர், கல்வீன் முதலிய பதிதர்கள், தோல் இருக்க சுளை வாங்கினற் போலவும், இனிய பதார்த்

த்திலே நஞ்சு கலந்து வைத்தாற் போலவும், வாக்கியம் வாக்கியமாயிருக்க, அததற்குரிய பொருளெல்லாங் களைந்து, தமது மதத்துக்கு இசையப் பொருள் பண்ணிக்கொண்டு, அதுவே யதார்த்தமாகிய வியாக்கியானம் என்று பிரசித்தப் படுத்தினார்கள் என்றும், அவர்களே சமயப் புரட்டர்கள் என்றும், விஷ செந்துக்கள் என்றும், நச்சுமூலிகைகள் என்றும், சாத்தானுடைய பிரதான தூதர்கள் என்றும், பாப்பு மதத்தார் சொல்லுகிறார்கள்.

ஐரோப்பா கண்டத்திலே, தெற்கே உரோமான் கத்தோலிக்குச் சமயமும், கிழக்கே கிரேக்க சமயமும், வடக்கே புரோடெஸ்டாண்டு சமயமும் வழங்குகின்றன.

லுத்தேர், கல்வீன் என்பவர்கள் போலவே, பின்னும் அநேகர்கள் காலந்தோறும் தலைப்பட்டு, அந்தச் சமய சாத்திரத்தில் ஒவ்வொரு வாக்கியத்துக்கும் தமது தமது புத்திக்கு இசைந்தபடி பொருள் கற்பித்து, அந்தப் பொருளே மெய்ப் பொருள் என்று நிச்சயித்துக்கொண்டு, இப்பிஸ்கோபல் மதம், வெஸ்லியன் மதம், பப்திஸ்து மதம், பிறெஸ்பிற்றீறியன் மதம், குவேக்கர் மதம் முதலாக இருநூறு பின்ன மதங்களை உண்டாக்கினார்கள். இந்த மதங்களுள், ஒவ்வொன்றையும், அநேக லக்ஷ சனங்கள் அங்கீகரித்து வருகிறார்கள். இந்த இருநூறு பின்ன மதங்களுள்ளும், ஒவ்வொரு பின்ன மதத்தாரும், ஒழிந்த நூற்றுத் தொண்ணூற்றென்பது பின்ன மதத்தாருக்கும் மோட்சம் இல்லை என்றும், அவர்கள் நித்திய நரகமே அடைவார்கள் என்றுஞ் சொல்கின்றார்கள்.

இதுவே கிறிஸ்து மதந் தோன்றி விகற்பித்தவாறு.

---

## 3. இசிலா மதம்.

கலியத்தம் மூவாயிரத்தெழுநூற்றொன்றின் மேலே, [கி. பி. 600] அரபிதேசத்திலே, மக்க பட்டணத்திலே, அப்துல்லாம் என்பவனுக்கு எம்மினு என்பவனிடத்திற் பிறந்த புத்திரனாகிய மகம்மது என்பவன், கல்வி கேள்விகளிலும் படைக்கலப் பயிற்சியிலும் மிக வல்லவனாகி, அந்த நாட்டிலே வியாபாரஞ் செய்துகொண்டிருந்தான். பின்பு, யூத மதத்திலும் கிறிஸ்து மதத்திலும் உள்ள சில சில விஷயங்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, தனது புத்தியினாலே சிலவற்றைக் கற்பித்து, ஒரு புத்தகம் எழுதி அதற்குக் கொரான் என்று பெயர் இட்டுக்கொண்டான். முன்னே, ஆதாமசேத், ஏனோக், ஆபிராம் நூறு ஆகமங்களைக் கொடுத்தார்கள், அவைகள் இப்பொழுது இல்லை என்றும், மூசா நபி [அல்லது மோசே] தபிரேத் என்ற சாத்திரத்தையும், தாவீது நபி [அல்லது தாவீது] சபூர் என்ற சாத்திரத்தையும், ஈசா நபி [அல்லது யேசு] இஞ்சில் என்ற சாத்திரத்தையுஞ் சொன்னார்கள்; அவைகளெல்லாம் அல்லாவுடைய [அல்லது யெகோவாவுடைய சித்தத்தின்படியே அந்தந்தக் காலங்களுக்கே வழங்கப்படும் என்று நியமிக்கப்பட்டன; பின்பு மனிதர்கள் அவைகளைத் தலைதடுமாறச் செய்தார்கள் என்றுஞ் சொன்னான். மோசே செய்த வஞ்சனை போலவே, தானுஞ் செய்யத் துணிந்து, தான் அல்லாவினால் ஏவப்பட்டு ஒரு மலைக் குகையினுள்ளே புகுந்திருந்து, அங்கே கபிரியேல் என்னுந் தூதனாலே கோரான் என்னுஞ் சாத்திரத்தைப் பெற்றுக்கொண்டான் என்று காட்டினான். கிறிஸ்தவர்கள் யேசுவைக் குறித்துக் கற்பித்து எழுதிவைத்தது போலவே தானுஞ் செய்யத்துணிந்து, அல்லாவுடன் பரதீசில் இருக்கிற

வர்கள் சகலருக்குந் தான் தலைவன் என்றும், முடிவு நாளிலே சகலரையும் விசாரித்தற்குந் தன்னை விசுவசித்தவர்கள் எல்லாரையும் ஈடேற்றுதற்கும், அல்லாவையும் மனிதரையும் பொருத்துகிற மத்தியஸ்தனுதற்கும், அல்லாவிடத்திலே தான் வரம் பெற்றுக்கொண்டான் என்றும், பின்னும், பற்பல விஷயங்களையும் யெழுதியெழுதிச் சேர்த்துக்கொண்டான்.

இப்படியே, மகம்மது, ஒரு மதத்தை உண்டாக்கி, அதற்கு இசிலாமதம் என்று பெயரிட்டு "இந்த மதத்தை அங்கீகரிப்பிக்கும் பொருட்டு எவர் ஒருவரையும் நான் வலாற்காரஞ் செய்யேன்" என்று பிரசித்தஞ் செய்தான். அவன் வீட்டாரும் அவன் சுற்றத்தாருட் சிலருமன்றி, மற்ற வர்கள், அம்மதத்தை அங்கீகரியாது, அவனைக் கொல்ல முயன்றார்கள். அதை மகம்மது அறிந்து, தான் இருந்த மக்க பட்டணத்தை விட்டோடிப் போய், மிரேனே பட்ட ணத்திற் புகுந்து, அங்கிருந்துகொண்டு, கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்திலே சகலரும் பிரவேசிக்கும்படி "யாவ னொருவன் யேசுக் கிறிஸ்துவை விசுவசித்தால் அவன் சகல பாவங்களினும் நீங்கிப் பரிசுத்தனுவான்" என்று எழுதி வைத்த உபாயம்போலவே, தானுஞ் செய்யத் துணிந்து, தான் கோரானை ஸ்தாபிக்கும் பொருட்டு யுத்தம்பண்ணு தற்கு அல்லாவிடத்தில் அநுமதி பெற்றான் என்றும், அந்த யுத்தத்தில் இறந்தவர்கள் சகல பாவங்களினும் நீங்கிப் பரதீ சிலே சேர்ந்து ஆனந்தம் அடைவார்கள் என்றும், கோரானில் எழுதிக்கொண்டு, அங்கே சிலரைத் தனக்குப் படைகளாகச் சேர்த்துக்கொண்டு, கோரானை அங்கீகரியாதவர்களைக் கொன்று, பாப்புமார் செய்ததுபோல வாளினாலே பற்பல விடங்களிலுந் தன் மதத்தைப் பரப்பினன். அவன், லுத்தேர், கல்வீன் மதத்தார்போலவே, மண்ணாசை பெண்ணாசை

பொன்னுசை என்னுந் துராசைகளில் அமிழ்ந்தித், தான் விரும்பிய போகங்களெல்லாம் அநுபவித்துக்கொண்டிருந் தான்.

மகம்மது பரதீசிலே சேர்ந்தபோது, யேசுக் கிறிஸ்துவுடைய மாதாவாகிய மரியாள் முதலிய பன்னிரண்டு பெண்களை, அல்லா, மகம்மதுவுக்கு உபகாரமாகக்கொடுத்து, அங்கே விவாகம்பண்ணி வைத்தார் என்றும், அப்படியே அவன் பரதீசிலே வாழ்ந்திருக்கிருன் என்றும், தங்கள் பொருட்டு அல்லாவிடத்தில் இரந்து கேட்கிருன் என்றும், அவனை விசுவசித்து அவனுடைய சமயத்தை அங்கீகரித்து நடப்பதே கடன் என்றும், கோரானிலே விதிக்கப்பட்ட ஓதல், நீராடல், தருமங் கொடுத்தல், நோன்பு அநுட்டித்தல், மக்கத்துக்குப்போய் அச்சுச் செய்தல் என்னும் பஞ்ச கர்மங்களினுலே பாவந்தீர்ந்து பரதீசிலே சேரலாம் என்றும், மகம்மதியர்கள் சொல்லுகிருர்கள். மகம்மதுவின் சரித்திரமும், இசிலாமதாசாரமும், பிறவுங் கோரானிலே காண்க.

இதுவே இசிலாமதந் தோன்றியவாறு.

---

# உபசங்காரம்.

இப்படியே, பூர்வகாலந் தொடங்கி இக்காலம்வரையும், காலந்தோறும், ஒருவன் எழும்பி ஒரு மதம் உண்டாக்க, மற்றொருவன் எழும்பி அந்த மதத்தை வேறாக்கப், பின்னொருவன் மற்றொன்றாக்க, அவர்களால் செய்யப்பட்ட மதங்களும், ஒன்றாய், இரண்டாய்ப், பலவாய், நாடோறும் விபரீதமாக வரவர விரிந்து, பலகோடி முகங்களாய்ப் பிரிந்து, அலைந்து கெடுகின்றனவே! இவ்வியல்பினவாகிய அசற்சமயங்களைத் தங்கள் தங்கள் இச்சைப்படியே உண்டாக்கி, அந்தப் படுகுழிகளிலே பற்பல உயிர்கள் விழும்படி செய்த அதிபாதகர்கள் இறந்த பின்பு, அத்தியந்த கோர நரகத்தில் விழுந்து அநுபவிக்குந் தீவிர வேதனை இவ்வளவு என்று நாம் நினைக்கவும் முடியாதே! ஆயினும், அந்தத் துரோகிகள் தங்கள் அதிபாதகத்தில் வேக மிகுதியினால் இறக்கு முன்னே பட்டபாடுகளிற் சிலவற்றைச் சொல்வோம்.

மோசே என்பவன், தான் தொடங்கின பிரயாணம் முடியுமுன்னே வழியில் விழுந்து, உபத்திரவப்பட்டு இறந்தான். யேசுக் கிறிஸ்து என்னுஞ் சமயத்துரோகியானவர், படாத பாடெல்லாம் பட்டுப், பலரும் அநுமதிக்கச் சிலுவையில் ஆணியறையுண்டு, சொல்லி முடியாத வேதனையுடனே, தெய்வமும் என்னைக் கைவிட்டதே என்று கூவென்று புலம்பி அழுது நொந்து, மூர்ச்சையடைந்து, சிலுவையிலே தூங்கிக் கிடந்து செத்தார். பேதுரு தலைகீழாக இறந்தான். பவுல் முதலியவர்கள், சொல்லமுடியாத வேதனைப்பட்டு, இறந்தார்கள். சமயப்புரட்டனாகிய லூத்தோ என்பவன், அமேத்தியங் கழிக்கப்போய் இருந்தபோது, தவறி மலக்குழியில் விழுந்து முறிந்து, ஏற வலியற்றுத், தூக்கிவிடுவாரும் இன்றிக் கிடந்து,

அழுந்திச் செத்தான். இவனுக்குத் துணையாகிச் சமயப் புரட்டனாய் இருந்த கல்வீன் என்பவன், சரீரம் அடங்க வெடித்து அழுகிப் புழுத்து நாறி, நெடுநாள்வரையும் நீங்காத வேதனைப்பட்டுக் கிடந்து, அழுந்திச் செத்தான். பிறரும், இவ்வாறே, பலபல வேதனைப்பட்டு, இறந்தார்கள். இப்படியே இவர்கள் சமயத்துரோகிகளாகிய அதிபாதகிகள் என்பதைச் சகலரும் அறிந்து தெளிந்துகொள்ளும் பொருட்டு, இவர்கள் இறந்த பின்பு கோர நரகத்திலே படுங் கொடிய வேதனைகளை இறக்குமுன்னே தொடங்கச்செய்த கடவுள் இவர்களைத் தண்டித்தார்.

---

## சூசனம்.

சனங்களே! இப்படியே பாதகிகளாகிய பசுக்களாற் செய்யப்பட்ட விரோத விபரீதமாகிய அசற்சமயங்களை மெய் என்று நம்பி, அவைகளிலே புகுந்து நின்று இகபர யதார்த்தப் பிரயோசனங்களை இழந்து நரகில் விழாது விலகிக்கொண்டு, சுருதி யுத்தி அநுபூதிகளாலே சற்சமயம் என்று நிச்சயித்துக்கொள்ளப்பட்டதாய், மகாசனங்களாலே அங்கீகரிக்கப்பட்டதாய், ஒரு விரோதமும் இன்றி நிட்களங்கமாய்ப் பிரகாசித்திருக்கின்ற சைவ சமயத்திற் பிரவேசித்து, இக பர யதார்த்த புருஷார்த்தத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்வீர்களாக.

திருச்சிற்றம்பலம்.

---